

மதுரைத் திருக்கோயில்

THE MADURAI TEMPLE COMPLEX

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர்

KUMBABHISHEKA SOUVENIR

அணிந்துரை

டாக்டர் மு. வரதராசனார்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி., டி.லிட்.,
துணை வேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்.

Foreword

Dr. M. VARADARAJAN,
M. A., M. O. L., Ph. D., D. Litt.,
Vice-Chancellor, Madurai University.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

Arulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil, Madurai

மதுரைத் திருக்கோயில்


THE MADURAI TEMPLE COMPLEX

KUMBABHISHEKA SOUVENIR

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர்

Foreword
Dr. M. VARADARAJAN,
M. A., M. O. L., Ph. D., D. Litt.,
Vice-Chancellor, Madurai University.

அணிந்துரை
டாக்டர் மு. வரதராசனர்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி., டி. லிட்.,
துணை வேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்.



1974

தொகுப்பாசிரியர்
ஏ. வி. ஜயசந்திரன், எம். ஏ., பி. எல்.

Edited by
A. V. Jeyechandrun, M. A., B. L.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

ulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil, Madurai

டாக்டர் மு. வரதராசன்,
எம்.ஏ., எம்.ஓ.எல், பி.எச்.டி., டி.லிட்.,
துணைவேந்தர், மதுரை பல்கலைக்கழகம்.

துணைவேந்தர் அலுவலகம்,
மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை-21,
ஆகஸ்டு 21, 1974

அணிந்துரை

உலகத்திலேயே தொன்மை வரலாறு உடைய ஒருசில நகரங்களுள் மதுரை ஒன்று. மதுரைக்கு உள்ள வேறு பல சிறப்புகளுள், புலவர் பலர்கூடி ஆய்ந்து செந்தமிழை வளர்த்த தலைநகராக விளங்கியது ஒன்று; பழம்பெருங் கோயிலாகிய மீனாட்சியம்மன் திருக்கோயிலைக் கொண்டு விளங்குவது மற்றொன்று; பாண்டியர் வளர்த்த பண்பாட்டை இன்றுவரையில் போற்றி வளர்த்து வருதல் இன்னொன்று.

மீனாட்சி திருக்கோயிலின் குட முழுக்கு விழாவை ஒட்டி வெளியிடப்படும் மலரில் இம் முப்பெருஞ் சிறப்புப் பற்றிய கட்டுரைகளும் பொலிவுற அமைந்திருக்கின்றன. கட்டுரைகளில் பல, ஆராய்ச்சி முறையில் தக்க சான்றுகளுடன் அமைந்திருத்தல் போற்றத் தக்கது. கோயிலின் அமைப்பு, திரு முழுக்குப்பற்றிய விளக்கம், மீனாட்சியம்மையின் மாண்பு ஆகிய இப்பொருள்பற்றிய கட்டுரைகள் கடவுளன்பர்கள் கற்றுப் போற்றத்தக்கன.

மதுரையின் பழங்காலச் சிறப்பு இன்றைய மாட்சி, நகரத்தின் சீரிய அமைப்பு, மதுரையில் ஆண்ட பாண்டியரின் வரலாறு, நாயக்க மன்னர்களின் தொண்டு, தொல்பொருள் ஆராய்ச்சி ஆகியன பற்றிய கட்டுரைகள் பலரும் கற்று இன்புறத்தக்கன. மதுரையைச் சார்ந்து வளர்ந்த இலக்கியங்களாகிய பரிபாடல், திருக்குறள், பிள்ளைத்தமிழ், குறம், கலம்பகம், தமிழ் விடுதூது, கொங்குதேர் வாழ்க்கை என்ற தனிப்பாட்டு, வாய்மொழிப் பாடல்கள் ஆகியன பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அறிஞர்க்கு நல் விருந்து ஆவன. இந்நகரம் தந்த நாடக மேதை சங்கரதாஸ் சுவாமிகள் கலைத்தொண்டு பற்றிய கட்டுரையும், இந்நகர்க்கு வந்தபோது உடைமாற்றம் செய்து கொண்ட சான்றோர் காந்தியடிகள் தீண்டாமை ஒழிக்கும் நோன்பில் உறுதி கொண்டவராக விளங்கியதால் தயங்கி நின்று பிறகு மீனாட்சி கோயிலுக்குள் புகுந்து வழிபாடு ஆற்றிய பெருநிலை பற்றிய கட்டுரையும் மலர்க்கு அணி செய்வன ஆகும்.

மலர்க்குச் சிறப்புச் செய்யும் வகையில் கட்டுரைகள் தந்து உதவிய அறிஞர்கள் பலரும் பாராட்டுக்கு உரியவர்கள். இதை அழகிய முறையில் உருவாக்கித் தந்த நற்றொண்டு கோயிற்கலையில் வல்ல அறிஞர் ஏ. வி. ஜயசந்திரன் ஆற்றியதாகும்.

அன்னை மீனாட்சியின் திருவடிகளுக்கு உரிய இந்த அறிவு மலர் தமிழர்தம் நெஞ்சங்களுக்கு ஆர்வம் ஊட்டும் நறுமலராக விளங்கும் என நம்புகிறேன்.

மு. வரதராசன்.

Contents

II. Religion & Philosophy: சமயமும் தத்துவமும்

III. Legends and Folk Lore on Madurai Temple: திருவிளையாடல்கள்

IV. Literature: இலக்கியம்

உ

சிவமயம்

நன்றியுரை

அருண்மிகு மீனாட்சி சுந்தரர் திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா, ஆனந்தஆண்டு ஆனித்திங்கள் 5ஆம் நாள் 26—6—1974 புதன்கிழமைக் காலை 6.00 மணிக்குமேல் 7-15 மணிக்குள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முந்திய குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவினை 1963-ல் தமிழவேள் உயர்திரு பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட திருப்பணிக் குழு சிறப்பாக நடத்தியது.

இப் பெருவிழாவில் திருக்கோயில் மேல்தளங்கள் பூராவும் தட்டோடுகள் பரப்பி, மழை பெய்யும் சமயத்தில் பரவலாக ஏற்பட்ட ஒழுக்கினை நிவர்த்தி செய்ததும், கோபுர கலசங்களில் பழுதடைந்தவைகளைப் புதுப்பித்ததும், அம்மனுக்குச் சுவர்ண பந்தனம் (தங்கத் தகடு பொருத்தியும்), அம்மன், சுவாமி மற்றும் 363 பரிவார தேவதைகளுக்கும் அஷ்ட பந்தனம் பொருத்தியதும் (மருந்து சாத்தியும்), நந்தவனக் காப்புச் சுவர் எழுப்பியதும் முக்கியப் பணிகளாகும்.

ஆகம விதிகளின்படி யாகசாலை 22—6—74உ முதல் 26—6—74உ வரை 5 நாட்கள் நடைபெற்றது. தமிழ் நாட்டின் அனைத்துக் கோயில்களிலிருந்தும் ஏறத்தாழ 125 சிவாச்சாரியர்கள், 30 வேத பாராயணர்கள், 50 திருமுறை வாணர்கள் கலந்துகொண்டு யாகசாலை நிகழ்ச்சியினைச் சிறப்பித்தனர்.

அங்கயற்கண்ணியின் அருளாலும், தமிழக அரசின் ஒத்துழைப்பாலும், பொதுமக்களின் பேராதரவாலும் இத் திருப்பணி செவ்வனே நிறைவேறியது.

இத் திருப்பணியில் ஈடுபாடுகொண்டு பெரும் துணையாக இருந்த அறங்காவலர் குழு உறுப்பினர் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன், எம். எல். ஏ., அவர்களுக்கும், திரு டி. தியாகையா அவர்களுக்கும், திரு என். பொன்னப்பன் அவர்களுக்கும், திரு. ஆர். கோபால்சாமி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இத் திருப்பணி சிறப்பாக நடைபெற அல்லும் பகலும் அயராது உழைத்த திருக்கோயில் நிருவாக அதிகாரி திரு என். எஸ். இராமச்சந்திரன் அவர்களுக்கும், மின் பொறியாளர் திரு. அர்த்தநாரி அவர்களுக்கும், கட்டிடப் பொறியாளர் திரு. ராம்ராசு அவர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந் நன்னீராட்டுப் பெருவிழா மிகச் சிறந்த முறையில் நடைபெறுவதற்குப் பெரிதும் துணை புரிந்த ஆணையர், திரு. கே. எஸ். நரசிம்மன் அவர்களுக்கும், துணை ஆணையர் திரு. எம். ஏ. முருகேசன் அவர்களுக்கும், பொறியியல் வல்லுநர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்கிக் கொள்ளுகின்றேன்.

இத் திருப்பணி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய வணக்கத்திற் குரிய மதுரை மாநகர மேயர், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர், மற்றும் காவல் துறை அதிகாரிகள், நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிய அகில இந்திய வானொலி நிலையத்தார், தமிழகச் செய்தித் துறையினர், பொதுப் பணித் துறையினர், மற்றும் இதர தமிழக அரசு அதிகாரிகள், செய்தி யாளர் ஆகிய அனைவருக்கும் எங்களது நன்றி உரித்தாகுக.

இந் நன்னீராட்டு விழாவினை முன்னிட்டுச் சிறப்பு மலர் வெளியிட்டுள் ளோம். இச் சிறப்பு மலர் சிறப்பாக அமையப் பொறுப்புடன் பணியாற்றிய திரு. ஏ. வி. ஜயசந்திரன் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம் மலருக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் நல்கி உதவிய வரலாற்றுப் பேராசிரியர்களுக்கும், தத்துவ மேதைகளுக்கும், அறிவியலாளர்களுக்கும், கலைஞர் களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச் சிறப்பு மலருக்கு முன்னுரை வழங்கிய மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசன் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டவன் அருளாலும், எல்லோரின் கூட்டு முயற்சியாலும் இக்குட முழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது குறித்துத் திருக் கோயில் சார்பில் என் நன்றியினை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

இது போன்று திருக்கோயிலை நன்கு பாதுகாத்து வரும் பொருட்டு இனிமேல் 12 ஆண்டுகட்கு ஒருமுறை திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடத்த முடிவு செய்துள்ளோம். அதனை அங்கயற்கண்ணியின் அருள் நிறைவு செய்ய வேண்டும் என இறைஞ்சுகிறேன்.

விசாலாட்சி,
மதுரை–625 002.

லெ. நாராயணன் செட்டியார்

முன்னுரை

அங்கயற்கண்ணியொடு எழுந்தருளிய சொக்கரின் திருக்கோயில் பெருஞ் சாந்தியையொட்டி உருவாகிய இம்மலர் இன்று மலர்கின்றது புதுமணத்துடன்.

மதுரைக் கும்பாபிடேக மலர், பொதுக்கட்டுரைகளின் தொகுப்பாக அமையாமல், மதுரைக் கோயிலைப்பற்றி உருவாகிய கருத்தோவியங்களாக அமைய வேண்டுமென்பது எம் அவா. இதனை வரவேற்று உறுதுணையாக நின்றார் துணை ஆணையர் திரு. எம். ஏ. முருகேசன் அவர்கள். அல்லும் பகலும் அயராது கோயில்களில் இறையுணர்வைப் பெருக்க உழைக்கும் உத்தமர் இவர். இறைமணம் கமழும் இலக்கிய வெளியீட்டுகள் பல உருவாக்கி உலகுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் மிகக் கொண்டவர். மலரின் அகத்தே என்ன இடம் பெறுதல்வேண்டும் என்ற திட்டம் வகுத்தோம். ஆகமங்கள், இலக்கியம், வரலாறு, கலை, நாட்டுப் பாடல், இசை முதலிய துறைகளில் வல்லுநர்களாக விளங்கும் அறிஞர் பெருமக்களுக்குப் பொருள் குறிப்பிட்டுக் கொடுத்து ஆய்வுக் கட்டுரைகள் வழங்க இறைஞ்சினோம். திட்டமிட்டதுபோல் கட்டுரைகளினைச் சேர்க்க முடியாவிடினும் சேர்ந்த கட்டுரைகளில் கோயிலைப்பற்றிய பல புதிய செய்திகளும், விளக்கங்களும் பெறுகிறோம். ஆணையர், துணை ஆணையர், அறங்காவலர்கள், நிருவாக அலுவலர் ஆகியோர் எனக்குப் பேராதரவு நல்கியதோடு கட்டுரைகளும் வழங்கினர். இப்பெருமக்களுக்கும் கட்டுரைகள் வழங்கிய பேராசிரியப் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள் யாவருக்கும் எங்கள் நன்றி உரித்தாகட்டும். இம்மலருக்கு அணிந்துரை அருளி என்னை ஊக்குவித்த தமிழ் மூதறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கு நான் என்ஞான்றும் கடமைப்பட்டவனாவேன். 1939-ல் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராக சேர்ந்தபோது அவருடைய முதல் வகுப்பில் மாணவனாகத் தொடங்கி இன்றும் மதுரைப் பல்கலைக் கழகத்தில் அவரிடம் மாணவனாக இருக்கும் நான் பெரும் பேறு பெற்றவன்.

சொற்சித்திரங்களோடு உறவாடி நிற்கும் ஓவியச்சித்திரங்களைப் படைத்துத் தந்த பெம்மான் திரு. ஆர். கிருஷ்ணராவ் அவர்கள் மதுரையைச் சேர்ந்தவர். சென்னையில் இயங்கும் தமிழ்நாடு ஓவியக் கல்லூரியின் முன்னாள் முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவர்; மதுரை மண்டபங்கள், கோபுரங்களுடன் பல மணி நேரங்களை கழித்து அவற்றுடன் ஒன்றியவர். அவருடைய ஓவியங்கள் மலரின் அழகுக்கு அழகு செய்வன.

மலர் வெளியிடும்போது உறுதுணையாக நின்று எனக்குப் பேராதரவுபுரிந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சுப்படிகளை ஒப்புநோக்கிப் பிழைதிருத்தித் தந்தும் உதவிய தமிழ்கடல் பண்டித மீ. கந்தசாமிப் புலவர் அவர்கட்கும், நல்லாசிரியர் திரு. டி. வி. சிவசுப்பிரமணிய ஐயர் பி. ஏ., பி. டி., அவர்கட்கும் என் நன்றி உரித்

தாகும் தமிழ்நாடு செய்தித்துறை நூலகராக விளங்கும் திரு. கு. மகாலிங்கம் அவர்கள் இம்மலருக்கு அணியாக விளங்க ஒரு பொருளடைவு ஆக்கித் தந்து என் உள்ளத்தில் சிறப்பிடம் பெற்றார். இப்பெரும் பணியில் எனக்குக் காலத்தைக் கருதாது, நோக்கறிந்து, அயராது உழைத்து உதவிய செல்வி ஆர். பாக்கிய லட்சுமிக்கு அன்னை மீனாட்சி எல்லா நலனும் அளிக்க வேண்டுகிறேன்.

நூலின் சிறப்பு அதன் கருத்து மலிந்த வாசகத்தோடு மட்டுமன்றி அதன் உருவத் திருமேனியின் அழகாலும் அமைந்துள்ளது. மலரின் சிறப்பையுணர்ந்து மேலும் அது அழகுடன் மிளிர அச்சடித்துத் தந்த மதுரைக் கூட்டுறவு அச்சகத் தாருக்கும் மற்றைய பணியாளருக்கும், சிறப்பாக அதன் அலுவலராக விளங்கும் திரு. எம். இராசாராம் அவர்களுக்கும், விஜயா அச்சகத்தின் உரிமையாளர் திரு. கே. இராமன் அவர்களுக்கும், புகைப்படங்களைச் சீரிய முறையில் தயாரித்துத் தந்த திரு. கு. இராமச்சந்திரன், திரு. இரத்தினம், திரு. காசிவிசுவநாதன் ஆகிய யாவருக்கும் நன்றி.

வாடும் மலரினைப் போன்று தோன்றி மறையாது வாடாமலராக இந்நூல் விளங்கிக், காலந்தொட்டு அருண்மிகு மீனாட்சி சுந்தரேசப் பெருமானின் ஆலயச் சிறப்பினை விளக்கி வருமெனக் கருதுகிறேன். இந்த மலரினை உருவாக்க எல்லாக் குறைபாடுகளும் கொண்ட அடியேனை அன்னை மீனாட்சி ஏன் ஆட்கொண்டாளோ அறியேன். அந்த அம்மையின் அருளையும், சோமசுந்தரப் பெருமானின் கருணை யையும் இந்நூலினைப் பார்வையிடும் எல்லா அன்பர்களும் எந்நாளும் பெற வேண்டுகிறேன்.

மதுரை
9—8—1974

ஏ. வி. ஜயசந்திரன்

INTRODUCTION

The idea of bringing under one volume all vital information culled out from various disciplines bearing on the Madurai Temple Complex was there in my mind for a long time, ever since the Temple Art Museum was set up in 1965 and little did I expect that an opportunity to weave out my dream into a reality would offer itself in the shape of the Editorship of this souvenir. I am indeed thankful to the Chairman of the Board of Trustees, Thiru L. Narayanan Chettiar, the members, of the Board of Trustees, the Executive Officer Thiru N. S. Ramachandran for the confidence they have reposed in me. Thiru M. A. Murugesan, the indefatigable Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowment Department has helped me considerably. To his credit goes a number of temple publications ably brought out by the temples under his control in the southern region of Tamil Nadu. To go to him with a problem is a pleasure for he has developed an uncanny instinct in sorting them out and in readily finding solutions for them. My thanks are specially due to him.

A scheme was drawn up to collect materials on the temple from several perspectives: literary, historical, religious, social, art, architectural, legendry, and cultural. The authorities on these subjects were requested to contribute articles and a galaxy of them had readily consented and sent materials. The souvenir had to be for obvious reasons bi-lingual. Nevertheless, it has not lost its aim in projecting a continuous account, through multifaceted sources, of the great temple. I am grateful to the learned scholars for having acceded to my request and sent articles in time. I am indeed thankful to the Vice-Chancellor, Madurai University Dr. M. Varadarajan, M. A., M. Litt., Ph. D., D. Litt. for his encouraging foreword.

Repetitions and overlapping cannot be totally avoided in a volume like this where several authors dealt with the same temple complex, nor can there be discussion in the rigid seclusion of one discipline alone.

Many scholars could not send their valuable contributions for want of time for the entire work was rushed through a very short segment of time, say, sixty days. Much against my wish the articles go without rigid rewriting, foot notes and bibliography, the the last two of which I intended to add to enhance the usefulness of the materials. Atleast I am happy that Thiru K. Mahalingam, Librarian, Information Centre gladly helped me in the preparation of a useful index.

The Madurai Co-operative Printing Press and Vijaya Printers have done their best in bringing out the souvenir in the shortest possible time. Our thanks are due to Thiru K. Raman Chettiar and Thiru M. Rajaram, Special Officer, Madurai Co-operative Printing Press. Professor R. Krishna Rao, Retired Principal, College of Arts & Crafts, Madras has ably illustrated this souvenir with his soulful sketches.


Photographs were prepared by Thiru K. Ramachandran, Thiru M. Ratnam and Thiru Kasi Viswanathan and our thanks are due to them too.

Lastly I should acknowledge the unstinted help I have profusely received from Selvi R. Bagyalakshmi, who sat with me through this stupendous work of collecting and editing the voluminous material within this short space of sixty days.

Rarely does one get this opportunity of dedicating oneself in this way to the cause of Meenakshi and Sundaresvarar and I feel that though I may have limitations, I have not been unaware of the great responsibility that has fallen to my lot. In thoughtful humility I have tried to face this challenging and pleasant responsibility.

MADURAI,
9—8—74

A. V. Jeyechandrun,



மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்மன்

ANANDA VIKATAN PRESS
MADRAS-2.



His Excellency V. V. GIRI
PRESIDENT OF INDIA.

திரு. வி. வி. கிரி
பாரதக் குடியரசுத் தலைவர்.



His Excellency K. K. SHAH
GOVERNOR OF TAMIL NADU

மேதகு. கே. கே. ஷா
ஆளுநர், தமிழ் நாடு,



Honb'le Kalaignar Dr. M. KARUNANIDHI
CHIEF MINISTER, TAMIL NADU.

மாண்புமிகு கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி
தமிழக முதல்வர்.



Honb'le M. KANNAPPAN
MINISTER FOR ENDOWMENTS

மாண்புமிகு மு. கண்ணப்பன்
அறநிலைய அமைச்சர்.

MESSAGES

வாழ்த்துரைகள்

Press Secretary to the President.
Rashtrapati Bhavan,
New Delhi - 110004.
May 25, 1974.

The President thanks you for your letter of the 18th May, 1974. He sends his best wishes for the success of the Souvenir which you are bringing out on the occasion of the Kumbhabishekam of Sri Meenakshi Sundaresvarar Temple, Madurai.

K. K. SHAH
Governor of Tamilnadu.

RAJ BHAVAN
Madras 600 022,
3rd May 1974.

I am glad to know that the Kumbhabishekam of Arulmigu Meenakshi Sundaresvarar Thirukkoil will be held on the 26th June 1974. I have offered worship at this temple many times and I am full of admiration for its magnificent architectural beauty. I wish the celebrations success.

மு. கண்ணப்பன்,
அறநிலைய அமைச்சர்.

சென்னை-9,
ஆகஸ்டு 6, 1974.

தென் பாண்டி நாட்டின் தலைநகராய் சரித்திரப் புகழ் பெற்றதும் சமயக் குரவர்களால் பாடப் பட்டதுமாகிய கூடல் மாநகரில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா ஜூன் 26, 1974 அன்று நடந்ததை ஒட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடயிருப்பதை அறிந்து மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன். மலர் இறை மணம் கமழ்ந்து மிளிறும் என்பதில் ஐயமில்லை. திருக்கோயில் நிர்வாகிகளின் இந்நன் முயற்ச்சி வெல்க என்று வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

Justice T. RAMAPRASADA RAO — May 20, 1974.

Judge, High Court, Madras.

I feel it is a blessing that I should be called upon to send a message touching on the importance of Arulmigu Meenakshi Sundaresvarar Temple and more particularly on the occasion of the *performance of* Kumbhabhishekam in the ancient and honoured temple.

The Divine but All Pervading Eyes of — Goddess Meena Akshi (Meenakshi) has such — global potential Grace that it is not history, *it is not archaeology,* it is not culture alone that attracts Pilgrims and tourists towards the Lotus Feet of Paramathmini and Paramatma. May be the mundane materialistic values of the Temple have exhibited an earthly charm so as to make them the cynosure of attraction. Personally I am of the view that the Divya Darsan of Matha Meenakshi and Pitha Sundaresvarar and their supreme and superhuman influence have indeed a magnetic effect which by itself explains the centre being the haven of the citizens of the universe. This historic shrine shines by itself as the very foundation of love and sympathy is visible everywhere within the Divine precints of the Temple. No doubt, the carvings in it have an aesthetic attraction besides proclaiming our heritage, tradition, culture, etc., which are spoken by the carvings themselves.

Kindly accept my humble but sincere good wises for the great success of the celebration.

Justice S. MAHARAJAN — June 5, 1974.

Judge, High Court, Madras.

I am happy to learn that the Kumbabishekam of Meenakshi Sundaresvarar Temple is one of the ancient temples in the South and is charged with a high mystic potency, as any devotee of Mother Meenakshi would know. The proposed Kumbabishekam is bound to reinforce and further strengthen the aura of the temple. Please convey my Namaskarams and felicitations to the members of the Kumbabishekam Committee.

Justice N. S. RAMASWAMI May 2, 1974

Judge, High Court, Madras.

I am very happy to know that souvenir is being brought out on the auspices occasion of the Mahakumbhabhishekam of Arulmigu Meenakshi Sundaresvarar temple. It is gratifying to know that the Mahakumbhabhishekam of this ancient historic and holy temple is coming off with in a comparitively short interval after the last Kumbhabhishekam. Considering the greatness of the temple which is known the world over and attracting men and women from many foreign countries it is quite befitting the occasion that a souvenir is brought out which, I am sure, would proclaim our ancient Culture and Tradition.

Justice S. RATNAVEL PANDIAN June 10, 1974.

Judge, High Court, Madras.

I am very glad to know that a Souvenir is being released in connection with the Kumbhabhishekam of Arulmigu Meenakshi Sundaresvarar Thirukkoil to be held on May 26, 1974.

I pray the God Almighty to bless you in all efforts in this connection.

Justice V. SETHURAMAN,
Judge, High Court, Madras.

May 22, 1974.

When Swami Vivekananda was asked as to how he reconciled the proposition that the God head was omnipresent with conception of pilgrimage to holy places, as if divinity was centred there, he asked for a lens to be brought and demonstrated that cotton kept under it caught fire when the sun's rays passed through it while cotton remained as it was when exposed to the sun. His point was that in these holy places, divinity was concentrated just as the sun's rays though present everywhere concentrated under a lens. Madurai is a place of historic importance and this temple has been the centre of worship for centuries. It has been sanctified by the Saivite Saints and Adi Sankara has composed verses in his inimitable style on Meenakshi. Those dedicated to the Devi cult attach great importance to worshipping in this temple.

Bhagwan Ramana has testified to his early spiritual experiences in this temple. Saint Manickavasagar and Neelakanta Dikshita have been associated with the temple. It is a place which has thus a continuous spiritual history about it. The anonymous sculptors spread over centuries of Pandyan and Nayak rule have lavished their skills in embellishing the tall and beautiful towers, the Mantapams in front of and around the main deities and also the ornate Kilimandapam. The temple presents a magnificent blend of the continuous process of the evolution of the art and architecture of our country. Thus any person interested in spiritual advance or studying the art treasures of this land needs no invitation to this temple.

The periodical sanctification cermonies have the effect of keeping this spiritual battery under continuous charge so that the divine grace continues to beam its current towards its devotees. The renovation keeps the art treasures away from the ravages of time. Let us all pray to the Goddess for her blessings for peace and prosperity.

கே. ராஜா, பி.ஏ., பி.எல்.,
துணை ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை.

சென்னை,
ஜூலை 25, 1974.

"மீன்கண் ணுடைய மீனும்பிகை போற்றி!
ஏழையின் ஏழ்மையை அகற்றினை போற்றி!"

என்று பலரும், தேவியை நன்கு உணர்ந்து 'சதாசிவனின் திருத்துணைவி! தாயே! பராசக்தி! சரசுவதியாய் இலட்சுமியாய், பார்வதியாய் ஆகிவீற்றிருக்கும் ஜோதி' என்றும் ஆகம நூல்களைக் கற்றறிந்த சிலரும் போற்றுவர். எல்லோரும் அருண்மிகு மீனாட்சியை 'எந்நிலையிலும் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும் இடையறாது நினைத்துக் கைவிடாது காத்தருளல்வேண்டும்' என்று பிரார்த்தனை செய்வதே பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அந்தச் சாதனையைப் பெறவேண்டும் என்பதே வாழ்க்கையின் குறிக் கோளாக இருக்க வேண்டும். மிக எளிதில் மனத்தில் பதியக்கூடியது அன்னையின் உருவம். உலகில் எல்லா உயிரையும் ஈன்று, அருள்சுரந்து காக்கும் கருணைத் திறனை நினைந்து, நினைந்து உருகி, அவள் திருவடிகளைப் போற்றுவதால் நம் கருத்தில் அன்னையின் அளவிலாப் பெருமைதான் முழுமையாக இடங் கொண்டிருக்கும்.

இம்முறையில் நாம் பக்தியுடன் இருந்தால் நமக்குக் குறைகள் உண்டாகும்பொழுது அன்னையிடத்தில் முறையிடுவது என்ற பழக்கம் வந்துவிடுகிறது. நம் திறமையால் ஆவது ஒன்றுமில்லை என்ற நிலையும் வாழ்க்கையில் ஏற்படுகிறது. இதுவே அவளிடம் சரண் புகுந்து திருவடிகளைப் பற்றுவதற்குச் சிறந்த வழியாக அமைகிறது. நம் கவலைகளை யெல்லாம் நாம் பொருட்படுத்துவது இல்லை. இவ்வாறு நாம் பக்தி செய்வதற்கு உறுதுணையாகத் திருக்கோயில் நிர்வாகத்தில் உள்ளவர்கள் சிறப்பாக வழிபாடு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தும் வந்திருக்கின்றார்கள், செய்து வருகின்றனர். அந்த நல்ல பாதையிலே தற்சமயம் செயலாற்றும் அறங்காவலர்களின் பணி, மக்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் அமைந்திருப்பதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் அன்னையின் அருளால் திருப்பணிகள் செய்தும், முக்கியமாகச் சுவர்ணபந்தனம் செய்தும் அஷ்டபந்தனம் செய்தும், மூர்த்திகளுக்குக் குடமுழுக்குச் செய்வித்திருப்பது மிகவும் போற்றத்தக்கது, பாராட்டத் தக்கது. இதுவும் மேலும் மேலும் மக்களை இறைவழிபாட்டில் ஈர்ப்பதற்குப் பேருதவியாயிருக்கும் என்று நம்புகிறேன். அறங்காவலர் குழு நிர்வாக அதிகாரி, ஆலய ஊழியர்கள் மற்றும் இந்த நற்பணியில் ஈடுபட்டோர் யாவருக்கும் எல்லா நலன்களும் கிடைக்கப்பெற அன்னை அருள்மிகு மீனாட்சியம்மன் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

அ. வெங்கடாசலம், பி. எஸ்ஸி., பி. எல்.,
துணை ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை.

சென்னை-34,
மே 30, 1974.

நம் தமிழ்நாட்டில் விளங்கி வரும் பழமையும் பெருமையும் மிக்க, நகரங்களில் தலைசிறந்த ஒன்றாகக் கருதப்படுவது மதுரைமா நகரமாகும். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து, இன்றளவும் அந்நகரம் மிக்க பெரும் சிறப்புடனும், தெய்வீக நலத்துடனும் விளங்கி வருகின்றது. சங்கப் பாடல்களிலும், சங்கம் மருவிய நூல்களாகிய சிலப்பதிகாரம் - மணிமேகலை என்னும் காப்பியங்களிலும், சைவ சமய ஆச்சார்யர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய சான்றோர்கள் பாடியருளிய திருமுறைப் பாடல்களிலும் மதுரைமா நகரம் பெரிதும் புகழ்ந்து பாராட்டப் பெற்றுள்ளது.

இவற்றிற்கு எல்லாம் காரணம், அந்நகரில் அருள்மிகு மீனாட்சியம்மையும் சுந்தரேசுவரப்பெருமானும் கோவில் கொண்டு எழுந்தருளியிருப்பதேயாகும். நம் தமிழகத்தில் உள்ள கோயில்களில் எல்லாம், மேலைநாட்டினரும் வந்து கண்டு வியந்து போற்றிப் பாராட்டும் நிலையில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் மிகச் சிறப்பாக அமைந்து திகழ்கின்றது. தமிழர்களின் ஒப்புயர்வற்ற கட்டிடக்கலை, சிற்பக்கலை முதலியவற்றுக்கெல்லாம், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் மிகச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்கி வருகின்றது.

இத்தகைய அளப்பெரும் சிறப்பு வாய்ந்த மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில், மேலும் பல புதிய திருப்பணிகள் செய்யப் பெற்றுத், திருக்குட நன்னீராட்டு விழா அண்மையில் 1974 ஜூன் 26 தேதியன்று நிகழவிருப்பது, நம் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சியைத் தரும் சிறந்ததொரு நிகழ்ச்சியாகும் என்பது திண்ணம். அங்கயற் கண்ணி உடனுறை ஆலவாய் அண்ணலின் திருவருளால் விழா மிகவும் சிறப்புற நடைபெறவும், அதன் நினைவாக வெளியிடப்பெறும் மலர் நன்கு இனிது அமையவும். என்னுடைய மனமார்ந்த நல் வாழ்த்துதல்களை, அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வி. சௌ. கோதண்டபாணி, பி.எஸ்ஸி., பி.எல்.,
துணை ஆணையர் & நிர்வாக அதிகாரி,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்.

பழனி,
மே 5, 1974.

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே"

"மதிமலி புரிசை மாடக் கூடற், பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற கன்னம் பயில் பொழில் ஆலவாய்" என்று இறைவனாலேயே பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்ததும், "பொங்கழல் உருவன் பூத நாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி, அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய்" எனத் திருஞானசம்பந்தரால் ஏத்தப் பெற்றதும், "தொடுக்கும் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே" எனப் புலவர் பாடும் புகழ் சால் மீனாட்சியம்மையார் அருட்செங் கோலோச்சும் பேறு பெற்றதுமான மதுரை மாநகர், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று சிறப்பும் ஒருங்கே கொண்டது. ஆன்மாக்கள் உய்ய ஆண்டவன் அறுபத்து நான்கு அருள் விளையாடல் புரிந்த இம்மதுரைத்தலம் தமிழும் சைவமும் தழைத்தினி தோங்கக் கலைநலம் கொழிக்கும் கவின்மிகவுடையது.

தமிழகத்தின் மையமாய் இலங்கும் இந்நகரின் நடுவே வானுர்ந்த கோபுரங்கள் சிவம் பெருக்க விளங்கும் அருள்மிகு மீனாட்சியம்மை—சுந்தரேசுவரர் ஆலயம், தமிழ் மக்களின் சமயம் கலைகள் ஆகியவற்றைக் காட்டியும், காத்தும் நிற்கும் கருவூலமாகும். இஃது அன்று மன்னர்களாலும், இன்று மக்களாலும், தங்கள் கண்ணெனப் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றது.

அம்மையும் அப்பனுமாய்த்திகழும் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் திருப்பணிகள் பலவற்றை நிறைவேற்றி, அண்மையில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற விருப்பது போற்றுதற்குரியதாகும்.

"மண்ணினில்பிறந் தார்பெறும் பயன் மதி சூடி அண்ணலார்......நல்விழாப் பொலிவுகண் டார்தல்" என்றபடி அவ்விழாவைக் கண்டு களிப்பது கண்படைத்தோர் பெறும் பயனாகும்.

குடநீராட்டு விழா நினைவாக வெளிவரும் மலர், சிறப்புற மலர்ந்து, ஆலவாய் இறை மணத்தை ஞாலமெல்லாம் பரப்ப அருள்புரியுமாறு, அருள்மிகு ஞானதண்டாயுத பாணி சுவாமியின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
மதுரை ஆதீனம்.

மதுரை.
ஏப்ரல் 30, 1974.

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

27-ம் தேதி எழுதிய அன்புருவாய கடிதம் கிடைத்து, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகத்தை ஒட்டி, ஒரு மலர் கொண்டுவர நிச்சியத்திருப்பதையறிந்து மகிழ்கிறோம்.

கும்பாபிஷேகம் யாதொரு விக்கினமுமின்றிச் சிறப்பாக நடந்தேறவும், அதனை ஒட்டி வெளியிடக்கருதியிருக்கும் மலர், மக்களிடையே பகதியையும், பண்பாட்டையும், அருள் நாட்டத்தையும் உண்டாக்கக்கூடியதாக அமையவும், அது சம்பந்தமாக தாங்கள் ஏற்றிருக்கும் பணி சிறக்கவும், திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல எம் அங்கயற் கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.
மே 16, 1974.

மதுரை மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் சிறந்து விளங்குவது. விராட்புருடனுக்கு இத்தலம் துவாதசாந்தத்தானமாக விளங்குவது. சீவன் முத்தித்தலம், பூலோக சிவலோகம் என்று புகழ்ப்பெறுவது. இறைவன் திருநடனம் புரியும் ஐந்து சபைகளில் இது வெள்ளியம்பலமாக விளங்குவது. பாண்டியன் ஒருவனது விண்ணப் பத்திற்கு இணங்க இறைவன் கால்மாறி ஆடிய சிறப்புடையது. மற்றும் 63 திருவிளையாடல்களை இறைவன் அடியார்கள் பொருட்டு அவ்வப்பொழுது எளிவந்து செய்த திருத்தலம், சக்தி பீடங்களிலும் இஃது ஒன்றாக விளங்குகின்றது. பாண்டி நாட்டின் தலைநகராக இருந்து பாண்டிய மன்னர்களால் சங்கம் நிறுவித் தமிழ்வளர்த்த பெருமை உடையது. இங்குள்ள இலிங்க மூர்த்தி மற்றைய அனைத்து மூர்த்திகளுக்கும் முதலாவதான சுயம்புலிங்கம். இதனை 'முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி' என்னும் அப்பர் திருவாக்கு வலியுறுத்துகின்றது. இதுபற்றியே நம் ஆதீன முதற்குரவ ராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

"ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—பாலொளியாம்
மத்தனே கடல் மதுராபுரி உமையாள்
அத்தன ஆலவாயா"

என்று போற்றியுள்ளார்கள்.

நம் ஆதீன முதற்குரவர் இறையருள் பெற்ற திருத்தலம் மதுரையம்பதியே. ஆலவாய்ச் சொக்கன் இவர்களுக்கு ஆன்மார்த்த மூர்த்தியாகப் பொற்றாமரைத் தீர்த்தத்திலிருந்து இவர்கள் கையில் எழுந்தருளினான். அதைக்கண்டு திருவருளை வியந்த அவர்கள்

"கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில் வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேயென்ன விஞ்சை யிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே"

என்று பாடித் துதித்தார்கள். அவர்கள் தங்கள் ஞானாசிரியர் கமலை ஞானப்பிரகாசர் அருளாணையின் வண்ணம் தருமைக்கு எழுந்தருளி ஞானபீடம் நிறுவி விளங்கியிருந்த பொழுதும் அவர்கள் அருள்வழித்தோன்றல்களாகிய குருமகா சந்நிதானங்கள் இப்பீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி செலுத்தியபோதும் இன்றும் ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூசிக்கப் பெற்று வருபவர் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானே. ஆதிபரமாசாரியர் தங்கள் அருள் வாழ்க்கையில், தருமையும் கமலையும் விரி தமிழ்க்கடலும் திருநகராக அரசு வீற்றிருந்தருளினார்கள். அத்தகைய அருட்பெருமை இன்றும் நம் ஆதீனத்திற்கு உள்ளது. இத்தலத்தில் நமது ஆதீன அடியவர் ஸ்ரீ குமரகுருபரர் பாடிய பிள்ளைத்தமிழை மீனாட்சியம்மை குழந்தை வடிவில் இருந்து கேட்டு முத்தாரத்தை அவர் கழுத்திலிட்டுச் சிறப்பித்தருளினார்கள். இவ்வாறு பல்லாற்றானும் தொடர்புடைய மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுஸ்வரர் திருக்கோயிலுக்கு இதுபொழுது அஷ்டபந்தன சுவர்ணபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதை அறிய நமக்கு மிக்க மகிழ்ச்சி விளைகின்றது. பதினோராண்டுகட்கு முன்பு மதுரைச் சொக்கநாதர் ஆலயத்திற்கு மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்த பொழுது 25வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் ஒரு லட்ச ரூபாய் வழங்கி மகாகும்பாபிஷேகம் இனிது நிகழச் செய்து தரிசித்து மகிழ்ந்தார்கள். ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தருடைய திருவுருவத்தை அவர்கள் சொக்கநாதர் கோபுரக் குடவரையில் அதிகார நந்திகேசுரருக்குரிய இடத்தில் பிரதிட்டை செய்வித்தார்கள்.

குருஞானசம்பந்தர் தாய்தந்தையரோடு மதுரைச் சொக்கநாதர் ஆலயத்திற்கு வந்து இறைவனை வழிபட்டுத் தமது ஊருக்குத் திரும்பும்போது சொக்கநாதரைப்பிரிந்து வருதற்கு மனமின்றித் தம் தாய்தந்தையரிடம் என் 'உயிர்க்குத் தொடர்ந்து தாயும் தந்தையுமாய் விளங்கும் இறைவன் இங்குள்ளான்; உங்களுளோடு வர இசையேன் என்று கூறி ஆலவாய்த் திருக்கோயிலியே தங்கினார் என்னும் வரலாற்றை நினைவூட்டுவதாக இப்பிரதிஷ்டை விளங்குகின்றது.

ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ சொக்கநாதரை ஆதிபரமாசாரியர் அன்போடு துதித்த அருட்பாமாலையாகிய சொக்கநாத வெண்பா நாடு முழுவதும் போற்றப்பெற்று வரும் அரிய தோத்திரநூல். அவர்கள் அரிய உபதேசங்கள் பலவற்றை அருளியுள்ளார்கள்.

உனக்குப் பணி செய்ய உன்றனை யெந்நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா—மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநாதா.

ஆறுதலை இல்லை அடியேனுக்கு அன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை — வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை

இவைபோன்ற திருப்பாடல்கள் குறிப்பிடத்தக்கன. இத்தகைய நம் ஆதீன ஆன்மார்த்த நாயகர் மதுரைச் சொக்கலிங்கப்பெருமானது மகாகும்பாபிஷேக விழா பல்லாற்றானும் சிறப்புற நிகழ்ந்து பலர்க்கும் திருவருட்பேற்றினை வழங்க அப்பெருமானது திருவடிகளையே சிந்தித்துப் போற்றுகின்றோம்.

இத்திருப்பணிகளில் ஈடுபடும் திரு. எல். நாராயணன் செட்டியார் உள்ளிட்ட அறங்காவலர் குழுவினர்க்கும், நிர்வாக அலுவலர் திரு. என். எஸ். இராமச்சந்திரன் முதலிய தொண்டர்கட்கும் நமது நல்லாசி.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அதிபர் ஸ்ரீ காசிமடம்.

திருப்பனந்தாள் 612504
(தஞ்சை ஜில்லா)
மே 6, 1974.

" போற்றியோர் குருவை யருள்கென வேண்டப்
புகலுரை தடைப்படும் யாங்கப்
புங்கவன் றனையே கொள்கென வசா
ரியிற்பகர் தலும்புற விடைகொண்
டாற்றல்சால் மதுரைக் கயற்கண்ணு யகிபிள்
ளைத்தமி ழியற்றுபு கைக்கொண்
டடைதலும் பரங்குன் றதுதிரு மலைநா
யகர்க்கம்மை கனவினி லருளத்
தேற்றிய வாறே யெதிர்கொடு பணிந்தன்
னவர்திரு முறையொடு மவரைக்
திறல்கயத் தேற்றிச் சந்நிதி சேர்க்கத்
திகழ்ந்தரங் கேற்றிழி வருகை
சாற்றுறு பருவத் துமையளைங் கோலந்
தயங்கநா யகர்மடி யமர்ந்து
தானுவந் தருளி மணிவிடந் தரிக்கும்
தகைபெறீஇ முற்றுவித் தனரே "

என்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திர சார பஞ்சகத்தில் கூறியுள்ள வண்ணம் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றுங்கால் அம்மை பிள்ளைத்தமிழ் கேட்டு உள்ளம் உவந்து ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளுக்கு

ஒள்ளிய முத்துமாலை அருளிய அற்புதம் நிகழ்ந்த பதி மதுரையாகும். மதுரையில் எழுந்தருளியிருந்தபொழுது ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பாடியருளியவையே மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், மதுரை மீனாட்சியம்மைக் குறம், மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை ஆகிய நூல்களாகும். ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மீனாட்சியம்மையை, மலைவல்லி, கர்ப்பூரவல்லி அபிராமவல்லி, மரகதவல்லி, அபிடேகவல்லி என்றும்;

தேக்கமழ் மதுரமொழுகிய தமிழின் இயல்பயில்
மதுரை மரகதவல்லி என்றும்
செஞ்சடைக் கருமிடற்றுத் தேவுக்குமுன்னின்ற தெய்வம் என்றும்
கடம்பாடவிக்குள் விளையாடும் ஒரு மடப்பிடி,
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒரு செல்வி,
தெளிதமிழ் மதுரையில் வளருமோர் இளமயில்,
அருள்சூல் கொண்ட அங்கயற்கண் அமுது,
சங்கம் வளர்த்திட நின்ற பொலன்கொடி,
தமிழொடு பிறந்து பழமதுரையில் வளர்ந்த கொடி,
தொடுக்கும் கடவுட் பழம்பாடற்றொடையின் பயன்
நறைபழுத்த துறைத்தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவை,
அகந்தைக்கிழங்கை யகழ்ந்தெடுக்கும் தொழும்பர்
உளக்கோவிற்கு ஏற்றும் விளக்கு,
புவனங் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக
எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியம்

—என்றும் இன்னோரன்னவாறு புகழ்ந்து பாடுவார்.

மீனாட்சியம்மையார்,
கிள்ளைக்கு மழலைப்பசுங்குதலை யொழுகு தங்கிளவி கற்பித்தனள்
மயிலுக்குக் கிளரிளஞ்சாயலை அளித்தனள்
நவ்விக்கு நோக்கைத் தந்தனள்;
அரசு அனப்பரவைக்கு மடநடைபயிற்றுவித்தனள்;

—என்று குமரகுருபர முனிவர் அருளுவர், இத்தகைய மீனாட்சியம்மையின் உடனுறை சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு விழா ஜூன் 26, 1974-ம் தேதி நடைபெறுவதறிந்து மகிழ்ச்சி. இக்குடமுழுக்கு விழாவையொட்டி வெளியிடப்பெறும மலா வடகலையலபலகலையொடு தமிழ் வளரும் கூடலம்பதியின் சிறப்புகளும் தமிழ்மதுரையில் ஒரு குமரியை மருவு சவுந்தரமாறர் — பாட்டுக்குருகும் தமிழ்ச்சொக்கர் தம் மாண்புகளும் பிறவும் கொண்ட வனப்பினதாய்ச் சிறந்து மிளிர்வதாகுக என்று செந்திலாண்டவன் திருவருளைச்சிந்திக்கின்றோம்.

இக்கும்பாபிஷேகப் பணியில் ஈடுபட்டு அயராது உழைத்துச் சிறப்புற நடாத்தும் கோயில் அறங்காவலர் நிர்வாகிகள் கும்பாபிஷேகக் குழுவினர் முதலிய யாவருக்கும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருவருள் மல்குவதாக. சுபம்.




Thiru K. S. NARASIMHAN, B. A., B. L., I. A. S.,
COMMISSIONER, HINDU RELIGIOUS & CHARITABLE ENDOWMENT DEPARTMENT.

திரு. கே. எஸ். நரசிம்மன். பி. ஏ, பி.. எல்., ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.




Thiru M. A. MURUGESAN, B. A., B. L.,
DEPUTY COMMISSIONER,
HINDU RELIGIOUS & CHARITABLE ENDOWMENT (ADMINISTRATION) DEPT.

திரு. எம். ஏ. முருகேசன், பி ஏ., பி. எல்.,
துணை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை.



Thiru L. NARAYANAN CHETTIAR, B. Sc.,
Chairman, Board of Trustees
Arulmigu Meenakshi Sundaresvarar Thirukkoil.

திரு. லெ. நாராயணன் செட்டியார், பி. எஸ். ஸி.,
தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்



Thiru T. THIAGIAH


MEMBER, BOARD OF TRUSTEES

ARULMIGU MEENAKSHI SUNDARESVARAR THIRUKKOIL.

திரு. தா. தியாகையா

உறுப்பினர், அறங்காவலர் குழு,

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்



Thiru R. GOPALSAMY


MEMBER, BOARD OF TRUSTEES

ARULMIGU MEENAKSHI SUNDARESVARAR THIRUKKOIL

திரு. இரா. கோபால்சாமி


உறுப்பினர், அறங்காவலர் குழு,

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்



Thiru N. PONNAPPAN
MEMBER, BOARD OF TRUSTEES
ARULMIGU MEENAKSHI SUNDARESVARAR THIRUKKOIL

திரு. நெ. பொன்னப்பன்
உறுப்பினர், அறங்காவவர் குழு
அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்



Thiru K. S. RAMAKRISHNAN

MEMBER, BOARD OF TRUSTEES

ARULMIGU MEENAKSHI SUNDARESVARAR THIRUKKOIL

திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன்

உறுப்பினர், அறங்காவலர் குழு


அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்



Thiru N. S. RAMACHANDRAN, B. A., B. L.,
ASSISTANT COMMISSIONER / EXECUTIVE OFFICER,
ARULMIGU MEENAKSHI SUNDARESVARAR THIRUKKOIL

திரு. என். எஸ். இராமச்சந்திரன், பி ஏ., பி எல்,
உதவி ஆணையர் நிர்வாக அதிகாரி
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

மதுரைக்கோயில் அமைப்பும் மாட்சிமையும்



கே. எஸ். நரசிம்மன்,
பி.ஏ.,பி.எல்., ஐ.ஏ.எஸ்.
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை.

நம் செந்தமிழ்த் திருநாடு, கோயில்களுக்கும் கோபுரங்களுக்கும் மிகவும் புகழ் பெற்றது, தமிழ் நாட்டிலுள்ள சிறந்த பல திருக்கோயில்களில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், சிறப்பும் முதன்மையும் மிக்கதாகும். தமிழ் மக்களின் பண்பட்ட உள்ளம் பரந்து விரிந்திருப்பது போல, மதுரைக் கோயிலும் பெரிதும் பரந்து விரிந்து, சிறந்த நிலையில் அமைந்துள்ளது,

அதன்கண் உள்ள கலையழகும் சிலையழகும் அளவிடற்பாலன அல்ல. அக் கோயிலினுள் இருக்கும் பல மண்டபங்களும், அரிய பல சிற்பத் திருவுருவங்களும், பொற்றாமரைக் குளமும், வானளாவ ஓங்கி விளங்கும் விமானங்களும், கண்பெற்ற பயனாகக் கண்டு களிக்கத் தக்கவை. அங்குள்ள ஒவ்வொரு கல்லும் கவிபாடும்; இசை மிழற்றும். அங்கேயுள்ள சுவர்கள் எல்லாம் காவியங்களும், ஓவியங்களும் நிறைந்திருக்கும். மதுரை நகரில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களை நினைவுறுத்தும் பற்பல சிற்பங்களையும், சித்திரங்களையும் அங்கே காணலாம். தமிழர் நாகரிகத்திற்கும், சிறந்த பண்பாட்டிற்கும் ஒரு பெரிய நிலைக்களனாகவும், எடுத்துக்காட்டாகவும் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் விளங்குகின்றது.


மதுரை நகரின் நடுவில் கிழக்குத்திசை நோக்கிக் கோயில் அமைந்துள்ளது. கோயிலின் நான்கு பெரிய கோபுரங்களும்; தொலைவில் இருந்து காணும்போதே, கண்களுக்குப் பெருவிருந்து அளிக்கும். மேற்குக் கோபுரம் வருகின்றவர்களை யெல்லாம் வரவேற்கும். இதிற் புராணக் கதைகள் பல, சுதையால் எழிலுறத் தீட்டப்பெற்றுள்ளன. தெற்குக் கோபுரம் மிகவும் உயரமானது. அதன் உயரம் 150 அடி. வடக்குக் கோபுரத்துக்குப் பக்கத்தில் 5 இசைத் தூண்கள் வரிசையாய் நிறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 22 தனித்தனி தண்டுகள் இருக்கின்றன. அவைகளை மெல்லெனத் தட்டினால், பல வியக்கத்தக்க ஓசைகள் தோன்றும். கோயிலுக்குள்ளே 8 கோபுரங்களும், 2 விமானங்களும் உள்ளன. வலப்புறம்

மீனாட்சியம்மை கோயிலும், இடப்புறம் சுந்தரேசுவரர் கோயிலும் அழகுற அமைந்துள்ளன.

அம்மையின் கோயிலுக்கு முன்னே வளைவுள்ள அஷ்டசக்தி மண்டபமும், சுந்தரேசுவரர் கோயிலுக்கு முன்னே பெரிய கோபுரமும் இருக்கின்றன. இதன் பக்கத்தில் கறுப்பண்ண சுவாமி கோயில் உள்ளது. மதுரை 64 சக்தி பீடங்களுள் தலைசிறந்ததொன்றாதலின், அருண்மிகு மீனாட்சியம்மையை முதலில் கண்டு தரிசித்துக்கொண்டே, அன்பர்கள் சுந்தரேசுவரப்பெருமானை வணங்கச் செல்வது வழக்கம். கோயிலுக்குள் ஆடி வீதியும், வெளியிற் சித்திரை வீதி, ஆவணிமூல வீதி, மாசி வீதி முதலிய பல வீதிகளும் உள்ளன. திருவிழாக் காலங்களில் முறையே அந்தந்த வீதிகளில் சுவாமி புறப்பாடு நிகழும். கோயிலின் சுற்றளவு கிழக்கும் மேற்குமாக 847 அடி. தெற்கு வடக்காக 730 அடி.

மீனாட்சியம்மை கோயில்

அம்மை கோயிலுக்கு முன்புள்ள அஷ்டசக்தி மண்டபத்தில், கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகாலட்சுமி, எக்குரூபிணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணி என்னும் எட்டுச் சக்தியின் வடிவங்கள் உள்ளன. மீனாட்சியம்மை வரலாறு முழுவதும், அழகிய ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளது.




இதனையடுத்தது மீனாட்சி நாயக்கர் மண்டபம்; திருமலை நாயக்கரின் அமைச்சர்களுள் ஒருவர் கட்டியது. 130 அடி நீளமும், 6 வரிசைகளில் அமைத்த தூண்களும் உடையது. இதன் மேல்விட்டத்தில் 12 இராசிகள் சதுர வடிவில் அமைக்கப்பெற்றிருப்பது, கண்டு மகிழ்தற்குரியது. இங்குப் பூக்கடைகள் முதலியன உள்ளன.

இதற்கு அடுத்து முதலியார் மண்டபம் இருக்கின்றது. அங்குப் பிட்சாடனர் தாருகா வன முனிவர், மோகினி, கடந்தை முதலியார் ஆகியோரின் சிலைகள் உள்ளன. இதனைக் கடந்து உள்ளே சென்றால் பொற்றாமரைக் குளம் காணப்படும். இதிலேயே சங்கப்பலகை இருந்ததாகக் கூறுவர். இக்குளத்தின் தெற்குச் சுவரில் திருப்பனந்தாள் காசி மடத்தின் பொருளுதவியால், 1330 திருக்குறட் பாடல்களும், வெண்சலவைக் கற்களில் தீட்டிப் பதிக்கப்பெற்று இருத்தலைக் காணலாம்.

அழகிய சிற்பங்கள்

பொற்றாமரைக் குளத்திற்கு மேற்கில் அம்மை சந்நிதிக்கு எதிரில், கிளிக் கட்டு மண்டபம் உள்ளது, யாளிகளின் சிற்பங்கள் இருப்பதனால், இதனை யாளி மண்டபம் என்றும், சங்கிலி மண்டபம் என்றும் கூறுவர், இங்குப் பஞ்ச பாண்டவர் சிலைகள் இருக்கின்றன. இம்மண்டபத்தில் அருண்மிகு மீனாட்சி யம்மை சந்நிதியின் பிரதான வாயில் உள்ளது. சித்தி விநாயகர் வலப்புறமும், குமரர் சந்நிதி இடப்புறமும் உள்ளன. தெற்கு வாயிலை அடுத்துக் காசி விசுவ நாதர் விசாலாட்சி சந்நிதியும், செவ்வந்தீசுவரர் கோயிலும், கிளிக்கூடும் உள்ளன. வடபுறத்தில் சுவாமி கோயிலுக்குச் செல்லும் நடுக்கட்டுக் கோபுர வாயில் உள்ளது. இங்குப் பல அழகிய சிற்பங்கள் உள்ளன.



அம்மையின் கோயிலுக்குள், இரண்டாம் பிரகாரத்தில் கிழக்கில் திருமலைநாயக்கர் மண்டப மும், மேற்கில் நவராத்திரி கொலு மண்டபமும், கூடற் குமரர் சந்நிதியும் இருக்கக் காணலாம். இப் பிரகாரத்துக்கு அடுத்து, அறுகாற் பீடவாயில் உள் ளது. இவ்விடத்தில்தான் குமரகுருபர சுவாமிகள் அருளிய ''மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்'' அரங் கேற்றப்பெற்றதாகக் கூறுவர். மூலத்தானத்தில் அருண்மிகு மீனாட்சியம்மை கண்கொள்ளாப் பேரழ குடன், கடைக்கண் நோக்கில் கருணை பொழிய, இரண்டு திருக் கைகளுடன், இளமைநலம் பொலிய இனிது எழுந்தருளிக் காட்சி யளித்து நலம் புரிந்து வருகின்றாள்.

சுந்தரேசுவரர் கோயில்

கிழக்குத் திசையில் உள்ள பெரிய கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால், வீரவசந்தராய மண்டபம் உள்ளது இது முத்துவீரப்ப நாயக்கரால் கி. பி. 1609-இல் கட்டப்பெற்றது. இதன் வடபுறத்தில் ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. இது கி. பி. 1559ல் மதுரையில் நாயக்க மரபினரின் ஆட்சியினை முதன் முதலில் நிறுவிய விசுவநாத நாயக்கர் அவர்களின் முதலமைச்சரும் படைத் தலைவருமாக விளங்கிய அரியநாத முதலியார் என்பவர் இதனைக் கட்டினார். அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் இங்குக் காணப்படும்.

வீரவசந்தராய மண்டபத்துக்குத் தென்புறத்தில் திருக்கலியாண மண்டபம் உள்ளது. இது விசயரங்க சொக்கநாத நாயக்கர் அவர்களாற் கட்டப்பெற்றது. இதில் சித்திரை மாதத்தில் அருண்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருமண விழா நடைபெறும். இதற்கு எதிரில் மருதப்ப சேர்வைகாரர் கட்டிய சேர்வைகாரர் மண்டபமும், முத்துராமையர் மண்டபமும் அமைந்துள்ளன.

கோயிலிலுள்ள மண்டபங்களிலெல்லாம் மிகவும் சிறப்புற்றுக் காணு டொறும் கண்ணையும் கருத்தையும் கவர்வதாகத் திகழ்வது, கம்பத்தடி மண்டபம், கொடித்தூண் மண்டபம் என்றும் இதனைக் கூறுவர். சகம் 1495-இல், கிருஷ்ண வீரப்ப நாயக்கர் என்பவரால், முதன் முதலில் கட்டப்பெற்ற அம்மண்டபம், அண்மையிற் சில காலத்திற்கு முன்பு நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்களாற் புதுப்பிக்கப்பெற்றது. அக்கினி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், பத்திரகாளி ஆகியோரின் திருவுருவங்கள் இங்கு மிகவும் நயத்தகு நிலையிற் பெரிய அளவில் விளங்குகின்றன.

கொடி மரச் சிற்பங்கள்



கொடிமரத்தின் இருபுறங்களிலும் பல சிற்பங்களைக் கொண்ட எட்டுப் பெரிய தூண்கள் உள்ளன, அவற்றில் கைலாசரூடர், சந்திரசேகரர், இடபாந்திகர், இலிங்கோற்பவர், சாமதகனர், நடராசர், சுகாசனர், காலசம்மாரர், மார்க்கண்டேயர், சோமசுந்தரர், கலியாணசுந்தரர், திரிபுராந்தகர், சங்கரநாராயணர், அர்த்தநாரீசுவரர், இடபாரூடர், ஏகபாதமூர்த்தி, சக்ரதரர், சலந்தரானுக்கிரகர், தட்சிணாமூர்த்தி, கஜசம்மாரர், சண்டேசானுக்கிரகர், சோமாஸ்கந்தர், கிராதார்ச்சுனர், உருத்திரர், பிட்சாடனர் என்னும் திருவுருங்கள் சிற்பத்திறன் அமையச் சிறந்து விளங்குகின்றன.

கம்பத்தடி மண்டபத்திற்கு வடக்கில், மண்டப நாயக மண்டபம் உள்ளது. இதனை நூற்றுக்கால் மண்டபம் என்பர், இது சின்னப்ப நாயக்கர் என்பவரால், சகம் 1448–இல் கட்டப்பட்டது.

இதற்குத் தென்புறம் உள்ளது திருஞானசம்பந்தர் மண்டபம். இதனைக் கட்டியவர் கிருஷ்ண வீரப்ப நாயக்கர். சுவாமி கோயிலின் பிரதான வாயிலைக் கடந்து, தென் பிராகாரத்துக்குச் சென்றால், முக்குறுணிப் பிள்ளையார் சந்நிதியைக் காணலாம். இப்பிராகாரத்தின் வடமேற்கில் கபிலர், பரணர், நக்கீரர் முதலிய சங்கப்புலவர் மண்டபம் உள்ளது, வடக்குப் பிராகாரத்தில் சங்கப் புலவர் உலா மண்டபம் இருக்கின்றது. உள்ளே தலவிருட்சம் ஆகிய பழைய கடம்ப மரம், வெள்ளித் தகடு பொருத்தப் பெற்றுள்ளது.

வெள்ளியம்பலம்

இக்கோயிலில் வெள்ளியம்பலம் உள்ளது, இங்கு நடராசப் பெருமான் கால்மாறி ஆடிக் காட்சி தருகின்றார், சாதாரணமாக, வலக்காலை ஊன்றி, இடக்


காலைத்தூக்கி ஆடுவதனையே, நடராசப் பெருமானின் திருவுருவங்களிற் காணலாம். ஆனால் இராசசேகரன் என்னும் பாண்டிய மன்னன் ஒருவனின் வேண்டுகோளுக்கு இணங்க, இங்குப் பெருமான் இடக்காலை ஊன்றி, வலக்காலைத் தூக்கி நடனம் ஆடுகின்றார்.

இக்கோயிலில் நடராசருக்குப் பஞ்ச சபைகள் உள்ளன. முதற் பிராகாரத்தில் கனகசபையும், இரத்தினசபையும், வெள்ளியம்பலத்தில் இரசித சபையும், நூற்றுக்கால் மண்டபத்தில் தேவ சபையும், ஆயிரக்கால் மண்டபத்தில் சித்திர சபையும் உள்ளன.

மூலத்தானத்தில் சொக்கலிங்கப் பெருமான் (அருண்மிகு சுந்தரேசுவரர்) எழுந்தருளியுள்ளார், இங்குள்ள விமானம் இந்திர விமானம் எனப்படும். அஃது எட்டு யானைகளால் தாங்கப்பெறுவது. 6 யானைகள் வெளிப்புறத்திலும், 2 யானைகள் மூலவர் பக்கத்திலும் உள்ளன. மூலவருக்கு சொக்கலிங்கர் என்றும், உற்சவருக்குச் சோமசுந்தரர் என்றும் பெயர்கள் வழங்கும்.

மற்றும் உள்ள மண்டபங்கள்

அருண்மிகு சுந்தரேசுவரர் கோயிலின் கீழ்ப்புறக் கோபுரத்துக்கு எதிரில் உள்ளது, புதுமண்டபம், இதனை 'வசந்த மண்டபம்' என்றும் கூறுவர். திருமலை நாயக்கர் கட்டியது இது. 333 அடி நீளமும் 105 அடி அகலமும், 25 அடி உயரமும் உள்ளது. 4 வரிசைகளில் 124 தூண்கள் உள்ளன. தூண்களிற் பலவகைச் சிறந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.




புது மண்டபத்துக்குக் கிழக்கே இராய கோபுரம் உள்ளது. 174 அடி நீளமும், 107 அடி அகலமும், நுழைவாயில் 22 அடி அகலமும் உள்ளது, 60அடி உயரமுள்ள நான்கு தூண்கள், மிகவும் சிற்ப வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. மற்றும் நகரா (மேள வாத்தியம்) மண்டபம், தேரடி மண்டபம், மைய மண்டபம் முதலிய பிறவும் உண்டு, இவைகள் அனைத்தும் கண்டு களிக்கத்தக்க சிறப்புடையவை.

மதுரையில் மற்றுமுள்ள கோயில்கள்

திருவாப்புடையார் (திருவாப்பனூர்க்) கோயில், வடதிரு வாலவாய்க் கோயில், காஞ்சனமாலை கோயில், ஆஞ்சநேயர் கோயில், தென்திருவாலவாய்க் கோயில், பைரவர் கோயில், செல்லத்தம்மன் கோயில், சப்தமாதர் வீரபத்திரர் கோயில், மாரியம்மன் கோயில். முத்தீசுவரர் கோயில், இம்மையிலும் நன்மை தருவார் கோயில், கூடலழகர் கோயில், சீனிவாசப்பெருமாள் கோயில், மதனகோபாலசாமி கோயில், முனீசுவரன் கோயில், பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில் முதலிய வேறு பல கோயில்களும் மதுரையில் உள்ளன. இவைகள் அனைத்தும் நாம் பலகால் தரிசித்து மகிழத்தக்கவை.

யார் அறிவார்? என்று குமரகுருபர அடிகள் பாடுகிருர். திருவிளையாடற் புராணம் தமிழ்ச் சங்கம் மதுரையில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது. எனவே, மதுரையும் தமிழும் இணைந்த ஒன்று என்பது ஐயத்திற்கு அப்பாற்பட்ட உறுதி.

மதுரைக்குப் பலபெயர்கள் இலக்கியங்களிலே காணப்படுகின்றன. விழாமலி மூதூர், கம்பலை மூதூர், ஆலவாயில், ஆலவாய், கடம்பவனம், கன்னிபுரம், கூடல், நான்மாடக்கூடல், பூலோக சிவலோகம், சிவபுரம், சீவன் முத்திபுரம் என்பன அவற்றுள் சில. அவற்றுள் ஆலவாயில் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. அது புராணச் செய்தி. ஆயினும், 'ஆலக்கோயில்' என்று நாவுக்கரசர் தேவாரம் குறிக்கின்றது. ஆலமரத்து நீழலில் இறைவன் எழுந்தருளியதால் ''ஆலக்கோயில்'' என்று வழங்கப்பட்டு, அதுவே ''ஆலவாய்'' ஆயிற்ருே என்று கருதவும் இடமிருக்கிறது. ''மாடம் மலி மறுகிற் கூடல்'' என்பது நெடுநெல்வாடை. ''மாடமலி மறுகிற் கூடலாங்கண்'' என்பது அகநானூறு. ''நான்மாடக் கூடல் நகர்'' என்பது பரிபாடல்.



''மடுவார்தென் மதுரைநகர் ஆல வாயில்
மறிகடல்சூழ் புனல்வாயில் மாட நீடு
குடவாயில் குணவாயில் ஆன தெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடா வன்றே''

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

'அருளும் பொருளும் புலமையும் நிறைந்த காரணத்தால் இம்மாமதுரை மீதமுள்ள உலகைக்காட்டிலும் பெருமை பெற்றது' என்று பரிபாடல் கூறுகிறது.


''உலகம் ஒருநிறைத் தாஞேர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க — உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்'' (பரிபாடல் திரட்டு 6-ஆம் பாடல்)

சேரரின் வஞ்சியும், சோழரின் புகாரும்போல் அழிந்துபடாமல் இன்றும் நிமிர்ந்து நிற்பது மதுரையின் மற்றுமொரு சிறப்பு. இது தமிழகத்தின் பெரும் பேறு. கோழியும், புகாரும் இன்று சிற்றூர்களாகச் சிதைந்துவிட்டன. வஞ்சியின் இருப்பிடம் ஆராய்ச்சியில் உள்ளது. ஆனல், மதுரை அன்றுபோல் இன்றும் தமிழினத்தின், தமிழ்ச்சாதியின் தலைநகராய் இருக்கிறது. அன்றுகூடக், கோழியிலும், வஞ்சியிலும், மற்ற நகரங்களிலும் உள்ள மக்கள், சேவல் கூவியே

எழுந்தனர். ஆனால் இம்மாமதுரை மக்கள் ''நான்மறைக் கேள்வி நவில்குரல் எழுப்ப ஏம மின்றுயில்'' எழுந்தனராம்.

''கோதி லாதசெஞ் சூட்டுடை வாரணம் கூவ
ஓத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பார்
ஈத லேற்றலோ டறுதொழி லிருபிறப் பாளர்
வேத நாதத்தின் விழிப்பரிவ் வியனகர் மாக்கள்'' (திருவாப்பனூர்ப் புராணம்)

பாண்டியர்க்குப்பின்பு, நாயக்க மன்னர்கள் மதுரையைத் தலைநகராகக்'' கொண்டு கி. பி. 14 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தனர். அவர்கள் காலத்தில் மதுரையும், அங்கயற்கண்ணி ஆலயமும் பலவாற்றானும் வளர்ந்திருக்கின்றன. கீழாவணிமூலவீதியில் இன்று 'மார்க்கெட்' இருக்கும் இடம், பழைய நாயக்கர்காலத்தில் அரசப்பிரதிநிதிகள் தங்குமிடமாக இருந்திருக்கிறது. கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள மாவட்டக் காவல் நிலைய அலுவலகங்கள் உள்ள இடம், பழைய நாயக்கர் காலத்துக் கட்டிடப் பாணியில் இருக்கிறது. விட்டவாயில் உள்ள பழம்பெரும் வாயிலும், மாநகராட்சிக் கட்டிடம் உள்ள இடமும் மதுரையில் பழம்பெரும் சின்னங்களாகும்.



அன்றும் இன்றும் அங்கயற்கண்ணி திருக்கோவில் மதுரையின் நடுநாயகமாக இருக்கிறது. வானுயர்ந்துவிளங்கும் வண்ணக்கோபுரங்கள், இக்கோவில் மாநகருக்குப் பெருமை அளிக்கின்றன. கோவிலைச்சுற்றியுள்ள திருமதிலும், திருச் சுற்றுகளும், சொக்கநாதர் திருமுன்பும், அம்மையின் திருமுன்பும், எழில்மிகு மண்டபங்களும் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்து. மதுரைக் கோவில் கலைச் செல்வம் மலிந்த மூல பண்டாரம். அன்றும் இன்றும் மக்களின் வாழ்வில் கோவில் பின்னிப் பிணைந்து உள்ளது. இன்றும் மாலை நேரத்தில் சாரைசாரையாக ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் வழிபாட்டுப் பொருள்களைக் கையிலேந்தி அம்மையையும் அப்பனையும் முறையோடு வழிபட்டுவருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த நிலை அன்றும் இருந்திருக்கிறது.

''சூடக முன்கை மடந்தை மார்கள்
துணைவரொடும் தொழுதேத்தி வாழ்த்த
ஆடக மாட நெருங்குகூடல் ஆலவாயில்''

என்பது சம்பந்தர் தேவாரம். இந்தக் கருத்து மதுரைக் காஞ்சியிலும் பேசப்படுகிறது.

''திண்கதிர் மதரணி யொண்குறு மாக்களை
ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்

தாமு மவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுதனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்கும்'' (மதுரைக் காஞ்சி)

வரலாறும் புராணமும் பேசுகின்ற மதுரைதான் இன்றைய மதுரையோ என்பது ஆராய்ச்சிக்குரியது. பாண்டியரின் தலைநகராகிய மதுரை, திருப்பரங் குன்றத்திற்குக் கிழக்கே இருந்ததாக ''மாடமலி மறுகில் கூடற் குடவயின்,' என்ற திருமுருகாற்றுப்படை வரி தெரிவிக்கிறது.

''கூடற் குடவையில் பரங்குன்று'' என்பது நக்கீரர் வாக்கு. ஆகவே, மதுரை பரங்குன்றின் கிழக்கே இருந்திருக்கவேண்டும். அனால், இன்றிருக்கும் மதுரை திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கில் இல்லை. ''வைகையின் வடகரை மருவிய ஏடகத் தையனை'' என்ற சம்பந்தர் தேவாரம் திருவேடகத்தைக் கூறுகிறது. ஆனால், இன்று ஏடகம் வைகை வடகரையில் இல்லை; இடக்கரையில் இருக்கிறது. இதிலிருந்து வையை வழிமாறிப்போயிருக்கலாம் என்று எண்ண இடம் இருக்கிறது. வைகையின் வழிமாற்றமும், மதுரையின் திசைமாற்றமும் ஆராய்ச்சியாளருக்கு நல் விருந்து. கோவலன் கொலையுண்ட இடம், பழங்காநத்தம் என்ற இடத்தில் ''கோவலன் பொட்டல்'' என்று இன்றும் வழங்கிவருகின்றது. கோயில் இருந்த இடம் 'ஆலவாய்' என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இவைகளிலிருந்து மதுரைநகரமும் அங்கயற்கண்ணி ஆலயமும் தனித்தனியே இருந்திருக்கலா மென்று தோன்றுகிறது.

இன்றைய மதுரை, அங்கயற்கண்ணி ஆலயத்தை மையமாகக்கொண்டு நகரமைப்புகளுக்கெல்லாம் முன்மாதிரியாக அமைந்திருக்கிறது. இந்த அமைப்புப் பரிபாடல் காலத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
''பூவோடு புரையும் சீருர் பூவின்
இதழகத் தனைய தெருவம் இதழகத்
தரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர்.. ......பரிசில் வாழ்நர்''

என்பது பரிபாடல் திரட்டு 7ஆம் பாடல். இப்பாடல் மதுரையைத் திருமாலின் கொப்பூழில் மலர்ந்த தாமரையாகவும், நகரத்தெருக்களை அத்தாமரையின் இதழ்களாகவும், தெருக்களின் நடுவேயமைந்த சொக்கரின் திருக்கோயிலை, அவ்விதழ்களின் நடுவில் உள்ளகாயாகவும் காட்டுகிறது. இதில் ''அண்ணல்'' என்று சோமசுந்தரைக் குறிப்பிட்டிருப்பதும், அங்கயற்கண்ணியைக் குறிப்பிடாததும் ஆய்ந்து உணரத்தக்கன.

'நாகரிகத்தின் தொட்டில்கள்' என்று வரலாற்று ஆசிரியர்கள் புகழ்ந்து பேசும் பலநகரங்கள், இன்று பொய்யாய்ப் பழங்கதையாய்வரலாற்றுஏடுகளில்தான் இருக்கின்றன. எம்மாமதுரை அன்றுதொட்டு இன்றுவரை உயிர்ப்புள்ள தலை நகராய்ச் செல்வமலி திருநகராய்ச், சமயத்தின் ஊற்றாய் விளங்குகிறது. தமிழகத்தின் திருக்கோயில்களிலெல்லாம் இன்று மிகுந்த உயிர்ப்புள்ள கோயிலாக (Most living Temple) விளங்குவது அங்கயற்கண்ணி ஆலயமே.

திருமுழுக்குப் பெருவிழா

லெ. நாராயணன் செட்டியார்
தலைவர், அறங்காவலர் குழு

மதுரைத் திருக்கோவில் மிகப்பழங்காலந்தொட்டே பெருஞ்சிறப்பு வாய்ந்தது. பாண்டிய மன்னர்களின் புகழ்மிகுந்த ஆட்சிக்காலத்தில் இதனைத் தமிழின் உறைவிடமாகவும், சங்கத்தின் தங்கத் தொட்டிலாகவும், பக்தியின் தாயகமாகவும் அவர் பேணிக்காத்தனர். உலகப்பொதுமறையாம் திருக்குறள் அரங்கேறிய இடமும் இத்திருக்கோயிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில்தான் உள்ளது. சுற்றிலும் அமைந்த நாற்புற வீதிகள், தாமரை இதழ்கள்போலவும், நடுவே பொலிவுடைய திருக்கோயில் அமைந்திருந்த காட்சி, அதன்நடுவே இருக்கும் பொகுட்டுப் போலவும் இருந்தனவென மதுரைக்காஞ்சியில் ஆசிரியர் மாங்குடி மருதனார் பாடியுள்ளார்.

இடைக்காலத்தில் இத்திருக்கோயில், சைவத்தின் திகழிடமாக இலங்கிற்று. ஆலவாய் என்ற பெயரால் இதனைத் தேவார மூவர் பாடியருளினர். மாணிக்கவாசகர்பொருட்டு மண்சுமந்த திருவிளையாடலையும் இங்கேதான் இறைவன் நிகழ்த்தினான். ஞான சம்பந்தப் பெருமான் இக்கோயிலை வழிபட்டுச் சமண இருள் நீக்கிச் சைவ ஒளி பரவச் செய்தார். பிற்காலத்தே மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள், இக்கோயிலை மிகப் பெரிதாக்கிப் பற்பல திருப்பணிகளை மேற்கொண்டனர்; ஊருக்குக் கிழக்கே மிகப்பெரிய மாரியம்மன் தெப்பக்குளத்தையும், கோவிலின் முன்பு கலைச் செல்வங்கள் நிறைந்த புதுமண்டபத்தையும் செப்பமுற அமைத்தனர்; கோயில் விமானங்களுக்குப் பொன் வேய்ந்தனர்; திருவிழாக்களை அமைத்து நிவந்தங்களும் அளித்தனர்.

திங்கள்தோறும் திருவிழா நடைபெறும் திருக்கோயில், இதுபோல எங்குமில்லை. ஆவணிமூல விழாவில் இறைவனது திருவிளையாடல்களை இன்றும் நடத்தி வருவதும், சித்திரைத் திருவிழாவைச் சைவ-வைணவ ஒருமைப்பாட்டு முத்திரைத் திருவிழாவாகக் கொண்டாடுவதும் இவ்வூரின் தனிச் சிறப்பு.

பொற்கிழிக் கவிஞர்

தருமிக்குப் பொற்கிழி அளிக்க இறைவன் தோன்றி நடந்த மண் இந்த மண். இந்நிலையை இன்றும் உயிர்ப்பிக்கக் கருதி அருண்மிகு மீனாட்சியம்மை மீது அருள்கவிதையாக்கும் போட்டியொன்றை அறிவித்து, வரப்பெற்ற கவிதைகளைப் பார்வையிட்டுச் சிறந்தவற்றைச் தேர்ந்துள்ளனர். பரிசுபெற்ற கவிஞர்க்குப் 'பொற்கிழிக் கவிஞர்' என்ற பட்டமும் முறையே 1001, 501, 201 பொற்காசுகளும் அளிக்க இருக்கின்றனர்.


பின்னர் நகரத்தார் பெருமக்கள், குறிப்பாக வயிநாகரம் குடும்பத்தினர், வடக்குக் கோபுரப் பணியும், தளங்களில் கல்பரப்பும் பணியும், திருக்கலியாண மண்டபம் எழுப்பும்பணியும் மதிலையொட்டி நந்தவனம் அமைக்கும் பணியும் பெரும்பொருட் செலவில் செய்து முடித்துள்ளனர்.

1963ஆம் ஆண்டு தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள் தலைமையில் அமைந்தகுழு சிறப்பாகக் குடமுழுக்கு விழாவினைச் செய்தது.


திருக்கோயில் இயங்கும் முறை

தமிழர் நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் கட்டிக்காப்பதற்காக நமது முன்னோரால் வேத விதியின் அடிப்படையில் ஆலய நன்னூல்களின் முறைப்படி எழுப்பப் பெற்று இயங்கி வருவது இத்திருக்கோயில்.

தென்னகத்திலேயே மிகப் பெரிய இத் திருக்கோயில் நிருவாகப் பொறுப்பு



அறங்காவலர் குழுவினிடத்திலும், இந்து அற நிலைய அமைச்சிடமும், ஆணையாளர், துணை ஆணையாளர் தொடக்கத் தவராகிய பொறுப் பாளர்களிடமும் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. இத்தன்மையே இதன் சீரான இயங்கு முறைக்கு அடிப்படைக் காரணமாக இலங்குகிறது.



வழிகாட்டிப் பயிற்சி :

வழிகாட்டிகள் இன்றியமையாதவர் என்பதைக் கருத்தில் கொண்டு பல துறைகளில் ஈடுபட்டுள்ள ஏறத்தாழ 120 பேர்களுக்குப் (வேலையில் இருப்பவர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், மாணவர்கள்) பேரறிஞர்களைக் கொண்டு பயிற்சி (Tourist Guide—வழிகாட்டிப் பயிற்சி) அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

அறங்காவலர் குழு :

தலைவர் ஒருவர் உள்ளிட்ட ஐந்து உறுப்பினர் கொண்ட அறங்காவலர் குழு இக்கோயிலை நிருவகிப்பதில் கருத்துடன் இயங்கி வருகிறது. மாதத்திற்கு ஒரு முறை அறங்காவலர் குழுவினர்கூடித் திருக்கோவிலின் நடைமுறைகளுக்கான திருத்தங்களையும் மாற்றங்களையும் ஆற்றி வருகின்றனர்.

நிருவாகம் :

கோயிலின் அன்றாடப் பணிகளை நிருவாக அதிகாரி அவர்கள் ஆற்றி வருகிறார்கள். கோயிற் பணியாளர்களை மேற்பார்த்தல், திருச்சுற்றுகளையும், திருக்கோயிலையும் தூய்மையாக வைத்திருக்கச் செய்தல், போக்கும் வரவுமில்லாப் புண்ணியனின் திருக்கோவில் வரவு செலவுக் கணக்குகளைப் பாதுகாத்தல், நந்தவனம் பேணிக்காத்தல் முதலிய அனைத்துப் பணிகளும் இவரால் செவ்வன் இயற்றப்பெறுகின்றன.

நித்தியவழிபாடு :

திருக்கோயில்களில் நித்தமும் வழிபாடு சிறப்புற நடக்க மிகப்பழமையான நெறிமுறைகள் கையாளப் பெறுகின்றன. பக்தர்கள் மன ஆறுதலுக்குக் காரண மாம் நமது இறைவி திருக்கோவிலில் ஆறுகால பூசையும் வேறுவேறு சிறப்புடன் நடைபெறுகின்றன. திருவனந்தல், காலசந்தி, திரிகாலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்ற ஆறுகால பூசையும் பள்ளியறை என்ற நிறைவுப் பூசனையும் இங்கு நித்தலும் நிகழ்கின்றன.

தொன்றுபடு நன்னெறி :



திருக்கோயில்களைக் கட்டும் முறைகளும், தெய்வத் திருமேனிகளைப் பிரதிட்டை செய்யும் நெறிகளும், வழிபாட்டு நிலைகளை வகுக்கும் வழிகளும், என்று தோன்றியதென உணர முடியாத இயல்பிற்றுய வேதங்களையும், ஆகமங்களையும் அடிப்படையாகக் கொண்டே நிகழ்வன. நீள நின்று, நினைந்துபார்த்து, மூலப் பொருளாம் உண்மையை ஓர்ந்து கடைப்பிடிப்பதே நமக்கே உரிய சமயமும் பண்பாடும் பொலிவுற்றுத் திகழச் சிறந்த வழி. தொன்றுபடு இந்நன்னெறியில் நாம் நின்றுபட உறுதி கொள்ள வேண்டும்.

திருமுழுக்குப் பெருவிழா :

பன்னிரண்டாண்டிற்கு ஒரு முறை திரு முழுக்குப் பெருவிழா நிகழ்த்த வேண்டுவது ஆகம விதி. பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் பொலிவு தரும் இறைவனது பழம் பெருங்கோயிலைப் புனைந்து புதுமையாக்கும் பணி முற்றிலும் ஏற்புடையது. இப்பணியில் ஈடுபடுத்திய இறையருளை இறைஞ்சுவன். நம்மைச் சுற்றிலும் நிற்கும் எல்லாப் பிணிகளும் அகல, நன்மையும் வளமும் சுரக்க, இன்பமும் எழிலும் எங்கணும் தங்க எங்கள் தாய் அங்கயற்கண்ணியும், ஆலவாய்ச் சொக்கரும் அருள் தருவாராக.

பார்வையாளர் புத்தகம்: கோயிற் கலைக்கூடம்

மதுரைக் கோயில் கலைப் பொருட்காட்சி சாலையைக் கண்ணுறும் வாய்ப்பினை இன்று பெற்றுப் பெருமகிழ்வுற்றேன். பொருட்காட்சிச்சாலை மிகச்சிறப்பாகவும், தமிழகத்தின் தொன்மையான சிற்பக்கலைச்சிறப்பையும், நாகரிக மேம்பாட்டையும், பண்பாட்டு உயர்வையும் தெளிவாகக் காட்டுவதாகவும் அமைந்திருப்பது பாராட்டுவதற்குரியது. இந்தப் பொருட்காட்சிச்சாலை உலகோர் கண்ணையும், கருத்தையும் பெரிதும் ஈர்த்து, அவர்களை வியப்பில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை. வாழ்க இந்தக் காட்சிச்சாலை! வளர்க இதன் சிறப்பு! ஓங்குக இதன் புகழ்!

இரா. நெடுஞ்செழியன்,
கல்வி, தொழில் – அறநிலையப்
பாதுகாப்பு அமைச்சர்,
தமிழ்நாடு.

டிசம்பர் 15, 1967

தொடரட்டும் பணி

தா. தியாகய்யா, அறங்காவலர்



" தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇய புகழ்பூத்தல் அல்லது
குன்றுதல் உண்டோ மதுரை கொடித்தேரான்
குன்றம்உண் டாகும் அளவு" என்பது—பரிபாடல்

பாண்டிமன்னன் உரிமை பூண்டொழுகும் பொதியமலைபோல் ஏற்றமும் சிறப்பும் கொண்டுவிளங்குவது மதுரை மாநகரமாகும். பாடல்பெற்ற பாண்டி நாட்டுப் பதினான்கு தலங்களுள், மதுரைக்கு முதன்மையும் தனிச் சிறப்பும் உண்டு. சைவத் தலங்கள் அறுபத்தெட்டினுள் திருவாலவாய் என்னும் மதுரை தலை சிறந்தது. இத்தகைய சிறப்புப் பெற்றது மதுரை.

மதுரம் என்றால் இனிமை என்று பொருள்தரும். தமிழ் என்ற சொல் இனிமை அழகு என்ற பொருளைத் தரும். மதுரைக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பு இரண்டறக் கலந்த பிணைப்பாகும். முதலிடைகடை என்ற முச்சங்கங்களில் கடைச்சங்கங் கண்டு இயல், இசை, கூத்து என்ற முத்தமிழையும் போற்றி வளர்த்த பெருமை மதுரைக்கே உண்டு.

இம்மதுரை மாநகரின் நடுநாயகமாக விளங்குவது அடியவர்கட்கு அருள் சுரக்கும் அம்மை அங்கயற்கண்ணியின் அருண்மிகு திருக்கோயிலாம். ஆலயத்தைச் சுற்றி நாற்புறமும் அமைந்த அழகான திருவீதிகள். ஆடிவீதி, சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி, பெருமாள் மேஸ்திரி வீதி, மாரட் வீதி, வெளி வீதி என்பன. அன்று அணிதேர்களும் கரியும் பரியும் வலம் வந்த சாலைகளில் இன்று மிதி வண்டிகளும், கரும்புகை ஊதிச் செல்லும் பேருந்துகளும், பிற வண்டிகளும் செல்லுவது கண்கொள்ளாக் காட்சி. இவை பற்றிச் சிறிது எண்ணுவோமேயானால் நகரின் தொன்மையும் புதுமையும் விளங்கும்.

அடுக்கடுக்காக இதழுடன் அமைந்த அழகிய செந்தாமரை மலர்நடுவே உள்ள மகரந்தம் உண்ண விரைந்துசெல்லும் வண்ணச் சிறகுடன் கூடிய

வண்டுகள்போல், அம்மையின் அருள்நாடி ஆலயத்திற்குள் சென்று திரும்பு கின்றார்கள் அடியவர்கள். ஆலயத்தின் அமைப்பு, அடுக்கடுக்காகத் தாமரை மலர் போன்ற அமைப்பாகும்.



இத்திருக்கோயிலினுள் அமைந்த கலைச்செல்வங்கள், பழந்தமிழ் மக்களின் மொழி, கலை, பண்பாடு பழக்கவழக்கங் களை, பிற்கால மக்கட்கு எடுத்து விளக் கும் எழிலோவியங்களாகத் திகழ்வன. மக்களின் அணிகலன், ஆடை, படைக் கலங்கள், மற்றும் கருவிகள் முதலிய வற்றை எடுத்துக்காட்டும் சிற்பங்கள் பலப்பல. பொற்றாமரைக் குளச் சுற்றுச் சுவரில் காணப்படும் வண்ணச் சுவ ரோவியங்கள் கருத்தாழமும், கைத் திறனும், காண்போரை ஈர்க்கும் பேரழகும் கொண்டவை; வரலாற்றுச் சிறப்புங் கொண்டவை.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலக ஒருமைப்பாட்டை உலகுக்கு உணர்த்தியவர்கள் தமிழர்கள். அவர்கள் உள்ளம் விண்போன்று பரந்தது. திங்கள் போன்ற தண்மைகொண்டது. இதுபோன்றே அங்கயற்கண்ணியின் கோயிலும் பரந்து விரிந்து அமைந்த கோயிலாகும். கலையின் வடிவமாகக் கயற் கண்ணியின் கோயில், காட்சி அளிக்கின்றது. கோயிலினுள்ளே எத்தனை எத்தனை எழில் தூண்கள்! சிலைகள்! சிற்பங்கள்! அழகின் சிரிப்பை ஆயிரங்கால் மண்டபத் துள் காண்கின்றோம். இத்தனைக்கும் மேலாக விண்ணைமுட்டும் கோபுரங்கள், கோபுரங்களின் முடிகட்கு அழகூட்டும் கோபுரக் கலசங்கள், திருமுழுக்குப் பெறும் திருக்குடங்கள், இத்தனையும்கொண்டு ஏற்றமுடன் விளங்கும் இத்திருக்கோவிலி னுள் இருந்து மக்கட்கு அருள் சுரக்கும் ஆலவாய் அண்ணல், அம்மை அங்கயற் கண்ணியின் திருக்கோலந்தான் என்னே!

கடைக்காலப் பாண்டிய மன்னர்களாலும், பிற்கால நாயக்க மன்னர் களாலும் கட்டிமுடிக்கப்பட்டது இத்திருக்கோயில். முடிமன்னர் கட்டிமுடித்த இத்திருக்கோயிலுக்குக் குடியரசு இன்று குடகுழுக்கு விழாவெடுத்துச் சிறப்புச் செய்கிறது. எத்தனையோ குடமுழுக்கு விழாக்கள் எடுக்கப்பட்டுவிட்டன, இத் திருக்கோயிலுக்கு.

அந்தக்கோடையில், பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை பூத்துக்குலுங்கி இனிமைதரும் குறிஞ்சிமலர்போலப் பன்னிரண்டாண்டைக் கடந்து நாம் பொறுப்பேற்றுச் செயல்படும் இந்தக்கோடையில், ஆண்டு அறுபதில் தனிச் சிறப்புக்கொண்ட இந்த ஆனந்த ஆண்டு, ஆனித்திங்கள் பன்னிரண்டாவது

நாளில் நடைபெறும் ஆலவாய்ச் சொக்கர், அங்கயற்கண்ணியின் ஆலயத் திருக்குடமுழுக்குவிழா, நாட்டுக்கு நன்மையும், மக்கட்கு நல்வாழ்வும் நல்குவதொன்ருகும். கலைத்திறனும் கட்டிடத்திறனும்கொண்ட திருக்கோயில்களெல்லாவற்றுள்ளும் அங்கயற்கண்ணியின் ஆலயம் தனித்ததொரு சிறப்புக்கொண்டதாகும்.



எழிலுமிழும் இத்திருக்கோயிலை நன்முறையில் தொடர்ந்து பேணிக்காத்து வருகின்ருேம், என்பதைக் காட்டுவதுதான் இன்று சீராகவும், சிறப்பாகவும், கடமை உணர்வோடும் செய்யும் இத்திருப்பணியாகும்.

நாம் இன்று செய்துவரும் இத்திருப்பணி பாழ்பட்ட சிற்பங்களுக்கும் சுவர்கட்கும், ஒளி மழுங்கிய கோபுரக் கலசங்களுக்கும் மட்டும் தான். இதுவரை நாம் செய்திருக்கும் பணி, நம்மால் இயன்ற திருப்பணி, இன்னும் செய்ய எண்ணிக் கொண்டிருக்கும் திருப்பணி ஏராளம், ஏராளம்!

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பது பெரியார் அப்பரடிகளின் திருவாக்கு. அதற்கிணங்கத் தொடரட்டும் பணி! மக்கள் உள்ளத்தில் அரும்பட்டும் தொண்டுள்ளம்.

பார்வையாளர் புத்தகம்: கோயிற் கலைக்கூடம்

காலத்தையும் கடந்து, தொன்மையின் உயர்வையும் கலையின் அழியாத்தன்மையையும் என்றென்றும் எடுத்துக்காட்டி நிலைத்து நின்று உள்ளம்கவர் கலையின் பெருமையை புகன்று நிற்கும் இக்கலைக்கூடம் காண்பவர் மனதில் நிலைத்து நிற்கும். அமைத்தவர் தமிழர். அனைவரின் மறவா நன்றிக்கும் பாராட்டிற்கும் உரியவர். உயர்ந்தவர் பிறரை ஊக்குவிக்கும் பொருட்டு.

டிசம்பர் 2, 1971

கா. து. நடராசன்,
செயலாளர்,
தமிழ் சட்டப் பேரவை.

திருமலை மன்னனை நினைவு கொள்வோம்

ஆர். கோபால்சாமி நாயக்கர், அறங்காவலர்.

இந்தியத்துணைக்கண்டத்தில் "ஏதென்ஸ்" என அழைக்கப்படும் மாமதுரையில் அன்னை மீனாட்சி ஆலயம் தமிழனின் தனிப்பெரும் பெருமைக்கு அறிகுறி. தன்னிகரில்லாத திராவிடக் கலாச்சாரத்தின் தனிச்சிறப்புக்கு ஓரடையாளம். உலகெங்கும் இத்தகையதோர் ஆலயமோ, நகரமோ மட்டுமன்று; அதை ஆளும் சக்திமிகுந்த பெண் தெய்வமோ எங்கும் இல்லை.

" தொடுக்கும் கடவுட் பழம் பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே "

எனக் குமரகுருபரர், மதுரை மீனாட்சியைப் போற்றிப் பாடுகிறார். தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையின் சின்னமான மீனாட்சி, தன்னிடம் பக்திகொண்ட மன்னனையும், பாடிய பாவலனையும் ஒரு நிகழ்ச்சியால் பெருமைப்படுத்துகிறார். நாயக்கரின் சமூத்திலிருந்த முத்துமாலையை உரிமையோடு கழற்றிக் குமரகுருபரருக்கு மாசுமறுவற்ற சின்னஞ்சிறு சிறுமி உருவுகொண்ட கயல்விழியாள் சூட்டுகின்றாள். மீன்போன்ற விழியால் அருள்சுரக்கும் அன்னையாதலால் அங்கயற்கண்ணி என மீனாட்சியை அழைக்கிறோம். பாண்டியர் அவளது அருளில் தஞ்சமடைந்து அரசாட்சி செய்யக் கயலையே சின்னமாகக் கொண்டனர்.

மதுரை அமைப்பு

தாமரை மலரின் பொகுட்டைப் போன்ற கோயிலும், அடுக்கடுக்காகவுள்ள இதழ்களைப்போன்ற வீதிகளும், வீடுகளும் அமைந்துள்ள ஆலவாய் நகரின் அழகே தனிஅழகு.

இம்மதுரையம்பதியை எத்தனையோ அரச பரம்பரையினர் ஆண்டிருக்கிறார்கள். பாண்டியர்கள், சோழர்கள், பின் நவாபுகள், நாயக்கர்கள் இன்னோரன்ன பிறர். ஆனால் இவர்கள் காலங்களிலே பொற்காலமாக ஒளிவீசித் திகழ்வது விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்கள் காலமே! பொற்காலத்தின் ஆட்சிகளில் மணி மகுடமாகத் திகழ்வது மாமன்னர் திருமலையின் முப்பத்தேழு ஆண்டுக்கால ஆட்சிதான். திருமலை செங்கோல் நடத்திய பௌர்ணமி நாட்களில்தான் கோயில் நகரமாக மட்டுமன்று, மதுரை ஒரு ''Festival City'' எனப் பறங்கியர்கள் குறிப்பிடுவதுபோல விழா நகராக மாறிற்று. நாள் எல்லாம் திருநாளாகவும், வீதியெல்லாம் விழாவாகவும், திங்கள்தோறும் திருவிழாவாகக் கொண்டாடத்தக்க வகையில் சித்திரைவீதி, ஆடிவீதி, ஆவணிமூலவீதி, மாசிவீதி ஆகியவைஅமைந்தன. அன்னையின் மங்கலவிழா அந்தந்த மாதங்களில், அந்தந்த வீதிகளில் திக்குவிஜயம் நடந்து வருவதை முன்னிட்டே அவற்றின் பெயர்களும் இடப்பெற்றுள்ளன.

இப்புனித ஆலயத்தின் தோற்றம், முகப்பு, ஈர்ப்பு திக்கெட்டும் தெரியும். கல்லால்ஆன கவிதை வடிவத்தின் வடிவமைப்பு (Blue Print) விசுவநாத நாயக்கரால் தீட்டப்பட்டது.

அந்த எண்ணக்கருவை உருவாக்கித் 'திரு'வாக்கித் தந்தவர் திருமலை. இத்திருக்கோயிலில் வெளிப்புறப் பாதுகாப்புச் சுவர்களில்கூட வெண்மையும் செஞ்சாந்தும் பட்டைபட்டையாகப்பூசிச் சக்தியும் சிவனும் ஒன்று என்பது மட்டுமன்று, ஒன்றானால்தான் வாழ்வுசிறக்கும் என்பதற்கு அறிகுறியாக ஒன்றிணைந்து இருக்கும் மீனாட்சியும், சொக்கரும் பக்தர்களுக்குச் சொல்லும் சமுதாயச் செய்தியை எழில் மிளிரச் சொல்லவைத்த கலைஞர் அவர்.

இன்றைய தெரு, வீதி அமைப்புகள் நான்கு வெளி வீதிகளுக்குள் அடங்கிய மதுரைக் கோட்டையின் அமைப்பு ஆகியவை நாயக்க மன்னர்களின் கால அமைப்பை ஒட்டியவையே. கோட்டை (மதிலு)க்கு வெளியே அமைந்தவை வெளி வீதிகள். கோட்டையின் நான்கு வாயில்களில் ஒன்றான மேலவாயிலின் ஒரு பகுதியே இன்று மாநகராட்சி அலுவலகமாகத் திகழ்கின்றது. இன்றைக்கும் தெற்குவாயில், கீழைவாயில் என்னும் பெயர்கள் வழங்கிவருகின்றன. வடக்குவாயில் செல்லத்தம்மன்கோவில் பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். 'மாரட்' எனும்




ஆங்கிலேயரால் கோட்டையின் அகழி தூர்க்கப்பட்டது. அப்பணியை முன்னின்று நடத்தியவர் பெருமாள் மேஸ்திரி. எனவே இவர்கள் பெயரால் நான்கு மாரட் வீதிகளும், நான்கு பெருமாள் மேஸ்திரி வீதிகளும் அமைந்துள்ளன.

திருவிழா :

மன்னர் திருமலே காலத்திற்கு முன் அருண்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் 'பெரிய திருவிழா' மாசிமாதத்தில் நடைபெற்றது. அருண்மிகு கள்ளழகர் விழா மதுரையை அடுத்த தேனூர் வைகை ஆற்றில் நடைபெற்றது. அருண்மிகு கள்ளழகரை மதுரைக்கு அழைத்து வரச்செய்து, இரண்டு விழாவையும் ஒரே விழாவாக்கி, விவசாயிகள் ஓய்வு பெற்றிருக்கும் சித்திரைப் பௌர்ணமியில் நடைபெறச் செய்தவர் திருமலே மன்னர்.


மேலும் அங்கயற்கண்ணியின் வசந்த உற்சவத்திற்காக சுமார் 1000 அடி சுற்றளவும், பல சிற்பவேலைப்பாடமைந்த தூண்களுமுடைய புது மண்டபம அமைத்து, அதனைச் சுற்றிய பள்ளமான பகுதியில் நிரம்பத் தண்ணீர் விட்டுக் கோடையிலும் குளிர்ச்சியாக இருக்கச் செய்தார் திருமலே. இவ்விழாச் செலவுகளுக்குத் திடியன்புதூர்க் கிராமத்தை மானியமாகக் கொடுத்துள்ளார். தெப்பத்திருவிழா நடைபெறுவதற்கு 4000 அடி சுற்றளவில் மாரியம்மன் தெப்பக்குள அமைப்பும் இவருடைய திருப்பணி. இக்குளத்தின் அழகும் அமைப்பும் தனிச் சிறப்புடையன. மைய மண்டபமும் அதனின்று இசைக்கப்படும் பாடல் தண்ணீரைக் கடந்து கரையிலிருப்போர்களுக்குக் கேட்கும் படியான ஒலி அமைப்பும் போற்றத்தக்கன. இவை போக இறைபணிக்காக மானியங்களை வழங்கியதால் ''மான்ய ராஜா'' என வரலாற்று ஆசிரியர்களால் இவர் சிறப்பெய்துகிருர்.



சைவத்திற்கும் சமணத்திற்கும் எத்தனேயோ போட்டிகளும், பூசல்களும் நடந்த கடம்பவனத்தில், தீவிர வைஷ்ணவ பக்தரான மன்னர், சைவத் தெய்வ நெறியினேயும் கண்ணுகக் கருதித் தம் நெஞ்சத்தின் ஆவல் துடிப்புகளை மதுரைத் திருப்பணிகளில் பிரதிபலிக்கச்செய்து நிறைவு பெற்ருர்.

மன்னருக்கு அன்னேயின்மீதுள்ள ஈடுபாட்டுக்குக் கர்ணபரம்பரையாகச் சொல்லப்படும் செய்தியாவது: திருமலே மன்னர், திருச்சியிலிருந்து மதுரைக்கு

முடிசூட்டு விழாவிற்காக வரும்வழியில் திண்டுக்கல்லில் உடல்நோய் மிகுதிப்பட்டு மிகவும் துன்பம் அடைந்தார். அன்றிரவு அவர் கனவில் மீனுட்சியம்மை தோன்றி ''மதுரையை உன் தலைநகராகவும், நிலையான இருப்பிடமாகவும் ஏற்படுத்தினுல் உன் நோய் நீங்கும்'' என உரைக்க மன்னரும், அவ்வாறே நெஞ்சத்தில் உறுதி செய்ய நோய் குணமாகியது. அன்றுமுதல் நன்றிக் கடனுக அரசர் மீனுட்சியைத் தம் குலதெய்வமாகக் கருதி வழிபட்டு வந்ததுடன் கோயிலை விரிவுபடுத்திப் புகழ் பெறவும்செய்தார்.



நகரா மண்டபம்

அம்மன் சன்னிதியில் காணப்படும் ''நகரா மண்டபம்'' இராணி மங்கம்மாவின் திருப்பணி என்பது அம்மண்டபத்தில் காணப்படும் இராணியின் உருவச் சிலையால் உறுதி செய்யப்படுகின்றது.

எழுகடல்

எழுகடல் என்னும் தடாகம் சாளுவ அரசரான நரசையன் என்பவரால் சீர்திருத்தி அமைக்கப்பட்டது என்பது கி. பி. 1516ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றினுல் தெரியவருகிறது.

அவரது வழியில் இன்றும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் எத்தனை திருப்பணிகள் நிறைவேறினுலும் திருமலை மாமன்னரின் திருப்பணியின் தொடர்ச்சிதான் அத்தனையும்.

இந்தத் தெய்வத் திருப்பணி யாவும், நம் தென்னகத்தின் புகழைத் திராவிடக் கலாச் சாரத்தின் தனிச்சிறப்பை, உலகு உள்ளளவும் எடுத்துக்காட்டும் அதன் சீரிய பெருமையினைக் கலை உலகின் உச்சியில் பொதிந்து வைத்த பொற்கலசங்களாகத் திகழும்; நமது வருங்காலச் சந்ததிக்கும் நினைவூட்டும்.




இறைப்பணியும் திருப்பணியும் தொடரட்டும். முதல் திருப்பணி செய்த மாமன்னருக்கு இதுவே நன்றிக் கடன்.

வளர்க கோவில் ! வெல்க கோயிற் பணி ! !

ஆடல் இன்பம்

தெ. பொன்னப்பன், *அறங்காவலர்*

உலகம் இன்பம் துன்பம் கலந்தது. ஆனால் உயிர்கள் அனைத்தும் துன்பத்தை விரும்புவதில்லை. இன்பமும் முடிவில் துன்பமாக முடிகின்றது. ஆதலால் பேரறிவுடைய அறிஞர் பெருமக்கள் இறை உணர்வால் பெறுகின்ற இன்பமே அழியாதது என்று முடிவு செய்தனர். இறைவன் திருவடியை வழிபடுவது இன்பம் பயக்கும் என முடிவு கண்டனர். நடராசர் தாண்டவத்தில் உலகம் இன்பம் கண்டது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என ஐந்து தத்துவங்கள் ஆடல் இன்பத்தில் பிறந்தன.




வெள்ளியம்பல நடனம்

வெள்ளியம்பலம், அதில் ஒரு மாணிக்க பீடம், ஞானப் பேரொளி வடிவினனை சோமசுந்தரக் கடவுள் தோன்றினது எப்படி? பூதகணங்கள் மொந்தையையும் தண்ணுமையையும் முழக்கின. திருநந்தி தேவர் முழவந்தாக்கினர். விட்டுணு இடக்கையார்த்தார். தும்புரு நாரதர் இசை பாடினர். பஞ்ச துந்துபிகள் ஒலித்தன. சரசுவதி சுதி கூட்டினள். பிரமன் யாழ்கொண்டு இசை மழை பொழிந்தார். தேவர்கள் கற்பக மலர் பொழிந்தனர்.

நடனத் தோற்றம்

சிவபெருமான் முயலகன்மேலே வலப்பாதத்தை வைத்து, இடப் பாதத்தைத் தூக்கி, சற்றே வளைத்து ஆடலானர். பத்துத் திருக்கரங்கள். வலக் கரங்கள் ஐந்தில், தாக்கும் கரத்தில் சூலம், மற்றவற்றில் தமருகம், பாணம், வாள், மழு என்பவைகளும், இடக்கரம் ஐந்தில் வரதஹஸ்தத்திலே பாம்பும், மற்றவற்றில் அக்கினி, வில், கேடகம், தண்டு என்பவைகளும் ஏந்தினர். கழுத்தில் திருநீலகண்டமும், திருச்செவியில் சங்க குண்டலங்களும் இலங்கின. செஞ்சடையில்

கங்கையும் பிறைச்சந்திரனும் பிறங்கின. திருவெண்ணீறணிந்த திருமேனி! நாக யக்ஞோப வீதம்! மூன்று திருக்கரங்கள்! உமா தேவியார் ஒருபுறம் ஒதுங்கி நிற்க அவள்மேல் வைத்த திருநோக்கமும் திருநகையும் விளங்கின. அதிர வீசி ஆடினார். யாருக்காக?



திருக்கலியாணந் தரிசிக்க வந்த பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர் இருவரும் சிதம்பரத்திலே நியதமாய் இறைவனது நிருத்த தரிசனம் செய்து உண்பவர்கள், இன்று அவ்வாறு தரிசித்த பின்னர்த்தான் உண்போம் என்று பிரார்த்தித்தனர். இவர்கட்காகவே மேற்கூறிய ''பரமானந்த தாண்டவம்'' ஆடினார். அவர்கள் வேண்டுகோளின் படி என்றும் அவ்வாறே நின்று ஆடி அருள் பாலித்து வருகிறார்.

பாண்டியன் வரம்

பிற்காலத்திலே இராசசேகர பாண்டியன் பரதக்கலை தவிர ஏனைய கலைகளைப் பயின்றிருந்தான். கரிகாற் சோழனின் அவைப் புலவன் ஒருவன் வந்து 'இவனுக்குத் தெரியாத 'பரதக்' கலை சோழனுக்குத் தெரியும்' என்று கூறினான். மானம் ஏற்பட்டுப் பரதக் கலை கற்கலானான் பாண்டியன். பரத சாத்திரத்தில் 'சிவபெருமான் ஒருவருக்குத்தான் சிரசின்மேல் அஞ்சலி செய்யவேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது. என்னை? அவனே முழுமுதற் கடவுளாகலான். மற்றையோருக்கு நெற்றிக்கு நேரே அஞ்சலி விதிக்கப்பட்டது.

இராசசேகரன் பரதம் பயிலுங்கால் தன் கால் நோவுறுவதைக் கண்டு இந்த வருத்தம் வெள்ளியம்பலக் கூத்தாடிக்கும் உண்டே, என்று இரங்கினான்.

அன்று சிவராத்திரி. இரவு நான்கு யாமமும் விசேட பூசை நிகழ்வித்தான். வணங்கிக் கண்ணீர் சோரச் சிரசின்மீது கை கூப்பி ''எம்பெருமானே! நின்ற திருவடியை எடுத்து வீசி, எடுத்த திருவடியைக் கீழேயூன்றி இன்றைக்கு அடியேன் காணும்படி மாறியாடித் தமியேனுடைய வருத்த முழுவதையும் தீர்த்தருள வேண்டும். இல்லையேல் இறந்துவிடுவேன்'' என்று கூறித் தன் உடைவாளை நாட்டி அதன் மேலே குப்புற விழப்புகுந்தான்.

அன்பர்க்கெளியராகிய சிவபெருமான் கால் மாறியாடிக் காட்சி தந்தனர், இராசசேகரன் வணங்கி ''இந்தத் திருநடனம் யாவருந்தரிசிக்கும்படி எக்காலத்தும் இப்படியே நின்றருளல் வேண்டும்''—என வேண்டினான். அவ்வாறே இன்றும் அருள் செய்கின்றார்.

பரமானந்தம் :

பத்துத்திருக்கரங்களுடன் ஆடுங் காட்சி எங்குமில்லை. எழுவகைத் தாண்டவங்களுள் "பரமானந்த தாண்டவம்" இதுவேயாகும், "சொக்க தாண்டவம்" என்றும் கூறுவர் இதனை. இறைவன் உயிர்களை ஆட்டுவிக்கும் நட்டுவர். அவர் ஆடவில்லை எனில் உயிர்கள் ஆடி ஓடா.



"காட்ட வனல்போல் கலந்துயிரை யெல்லாம்
ஆட்டுமொரு நட்டுவன்எம் மண்ணவென
எண்ணுய்"

என்பது வாதவூரடிகள் புராணம். எனவே ஆடுங்கடவுளும் பரத சாத்திரத்துக்குத் தலைவரும் "பரதன்" எனப் படும் இறைவரே! இதனுல் சிவபெருமான் விளங்கும் நாடாகிய நமது தேசத்திற்கும் "பரத நாடு" என்ற பெயரும் உண்டாயிற்று.

இந்தத் தாண்டவத்தைக் கண்ட ஞானசம்பந்தர் பாடுகிருர்:—

"முதிருநீர்ச் சடைமுடி முதல்வன்! முழங்கழல்
அதிரவீசி யாடுவாய்! அழகனீ! புயங்கனீ!
மதுரனீ! மணுளனீ! மதுரையால வாயிலாய்!
சதுரனீ! சதுர்முகன் கபாலமேந்து சம்புவே!" என்று நாமும் பாடுவோமாக

அதிர வீசியாடுகின்ற அழகனின் ஆடலே ஆடல். அந்த ஆடலே இன்ப வடிவமானது. அவ்வின்பத்துள் முழுகுவோரே துன்பத்தை வெல்ல வல்லவர். துன்பம் போக்க விரும்புபவர்கள் ஒருமுறை வெள்ளியம்பலத்திருக்கூத்தினை வழிபட்டு அழியாத பேரின்பத்தினை அடைவாராக.

பார்வையாளர் புத்தகம்: கோயிற் கலைக்கூடம்

கலைச் செல்வம் கண்டேன்
களிபெருவகை கொண்டேன்

செப்டம்பர் 9, 1971.

கலைஞர் கருணாநிதி,
முதல்வர்,
தமிழக அரசு,


அறிவுப் பயன்

கே. எஸ். இராமகிருஷ்ணன், *அறங்காவலர்*

மானிடப் பிறவி, எல்லாப்பிறவிகளிலும் சிறந்தபிறவி. மானிடன் மற்றைச் சீவராசிகளைக் காட்டிலும் அதிக அறிவு பெற்றவன்; ஆறறிவு பெற்றவன் என்ற பெருமை எல்லா மானிடனுக்கும் உண்டு. இந்த அறிவு வளர்ச்சியை எப்படி மனிதன் பயன்படுத்துகிறான் என்று எண்ணும்போது சில சமயங்களில் சந்தோஷமும் சில சமயங்களில் துக்கமும் கொள்ள வேண்டியதிருக்கிறது.

சிலர் தம் அறிவுத்திறனை விஞ்ஞானத்தில் செலுத்தியும் பலவித ஆராய்ச்சிகளிலும் சந்திர மண்டலம், சூரிய மண்டலம் நட்சத்திர மண்டலம் என்று வானுலக ஆராய்ச்சியிலும், தொழில் நுட்பங்களிலும், தேசப்பாதுகாப்பு, அணுசக்தி, உணவு உற்பத்திகளிலும் செலுத்தியும் அதனை வெளிக்காட்டுகிறார்கள்.

சிலர் தம் அறிவுத்திறனை, தேச நலனுக்கும் மனிதனின் உயர்வுக்கும் பயன்படுத்தி மக்கள் எண்ணத்தில் நிரந்தரமாகத் தங்கிவிடுகிறார்கள். இதற்கு மகாத்மா காந்தி, புத்தர்பிரான், இயேசு போன்றவர்களை நாம் உதாரணமாகக் கொள்ளலாம்.



சிலர் தம் அறிவுத்திறனை, தன் சுயநலனுக்காகவே பயன்படுத்திப் பிறர் நலத்தினைச் சற்றும் கவனிக்காமல் பொது மக்கள் நலனுக்கு விரோதமாக பயன்படுத்தி மக்களுக்கும் தேசத்திற்கும் துரோகம் செய்து திருட்டு வாணிகம் செய்து கறுப்புப்பணம் ஏராளமாகச் சேர்த்து சுகபோகிகளாக மக்களால் வெறுக்கப்பட்டவர்களாக வாழ்வதற்கு பயன்படுத்துகிறார்கள்.

அறிவு மக்கள் நலனைப் பேணிச்செயல்படும்போது பாராட்டுகளையும் மக்கள் நலத்துரோகப் பணிகளில் ஈடுபடும்போது அருவருப்பையும் தேடிக் கொள்கிறார்கள்.

சன்மார்க்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் (இறைவனிடம் பக்தி உள்ளம் படைத்த பெரியோர்கள்) தமக்குக் கிடைத்த அறிவின் பயன் பிறவியை நீக்கப் பயன்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தத் துறையில் ஈடுபட்ட பல பெரியோர்களான நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகிய இவர்களைப் பின்பற்றிப் பிறவிப் பெருங்கடலை நீந்திவிடவேண்டும் என்று முனைந்து செயல்படுகிறார்கள். அப்படி செயல்பட்டவர்களுள் ரமண மகரிஷி, மதுரை ஸ்ரீமன் நடன கோபால சுவாமிகளை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இப்படி ஈடுபடுபவர்களுக்கு இந்த உலகில் சாதாரணமாய் அனுபவிக்கப்பட்டு வரும் சிற்றின்பங்கள் சுகமாகவோ, துன்பங்கள் கஷ்டமாகவோ படுவதில்லை. சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாராட்டும் தன்மையைச் சனக மகரிஷிபோல் பெறுகிறார்கள். இந்த நிலையை அடைந்த பெரியவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை நாம் ஊகித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இந்த நிலையில் உள்ள ஒருமகான் சொன்ன உபதேச மொழியினைக் கேட்டால் புரிந்து கொள்ள முடியும்.

ஞானம் என்ற அறிவுக் களஞ்சியம் ஒவ்வொரு மானிடனுடைய ஆத்மா வினுள்ளும் இருக்கிறது. அதைக் காமம், குரோதம், லோபம் என்னும் திருடர்கள் உள்ளே நுழைந்து அபகரித்துக் கொண்டுபோக எண்ணுகிறார்கள். ஆறறிவு பெற்ற மானிடர்களே ஜாக்கிரதையாக இருங்கள்; ஜாக்கிரதையாக இருங்கள்.

காம; க்ரோதஸ்ச லோபஸ்ச தேஹே திஷ்டந்தி
தஸ்கரா; ஞானரத்ன அபஹ்ராய தஸ்மாஸ் ஜாக்ரத; ஜாக்ரத;



மேலும் சொன்னார்; இந்த உலகத்தில் நமக்குத் தாய்தந்தையர்கள் பார்வதி பரமேச்வரர்தான். தாய் என்றும், தந்தை என்றும், சுற்றத்தார் என்றும் நாம் நினைத்துக்கொண்டிருப்பவர்கள் உண்மையில் தாயுமல்லர், தந்தையு மல்லர்; சுற்றத்தாரும் அல்லர்; உனக்கு வித்து ஒன்றுமே வித்துமில்லை. வீணாகச் சொத்தைச் சேர்ப்பதிலேயே அறிவை வீணாக்காதே; ஜாக்கிரதை யாக இரு. ஜாக்கிரதை.

மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து சகோதர:
அர்த்தம் நாஸ்தி கிருஹம் நாஸ்தி தஸ்மத் ஜாக்ரத ஜாக்ரத:

தொடர்ந்து சொன்னார்? மானிடன் பலவித ஆசைகளை மனத்தில்கொண்டு அவற்றை அடைவதிலேயே பலவித வழிகளில் அறிவைச் செலுத்திக் காலத்தை வீணாக்குகிறான். ஆயுள் குறைந்து கொண்டே போவதை உணருகிறான் இல்லை.

ஆகையால் ஆறறிவுபடைத்த மானிடன் ஆயுட்காலத்தில் எதை அடையவேண்டுமோ அதை அடைய முயலலாம் காலம் பொன்போன்றது என்று முடிகிறது,

ஆசயா பத்யதே லோகா: கர்மணு பஹி இந்தயா
ஆயுக்ஷீணம் நஜாநாதி தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத;

இறுதியாக இம்மாதிரி வியப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டே வந்து கடைசியில் மானிடனுக்குப், பிறப்பு, இறப்பு, மூப்பு. பிணி எல்லாம் துக்கத்தை கொடுக்கக் கூடியன! இந்த துக்கத்திலிருந்து விடுபட்டு நிரந்தரமாய்ச் சுகம் அனுபவிக்க மறுபிறவி எடாமல் இருக்க அறிவைப் பயன்படுத்து, என்று எடுத்துக் கூறுகிறுர்.

ஜன்ம துக்கம் ஜராதுக்கம் ஜாயாதுக்கம் புந; புந;
ஸம்ஸார ஸாகரம் துக்கம் தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத:

இப்படிப்பட்ட அறிவுரைகளை நாம் மனத்தில் கொண்டு, அடைந்த பிறவியின் பயன்பெற பிறவாமைக்கு வழிகோலவும் வேண்டும்; அந்தப் பணியில் எல்லாம்வல்ல ஸ்ரீமீனலோசனித் தாயார் மீனுட்சியம்மைத் தன் கண் பார்வையால் கடாஷித்துப் பிறவிப்பயன் எய்த அருள் புரிவாளாக;

நிதம் தாளிணைப் பணிகுவன்

இராகம்: கரகரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

ஆண்டுகொண் டருள்வாயே ஆலவாய்
அமர்ந்திடும் என்தாயே நீயே (ஆண்டு)

அனுபல்லவி

இந்திர விமானத்தில் சுந்தர ரோடும்
இருந்தே நாளும் இன்புறும் சிவையே (ஆண்டு)

சரணம்

தருமி பொற்கிழி தான்பெறப் பாசுரம்
தமிழினில் சொன்ன தற்பரன் தேவி
தரணிபுகழும் சத்தி சாம்பவி கௌரி
தண்மலர் கொடுநிதம் தாளிணை பணிகுவன் (ஆண்டு)

—மீ. இராமநாதன்.

அங்கயற்கண்ணி பங்கரின் திருக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சி


திரு. என். எஸ். இராமச்சந்திரன், பி.ஏ.,பி.எல்.

திருவாலவாயில் கோயில்கொண்டுள்ள அருண்மிகு மீனாட்சிசுந்தரர், எல்லார்க்கும் முன்னே தோன்றாமல்தோன்றியவர். மூர்த்தியின் கீர்த்தியும், அன்னையின் அருளும், தீர்த்தத்தின் தெளிவும், தூய்மையும் உலகறிந்த உண்மை நிகழ்ச்சிகள். பாண்டிய மன்னர்களாலும், நாயக்க மன்னர்களாலும், மதுரை நகர்ப் பெருமக்களாலும், நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தாலும், மதுரை அருண்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் திருப்பணிகள், காலங்கள்தோறும் நிகழ்ந்து காப்பாற்றப்பட்டு வந்துள்ளன. 1963-ஆம் ஆண்டு, தமிழவேள் ஐயா திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் அமைந்த திருப்பணிக்குழுவால் மீண்டும் சிறப்புப் பெற்ற திருப்பணி செய்து முற்றுப்பெற்றது.

சிறப்புப்பெற்ற இத்திருப்பணி நடந்துமுடிந்த பின்பு, தற்சமயம் ஒரு குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுகின்ற நிகழ்ச்சி விபரம், பலர் 'ஆச்சரியத்தோடு மீண்டும் அதற்குள் ஒரு கும்பாபிடேகமா என்று' வினவுகின்றனர். 'குடமுழுக்குப் பெருவிழா என்பது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய நிகழ்ச்சி' என்று ஆகம விதி கூறுகிறது. இப்பொழுது நடைபெற்ற குடமுழுக்கு விழா, 12வது ஆண்டு ஆரம்பத்திலே நடைபெற்று முடிந்தது. அருண்மிகு அங்கயற்கண்ணி பாதத்தில் அமைந்துள்ள பத்மபீடத் தகட்டினுள், அபிடேக திரவியங்கள் செல்லுவதாக ஆறு மாதங்களுக்கு முன்பு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்., அவர்கள் மதுரைக்கு வருகை செய்து திருக்கோயிலைப் பார்வையிடும்போது அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஆணையர் அவர்கள் 'பத்மபீடத் தகட்டினைமட்டும் எடுத்து மறுபடியும் மருந்து சாத்தித் தகட்டினை நன்றாகப் பொருத்தி அருண்மிகு அங்கயற் கண்ணிக்கு மட்டும் சிறிதளவில் குடமுழுக்கு விழாச் செய்துவிடலாம்' என்று கருத்துத் தெரிவித்தார்கள். அது சமயம் ஆலயம், திருக்கோயில் மண்டபங்கள் முழுவதிலும் மழைநீர் தேங்கி ஒழுகிக் கொண்டிருந்ததைக் கண்ணுற்று மேல்தளம் முழுவதையும் மராமத்துச் செய்யவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்கள்.

'அப்படியே அன்னை மீனாட்சியின் திருவுருவச்சிலையின்கீழ் அபிடேகம் செய்யும் நீர்புகுந்து கொண்டிருப்பதனாலும், மற்றை எல்லாச் சுற்றுப் பரிவார

மூர்த்திகளுக்கும் மருந்து சாத்தி அன்னைக்கும் சுவாமிக்கும் அஷ்டபந்தனம், சுவர்ணபந்தனம் செய்வது மரபு ஆதலாலும் மேல்தளங்களுக்குத் தட்டோடு போட்டுத் திருக்குடமுழுக்குச் செய்வது நல்லது' என்று துணை ஆணையர் திரு. எம். ஏ. முருகேசன் பி. ஏ., பி. எல்., அவர்களும் கருத்துத் தெரிவித்தனர்.



திருப்பணிக்குழு என்று தனியாக ஓர் அமைப்பு இல்லாமல் அறங்காவலர் குழுவும், குழுத் தலைவரும் இத்திருப் பணியை எப்படியும் நடத்தியே தீர வேண்டுமென்று தீர்மானம் செய்து. திருக்கலியாண மண்டபத்தில் நகரப் பெருமக்கள், கோயிற் காப்பாளர் சில ரோடு கலந்து ஒரு கூட்டம் கூட்டிக் கோயிலின் மேல்தளம் முழுவதும் தட் டோடு போட்டு முடிப்பது என்றும், சுவாமிக்கும் அம்மனுக்கும் அஷ்ட பந்தன சுவர்ணபந்தனம் செய்வதோடு, பரிவார மூர்த்திகட்கும் மருந்து சாத்திக் கும்பாபிஷேகம் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. திருக்கோயிலின் நிதி நிலையில் இருந்தே முழுவதும் திருப்பணி செய்ய முடியாவிடினும், பொதுமக்க ளிடமிருந்து நிதி திரட்டி இப்பணியைச் செய்து முடிப்பது எனத் திட்டமிட்டு வேலை தொடங்கப்பட்டது, பணம் தேவைப்படும்போதெல்லாம் அன்னை எங்கிருந்தோ வழங்கி எங்கள் மலைப்பைப் போக்கித் திருப்பணியை நிறைவு செய்து கொண்டிருந்தாள்.

காலங்கள்தோறும் வளர்ந்து அன்பர்கட்கு அருள் வழங்குகின்ற திருக் கோயிலைப் பதினோராண்டுகட்குப் பின்பு மீண்டும் புனருத்தாரணம் செய்து, இலமானவற்றைப் பழுதுபார்த்தும், தளங்கள் ஒழுகுவதைத் தட்டோடுபோட்டும், கோபுர கலசங்களை நிலைநிறுத்தியும், திருமதிலைச் சுற்றியுள்ள பகுதிக்குப் புதிதாக வேலிச்சுவர் அமைத்தும், திருக்கோயிலைச் சகல மரம், இரும்பு கட்டிடப் பொருள் களுக்கு வர்ணம் பூசியும், சுவாமி, அம்மன் கோயில் விமானங்களில் பழுதடைந்த சுதை வேலைகளைச் சீர்திருத்தி. விமானங்கள் இரண்டுக்கும் பூராவும் வர்ணம் தீட்டி யும், அஷ்டசக்தி மண்டப சித்திரங்களுக்கு வர்ணம் தீட்டியும், நகரா மண்டபம், புதுமண்டபம், மங்கையர்க்கரசியார் மண்டபம், திருமதில்களில் ரிஷபம், பூத கணங்கள் ஆகிய சுதை வேலைகளைப் பழுதுபார்த்தும், பூராவும் வர்ணம் தீட்டியும், கோபுரங்களின் உள்புற ஓரங்களில் பழுதடைந்த கட்டைகளைப் புதுப்பித்தும், பழுது பார்த்தும், அம்மன், சுவாமி கோயில் விமானங்களையும் கோபுர வாயில் முகப்புகள், நகராமண்டபம், பொற்றாமரை மண்டபம் முதலிய இடங்களில் உள்ளசுதை வேலைப்


பாடுகளைப் பழுதுபார்த்தும், வர்ணம் வைத்தும் திருப்பணி செய்யப்பெற்றுள்ளன. கோயில் முழுவதும் வெள்ளையடிக்கப்பட்டுப், பொற்றாமரைத் தீர்த்தமும் தூய்மை செய்யப்பட்டுள்ளது. மூலவிக்கிரகங்கட்கும், பரிவார தேவதைகளுக்கும் அஷ்ட பந்தன மருந்து சாத்தியும், கோயில் மீண்டும் புதுப்பித்தும் பொலிவு பெற விளங்கும்படி இன்று செய்து முடிக்கப்பட்டுள்ளது. இச்செயல்களோடு திருக்கோயிலின் திருப்பணி முற்றுப் பெற்றுவிட்டது, என்று கூறமுடியாது. காலங்கள் தோறும் தேவைப்படும் திருப்பணியைச் செய்துதான் ஆகவேண்டுமென்பது இத்துறையில் ஈடுபட்டவர்களுக்கு நன்கு தெரியும்.



திருக்கோயிலின் திருப்பணிக்கும், குடமுழுக்கு விழாவிற்கும் பொருளுதவ வேண்டுமென்ற எங்கள் விண்ணப்பத்தையேற்று, நாட்டின் நாலா பாகங்களிலும் உள்ள பெருமக்கள் பலர், மனமுவந்து அஞ்சலிலும், நேரிலும் வழங்கினர். தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களையும், திருவாவடுதுறைக் குருமகா சந்நிதானம் அவர்களையும் நேரில் தரிசனம் செய்து கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை விவரித்து உரிய உதவிகளைப் பெற்றோம். எங்களின் பல அலுவல்களிடையே பல பெருமக்களை நாங்கள் சந்திக்க முடியவில்லை; எனினும் அன்னை மீனாட்சியின் திருப்பணிக்குப் பழனி அருண்மிகு தண்டாயுதபணி திருக்கோயில், திருச்செந்தூர் அருண்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி அருண்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தினரும், இராமநாதபுரம் ராஜா அவர்களும், மதுரை மில் நிர்வாகத்தினரும், திரு. எல். நாராயணன் செட்டியார் அறக்கட்டளையினரும், திரு, கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களும், சிறந்த முறையில் பொருள் உதவி செய்தனர். சென்னை சுப்பாத்தாள் அழகப்பா டிரஸ்ட் மூலம், திருவாச்சி பீடம் ஆகியவைகளுக்கு 750 கிராம் தங்கம் நன்கொடையாகக் கிடைத்தது. எல்லா வங்கியினரும் நிதி வசூல் செய்தும், மற்றும் சகல தரப்பினரும் உரிய வகையில் நிதி உதவி ஆதரவு தந்தும் ஊக்கித், திருப்பணி, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இனிதே நடைபெற நல்லாசி கொடுத்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை எவ்வாறு கூறுவது என்பது தெரியவில்லை.

குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவின் யாகசாலை, திருக்கோயில் நூற்றுக்கால் நடராஜர் மண்டபத்தில் சுவாமி, அம்மன் பிரதான கும்பங்கள், குண்டங்களைக் கொண்டு அமைக்கப்பெற்றது. சுவாமி கோயில் வடபுறம் 2-ஆம்

பிரகாரத்தில் பரிவார மூர்த்திகள், கோபுரங்களுக்குக் கும்பங்களும்; குண்டங்களும் அமைக்கப்பெற்றன. சுவாமி குண்டம் 9, அம்பாள் குண்டம் 9, பரிவார குண்டங்கள் 32, ஆக 50 குண்டங்கள் அமைக்கப்பெற்றுச் சித்திர வேலைப் பாடுகளுடன் யாகசாலை பொலிவுற உருவாக்கப்பட்டது. யாகசாலையின் அலங்கார வேலைகள் அமைப்பும் பராமரிப்பும் திண்டுக்கல் அங்குவிலாஸ் புகையிலைக் கம்பெனியாரால் இலவசமாக ஏற்கப்பட்டன. யாகசாலை அமைக்கவேண்டிய செங்கற்கள் அறங்காவலர் குழுத்தலைவர் லெ. நாராயணன் செட்டியார் டிரஸ்ட் மூலம் இலவசமாகக் கொடுக்கப்பட்டது, யாகசாலைப் பூசைக்குத் தமிழ்நாட்டு அனைத்துக் கோயில்களிலிருந்தும் 128 சிவாச்சாரியார்கள் அழைக்கப்பட்டிருந்தனர். வேதபாராயணங்கள் செய்ய 30 சாஸ்திரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். திருமுறைப் பாராயணத்துக்கென 50 திருமுறை ஓதுவார்கள் அழைக்கப்பட்டிருந்தனர். சிவாச்சாரியார்கள், சாஸ்திரிகள், பரிசாரகர்கள் ஆகியவர்களுக்கு உணவு அளிப்பதற்காகத், திரு. ஹரிஹர அய்யர், அட்வகேட், மதுரை அவர்கள்மூலம் ரூ. 6,900/- நன்கொடை வசூலிக்கப்பட்டது. ஷியார்களுக்குச் சன்மானம் வழங்கச் சென்னை பத்மஸ்ரீ வைத்தி சுப்பிரமணியஐயர் நண்பர்களால் ரூ. 11,000/- நன்கொடையாக வழங்கப்பட்டது. ஓதுவாமூர்த்திகளுக்கு உணவு, சன்மானம், புத்தாடை ஆகியவைகள் வழங்க ஏற்பட்ட தொகை ரூ. 7,911/- மதுரை ஆர். எம். முத்துப் பழநியப்ப செட்டியார் வகையறுவினரால் நன்கொடையாக வழங்கப்பட்டது. யாகசாலைச் சமித்து வகையறுவும், யாகசாலைச் சாமான்களில் சில வகைகளும், பொள்ளாச்சி திரு. வி. சுப்பிரமணியச் செட்டியாரால் இலவசமாகக் கொடுக்கப்பட்டன.



குடமுழுக்கு நன்னீராட்டு விழாவின் நிகழ்ச்சிகளைத் திருச்சி வானொலி நிலையத்தார் வர்ணனையாக வானொலி மூலம் வெளியிட்டு உதவிபுரிந்தார்கள்.

குடமுழுக்கு விழாவிற்குத் தமிழக அரசுத் தலைமைச் செயலர் உயர்திரு. பி. சபாநாயகம், ஐ. ஏ. எஸ்., அவர்களும், தமிழவேள் ஐயா திரு. பி. டி. இராசன் அவர்களும், தமிழக உயர்நீதிமன்ற நீதிபதி பி. ஆர். கோகுலகிருஷ்ணன், பி. ஏ., பி. எல். அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்., அவர்களும், மதுரை இந்து சமய அறநிலை ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. எம். ஏ. முருகேசன், பி. ஏ., பி. எல்., அவர்களும், திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்களும், தருமை ஆதீனகர்த்தரும், வருகை புரிந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

விழாச் சிறப்புற நடைபெற வருவாய்த்துறையினர், காவல் துறையினர், மதுரை நகராட்சியினர், மின்துறையினர், பொதுப்பணித் துறையினர், இரயில்வே

நிர்வாகத்தினர், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினர், ஊர் காவல் படையினர், சமூகநலத் தொண்டர்கள், சாரணர்கள் ஆகியோரும், மற்றும் எல்லாத் துறையினரும் உதவிபுரிந்தனர்.

குடமுழுக்கு நன்னீராட்டு விழாவினை ஒட்டி வெளியிடப்பெறும் மலரில் பல அன்பர்கள் விளம்பரங்கள் கொடுத்தும், பல அறிஞர்கள் கருத்துச் சிறந்த கட்டுரைகள் வழங்கியும் உதவிபுரிந்தனர்.

அறங்காவலர் குழுவினர் முழு ஒத்துழைப்பும் நல்கித்திருப்பணி, குடமுழுக்கு நன்னீராட்டு விழாச் சிறப்புற நடைபெறச் செய்தனர்.

		ரூ. பை.
பலதரப்பட்ட நன்கொடை வரவு	...	6,81,911—84
திருக்கோயில் திருப்பணி நிதி வரவு	...	2,75,000—00
ஆக மொத்த நிதி வரவு	...	9,56,911—84

பழுதானவற்றைப் புதுப்பித்துப் பாதுகாத்தல் இத்தலைமுறையில் வாழ்கின்ற நமக்குக் கடன் என்பதை நன்கு உணர்ந்த பெருமக்கள் அனைவருக்கும் அன்னையின் திருவருள் கிடைத்து அவர்கள் சிறப்படைவதில் வியப்பில்லை. திருப்பணியில் கலந்துகொண்ட அனைவருக்கும் வாழ்த்தும் நன்றியும் கூறுவது என் தலையாய கடமை. திருப்பணி, திருக்குட நன்னீராட்டுப் பெரு விழாச் சிறப்பாக நடைபெற எல்லா வழிகளிலும் உதவிய பொதுமக்கள், அரசு ஊழியர்கள், திருக்கோயில் அலுவலர் ஆகியோர்க்கு மீண்டும் என் நன்றி உரித்தாகுக.

தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்துகிடப்பதே.

பார்வையாளர் புத்தகம்: கோயிற் கலைக்கூடம்

தமிழரின் கலைச்செல்வம் கண்டேன்;
நாகரிகமும் பண்பாடும் இன்றைய தலைமுறைக்கு
விளக்கும் வண்ணம் அமைந்துள்ளது
கண்டு மகிழ்வெய்தினேன்.

மு. கண்ணப்பன்,
அறநிலைய அமைச்சர்,
தமிழக அரசு.

செப்டம்பர் 12, 1971


அருள்வாய் மீனாட்சி

சீ. அன்பானந்தம் (பிறுங்கு)


கதவம் திறந்து வாழ்வெனும் இல்லம்
கதிக்க ஒளியைத் தரற்கென்றே
உதயம் புரியும் கதிரை விழிக்குன்
ஒதுக்கிக் கடைக்கண் வழிநல்கி
இதயம் என்ற பொற்ரு மரையில்
இருக்கின் றவளே ! எம்தாயே !
உதவும் கொடையே ! ஓமென் சக்தி !
உமையே ! அருள்வாய் மீனட்சி !

மடங்கா மனத்தை மடக்கும் திறத்தை
மதியில் வைத்த மாமதியே !
தொடங்கா நிலையில் துடைத்தே பிறவித்
துயரைப் போக்கும் தொல்பொருளே !
அடங்காப் புவனம் அனைத்தும் அடியில்
அடங்கக் கொண்டாய் ! கயற்கண்ணல்
நுடங்கா துலகை நொடியில் காக்கும்
நுவலரும் தண்ணளி மிகவுற்ருய் !

விதித்தே பிறந்த வினையின் கொடுமை
விலக்கி இனிமை புரிபவளே !
துதித்தே கவிதை தொடுப்பார் தமக்குத்
துணையாய் விளங்கும் தூயவளே !
பதித்தே இதயப் பனிமலர் நின்ருள்
பரிந்தே தொழுதோம்; எமைக்காக்க
மதித்தே வருவாய் மதுரைத் தாயே !
மனமகிழ் சொக்கர் மனையாளே !




'' நாரைக்கு முத்தி கொடுத்தது ''



Pradhana Kumbham — Sundaresvara, decorated
அலங்கரிக்கப்பட்ட சுவாமி — பிரதான கும்பம்




Pradhana Kumbham — Meenakshi, decorated
அலங்கரிக்கப்பட்ட அம்பாள் — பிரதான கும்பம்



The commencement of the Kumbhabhishekam – a procession to the yagasala

கும்பாபிடேகத் தொடக்க ஊர்வலம்



The Commissioner and the Deputy Commissioner praying in front of the Pradhana Kumbha

ஆணையர், துணை ஆணையர் பிரதான கும்பத்திற்கு அஞ்சலி செய்தல்




Procession of the priests participating in the Kumbhabhishekam

கும்பாபிடேகத்தில் கலந்துகொண்ட சிவாச்சாரியார்கள்



To the towers with Pradhana Kumbha

பிரதான கும்பத்துடன் கோபரத்துக்குப் புறப்பாடு




The Pontiff of Dharmapuram Mutt at the Madurai temple during Kumbhabhishekam

தருமை முதல்வர் குப்பாபிடேகத்தில் கலந்து கொள்ளுதல்



The Chairman, and Members of the Board of Trustees and Officials honoured by the Sivachariars of Arulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil



Honouring the Sivachariars
சிவாச்சாரியார்களுக்குச் சன்மானம் வழங்குதல்




Thanking the participants in the Kumbhabhishekam of Arulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil



Sivachariars and Odhuvars of Arulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil with the Executive Officer, Peishkar and Assistant Peishkar

சிவாச்சாரியார்கள், ஓதுவாமூர்த்திகள், பேஷ்கார், உதவி பேஷ்கார், நிர்வாக அலுவலர்



Sivachariars and staff of Tiruparamkundram Temple



Officials of Arulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அலுவலர்கள்



Indoor Mirasu and other Servants



Staff of the Thiruppani Office, Arulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil
திருக்கோவில் திருப்பணி அலுவலர்கள்



The hereditary accountants, mirasus and watch and ward staff of Arulmighu Meenakshi Sundaresvarar Tirukkoil with the Executive Officer



வேண்டுதல் வேண்டாமை இலான்

டாக்டர் சித்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.,

உலகப் பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய வள்ளுவர், இவ்வுலகில் வாழவேண்டிய முறைபற்றி அந்நூலில் கூறியுள்ளார். அம்முறையில் வாழ்ந்தால் பெறவேண்டிய பேறுகளனைத்தையும் பெறலாம். அப்பேறுகள் யாவை என்பதனையும் அவற்றை எய்தும் வழிகளையும் வள்ளுவர் வகுத்தும் தொகுத்தும் விளக்கியுள்ளார். அவ்வழியை மேற்கொள்வோர் இம்மை, மறுமை இரண்டிலும் இன்பம் எய்துவர் என்பது திண்ணம்.

வாழ்க்கை விளக்கமாகிய திருக்குறளில் நூலின் முகப்பாக ஒரு பாயிரத்தையும் அதன் முகப்புமணியாகக் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தையும் அமைத்திருக்கிறார். திருவள்ளுவர் [1] கடவுள் என்னும் கருத்துக்கோளையும் (concept) கடவுளின் விளக்கத்தையும் அதன் இன்றியமையாமையையும் எடுத்துக் கூறுவதே இவ்வதிகாரத்தின் நோக்கமாகும். 'கடவுள் வாழ்த்து' என்னும் இப்பகுதியில் 'ஆதிபகவன்', 'வாலறிவன்,' 'மலர்மிசை ஏகினான்', 'வேண்டுதல் வேண்டாமையிலன்', 'பொறிவாயில் ஐந்தவித்தான்,' 'தனக்குவமையில்லாதான்,' 'அறவாழி யந்தணன்,' 'எண்குணத்தான்,' 'இறைவன்' என்னும் ஒன்பது பொருள் பொதிந்த சொற்களை—கருத்துக்களை — வள்ளுவர் ஆண்டுள்ளார். இவையனைத்தும் ஒன்று சேர்ந்து 'கடவுள்' என்னும் கருத்துக் கோளைத் தெளிவாக்க முயல்கின்றன.

முதல் ஒன்று உண்டு.

உலகம் தோன்றி நிலைத்து ஒடுங்குவதற்குரிய முதல் ஒன்று உண்டு. அது தொடக்கமின்றி என்றும் நிலைத்திருத்தலால் அதுவே தொடக்கமாக—ஆதியாக—அமைகிறது. உலகம் இயங்கச் செய்யும் அறிவும் ஆற்றலும் அந்தமுதலுக்குண்டு. அது அறிவின் வடிவாக—தூய தேர்ந்த அறிவாக—விளங்குகிறது. வெற்றறி

1 பாயிரம் முழுவதுமே பிற்சேர்க்கை என்றும், 'கடவுள் வாழ்த்து' இடைச்செருகல் என்றும் கூறுவார் கருத்தை இங்கே ஆயவேண்டுவதில்லை. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பாடவேறுபாடின்றி இயங்கிவந்துள்ள ஒருநூலில் எவரேனும் ஏதேனும் இடையில் சேர்த்திருக்கக் கூடுமா என்பதை எண்ணிப்பார்த்தாலே இதற்கு விடை கிடைக்கும்.

வர்க் அமையாது அருளுருவாக—அன் பின் நிலைக்களமாக—அது திகழ்கிறது. அன்புருவாதலின், தன்னிடத்து அன்பு கொண்டவர் அனைவரின் உள்ளத்திலும் நிலைபெறுகிறது அம்முதல். உள்ளே நிலைபெறுவதேயன்றி, உயிர்களின் துன் பத்தைத் துடைக்கிறது, துன்பம் வாராது காக்கின்றது. துன்பத்துக்குக் காரணமாகிய ஐம்புலன்களின் சேட்டையை அடக்கியதாகலின், உயிர் கள் ஐம்புலனால் உறும் துன்பங்களைத் தவிர்த்து, அவை (துன்பமின்றி) நீடு வாழச் செய்கிறது. அம்முதற்பொருள் ஒப்பற்றதாகலின், அதனையடைந்தார் மனக்கவலையின்றி வாழ வழிபிறக்கிறது. துன்பத்துக்குக் காரணமாய் அமையும் அறியாமை, அதன் விளைவாகிய இரு வினையாகியவை, அம்முதலை வணங்கு வாரைத் தீண்டுவதில்லை. துன்பங்களில் மிகக் கொடியதாகிய, பிறவித் துன் பத்தை அறக்கடலாகிய அது நீக்குகிறது. எல்லாம் வல்ல பேராற்றலாகிய அதனை நினையாத வாழ்க்கை பயனற்ற வாழ்க்கை யாகும்.

'கடவுள் வாழ்த்து' என்னும் பிரி வில் கூறப்படும் கருத்துக்கள் இவையே யாம். கடவுள் என்னும் பெயரைச் சூட்டாமல், அதன் இயல்புகளை வள்ளுவர் இப்பத்துக் குறளில் தெளி வாக எடுத்துக் கூறியுள்ளார். 'ஆதிபகவன்' முதல் என்பதனையும், 'வாலறிவன்' என்பது அதன் அமைப்பை யும் விளக்குகின்றன. 'மலர்மிசை ஏகி னான்,' 'வேண்டுதல் வேண்டாமை யிலான்,' 'பொறிவாயில் ஐந்தவித்தான்', 'அறவாழி யந்தணன்' 'எண்குணத் தான்,' 'இறைவன்' என்பன அதன் இயல்பைக் குறிக்கின்றன. 'தனக்குவமை யில்லாதான்' என்பது அதன் உயர் நிலையைக் காட்டுகிறது. கடவுள் என் னும் ஒரு கருத்துக் கோளை முதல், அறி வின் வடிவு என நுண் பொருளாகவும், பிறவற்றால் பருப்பொருளாகவும் குறளா சிரியர் காட்டுகின்றார். மலர்மிசை ஏகு தல், குணமுடைமை முதலியன இப்பருப் பொருள் தன்மையைக் குறிக்கின்றன.

கடவுள் எத்தன்மையது?

எல்லாவற்றையும் கடந்தும், எல்லா வற்றிலும் நிறைந்தும் உள்ள முதல், பண்புகளின் வடிவமா அல்லவா என்ற கேள்வி மிகப் பழங்காலத்திலிருந்தே தொடர்ந்து வந்துள்ள ஒன்று. நன்மை, தீமை, இனிமை, மேன்மை முதலியன நுண்ணிய பண்புகள். உயரம், பருமை முதலியன பருமைப் பண்புகள். பண்பு களின் வடிவம் (சகுனம்) என்றால் இரு வகையும் ஒன்றியிருத்தல் வேண்டும்; அவ்வாறல்ல (நிர்க்குணம்) என்றால் அவற்றுள் ஒன்றேனும் அன்றி உள் பொருளாக—சத்தாக—மட்டுமே இருத் தல்வேண்டும், அவ்வாறாயின் கடவுள் எத்தன்மையது?

மனிதன் வாழ்க்கையில் இன்பத்தை விரும்புகிறான், துன்பத்தை வெறுக் கிறான். இன்பத்தை விரும்புவதற்குக் காரணம், அது தனக்கு இனிமையை—இதத்தைத் தருகிறது என்பதுதான். துன்பத்தை வெறுப்பதற்கு, அது தனக்கு இனிமையின்மையை—அகிதத் தைத் தருகிறது என்பதே காரண மாம். எனவே மனிதன் தனக்கு இதம் தரும் செயலை விரும்பி மேற்கொள் கிறான்; அகிதம் ஆகியவற்றை வெறுத்து ஒதுக்குகிறான். இவ்வாறான இதம், அகிதம் என்பன விருப்பு வெறுப்புக்

களால் உண்டாவன. ஒன்றின்பால் விருப்பு ஏற்படுவதற்கும் மற்றொன்றின் பால் வெறுப்பு தோன்றுவதற்கும் அடிப் படையாய் அமைவன இதம், அகிதங் களேயாம். இவ்விருப்பு வெறுப்புக் களுக்கு எது காரணம்? அறியாமை என் பர் மேலோர். அறியாமையின் இயற்கை அவா தோற்றுவித்தலாம். அவா இயல் பாகவே பிறப்பது. இவ்வவாவினை நீத் தால் விருப்பு, வெறுப்புக்கள் அழியும். இவை அழிய 'இருள் சேர் இருவினை' தொடரா; பேரின்பநிலை (பேரா இயற்கை) எய்தும்.

அவா இருவகையில் செயல்படும். ஒன்றில் விருப்பினையும், மற்றொன்றில் வெறுப்பினையும் அது தோற்றுவிக்கிறது. அஃதாவது, ஒன்றை வேண்டச்செய் கிறது, மற்றொன்றை வேண்டாததாக்கு கிறது. வேண்டிய பொருளை எய்தப் பல்வேறு செயல்களை மேற்கொள்ள நேரிடுகிறது; வேண்டாத பொருளை நீக்க வும் பல்வேறு செயல்கள் தேவைப்படு கின்றன. செயல்கள் தம் விளைவைத் தோற்றவே செய்யுமாகையால், இரு வகைச் செயல்களாலும் இறுதியில் துன்பமே நிலைக்கிறது. எனவே இன்ப ஆக்கமும் துன்ப நீக்கமும் வேண்டுவார் அவாவினை அறுத்தல் வேண்டும்.

வேண்டாமை—பற்றுக் கொள்ளாமையே

ஒருபொருளை வேண்டுதலும், மற் றொன்றை வெறுத்தலும் அவாவினை அடிப்படையாகக் கொண்டவை என்று கண்டோம். அவாவினை அழிப்பதற்கு வேண்டாமை ஒன்றே வழியாகும். எதனை வேண்டாமை என்னும் கேள்வி இங்கே எழுகிறது. இதம் என்று கருது வனவற்றைச் செய்தலும், அகிதம் என்று கருதுவனவற்றை விலக்குதலும் ஆகிய விருப்புவெறுப்புணர்ச்சிகளை மேற் கொள்ளாமை (வேண்டாமை) என்பதே இதற்குரிய விடையாகும். தீய (இனிமை யின்மையைப்) பயக்கும் செயல்களிலும் பொருள்களிலும் மட்டும் 'வேண்டாமை' யைக் கடைப்பிடிப்பது மனித இயல்பு, இனிமை பயக்கும் செயல்களிலும் பொருள்களிலும் கூட இவ் 'வேண் டாமை' தேவை, வேண்டாமை என்பது வெறுப்புணர்ச்சியன்று; அதில் பற்றுக் கொள்ளாமையே ஆகும். அப்பற்று நீங்கினுல் பிறவாமையாகிய பேரின்ப நிலை வந்தெய்தும். இதனை ''வேண்டுங் கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்டவரும்'' என்று திருக்குறள் குறிப்பிடுகிறது.

வேண்டாமை என்பதே பெருஞ் செல்வம் (வேண்டாமையன்ன விழுச் செல்வம்) ஆகும். இன்பதுன்பங் களிலிருந்து விலகியிருத்தலே நிறைவு (அமைதி) ஆகும். இவ்வாறின்றி இன்ப துன்பங்களால் அலைப்புண்டுகிடப்பதே வறுமை. இதனைக் குமரகுருபரர்,

> "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
> அல்கா நல்குரவு அவாவெனப் படுமே''—

என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

செல்வம் சிந்தையின் நிறைவு

சிந்தையின் நிறைவு (ஆனந்தம்) செல்வம். அதனை உடையவன்— அதுவே வடிவாக அமைபவன்—செல்- வன். அச்செல்வனை அடைந்தால் நாமும் செல்வம் பெறலாம். அவனை வணங் குவதாகிய பேறே நாம் பெறும் செல்வம் ஆகும். ''செல்வன் கழலேத் தும் செல்வமே செல்வம்'' என்பது திருமுறை கூறும் வழியாகும்.

இவற்றால் யாதொன்றிலும் விருப்பின்றி—பற்றின்றி—வேண்டாது—இருத்தலே பெருஞ்செல்வம் என்பது தெளிவு. இயல்பாகவே இவ்வேண்டாமையை உடையவன் ஒருவன் உண்டு. அவனையே கடவுள் என்கிறோம். அவன் வேண்டாமை உடையவன்; ஏனெனில் அவனிடம் எல்லாம் நிறைந்திருக்கின்றன. அவன் 'சென்றடையாத திரு'வுடையவன். இனி அவன் பெறுதற்குரிய பொருள் ஏதுமில்லையாகையால் வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாததனாலேயே அவன் இன்பதுன்பமின்றிப் பெருநிலையில் இயல்கின்றான். தன்னையடைந்தவர்க்கும் அந்நிலையை அருளுகிறான். வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத காரணத்தால்தான் இரச



வாதம் செய்தான்; எல்லாம்வல்ல சித்தனாக வந்தான்; ஏதுமற்ற வறியனாய்வந்து வந்திக்காக மண் சுமந்து பிரம்படியும்பட்டான், இதில் எதுவுமே அவனைத் தாக்கவில்லை.

இந்தநிலைதான்—வேண்டுதல் வேண்டாமையிலாதவனாகவுள்ள நிலைதான்—அவனை 'ஆதிபகவானா'கவும் 'வாலறிவ'னாகவும் திகழவைக்கிறது; 'அறவாழியந்தண'னாகவும் அருள், காரணமாக 'மலர்மிசையேகினவ'னாகவும் அவனைக்காட்டுகிறது. வேண்டுதல் வேண்டாமையின்றி யிருப்பதனால்தான் ''பொறிவாயில் ஐந்தவித்து. 'தனக்குவமையில்லாத'வனாக அவன் விளங்குகிறான். எல்லாமே சென்றடையும் பேராற்றல் மிக்கவனாக இருப்பதற்கும் இதுவே காரணம்,

இறைமையின் இயற்கை

விருப்பு வெறுப்பற்ற நிலையை எய்திய சான்றோர். அருள் காரணமாகப் பிறவுயிர்கள் இன்புறுதலை வேண்டினர். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்று அவர்கள் விரும்பினர். அவர்கள் வேண்டியவற்றை இறைவன் அருளுகின்றான். இவ் வேண்டுதலும், இறைவனை ஒன்றிய நிலையில்—தமக்கென எதையும் விரும்பி வெறுக்காதநிலையில் — தோன்றுகிறது. எனவே அது நிறைவேற்றப்படுகிறது. இவ்வாறு வேண்டுவதும் (விரும்புவதும்) அவன் விருப்பினால்—உயிர்களிடம் கொண்ட கருணையால்—தோன்றுகிறது.

இவற்றால், திருவள்ளுவர், கடவுள் என்னும் கருத்துக்கோளை விளக்க, பல் வேறு சொற்றொடர்களை ஆண்டிருப்

பினும் அவற்றின் அடிப்படையாய் வேண்டுதல் வேண்டாமையிலாத தன்மையை அமைத்து, அதுவே இறைமையின் இயற்கையெனக்கருதினர் என்று கொள்ளலாம்.

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

—(திருவாசகம்)



பிட்டுக்கு மண் சுமத்தல்.

உ

அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருச்செந்தூர்



பன்னெடுங் காலமாக பக்தர் வணங்கும் திருத்தலம். சிற்பங்கள் மலிந்த ராஜகோபுரங்கள், கண்ணைக்கவரும் கடற்கரை காட்சிகள் தமிழ்நாடு சுற்றுலாவில் கண்டு களியுங்கள்.

முருகப்பெருமான் அசுரன் சூரபத்மனை போரில் வென்று தேவர்களை விடுத்து உலகெலா முணர்ந்து வழிபட்ட தலமும் இதுவே. கருங்கல் திருப்பணியாலான கண்கவர் மண்டபங்களும் சுற்றுப்பிரகாரங்களும் ஆழ்ந்த இறையுணர்வு கொண்ட மாபெரும் துறவிகளால் அமைக்கப் பெற்றவை.

மூலவர் சுப்பிரமணியருக்கும் வள்ளி, தேவசேனா சமேத சண்முகருக்கும் தினமும் 9 கால பூசைகளும், மூன்று கால அபிஷேகங்களும் சிறப்புற நடைபெறுகின்றன.

விழாக்காலங்களில் பொன்னாலும், நவரத்தினங்களாலும், விலை உயர்ந்த ஆபரணங்களாலும் மூர்த்திகளுக்கு அலங்கரிக்கப்பட்டு கண்ணுறுவோர் களிப்படைவதோடு மனதில் என்றுமில்லா அமைதி நின்று நிலவும் பெருமளவில் பக்தர்கள் கண்டுகளிக்கும் விழாக்கள் ஆவணி மூலம், ஆகஸ்ட்-செப்டம்பர், கந்தசஷ்டி, அக்டோபர்-நவம்பர், மாசி மகம், பிப்ரவரி–மார்ச்சு, வைகாசி விசாகம், மே-ஜூன்.

உதயமார்த்தாண்ட கட்டளை ரூ. 1,000/- செலுத்தினால் இதன் வட்டியிலிருந்து கட்டளைதாரர் விரும்பும் தமிழ் நாளில் ஒவ்வொரு வருடமும் மேற்படி கட்டளை நடைபெற்று பிரசாதம் நேரிலோ, தபாலிலோ பாரம்பர்யமாக அனுப்பப்படும்.

தவிரவும் எல்லா மூர்த்திகளுக்கும் புஷ்ப அலங்காரம் செய்யும் பொருட்டு, 'புஷ்ப கட்டளை' ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கட்டளை செய்ய விரும்புவோர் ரூ. 750/– அனுப்பினால், அவர்கள் விரும்பும் ஆங்கில தேதியில் ஒரு நாள் ரூ. 750/-க்குள்ள வட்டியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் பெயரில் கட்டளை, அர்ச்சனை செய்யப்பட்டு பரம்பரையாக திருவருட் பிரசாதம் தபாலிலோ, நேரிலோ வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான அறைகளும், சிறு குடில்களும் கிடைக்கும்.

ஆ. நல்லகண்ணு,
தலைவர், தர்மகர்த்தர் குழு.

வி. கே. வேலுசாமி,
நிருவாக அதிகாரி.

எஸ். கே. ராமச்சந்திரத் தேவர்
பொ. கண்ணபிரான்
ஆ. கருப்பையா, எம். எல். ஏ.,
டி. ஆர். சுப்ரமண்யம்
} தர்மகர்த்தர்கள்

தமிழ் விடு தூது

அ. பாண்டுரங்கன், எம். ஏ., டிப். லிங்., (மொழியியல்)

தமிழ்மொழியிலுள்ள பிரபந்தங்களுள் தூது என்பதும் ஒன்று. பிரிவுத் துன்பத்தால் வருந்துகின்ற தலைவன் தலைவிகளுள் ஒருவர் மற்றொருவர்பால் தம்முடைய வருத்தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப்பொருள்களையேனும் அஃறிணைப்பொருள்களையேனும் தூதுவிடுப்பதாகப் பாடப்படும் சிற்றிலக்கிய வகை தூது.

தமிழ்விடுதூது மதுரைச் சோமசுந்தரக்கடவுள்பாற் காதல் கொண்ட தலைவி ஒருத்தி, தமிழை அவர்பால் தூது விடுத்ததாக இயற்றப்பெற்றது. இது புறத்திணைத்துறைகளுள், கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கத்தின்பாற்படும். இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரிந்திலது. எனினும், நூலாசிரியர் தமிழ்க்கல்வியில் மிக்க பயிற்சியுடையவரென்பதும், பரந்த கேள்வியறிவு வாய்க்கப் பெற்றவர் என்பதும், சிவபெருமானுடைய திருவிளையாடல்களிலும் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவரென்பதும் வடநூற்பயிற்சி மிக்கவரென்பதும், இந்நூலின்அமைப்பிலிருந்து தெளிவாகின்றன,

கவிதைக் கொள்கை

தமிழ்விடுதூதென்னும் இச்சிறு நூலிலே கவிதைபற்றிய கொள்கைகள் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றன. அவற்றைத் தொகுத்துவைத்து ஆராய்வோமாஞல் அவர் காலத்திய கவிதைக் கொள்கையை ஓரளவிற்கு நாம் அறிந்து கொள்ளலாம். அவ்வகையில் இக்கட்டுரை முதல்முயற்சியாக அமைகின்றது.



வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நால்வகைப் பாக்களை யும், துறை, தாழிசை விருத்தம் என்ற மூன்று பாவினங்களையும், யாப்பருங் கலக் காரிகை போன்ற யாப்பிலக்கண நூல்கள் கூறுவதையுட்கொண்டும்

" திகழ்பா ஒருநான்கும் செய்யுள்வரம்பு
ஆகப்
புகழ்பா வினங்கள் மடைப் போக்கா"

—கண்ணி 63

என்று பாடுகிறார் புலவர். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்று பாக்களை ஐவகைப் படுத்தி, அவற்றை ஐந்து குலங்களாகப் பகுத்து, ஒவ்வொரு குலத்துக்கும் ஒரு பாவினை உரிமைப்படுத்துகின்ற போக்கு பன்னிருபாட்டியல் என்ற பிற்கால நூலிற் காணப்படுகின்றது. இப்புலவர் பெருமானும் அக்கருத்தைப் பின்பற்றி

" ஒருகுலத்தும் வாராது உயிர்க்குயிராய்
நின்றாய்
வருகுலமோர் ஐந்தாயும் வந்தாய்"

—கண்ணி 19

என அமைக்கின்றார்:

இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று நால்வகைச் சொற்களைச் செய்யுட் சொற்களாகத் தொல்காப்பியம் காட்டுகின்றது. இவரும் அக்கருத்தையொட்டியே

" செய்யுள்சொல் நான்கும்
செந்தமிழ்ச்சொல் ஓர்நான்கும்"

—கண்ணி 28

என்று பாடுகிறார்,

தமிழை மணமகனாக உருவகித்துச் செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்ற நால்வகை ஓசைகளையும் தமிழ் அரசனின் பட்டத்தரசியராகவும், சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்ற நூற்றுமூன்று பண்களையும் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியர் ஆகிய கலியாணப் பாவையராகவும், ஒன்பான் சுவைகளைத் தமிழின் பிள்ளை களாகவும் உருவகித்து, தமிழ் என்னும் அரசன் பண்களாகிய இப்பெண் களோடும், ஒன்பது சுவைகளாகிய பிள்ளைகளுடனும் கூடிக் கொலுவீற்றி ருக்கும்போது நாடகமாகிக் கொலு வீற்றிருக்கிறது என்பர்.

" உற்றகலாப், பண்கள்முதல் பெண்க
ளொடும் பாலரொடு நாடகமாம்
பெண்கொலுவில் வீற்றிருக்கப்
பெற்றாயே"

—கண்ணி 33

பத்துவகைப் பொருத்தங்கள்

பாக்களுக்குரிய பத்துவகைப் பொருத்தங்களான மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் என்பன வற்றைக் குறிப்பாக,

" பொருத்தம் ஒரு பத்துப் பொருந்தும்
உனைத் தானே
விருத்தம்என்று சொல்லல் விதியோ"

—கண்ணி 83

என்று வினவுகின்றார். தண்டியலங் காரம் வைதருப்பம், கௌடம் என்ற இரண்டு நெறிகளையும் கூறப் பிற்கால அணிநூல்கள் பாஞ்சாலம், மாகதம் என்ற இரண்டினையும் சேர்த்துச் செய்யுள் நெறி நான்கு எனக்கூறின. இப்புலவர் இக்கருத்தை ஏற்றுக் கொண்டு, நால்வகை உறுதிப்பொருள்

களையும் நால் நெறியின் பலனாகப் பெறுவதாகக் கூறுகிறார்:

> நல்லநெறி, நாலே விதையா நனி
> விதைத்து நாற்பொருளும்
> மேலே பலன்பெறச் செய்விக்குநாள்''
>
> —கண்ணி 65

பால், முந்திரிகை, வாழை, கரும்பு, தெங்கு என்ற ஐவகைப் பாகங்களாகச் செய்யுள் பக்குவங்களைக் கூறுகின்றார். உயர்ந்த செய்யுள் பால் போன்றது; அடுத்த நிலையில் உள்ள செய்யுள் முந்திரிகை போன்றது. தோலை நீக்கி உண்டால் சுவைதரும் வாழைக்கனி போன்றது அடுத்த நிலையில் உள்ள கவிதை. நெருக்கிப் பிழிந்து பருகினால் இனிக்கின்ற கரும்பு போன்ற கவிதைகளும் உண்டு. இறுதியில் அமைவது தேங்காய். முதலில் மட்டையைப் பிரித்துப், பின்னர் ஓட்டை உடைத்து, அதிலுள்ள பருப்பைத் தனியே பிரித்தெடுத்து மென்று தின்றால் சுவைதருகின்ற தேங்காய்போன்ற கவிதைகளும் உண்டு.

செய்யுட்குரிய குணங்கள் பத்து எனத் தண்டியலங்காரம் கூறுவதை இவரும் ஏற்றுக்கொண்டு பாடுகிறார். செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணங்களையும் சிலேடையாக அமைத்து,

> " முற்றுணர்ந்த தேவர்களும் முக்குணமே
> பெற்றார் நீ
> குற்றமில்லாப் பத்துக் குணம்பெற்றாய்''
>
> — கண்ணி, 73

என்று தமிழைப் போற்றுகின்றார்.

முப்பத்தைந்து அலங்காரம்

செய்யுட்கு அலங்காரம் அஃதாவது அணி வேண்டும் என்ற கருத்தை உடன்படுகின்றார் இப்புலவர் பெருமான்.

> " துலங்கு ஆரம் கண்டசரம் தோள்வளைமற்
> றெல்லாம்
> அலங்கார மேஉனைப்போல் ஆமோ''
>
> — கண்ணி 86

எனத் தமிழை அணியிலக்கணமாகக் கூறுகிறார். மேலும், தண்டியலங்காரம் கூறுகின்ற முப்பத்தைந்து அலங்காரங்களையும் உடன்பட்டு, அவை தமிழ் என்ற மணமகனின் அழகை, அவை அணிகளாக இருப்பினும், பேதிப்பது குறைப்பது இல்லை என்று கூறுகிறார். வடமொழி அலங்கார நூல்களையும், நாடக நூல்களையும் பெருங்காப்பியங்களையும் தமிழின் தோழர்களாகப் புனைந்துரைக்கின்றார்.

> " நல்லபெருங் காப்பியங்கள் நாடகா
> லங்காரம்
> சொல்லரசே! உன்னுடைய தோழரோ''
>
> — கண்ணி, 43

மெய்ப்பாடுகள் எட்டு என்று தொல்காப்பியம் கூறும். மெய்ப்பாடுகளைச் சுவை என்று தண்டியலங்காரம் கூறுகின்றது. தண்டியலங்காரம் சுவைகளை எட்டு என வகுத்தாலும், பிற்கால நூல்கள் சுவை ஒன்பது எனக் கூறுகின்றன. நடுவு நிலைமையென்ற சாந்தம் என்பதை அவை ஒரு சுவையாகக் கூறுகின்றன. தமிழ்விடுதூது ஆசிரியரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு ஒன்பது வகைச் சுவைகளைக் கூறுகின்றார். அவற்றைத் தமிழ் என்ற அரசனின் பிள்ளைகளாக அமைக்கிறார். உணவுக்குரிய அறு சுவைகளைக் காட்டினும் தமிழ் நவரச

மாக விளங்குவதாகப் புகழ்கின்றார்:

"நாக்கு உலவும்
ஊனரசம் ஆறு அல்லது உண்டோ?
செவிகள் உண
வான நவரசம் உண்டு ஆயினாய்"

— கண்ணி 75

பெருங்காப்பியங்கள் தண்டி கூறும் இலக்கண வகையில் அமைகின்றன; பெருமைக்குரிய இலக்கிய வகையாகத் தண்டியால் குறிக்கப்படுகின்ற பெருங் காப்பியத்தை இப்புலவர் பெருமானும் "கண்ணியம் மிக்க பெருங்காப்பியம்" என்று பாராட்டுகின்றார். தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களையும் உட்கொண்டு அவற்றைக் "கற்றார் வழங்கு பஞ்ச காப்பியம்" என்று சிறப்பிக்கின்றார். பெருங்காப்பியத்திற்குரிய வர்ணனைகளைத் தண்டியலங்காரம் மலை, கடல், நாடு, நகர், சிறுபொழுது, பெரும்பொழுது, சூரியோதயம், சந்திரோதயம் எனக் குறிக்கின்றது. இவற்றை எண்ணிப் பதினெட்டு வருணனைகள் என மாறனலங்காரம் கூறுகின்றது. இந்நூலாசிரியரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு, "அட்டாதச வன்னனை" களைத் தமிழ் கண்டு மகிழ்வதாகச் சொல்லி, "எண்ணிய வன்னனைகள் ஈரொன்பதும்" எனக் காப்பிய உறுப்பாக்கியும் கூறுகின்றனர்.

தமிழுக்கு அழியா வனப்பு எட்டு

தொல்காப்பியர் செய்யுளியலில் கூறும் வனப்புகள் எட்டனையும் உட்கொண்டு சிலேடையாக மற்றவருக்கு ஒரு வனப்பு மட்டுமே உண்டு என்றும், தமிழிற்கோ அழியா வனப்பு எட்டு உண்டென்றும் கூறுகின்றார்.



"ஏனோர்க்கு, அழியா வனப்புஒன்று
அலது அதிகம் உண்டோ?
ஒழியா வனப்புஎட் டுடையாய்!"


— கண்ணி 76

அதேபோன்று இயற்கையில் உள்ள வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்தாக இருக்கத் தமிழோ நூறு வண்ணங்களைக் கொண்டதாக இருக்கிறதென்று கூறுகின்றார். இங்கே கூறப்படுகின்ற வண்ணம் ஒருவகை ஓசை நயம். அதனைத் தொல்காப்பியர் இருபது என வகைப்படுத்தியுள்ளார்.

யாப்பருங்கலவிருத்தி முதலிய நூல்களில் இவை விரிவாக ஆராயப்பட்டு நூறு எனக்குறிக்கப்பெறுகின்றன. இவ்வாறு நூறு வண்ணங்களைக் கொண்டது தமிழ் என்று பாராட்டுகின்ருர்:

"நீ, நோக்கிய வண்ணங்கள்
நூறுடையாய்"
—கண்ணி 74

இவ்வாறு ஆங்காங்குக் கூறப்பெற்றுள்ள கருத்துகளை ஒன்று திரட்டி ஒப்பு நோக்கி ஆராயின் நம்முடைய கவிதைக் கொள்கை, காலப் போக்கில் விரிவு பெற்று வளர்ந்திருப்பதும், வடமொழி அலங்கார நூற்கருத்துகளும் பிறவும் தமிழிற்கும் ஓரளவு ஏற்றுக்கொள்ளப் பட்டன என்பதும் புலனுகின்றன.



பரிபாடலில் மதுரை



பண்டித வித்துவான் ச. சாம்பசிவன், பி. ஏ.,

‘அன்னை தந்த பால் ஒழுகும் குழந்தைவாய், தேனொழுக ‘அம்மா’ என்று சொன்னதுவும் தமிழ்; அக் குழந்தை செவியினிலே தோய்ந்ததான பொன்மொழியும் தமிழ்; புதிது புதி தாய்க் கண்ட பொருளினோடு மின்னியதும் தமிழ்; பாரடர்ந்த இருட் கடலிற் படிந்த மக்கள் கண்டுவந்த திருவிளக்கும் தமிழ்!’. இத்தகு இனிமைத் தமிழ் மொழியின் கண் தோன்றிய இலக்கியங்கள் எண்ணில; அவற்றுள் ஒன்று ‘‘பரிபாடல்’’. எட்டுத் தொகையுள் ஐந்தாவதாக நின்று ‘‘ஓங்கு பரிபாடல்’’ எனும் பெயர்கொண்டு இலங்கும் பெருமை பெற்றது இது! பரிந்துவரும் பாடல் ஆதலின் ‘பரிபாடல்’ ஆயிற்று. இஃது ஓர் இசைப்பாட்டு. தெய்வத்தமிழ்த் தேவாரப்பாக்களுக்கு இசைவகுத்தாற் போலப் பரிபாடலுக்கும் கண்ணகனார், கேசவனார், நல்லச்சுதனார் முதலான சான்றோர்கள் இசை வகுத்துள்ளனர். ‘‘பரிபாடல்’’ என்பதற்கு உரையாசிரியர் பலரும், பலவிதமான விளக்கம் தருவர்! அகப்பொருளைப் பாடவந்த தமிழ்ச்சான்றோர், நாடக வழக்கொடும் உலகியல் வழக்கொடும் பொருந்தக் கலியும், பரிபாடலும் ஆகிய இருபாவகையினாற் பாடுதல் மரபு என்பர் தொல்காப்பியர். (தொல்: அகத் 52) இத்தகு பரிபாடலுக்குச் சிற்றெல்லை இருபத்தைந்து அடி; பேரெல்லை நானூறு அடி, பரிபாடல் எழுபது பாடல்களைக்கொண்டது. ஆனால், தமிழர்தம் தவக்குறைவால் இன்று நமக்குக்கிடைத்தன இருபத்திரண்டேயாம்! இவை தவிர உரையாசிரியர்களின் மேற்கோள், புறத்திரட்டு இவற்றால் நாம் அறியும் பரிபாடல்கள் பதினொன்று. இப்பதினொன்றில் ‘‘மதுரை’’யைப்பற்றியன ஆறு! இந்த ஆறுபாடல்களையும், பிற பரிபாடல்களையும் துணையாகக்கொண்டு ‘‘பரிபாடலில் மதுரை’’ என்ற பொருள்பற்றி ஈண்டுச் சிறிது காண்போம்.

மதுரைப் பேரூரின் சீரிய அமைப்பு

மதுரை மாநகரின் சீரிய அமைப்பினைப் பற்றிப் பரிபாட்டொன்று விரிவாக எடுத்து விளக்குகின்றது. மதுரை என்னும் சீரூர், திருமாலின் கொப்பூழி

னின்றும் தோன்றி மலர்ந்த அழகிய தாமரைப் பூவினைப் போன்றது. இச் சீரூரின் தெருக்கள், அத் தாமரை மலரின் அகவிதழ்கள் போன்றன; இத் தெருக்களுக்கு நடுவண் 'அண்ணல் கோயில்' அழகுறக் காட்சியளிக்கின்றது; இத்தோற்றம், அத்தாமரை அகவிதழ்களின் நடுவே உள்ள அரிய தாமரைப் பொகுட்டினைப் போலுள்ளது! இந்நகரிலுள்ள குளிர்ந்த தமிழ் மொழியினைப் பேசும் குடிமக்கள், அத் தாமரை மலரிலுள்ள மகரந்தப் பொடியினைப் போன்றவராவர்! இத் தண்டமிழ்க்குடிமக்களிடத்துப்பரிசில்பெற்று வாழ்வதற்காகப் பிற இடங்களிலிருந்து வரும் மக்கள், அம் மகரந்தப்பொடியினை உண்ணவரும் வண்டினம்போல்வர்.

''சேரனுக்குரிய தலைநகரம் 'வஞ்சி'; சோழனுக்குரிய தலைநகரம் 'உறையூர்'; இவ்விரு நகரங்களிலும் உள்ள மக்கள், விடியற்காலையில் கோழி கூவும் ஒலியினைக் கேட்டே தம் தூக்கத்தினின்றும் எழுந்திருப்பர்; ஆனால், மதுரையாகிய இப்பெரிய ஊரில் உள்ள மக்களோ, வஞ்சி, உறந்தை நகர மக்களைப்போல் கோழியின் குரல்கேட்டுக் கண் விழியார்!''

''திருமாலின் கொப்பூழில் தோன்றிய தாமரை மலரில் தோன்றியவன் நான்முகன்; அவனது நாவினின்றும் பிறந்தவை நான்மறைகள். இம்மறை ஒலி, மாநகர் மதுரையில், நாட்காலையில், செந்தண்மை பூண்ட அந்தணர் நாவினின்று ஒலிக்கப்பெறும். இம் மறைநந ஒலிகேட்டு மதுரை மக்கள் துயில் எழுவரேயன்றிக் கோழியின் கூவுதல் கேட்டு எழுவதில்லை!''

இவ்வழகிய கருத்தமைந்த பாடல் காண்மின்:

> "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
> பூவொடு புரையுஞ் சீரூர்; பூவின்
> இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
> அரும்பொகுட் டனைத்தே அண்ணல்
> கோயில்;
> தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்;
> தாதுண்
> பறவை யனையர் பரிசில் வாழ்நர்;
> பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
> நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
> ஏம இன்றுயில் எழுதல் அல்லதை
> வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
> கோழியின் எழாதுஎம் பேரூர் துயிலே!

இப்பாடலில் வரும் 'அண்ணல் கோயில்' எனும் தொடர், இருவிதப் பொருள் பயக்கும் சீரிய தொடராய் அமைந்துள்ளது. 'அண்ணல்' என்பது தலைநகராய்க் கொண்ட பாண்டியப் பெருவேந்தனையும், கோயில் என்பது அவன் வதியும் பேரரண்மனையினையும் குறிக்கும். ஒரு காலத்தே மன்னனது மாளிகை, நகர் நடுவண் அமைந்து நலம் பயந்தது! இன்றோ, மாநகர் மதுரையில், மன்னன் மாளிகை இல்லை. ஆலவாய் அண்ணலின் அழகுறு கோயில் காட்சியளிக்கின்றது! எனவே 'அண்ணல் கோயில்' எனும் தொடருக்கு 'எம்பெருமானாகிய சொக்கநாத அண்ணல் கொலுவீற்றிருக்கும் திருக்கோயில்' என்ற பொருளும் கொள்ளலாம்! இம்முறையில் இவ்வழகிய தொடரை அமைத்த செந்நாப் புலவரின் நுண்மாண் நுழைபுலத்தை எங்ஙனம் போற்றுவது?

இப்பாடல், மதுரையின் அமைப்பு மட்டுமா விளம்புகின்றது? அன்று அன்று! இந்நகரில் வாழும் தண்டமிழ்க் குடிகளையும், தம்மை நாடிவரும் பரிசில்

மாக்கட்கு மனமுவந்து கொடுக்கும் வள்ளன்மையையும் இஃது இயம்புகின்றது! கோழி கூவுதற்கு முன்பே, அந்தணர் மறை ஒலி எழுப்புவர். அவ்வொலி கேட்டே மக்கள் எழுவர் என்பதால் மதுரை நகர மக்களின் சமய உணர்வையும் செப்புகின்றது! இத்தகைய உணர்வு பிற சோழ, சேரநாட்டு மக்கள்பால் இல்லை என்பதையும் குறிப்பாற் சுட்டுகிறது! ''பூவின் இதழகத் தனைய தெருவம்'' என்பதால், தெருக்கள் அடுக்கடுக்காகமட்டுமல்லாமல், அழகாகவும், கண்ணுக்கு விருந்தாகவும், தூய்மையாகவும் அமைந்துள்ளன, என்பதையும் அறிய முடிகின்றது! முறை வேண்டினர்க்கும், குறை வேண்டினர்க்கும், காட்சிக்கெளியனாய்க் கடுஞ்சொல்லன் அல்லனாய் நீதி வழங்கும் இறைவன், நகரின் ஒதுக்குப்புறத்தே தனித்து வாழாமல் நகர்நடுவண் இருந்து நல்லவனாய், வல்லவனாய் இருக்க வேண்டும், அத்தகு நிலைமை மதுரையில் இருந்தது என்பதை, 'இதழகத்து அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்' என்பது இனிது எடுத்து மொழிகின்றது! படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வந்த பழந்தமிழ்க் குடிகள் வாழுமிடம் மதுரை என்பதைத் 'தண்டமிழ்க் குடிகள்' என்பது காட்டுகிறதன்றோ! 'தண்' எனும் அடைமொழி, தமிழை மட்டுமன்றிக் குடிகளையும் சிறப்பித்தல் சிந்தனைக்குரியது. மறை ஒலி கேட்டெழும் மதுரை மக்கள் மட்டுமே வாழவேண்டும் என்பதன்று, வஞ்சியிலும் கோழியூரிலும் (உறையூர்) கோழி ஒலி கேட்டெழும் மக்களும் வாழ்வாங்கு வாழவேண்டும் என்பதற்காக 'வாழிய வஞ்சியும் கோழியும்' என்கின்றது இப்பாட்டு! இங்ஙனம் பல்வகை நயங்களும் பாங்குறப் பெற்ற இவ் வழகிய திருப்பாட்டுப் பன்முறையும் பாடிப் பாடிப் பரவுதற்குரித்தாய் அமைந்துள்ளது! ஆனால் இத்திருப் பாட்டைப் பாடிய புலவரோ, தம் ஊரும் சொல்லாமல், பேரும் சொல்லாமல், ஐயகோ மறைந்து விட்டார்! அவர் தம் பெருமையே பெருமை!

வாழ்வாரே வாழ்வார்

இம்மதுரை நகரின் மாண்பினை ஐந்து பரிபாடல்கள் அழகுற எடுத்தோதுகின்றன. அவற்றின் சுருக்கம் வருமாறு: ''புலவர்கள் தம் அறிவாகிய துலாக்கோலில், மதுரை நகரை ஒரு தட்டிலும், மதுரை தவிர உலக முழுவதையும் ஒரு தட்டிலும் வைத்து நிறுப்பார்களானால், உலகம் இடப்பட்ட தட்டு வலிமை குறைந்து மேலெழும்; ஆனால், தென்னவனுக்குரிய நான் மாடக் கூடலோ, வன்மை குறையாது பெருஞ் சுமையாய்த் தாழும் தன்மையதாய்க் காட்சியளிக்கும். அத்தகு பெருமையுடையது இம்மதுரை.

''கொடி கட்டப்பட்ட தேரினையுடைய பாண்டியனுக்கு உரியதாகிய பொதிகை மலையும், அம்மலையில் வாழும் தமிழ் முனிவராகிய அகத்தியரும் இருக்கும் வரையில், மதுரை நகரமானது, தண்டமிழ் மொழியினையே எல்லையாகக் கொண்ட தமிழ்நாட்டின் இடமெல்லாம் தன் புகழ் பரவுமாறு நின்று நிலைத்து, அப்புகழால் பொலிவு பெற்றுத் தோன்றுமேயல்லாமல், அது தன் பெருமையில் குறைதல் உண்டாகுமோ? உண்டாகாது.

"இம்மதுரை, திருமகளுக்கு இட்ட திலகம் (பொட்டினைப்) போலச் சிறப்புப் பெற்று இலங்குவது!" அழகிய தேரினை யுடைய பாண்டியனது வையையுள்ள வரை, இம்மதுரையானது, இவ் வுலகத்தே புகழால் பொலிவு பெற்று விளங்குமே யன்றிப் பெருமை கெட்டு அழிதல் ஒருகாலும் இல்லை.''

"இம்மதுரை, கார்த்திகைப் பெண்டிர் காதுகளில் உள்ள, பொன்னலான மகர குண்டலம்போல் பொலிவுடன் திகழ்வது! கொடி கட்டப்பட்ட தேரினை உடைய பாண்டியனின் மொழியாகிய தமிழ் உள்ளவரை, இம்மதுரையானது, சிறப்புடன் செல்வம் பூத்துப் பொலியுமேயன்றிக் குற்றம் உண்டாக இருத்தல் ஒருநாளும் இல்லை!''

"மதுரை நகர மக்கள், பண்பு உடையர்! தம்மை நாடி வந்த இரவலர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் வள்ளல்களைக் கொண்டாடுவர்; தம்மிடம்கேட்க யாரும் வரமாட்டார்களா? என ஏற்பாரை எதிர்பார்த்திருந்து, பின்பு அவர்களைக் கண்டபோது அகம் குளிர்வர்! இத்தகு மக்கள் வாழும் இம் மதுரைக்கு அருகில் உள்ளது, செவ்வேள் பரங்குன்று! இம் மதுரையிலும், இத் திருப்பரங்குன்றத்திலும் வாழ்பவரே, மறுமை இன்பம் பெறத்தக்கவர் ஆதலின், 'வாழ்வார்' எனப்படுவர் இவரேயாவர்! ஏனையோருக்கு இத்தகு இன்பம் கிட்டாதாதலின், 'வாழ்வார்' எனப்படுதற்குரியராகார்!''

''ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப்
பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள்
பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார்;
மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு.''

வையைப் பரிபாடல்

மதுரைக்கு அணி செய்யும் ஆறு 'வையை', வையை என்று சொல்லும் போதே நமது நாவில் தமிழ் அமிழ்தம் சுரக்கின்றது! ஊற்றுப் பெருக்கால் உலகூட்டுவது-வையை; புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி - வையை; பிட்டுக்கு மண் சுமந்த பெம்மான் பிரம்படி பட்ட இடம் - வையை; பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே இருந்து வளர்ந்த நம் தமிழன்னை, ஏட்டிலே தவழ்ந்த இடம் - வையை! எனவேதான் பைந்தமிழ்ப் புலவர் பாரதியார். 'தமிழ் கண்டதோர் வையை' என வாயார வாழ்த்தலானார்! இத்தகு வையை, இன்று அரசு இழந்த அரசன் போலப், பொருள் இழந்த புலவன் போல வெறு மணற்பரப்பாய்க் காட்சியளிக்கின்றது! ஆயினும், இவ்யாறு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு, வற்றா வளஞ் சுரக்கும் வன்மையதாய்ப் 'புனல்யாறு அன்று பூவாறு' என்று சொல்லத்தக்கதாய், என்றும் குன்றா நீர்மையதாய் இலங்கிற்று என்பதைப் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்கள் பகரும்! இத்தகு வையையைப் பற்றிப் பாடிய பரிபாடல்கள் இருபத்தாறு; இன்று கிடைத்தவையோ எட்டு! இவ்வெட்டுப் பாடல்களின்மூலம், அக்காலத்தே மதுரையில் வாழ்ந்த மக்கள் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் முதலானவற்றை நாம் அறிந்து இன்புற

முடிகின்றது. இப்பாடல்களைப் பாடிய சான்றோர் நல்லந்துவனார், மையோடக் கோவனார், கரும்பிள்ளைப் பூதனார், நல் வழுதியார், நல்லழிசியார் ஆகியோர் ஆவர்!

பாட்டின்பம்

வையைப் பரிபாடல் அனைத்தும், தொல்காப்பிய விதிக்கேற்பக் காமப் பொருள் குறித்து வரும் புனல் விளையாட்டின்பாற்படும். ஆதலின் இப்பாடல்கள் பயில்தொறும், பயில் தொறும் தொட்டனைத்தூறும் மணற் கேணி போல நறுஞ்சுவை பயக்கும்? பாட்டின்பச் சாற்றில் சில துளி பருகுவோம்!

முகில்கள், பனிக் கடலிற் படிந்தன; நீரை முகந்தன; சைய மலையை மணந்தன; மழையாகப் பொழிந்தன; மலைவாழ் விலங்குகள் கலங்கின; மயில்கள் அகவின; மலைமாசு நீங்கியது! அருவி இழிந்தது; பாண்டியனின் படை போல எங்கும் பரந்தது; பாய்ந் தது; வையை யாற்றில் தண்ணம் புனல் தாயிற்று! பாண்டியனைப் போலவே இவ் வையையும், தன் தலைமையைச் செல்லுமிடமெல்லாம் பரப்பி, நன்செய் நிலங்களில் நென் மணிகளாம் பொன் மணிகளைக் கொழிக்கச் செய்யும்; வருந் தாமல் விருந்தயரும்; இதன் வள்ளன்மை கண்டு புலவரும் பாணரும் கூத்தியரும் பாவால் இசைத்துப் போற்றுவர்! போர்க்குச் செல்லும் முன்னணிப் படைவீரர் போன்று நறும்புனலில் நீராடித் திளைக்க மதுரை மக்கள் விரைவர். அவருள், இளையரு முண்டு; முதியருமுண்டு. இளையருள், மலரும் மொட்டுப்போன்ற பருவப் பெண்கள் உண்டு; புதிதாக மலர்ந்த மலர்போன்ற மங்கையரும் உண்டு; அவ்வாறே முதியருள்ளும், இடையிடை நரைத்த தலைமயிர் உடையார் உண்டு; முற்றும் நரைத்த தலைமுடியாரும் உண்டு! வசதி படைத்தோர் 'வங்கப் பாண்டில்' முதலான வண்டிகளிலும், பல்லக்குகளிலும், குதிரைகளிலும், யானைகளிலும், செல்வர்! நீராடுதற்கு



உரிய பொருள்களையும், நீராடியபின் கூந்தலை உலர்த்துதற் பொருட்டு அகில் முதலான நறுமணப் பொருள்களையும், இறைவனை வழிபடற்குரிய ஆராதனைப்

பொருள்களையும், விளையாடுதற்குரிய பீச்சாங்குழல் முதலான கருவிகளையும் கொண்டு செல்வர். நீர்விளையாட்டு எனப்படும் போர்க்கு உரிய களமாக வையை யாற்றைக் கொள்வர். இதில் ஆடல் பாடல் உண்டு; ஊடலும் கூடலும் உண்டு! ஒவ்வொருவரும் தாம் தாம் விரும்பும் நீர்த்துறையைப் பற்றிக் கொள்வர்! இத்துறைகளில் ஆடுவார் சிலர்; பாடுவார் சிலர்; ஆர்ப்பார் சிலர்; நகுவார் சிலர்; நக்கு ஓடுவார் சிலர்; ஓடித்தளர்வார் சிலர்; உற்றவரைப் போய்த் தேடுவார் சிலர்! வையையின் இருகரை என்னுமாறு கூட்டம் நிறைந்து தோன்றும்! குழல் ஒலி, முழவு ஒலி, தடாரி ஒலி, தண்ணுமை ஒலி-இவ்வாறு பலவித ஒலிகள்! நாள ஓசைகள், வந்தவர் மொழியும் பேச்சொலிகள், இப்படிப் பலவித ஒலிகள் ஒரே காலத்தில் எழுவனவாதலின் பொருள் புலப்படமாட்டா! ஆடவர் ஒருபுறம் விளையாடுவர்; மகளிர் ஒருபுறம் விளையாடுவர்; காதலர்கள் களிப்புடன் ஒருபுறம் விளையாடுவார்! செல்வச் செருக்குடையார், பரத்தையருடன் ஆடுவதும் நிகழும்!

வையையில் நீராடுவதைத் திருநாளாகக் கொண்டாடுவர்! மகளிர், இந்தத் திருநாளுக்கென்றே சில அணிகலன்களை அணிந்து கொள்வர்! எப்போதும் அணிவனவற்றை அகற்றிவிட்டுத் திருநாளுக்குரிய தோடு, தோளணி, சுடரிழை, நித்திலம் முதலாயின அணிந்துகொள்வர். சூடுவார் சூடுவர்; பாடுவார் பாடுவர்; பரவுவார் பரவுவர்; ஆடுவார் ஆடுவர்; பண்ணுக் கேற்பப் பாணி ஒலிக்கும்! மார்கழித்திங்களில் 'திருவாதிரை' வரும். விரிநூல் அந்தணர் விழாத் தொடங்குவர்; புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏந்துவர்; ஆய்தொடிக் கன்னியர் 'வியனில வரைப்பு வெம்பாதாக' என வாழ்த்தி நீராடுவர். அக்கன்னியர்க்கு முனித்துறை முதல்வியர் ஆடும் முறைமை காட்டுவர். பனி புலரும் விடியற்போதில் நீராடுவர்; வாடையால் நடுங்குவர்; ஈர ஆடையை உலர்த்த, வேதியர் வளர்க்கும் அழலருகே நிற்பர்! கன்னியர், தம் தாயர் அருகே நின்று தைந்நீராடுவர். 'இது, முற்பிறப்பில் வையையில் நீராடியதன் பயனோ?' எனப் போற்றுவர். இளமகளிர், மலர் மாலைகளை நீரில் இட்டு வழிபடுவர். வசதி பெற்றோர், பொன் மீன், பொன் நண்டு இவற்றை ஆற்றில் இட்டு வணங்குவர். வையையினை நோக்கி, "வானம் மலிதந்து மறுஅற்க! விளைபொருள்கள் விளைக! நாடு பொலிக!" என வேண்டுவர். மற்றும் சிலர், "தைந்நீரே! எம் கழுத்தில் வைத்த கைகளை நெகிழவிடாமல் எம் காதலர் எம்மைத் தழுவுமாறு பேறு பெறுவோமாக!", "இவர் கிழவர் கிழவியர் என்னாது, என்றும் இளமையுடனும் செல்வத்துடனும், கேளிருடனும் பொருந்த வாழ்வோமாக!" "மறுபிறவியினும் இப்பேறு யாம் பெறுக! அருள்புரிக!" என வேண்டுவர்!

> "கிழவர் கிழவியர் என்னாதுஏழ் காறும்
> மழவீன்று மல்லல்கேள் மன்னுக
> என்மரும்
> ....
> முன்முறை செய்தவத்தின் இம்முறை
> இயைந்தேம்
> மறுமுறை அமையத்தும் இயைக!"
>
> —(பரி. 11)

இவைபோன்ற எண்ணிலாக் கருத்துகள் வையைப் பரிபாடலிற் கண்டு மகிழலாம்.

பரங்குன்றப் பரிபாடல்

பரிபாடலில், 'செவ்வேள்' எனப் படும் செந்தமிழ் முருகனுக்குரிய பாடல்களாக இப்போது உள்ளன இருநான்காகும். இவற்றைப் பாடியோர் இளவெயினனுர், ஆசிரியர் நல்லந்துவனுர், ஆசிரியர் குன்றம்பூதனுர், கேசவனுர், நல்லழிசியார், நப்பண்ணனுர், நல்லச்சுதனுர் முதலியோராவர். இப்பாடல்களின் வழியாக மதுரைக்கு அருகே உள்ள தண்பரங்குன்றத்தின் தன்மையும், ஆங்கு எழுந்தருளியிருக்கும் திருமுருகனின் மேன்மைகளும் விளக்கமாக அறியலாம். அவற்றில் ஈண்டுச் சில காணுதல் சாலும்!

திருமால் முதற்கொண்ட தேவர்கள் அனைவரும், விழுத்தவ முதல்வரும் முருகப்பெருமானை வணங்கும் பொருட்டுத் திருப்பரங்குன்றத்தே வந்து தங்கியிருத்தலால் அஃது இமயக் குன்றினை ஒத்திருக்கும்! முருகனை ஈன்றெடுத்த சரவணப் பொய்கைபோன்ற, அருவி தாழ் மாலைச்சுனை, ஈங்கும் உண்டு! இத்தகு பரங்குன்றத்துக்கருகில் தான் மாநகர் மதுரையும் உள்ளது! திருப்பரங்குன்றத்திலிருந்து மதுரைக்கு வரும் வழியில் தும்பியும், வண்டும், மிஞிறுமாகிய தேன் வண்டுகள் ஒலிக்கும். அவ்வொலி, குழலிசையையும், யாழிசையையும் ஒத்திருக்கும். வழி நெடுகிலும் உள்ள சுனைகளில் பூக்கள் மணம் பரப்பும். கொன்றை, காந்தள் முதலான மலர்கள், நன்கு மலர்ந்து எங்கும் நறுமணம் வீசும். அம்மலர்களிலிருந்து தேன்துளி கீழே சிந்தும்; அதன் மணத்தைத் தென்றற் காற்றுத் தாங்கிக்கொண்டு மெதுவாக அசையும்.''

''மதுரைமா நகரில் திருமண விழாவின்போது அழகிய முரசுகள் ஒலிக்கும். அவ்வொலியானது, கடல் ஒலி போன்றும், முகில் ஒலிபோன்றும், இடி ஒலி போன்றும் இருக்கும். இத்தகைய திருமண முரசொலிக்கு மாருகப் பரங்குன்றத்தே, பலவித ஓசை எழும்!

" குன்றம் உடைத்த ஒளிர்வேலோய்! கூடல்
மன்றல் கலந்த மணிமுரசின் ஆர்ப்பெழக்
....
குன்றம் குமுறிய உரை''

—(பரி. 8)

''மதுரையும், திருப்பரங்குன்றமும் புலவர் பலராலும் பாடப்பெற்ற பாடல்களைக்கொண்டவை; பலவிதப் புகழால் நிறைந்தவை. இவ்விரண்டு ஊர்கட்கும் இடையே அமைந்த தூரம் மிக மிகக் குறைவே! எனினும், அவ்வழி நெடுகிலும், நறுமணங் கமழும் சந்தனக் குழம்பணிந்த ஆடவரும் மகளிரும் நெருங்கிக் கிடந்தமையால், மிகவும் தூரமுடையதுபோற் காணப்பட்டது! பெண்களின் கூந்தலினின்றும் ஆண்களின் குஞ்சியினின்றும் சோர்ந்துவிழும் மலரிதழ்களால், மக்கள் நடந்து செல்வதற்கே வழியில்லாமல் இருந்தது! திருப்பரங்குன்றத்தில் பூசை செய்வதற்காக அன்பர்கள் இட்ட நறுமணப்புகையால் தேவர்களும் கண் இமைத்து விலகினர்; பகலவனும் ஒளி மழுங்கித் தோன்றினன். ஆங்குள்ள சுனைகளில் ஆடவரும் மகளிரும் பாய்ந்து நீராடலால், அச்சுனைமலர்களின் தேனை

உண்ண வண்டுகளும் வாராவாயின! பரங்குன்றத்து வெள்ளிய அருவிகள் வயல் நிலங்கட்குப் பாய்ந்து ஓடும்; மலையின்மேல் மகளிர் விளையாடுவர்; அவர்தம் அணிகலன்களினின்று வீழ்ந்த நீலமணிகளை அருவிகள் அடித்துக் கொண்டு வயல்களிற் போடுவதால், வயல்நிலம் பாழாகும்! பொருள்தேடச் சென்ற தம் கணவர் விரைவில் திரும்பி வரவேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் மங்கையர், முருகனுக்கு விழாச் செய்வர்! அதன் பயனாகத் தம் கணவர் விரைவில் திரும்பி வந்தபின், வையையில் விளையாட்டுவிழா மேற் கொள்வர்! பின்னர் மதுரையில் உள்ள தம் இல்லங்களில், தம் தலைவர் கொண்டுவந்த பெரும் பொருளால் ஏழை எளியவர் எல்லோர்க்கும் பெருஞ் சோறு நல்கும் பெருவிழாக் கொண் டாடுவர்! கொய்யுளை மான்தேர்க் கொடித்தேரானின் கூடலில் நடக்கும் இத்தகு விழாக்கள், இல்லற ஒழுக்கத் திற்கு ஏற்ற முறைமையுடையன!


இங்ஙனம் விழாக் கொண்டாடு தற்கு உரிய இடமாகத் திகழும் மதுரையையும், அதன் அருகே விளங்கும் தண்பரங்குன்றத்தையும் பலபடப் புகழும் புலவர்கள் முருகப் பெருமானை மனங் கனிந்து ஏத்துகின்றனர்.

“குருகொடு பெயர்பெற்ற மால்வரை உடைத்து, மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை! முந்நான்கு முழவுத் தோள், ஞாயிற்றேர் நிறந்தகை நளினத்துப் பிறவியை! காஅய் கடவுள் சேஎய்! செவ்வேள்! சால்வ! பெரும்பெயர் முருக! நயத்தகு மரபின் வியத்தகு குமர! மணிநிற மஞ்ஞை ஓங்கிய புட் கொடிப் பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ! நின்பால் யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல! வட்டமாகப் பூக்கும் பூங்கொத்து களைக் கொண்ட கடம்பினது தழைத்த மாலையினை அணிந்த முருகப் பிரானே! வீடு பேற்றினைத் தருதற்குரிய நின் அருளும், அதனை யாம் பெறுதற்குரிய நின் திருவடிக்கண் அன்பும், அறநெறியு மாகிய இம் மூன்றுமேயாம்!”

“......யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல
நின்பால்;
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே!

(பரி. 5.)

பரிபாடலில் மதுரையின் மாண்பினைக் கண்ட யாமும், பரங்குன்றத்துப் பெருமானிடம், “ஒலி தாரோயே! நின்பால் வேண்டுவன அருளும், அன்பும், அறனுமாகிய இம்மூன்றுமே!” என வேண்டுவோமாக!



பிள்ளைத்தமிழ்

புலவர் சு. இலக்குமணப பெருமாள், பி. எ.,


> "குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்"

என்பது குறள். குழந்தைகள் மொழியும் மழலையே ஈன்ருர்க்கு இன்பம் தருவது. ஈடு இணையில்லாத குழந்தை இன்பமே பெற்ருேர்க்கு அமிழ்தினும் ஆற்ற இனிது, குறுகுறு நடந்து, சிறு கை நீட்டி, இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும் மயக்குறு மக்கள் இன்பமே அவனிக்கண் ஆற்றல் சான்ற பேரின்பமாம். இதனையே கவிமணி அவர்கள கூறும்போது "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" எனக் குறிப்பிடுகின்ருர். அதனுல்தான ஆன்ருேர் செய்யுள் இலக்கணம் வகுக்குங்கால் தாம் போற்றும் கடவுளரையோ, அரசரையோ, சான்ருேரையோ நேரிடையாகப் பாடுவதை விடுத்து, நிகரற்ற குழந்தையராய்க் கொண்டு அவர்தம் செயல்களைத் தாம் விரும்பிய வாறுஏற்றிப்பாடுவாராயினர். குழந்தையராய்க் கொண்டாடும்போது அவர் தம் குண நலன்கள், கொஞ்சும் மழலையில்-விஞ்சு தமிழில் நெஞ்சை அள்ளும்-பான்மையவாய் அமைந்து கற்பார்க்குக் களிபேருவகை நல்கும்.

பிள்ளைத்தமிழ் இலக்கணம்

தொல்காப்பியர் காலத்து எழுந்த இவ்விலக்கணம் பிற்காலத்தில் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்ருக அடக்கப்பட்டது. மேலும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத் தமிழ் என இரு கூருகப் பகுக்கப்பட்டு முறையே காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்னும் இவ்வேழும் இருபாற் பிள்ளைத் தமிழுக்கும், சிற்றில், சிறுபறை, சிறு தேர் என்னும் இம்மூன்றும் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் அம்மானை, நீராடல், ஊசல் என்னும் இம்மூன்றும் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் அமைத்துப் பாடுவர்.

இங்ஙனம் அமைத்துப் பாடும் பிள்ளைத்தமிழ் பல, தமிழ் மொழிக்கண் மிளிர்தலை நாம் காணலாம். அவை



அனைத்தையும் எடுத்து விளக்குதல் ஒல்லாதெனினும் ஈண்டு வரைந்து கோடற்குக் குமரகுருபரரால் பாடப் பெற்ற முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் ஆகிய இரண்டிலும் பின்னதை நம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுதல் சாலப் பொருந்தும்.

இம்மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றிய குமரகுருபரர் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிர பருணி ஆற்றின் வடகரையிலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாம சுந்தரி அம்மையாருக்கும் திருமகனாகப் பிறந்தார். ஐந்தாண்டுகள் வரை பேசாதிருந்த அவர் நிலைக்குப் பெற்றோர் மனம் மிகக் கவன்று சீரலைவாய் சென்று எந்தை முருகன் இணையடிக் கிடத்தித் தவம் இருந்தனர். செந்திற் பெருமான் திருவருளால் அருள்வாக்கு அமையப்பெற்ற குருபரர் முதற்கண் கந்தர்கலிவெண்பாப் பாடினர். எல்லாக் கலைகளிலும் வல்லவராய்த் திகழ்ந்த இவர், ஞானாசிரியரை அடைந்து சைவசமய சாத்திரங்களைக் கற்றுணர உள்ளம் அவாவினார்; கைலைக் கலம்பகம் பாடினார். மதுரையில் சில காலம் தங்கியிருந்தபோது அரசாண்டிருந்த திருமலை நாயக்கரது வேண்டுகோளால் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம் என்ற நூல்களைப் பாடினார். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்து அரங்கேற்றத்தில் 'தொடுக்குங்கடவுள்' என்னும் பாட்டுப்பாடி விளக்கும்போது அம்மை, சிறு பெண் வடிவத்தில் தோன்றித் திருமலை நாயக்கரது மடியில் அமர்ந்து அக்கவியின் சுவையுணர்ந்து தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபரரது கழுத்தில் அணிவித்து மறைந்தாள். பின் திருவாரூர்த் தியாகேசர் மீது திருவாரூர் நான்மணி மாலை பாடினார்.

தருமை முதல்வருடன்

சிவஞானம் பெற விரும்பிய இவர் தருமபுரம் அடைந்து திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 4-வது பட்டத்திலிருந்த மாசிலாமணி தேசிகரை அணுகித் தம் உளக் கருத்தைப் புலப்படுத்தி நின்றார். இதனை உணர்ந்த குருமணியும் தம் ஆதீன மரபுப்படி காசிக்குத் தலயாத்திரை சென்றுவரப் பணித்தார். அதனால் சிவஞான உபதேசம் பெறக் காலம் தாழ்க்குமெனக் குருபரர் மனம் வருந்த

வும், சிதம்பரமாவது சென்றுவருமாறு கூறினர். அவ்வாறு சிதம்பரம் செல்லும் வழியில் வைத்தீசுவரன் கோவிலில் தங்கி அவ்விறைவன்மீது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் பாடினுர். சிதம்பரம் சென்று கூத்தப்பெருமானை வழிபட்டுச் சிலகாலம் தங்கினுர். அப்போது சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பர செய்யுட் கோவை, நீதிநெறி விளக்கம் ஆகிய நூல்களை இயற்றினுர்.

மீண்டும் ஞானுசிரியரை யடைந்து தம் விருப்பத்தைக்கூற அவர்தம் பரி பக்குவ நிலையை உணர்ந்த குருமணி ஞானுேபதேசம் அளித்துத் துறவறம் வழங்கினுர். அப்போது தம் ஞானுசிரியர் மீது பண்டார மும்மணிக் கோவை இயற்றினுர்.

குருமணியிடம் விடைபெற்றுக் காசி சென்றுர்; அப்போது தம் கல்வி அறி வாலும், தவவலிமையாலும் தில்லியை ஆண்ட பாதுஷாவின் அன்பைப் பெற்றுர். இந்துஸ்தானி மொழியை அறியக் கலைமகள்மீது சகலகலாவல்லி மாலை பாடினுர். அதனுல் பாதுஷாவின் அன்பு பெருகி அவரால் காசியில் மடம் கட்டுவதற்குரிய இடத்தைப் பெற்றுர். அங்குக் காசிவிசுவநாதரை எழுந்தருளச் செய்து நித்திய பூசைகள் நிறைவுற ஆவன செய்தார். காசித் துண்டி விநா யகர் பதிகம், காசிக் கலம்பகம் ஆகிய நூல்களைப் பாடினுர். காசியில் வாழ்ந்து வந்தபோது ஒரு வைகாசித்திங்கள் கிருஷ்ணபட்சத் திருதியையில் இறைவன் திருவடி நீழல் எய்தினுர்.

முத்திதரும் திருத்தலங்கள் பல இருப்பினும் மூர்த்திவிசேடம், தலவிசேடம், பொய்கை விசேடம் மூன்றும் சிறந்து மிளிர்வது மதுரையாம். அதனுல் "முத்திக்கு வித்தாகும் சொக்கேசர்' என இறைவர் போற்றப்படுகிருர். அத் திருத்தலத்தில் ஆட்கொண்டருளும் அங்கயற்கண்ணம்மையின் அருள் நோக்கை அழகுபடப் பிள்ளைத்தமிழில் குருபரர் குழைத்து இனிது தருகின்றுர்.

சொற்பொருட்சுவை

செங்கீரைப்பருவத்தில் மீனுட்சி யம்மைக்குக் காஞ்சனமாலை நீராட்டி அணி புனைவிக்கும் மாண்பினை அழகுபடச் சித்திரிக்கின்றுர். குளிப் பாட்டி, வாசனைப்பொடியினை உடலிற் பூசி, வெண்மையான திலகத்திற்கு ஏற்பத் திருநீற்றினை அழகுபட அணிவித்து, அதற்குத்தகுந்தாற்போல முத்தாலிலங்கும் சுட்டிசாத்தித்



தலைமாலையினை உச்சிக்கொண்டையில் பொருந்துமாறு சூடித் தலையாபரணம் புனைந்து, முத்துஒளிவிடும் காதணியோடு பொற்கொப்பும் பொருத்திக் காஞ்சன மாலை தன் முலைப்பால் அமுதம் ஊட்டி, அதனால் வாயிலிருந்து வழிந்தொழுகும் அப் பாலாகிய தேன், பட்டாடையை நனைக்கவும் சீராட்டி, முத்தமிடும் கிளி போன்றவளே! செவ்விய சொற்களைச் சொல்லி அருள்செய்வாயாக, எனக் கூறும் பாடல் படிக்குந்தோறும் இன்பம் நல்குவதாம்.

''நீராட்டி யாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி
நெற்றியிற் றொட்டிட்டவெண்
ணீற்றினொரு புண்டரக் கீற்றுக்கு மேற்றிடவொர்
நித்திலச் சுட்டிசாத்தித்
தாராட்டு குழியக் கொண்டையு முடித்துத்
தலைப்பணி திருத்திமுத்தின்
தண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்கொர்
தமனியக் கொப்புமிட்டுப்
பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப்
பாலமுத மூட்டியொருநின்
பானூறு குமுதங் கனிந்தூறு தேறறன்
பட்டாடை மடிநனைப்பச்
சீராட்டி வைத்துமுத் தாடும் பசுங் கிள்ளை
செங்கீரை யாடியருளே''

என்பது அப்பாடலாம்.

இனி, அகப் பொருட்சுவை நயம் அரும்ப, அவர் ஆக்கியுள்ள பாடல்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றை மட்டும் நோக்கின் ஆசிரியர்தம் கவிதைமாண்பினை இனிது அறியலாம்.

தலைவன், தலைவியை எதிர்ப்படுகின்றான். அவர்கள் மனம் ஒன்றுபடுதலை உள்ளப்புணர்ச்சி என்று கூறுவர் தடாதகைப் பிராட்டியாகிய மீனாட்சியம்மை திக்குவிசயம் செய்தபோது திருக்கயிலாயத்தில் சிவபெருமானைக் கண்ட அளவில் அவர்தம் திருமார்பிலிருந்து மூன்றாவது முலைமறைந்த செய்தியைத் 'தலைவனோடு கொண்ட காதலால் உள்ளப்புணர்ச்சி ஏற்பட்டு அக்கருத்தால் உள்ளே ஒடுங்கியது, என ஆசிரியர் புனைந்துரைக்கின்றார்.

''பொய்வந்த நுண்ணிடை நுடங்கக் கொடுஞ்சிப்
பொலந்தேரொ டமரகத்துப்
பொன்மேரு வில்லியை யெதிர்ப்பட்ட ஞான்றம்மை
பொம்மன்முலை மூன்றிலொன்று
கைவந்த கொழுநரொடு முள்ளப் புணர்ச்சிக்
கருத்தா னகத்தொடுங்க''

என்பதால் உள்ளப்புணர்ச்சி என்ற அகப்பொருளிலக்கணத்தை அமைத்துக் கூறியுள்ளார்.

நயம்பட உரைத்தல்

ஆசிரியர் தம் நுண்மாண் நுழைபுல அறிவால் புறப்பொருட் செய்தியையும் நயம்பட உணர்த்தும் செவ்வி அறிந்து இன்புறற் பாலதாம்.

போர் நிகழுங்காலத்துப் படையின் மிகுதியால் தூளிப்படலம் உண்டாகும். இதற்குச் சேனுபராகம் என்று பெயர். அங்கயற்கண்ணம்மை அம்மானை ஆடுங்காலத்துச் சோலையிலுள்ள வண்டுகள் எழும். அச்செயலால் மலர்களிலுள்ள மகரந்தப்பொடி எங்கும் பரந்து இருள்செய அதைக்கண்டு விண்ணுலகத்தார் 'தடாதகைப்பிராட்டி, தம்மைநோக்கி மீண்டும் படையெடுத்து வருகின்றார்; அந்தச் சேனுபராகம் இது'

எனநினைக்கும் கற்பனையில் புறப் பொருட் செய்தியை அமைத்துள்ளார்.

"இமிரா வரிச்சுரும் பார்த்தெழப் பொழிலூ
டெழுந்தபைந் தாதுலகெலாம்
இருள்செயச் செய்துநின் சேனை பராகமெனும்
ஏக்கமள காபுரிக்கும்
அமரா பதிக்குஞ்செய் மதுரா புரித்தலைவி
அம்மானை யாடியருளே"

என்ற இவ்வரிகள் நினைந்து நினைந்து இன்புறற்பாலவாம்,

போர்புரியும் போர்க்களம் குருதி வெள்ளம் படிந்து செந்நிறம் தோற்றி நிற்பது என்பதைப் பரணிபோன்ற நூல்களில் காணலாம். இதனைச் செங் களம் என்று கூறுவர். இதனையே குமர குருபரரும்,

"கார்க்கோல நீலக் கருங்களத் தோடொருவர்
செங்களத் தேற்றலுமலர்க்
கட்கணை துரக்குங் கரும்புருவ வில்லொடொரு
கைவிற் குனித்துநின்ற
போர்க்கோல மேதிரு மணக்கோல மானபெண்
பொன்னூச லாடியருளே."

என்று கூறியுள்ளார்.

மீனாட்சியம்மையை ஆசிரியர், உருவகமாகப் பாடியுள்ள பாடல் அம்மையின் அருட்பெருக்கைத் தெள்ளிதின் விளக்குவதாம்.

மீனாட்சியம்மை, தொடுக்கும் கடவுட் பழம்பாடற் றொருடையின் பயனாகவும், நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையாகவும், அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு ஏற்றும் விளக்காகவும், வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடும் இளமென்பிடியாகவும், எறிதரங்கம் உடுக்கும்புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமாகவும், மதுகரம் வாய் மடுக்கும் குழற்காடு ஏந்தும் இளவஞ்சிக் கொடியாகவும் விளங்குகின்றாள்.

அம்மையின் அருள் உடன் கூடும்

இத்தகைய பிள்ளைத் தமிழை நாம் பலகாலும் நன்கு ஓதி உணர்ந்து உள்ளத்து அமைத்து வழிபடின் அம்மையின் அருள் உடன்கூடும் என்பது ஒருதலை. இங்ஙனம் அருட் பெருக்கால் நிறைந்தொளிரும் அங்கயற்கண்ணம்மையொடு எழுந் தருளியுள்ள ஆலவாய் அண்ணலை வழிபடின் பிறவிப்பிணி நீங்கி என்றும் பிறவாப்பேரின்பப் பெருவீடு, போற்றுவார் அனைவருக்கும்கிடைக்கும்.

குமரகுருபரர் பாடியுள்ள கருத்துகள் உள்ளுதொறும் உள்ளுதொறும் உணர்வின் வயமாய் நின்று தெள்ளு தமிழ்ச் சுவையினை அள்ளித்தரும் ஆற்றல் உடையன. அவற்றுள் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம்" என்றாற்போல ஒருசில இடங்களே என்னால் ஈண்டுச் சுட்டப்பெற்றன. அவற்றை மையமாகக் கொண்டு பிள்ளைத்தமிழின் சுவை முழுதையும் உணர்தல் சைவமும், தமிழும் போற்றும் சான்றோர்க்கு ஏற்ற பெற்றியதாகும்.

மணம் இயற்கையா? செயற்கையா? மதுரை காட்டிய முடிவு

கு. மகாலிங்கம், பி. ஏ., பி. லிப். எஸ்ஸி.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலனறிவுகளுள் உயிர்த்தறியும் புலனறிவே நாற்றம். இந்நாற்றத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. உயிர்த்துணரும் புலன், உயிரோடு தொடர்புடையது. உயிரின்றி உடல் இயங்காது.

'நாற்றம்' என்ற இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் 'நறுமணம்' என்ற பொருளில்தான் வழங்கிவந்தது. காலம் செல்லச் செல்லச் சொல்லின் பொருள் மாறித் தீய மணத்தைக் குறிக்கும் சொல்லாக இச்சொல் வழங்குவதாயிற்று.

> "இணருழ்த்து நாறு மலரனையர் கற்றது
> உணர விரித்துரையா தார்"

என்ற குறளடியிலும், "நறுந்தார் நாற்றம் பொதிர்ந்த நறுமலர்" என்ற பெருங்கதை யடியிலும் நாற்றம் என்ற சொல், நறுமணம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மணத்தைக் குறிக்கும் ஒருசொல், தமிழ்மொழியில் வழங்கி வருவதுபோலவே ஆங்கிலத்திலும் முன்பு ஒருபொருள் குறித்துப் பின்பு வேறு பொருள் குறிக்கும் சொல்லாக மாறி வழங்கிவருகிறது. 'Smell' என்ற சொல் முன்பு நறுமணத்தைக் குறித்தது. தற்பொழுது தீயமணத்தைக் குறிக்கும் சொல்லாக மாறி இருந்து வருகிறது. 'Fragrance' என்ற சொல் தான் இப்பொழுது நறுமணத்தைக் குறிக்கின்றது.

இயற்கை மணமா?

பொருள்கட்கு இயற்கையாக மணம் இருக்கின்றதா? செயற்கை முறைகளினால்தான் மணம் பிறக்கின்றதா? என்றால் இயற்கையே மணமாகத்தானே காட்சி அளிக்கின்றது! இயற்கை இல்லையேல் செயற்கைதான் ஏது? இயற்கை அன்னை படைத்த ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி மணமிருக்கக் காண்கின்றோம். ஒரு செடியையோ மரத்தையோ எடுத்துக்கொண்டால் வேர், தண்டு, இலை, காய், கனி, மலர் அத்தனைக்கும்

தனித்தனி மணமுண்டு. மணமுள்ள மலர்களன்றோ வண்டுகளைத் தம்பக்கம் இழுக்கின்றன. கற்றவற்றை மற்றவர்க்கு எடுத்துக்கூறும் ஆற்றல் இல்லாதவர்களை நாறா மலரென்றல்லவா வள்ளுவர் குறிப்பிடுகின்றார். கண்ணால் காணமுடியாத பொருள்களைக்கூடப் புலனாகிய மூக்கால் உயிர்த்தறிய முடிகின்றதல்லவா.

இயற்கையே இறைவனின் தோற்றமாகத்தானே காட்சி அளிக்கின்றது. இறைவனையே மணமாக மணிவாசகர் காணுகின்றார்;

“ நாற்றத்தின் நேரியாய் சேயாய்
நணியானே ”

என்று பாடுகிறார். மாணிக்கவாசகர் இறைவனை நறுமணமாக உணர்ந்து பாடுகிறார். எனவேதான் நாமெல்லாம் இறைவனை நறுமணப்புகை கமழ நறுவிரைப் பொருள்பலகொண்டு வணங்குகின்றோம். இம்மணம் அகத்தைக் குளிர்விக்கின்றது; இன்பமூட்டுகின்றது. இத்தகைய மணத்தின் காரணமாக வன்றோ பெற்றமூர்ந்த பெம்மானின் திருவிளையாடல் அன்று நிகழ்ந்தது! கண்ணுதற் கடவுளுக்கும் கழகப் புலவர் நக்கீரருக்கும் அன்று சொற்போர் நடந்தது. தருமிக்குப் பொற்கிழி கிடைத்தது. தருமிக்குப் பொற்கிழி கிடைத்த வரலாறாவது:

தருமிக்குப் பொற்கிழி :

பாண்டிய மன்னன், தன்தேவியோடு வேனிற்பருவத்தில் இளமரக்காவிலமர்ந்து நாள்களை இன்பமாகக் கழித்த வண்ணமிருந்தான். அப்போது ஒரு நாள் மன்னன் பக்கம் நறுமணங்கமழத் தென்றல் வீசியது. இந்த நறுமணக் காற்று எங்கிருந்து வருகின்றது என்று அவன் எண்ணிப் பார்க்கையில் தன் தேவியின் கூந்தலினின்றுதான் வீசுகிறது என்பதைப் பாண்டியன் உணர்ந்தான். மலரணியா மங்கையின் கூந்தல், மணம் கமழ்ந்த திறத்தை நினைந்து மன்னவன் வியந்து மகிழ்ந்தான். கூந்தலுக்கு இயற்கையாக எப்படி மணம் வந்தது? கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா? இல்லையா? என்ற ஐயம் அவன் உள்ளத்தில் அரும்பிற்று. தன் மனத்துக்கண் எழுந்த ஐயம் களைய அவன் விரும்பினான். தன் உள்ளக் கருத்தைப் புறத்தே மன்னன் வெளியிடவுமில்லை. தன் உள்ளக் கருத்தை உணர்ந்து அதனைப் புலப்படுத்திப் பாடுபவர்க்கு ஆயிரம் பொற்காசுகள் அளிக்கப்படும் என்று அறிவித்தான். பொற்கிழி பெறுவதற்குக் கழகப் புலவர் பலர் மன்னவன் கருத்தை அறிந்து தெரிவிக்க முயன்றனர். முயற்சி பயனளிக்கவில்லை. இவ்வாறிருக்க இறுதியில் தருமி என்னும் இறைவனடியான் இறைவனைப் பாடிப் பரவிப் பொற்கிழி பெற விரும்பினான். இறைவன் வையை நாடன் மனக்கருத்தை உரைக்கும் பாடல்ஒன்று எழுதி அளித்தான். பெற்றதருமி கற்றநாவலர் கழகம் நண்ணினான். தான் பெற்றுவந்த பாடலைத் தருமி பாடிக்காட்டினான். அப்பாடல் மன்னன் கொண்டிருந்த மனக் கருத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைந்திருந்தது. வியப்பும் பெருமகிழ்ச்சியும் பெற்ற புரவலன், தருமிக்குப் பொற்கிழி அளிக்குமாறு ஆணையிட்டான்.

நக்கீரர் வாதம் :

தருமியும் மிக்க மகிழ்ச்சியோடு அதனைப்பெறச் சென்றபோது கழகப் புலவர் நக்கீரர் இத்தருமிக்குப் பொற்கிழி அளித்தல் தகாது என்று சொன்னார். அவர் பாடலில் பொருட்குற்றம் இருப்பதாகக்கூறிப் பரிசிலையும் தடுத்து நிறுத்தினார். நாணமும் ஏமாற்றமும் அச்சமும் அடைந்த தருமி விரைந்து ஓடிக்கோயில்புகுந்து இறைவனடி விழுந்து நிகழ்ந்ததை உரைத்து அழுது புலம்பினான். நாடிவரும் அடியவர்க்கு அருள்சுரக்கும் ஆலவாயண்ணல் தானே நன்பாட்டுப் புலவனாகத் தமிழ்ச்சங்கம் வந்து பாடலின் குற்றத்திற்கு விளக்கம் கேட்டு நின்றான். கழகப்புலவர் நக்கீரர் பாடல் குற்றமுடையது என்று கூற, இறைவனுக்கும் புலவருக்கும் கடுமையான சொற்போர் தொடங்கியது.

இறைவன் : என் பாட்டில் குற்றமென்ன கண்டீர்?

நக்கீரர் : பாட்டில் சொற்குற்றமில்லை; பொருட்குற்றமுண்டு.

இறைவன் : பொருளில் யாது குற்றம்?

நக்கீரர் : பெண்கள் கூந்தலுக்குச் செயற்கைமணம் உண்டேயொழிய இயற்கைமணம் ஒருபோதுமில்லை.

இறைவன் : சங்கினி பதுமினி ஆகிய உயர்ந்த இனப் பெண்கட்குக் கூந்தல்மணம் உண்டென்பது உமக்குத்தெரியாதா!

நக்கீரர் : அப்படி ஒன்றும் கிடையாது. நீர் சொல்வது முற்றிலும் தவறு.

இறைவன் : வானுலக மகளிர்க்கு உண்டென்பது உமக்குத் தெரியாது போலும்!

நக்கீரர் : அவர்கட்கும் வானுலக மலர்களைச் சூடுவதால் ஏற்பட்ட மணமேயன்றி இயல்பான கூந்தலுக்கு மணம் ஒருபோதும் கிடையாது. இல்லாததைச் செப்பலாகாது.

இறைவன்; உலகுபுரக்கும் உமையம்மையின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்பதையாவது ஒப்புக்கொள்வீரா?

நக்கீரர் : இல்லை; அப்படி ஒருபோதும் இல்லை.

இறைவன் : நான் யார் தெரியுமா?

நக்கீரர் : நீர் யாராயிருந்தாலும் சரி, மெய் மெய்யே.

ஆலவாய்க் கடவுள் அருள்பாலித்தல் :

இதனைக் கேட்டுச் சீற்றங்கொண்ட இறைவன் நெற்றிக்கண்ணைத் திறந்து காட்டினான். அது கண்ட நக்கீரர், நெற்றிக்கண் திறக்கினும் குற்றம் குற்றமே என்று முடிவாக உறுதியோடு சொன்னார். சொல்லவே, இறைவன் நுதல்விழிவழிவந்த தீ, நக்கீரர் மீது பாய்ந்தது. அதன் விளைவாக வெப்பம் தாங்க முடியாது நக்கீரர் பொற்றாமரைக் குளம் போய் அதில் வீழ்ந்து ஆழ்ந்தார். தமிழ்ப்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி வழக்காடிய இறைவன் மறைந்தான். உடனே ஆண்டுள்ள புலவர் பெருமக்கள் அனைவரும், இறைவன் அருள் விளையாடலை வியந்து கீரனைக் காப்பாற்றுவான்

வேண்டி இறைவனைத் தொழுது முறையிட்டனர். அடியவர்க்கு இரங்கும் அருட்கடலாகிய ஆலவாய் அவிர்சடைக் கடவுள் அருள்பாலித்து நக்கீரரைக் கரையேற்றினான். இலக்கண நூல்களை அகத்தியனிடம் வரன்முறையாகக் கற்றுத் தெளிகவென்று ஆண்டவன் கீரனார்க்குக் கூறி மறைந்தான்.

நடந்த வாதம் கூந்தலுக்கு இயற்கைமணம், உண்டா? இல்லையா? என்பதுதான். இறைவன் கூறியது கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டு, என்பது. புலவர் கூறியது கூந்தலுக்கு இயற்கைமணம் கிடையாது என்பது.



இறைவன் கூறும் மணம் மனத்தோடு தொடர்புடைய புலனால் உணர்வது. கீரர் கூறிய மணம் புறப்பொறியோடு தொடர்புடைய புலனால் அடைவது. கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல இன்பங்கள் அனைத்தும் இருநிலைபெறும். ஒன்று உள் நிலை. மற்றொன்று புறநிலை.

> "குழவி தளர்நடை காண்டல் இனிதே"
> (இனியவை நாற்பது)

குழவியின் தள்ளாடும் நடையால் பெற்றோர் பெறும் இன்பம் காட்சியின்பம்.

> "குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொற் கேளா தவர் —(குறள்)

பெற்றோர்க்குத் தம்மக்கள் மழலைச் சொற்கள் செவிப்புலனின்பம்பயப்பன.

> "அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்" —(குறள்)

மக்கள்தம் சிறுகைகொண்டு அளாவிய கூழ் அமிழ்தினும் சுவையுடையது. இது உண்டுணரும் இன்பம்.

> "மக்கள்மெய் தீண்டல் உடற்கு இன்பம்"
> —(குறள்)

இது உற்றறிந்துணரும் இன்பம். அது போலவேதான் உயிர்த்தறியும் இன்பமாகிய மணமும். தலைவியின் கூந்தல், தலைவனுக்கு மணம் தந்தது. அரசியின் கூந்தலில் மணமிருப்பதை மன்னன் உணர்ந்தான்; அதுவும் இயற்கையான மணத்தையே அறிந்தான். தாம் விரும்பும் தலைவிக்கு மணம் இயற்கையே என்பதை,

> "முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
> வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு"

என்ற குறள் எடுத்தியம்புகிறது. அழகை எடுத்துக் கூறுமுகத்தான் மணத்தைக் குறிக்க வெறிநாற்றம் என்றார் வள்ளுவர்.

புலனின்பங்கள் அனைத்தும் மனத்து வழித்துய்ப்பவர்க்கு ஒருவித இன்பமும், மற்றவர்க்கு வேறுவித இன்பமும் அளிக்கின்றன. பாண்டிய மன்னன் பெற்றது தனது மனைவியின் கூந்தலின் மணம். இஃது உணர்ந்துகொண்ட மணம். உள்ளத்தால் நினைக்க, நினைத்த இன்பம் மனத்தில் உருவெடுக்கிறது.

"வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்"

என்பது குறள்.

இறைவன் தன் திருவிளையாடல் மூலம் கீரனுக்கு மெய்ப்பொருள் உணர்த்தினான். நக்கீரர் இறைவன் பாடலில் பொருட்குற்றமிருப்பதாகக் கண்டார். நக்கீரர் பொருளை உணர்ந்ததில் தான் குற்றம் என்று இறைவன் எடுத்து விளக்கினான். அகநிலை, புறநிலை இவற்றை இறைவன் எடுத்து விளக்கிச் சொன்னான். இந்த இருவேறு நிலைகளை வேர்ட்ஸ்வொர்த் (Wordsworth) என்ற ஆங்கிலப் புலவரும் தமது டேபோடில்ஸ் (Daffodils) என்ற பாடலில் கூறியிருக்கக் காண்கின்றோம்.

"They flash upon the *inward* eye
Which is the bliss of solitude
And then my heart with pleasure fills
And dances with the Daffodils"

கவிஞர் முன்பு ஒருநாள் புறக்கண் கொண்டு கண்ட காட்சி, பின்பு உள்ளுதொறும் உள்ளுதொறும் கவிஞரின் அகக்கண்முன் தோன்றி அவருக்கு மகிழ்ச்சியூட்டுகிறது.

ஆலவாய்க்கடவுளுக்கும் கழகப் புலவர் நக்கீரருக்கும் சொற்போர் ஏற்பட்டு, இறைவன் தன் திருவிளையாடலை நிகழ்த்துவதற்கு ஏதுவாக அமைந்த பாடலே இறையனார் பாடிய குறுந்தொகைப் பாடல். இப்பாடல் குறுந்தொகையில் இரண்டாவது பாடலாக அமைந்துள்ளது.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயில்இயல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ யறியும் பூவே"

— இறையனார்



மாபெரும் குடமுழுக்கு

கி. பழநியப்பன், பி.ஏ., பி.எல்.,

அங்கயற்கண்ணி யம்மையுடன் அமர்ந்த ஆலவாயண்ணல் திருக்கோயிலில் 1963 ஜூன் 28 ஆம் நாள் மாபெரும் குடமுழுக்கு விழா நடைபெற்றது. ஒரு கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு மாபெரும் குடமுழுக்காக விளங்குமாயின் அக்கோயிலுக்கு நடைபெற்ற திருப்பணியும் மாபெரும் அளவில் நடைபெற்றிருக்கவேண்டும்.

மதுரை மீனாட்சி கோயிலில் 1959-63ல் நடைபெற்ற திருப்பணி, உண்மையில் எல்லா வகையிலும் ஒரு மாபெரும் திருப்பணியாகவே விளங்கிற்று. அழகிய சுதை வேலைப்பாடுகள் நிறைந்த 12 பெரிய கோபுரங்களும், 2 விமானங்களும் ஒரே காலத்தில் புதுப்பிக்கப்பெற்றமை, கோயில் வரலாற்றில் அதற்கு முன் நடைபெற்றிராத ஒரு நிகழ்ச்சியாகும். மேலும் திருப்பணி தொடங்கிய காலத்தில் கோபுரச்சுதை வேலையில் அனுபவம்பெற்ற ஸ்தபதிகள் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது. பரம்பரையாக அத்தொழிலில் ஈடுபட்டுவந்தவர்கள், அதில் போதுமான வருவாய் கிடையாததால், வேறு தொழில் துறைகளுக்குச் சென்று விட்டனர். அவர்களை எல்லாம் தேடிப் பிடித்து ஒன்றுசேர்த்துத் திருப்பணி வேலையில் ஈடுபடச் செய்தது, அன்னையின் அருளால் திருப்பணிக் குழுவிற்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.



பலர் நினைப்பதுபோன்று கோபுரங்களில் இருந்த பழைய உருவங்களையெல்லாம் அகற்றிவிட்டு, மனத்தில்தோன்றியவாறு புதிய உருவங்களை அமைத்து விட்டார்கள் என்பது முற்றிலும் தவறாகும். கோபுரத் திருப்பணி தொடங்குமுன், அதிலுள்ள ஒவ்வொரு சிற்பமும் புகைப்படம் எடுக்கப்பெற்றது; ஓவியர்களைக்கொண்டு தனித்தனியாக வரைபடங்களும் தயாரிக்கப்பெற்றன. அவைகளைக் கையில் வைத்துக்கொண்டுதான் ஸ்தபதிகள் வேலையைத் தொடங்கினார்கள்.

சுதை வேலைகள் முடிந்தபின் கோபுரங்களுக்கு வர்ணம் பூச வேண்டுமா? வேண்டாமா? என்றதொரு பிரச்னை எழுந்தது. அதுபற்றிப் பல நிபுணர்களின் கருத்துகள் கோரப் பெற்றன. தேசியக் கட்டிட ஆராய்ச்சிக் கூடம்-ரூர்கி; பழம்பொருள் ஆராய்ச்சித் துறை—சென்னை; காட்சிச்சாலை இயக்குநர்—சென்னை போன்ற நிறுவனங்களின் கருத்துகளும் தெரிந்துகொள்ளப் பட்டன. மேலும் பழைய சுதைகளைச் செப்பனிடும்பொழுது, அவைகள் ஏற்கனவே ஆதியில் வர்ணம் பூசப்பட்டவை என்பதற்கான அறிகுறிகளும் தென்பட்டன. நிபுணர்களும், வர்ணம் பூசுதல் சுதைகளுக்கு நல்ல பாதுகாப்பாகும் என்ற கருத்தைத் தெரிவித்தனர்.

கோபுரங்களுக்கு வர்ணம் பூசுவது என்று முடிவு செய்தபின் எத்தகைய வர்ணம் பூசுவது என்ற கேள்வி எழுந்தது. அத்துறையில் புகழ் பெற்ற விஞ்ஞான நிபுணர்களை அழைத்து, அவர்களுடைய கருத்துகள் கோரப் பெற்றன. அதற்காகச் சில இரசாயனங்கள் கலந்து தனியாகத் தயாரித்த வர்ணங்களைப் பூசுவதே சிறந்தது என்று அவர்கள் கூறினார்கள். அதன் பின் பிரபல வர்ண உற்பத்தியாளர்களை அணுகி அத்தகைய வர்ணங்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. அவர்கள், பளபளப்பானதும் சற்று அடக்கமானதுமான இரண்டுவகையான வர்ணங்களைத் தயாரித்து மாதிரிக்காகக் கொடுத்தனர். அவைகளைப் பயன்படுத்திப்பார்த்த பின்பே, அதுபற்றி முடிவு செய்ய வேண்டுமென்று குழுவினர் கருதினர். அதற்காக மேலை ஆடி வீதியில் உள்ள ஐந்துநிலைக்கோபுரங்கள் இரண்டில், ஒன்றிற்குப் பளபளப்பான வர்ணமும் மற்றொன்றிற்கு அடக்கமான வர்ணமும் பூசப்பெற்றன. பொதுமக்களின் கருத்தை அறிவதற்காக, அக்கோபுரங்களில் கட்டப்பெற்றிருந்த சாரங்களை நீக்கி அவை திறந்துவைக்கப்பெற்றன. கோயில் வழிபாட்டிற்கு வரும் பலதிறப்பட்ட மக்களிடம் இரண்டில் எது நன்றாக இருக்கிறது? என்று கேட்டு அவர்கள் கருத்துகள் திரட்டப்பெற்றன. பெரும்பாலோர் பளபளப்பான வர்ணத்தையே விரும்பினர், அதன் பிறகே எல்லாக் கோபுரங்களுக்கும் பளபளப்பான வர்ணம் பூசப்பெற்றது.

அடுத்துக் கோயில் மேல்தளத்தை எவ்வாறு செப்பனிடுவது? என்பது ஆராயப்பெற்றது. தமிழக அரசின் தலைமைப் பொறியாளர் இதற்கு ஒரு தக்க முறையைக் கூறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அரசாங்கத்தின் அனுமதியுடன் அவர் தம் சகாக்களுடன் வந்து மேல்தளத்தில் பல பரிசோதனைகள் நடத்திப் பார்த்துக் கீழ்க்கண்ட கருத்தைத்தெரிவித்தார்.

1) ''மேல் தளத்தை அரையடி அல்லது ஓரடி இடித்துவிட்டு அந்த அளவிற்குப் புதிதாகத் தளம் போடலாம்; ஆனால் இடிக்கும்பொழுது தளத்தைத்தாங்கிநிற்கும் பழைமையான கற்கள் அதிர்ச்சியைத்தாங்காமல் உடைந்துவிடக்கூடும். (2) இருக்கும் தளத்திற்கு மேலேயே தளம்போடுவது மற்றொரு வழி; அதுவும் ஆபத்தானதே, கூடுதலான பாரத்தைப்பழைய கற்கள் தாங்கும், என்று உறுதியாகக்கூற முடியாது. (3) ஆகவே அதிக கனமில்

லாத, இதற்கென்றே தயாரிக்கப்படும் ஒருவகைத் தார்ச் சாக்குகளைத் தளத்தின்மேல் விரித்து அதன்மேல் சலித்த மணலைப்பரப்பிக் கட்டி செய்வதே சிறந்த முறையாகும். 20 வருடங்களுக்குப் பழுது ஏற்படாது'' என்பதே அவர்கள் கூறிய கருத்து. அக்கருத்துப் படி அத்தகைய தார்ச்சாக்குகளைத் தயார் செய்யும் பம்பாய் நிறுவனம் ஒன்றின் பொறியியலர் மேற்பார்வையில் அவ்வேலை நடைபெற்றது

இவ்வாறு திருப்பணியின் ஒவ்வொரு வேலையும், அவ்வத்துறைகளில் அனுபவமும் பயிற்சியும் பெற்றவர்களின் கருத்துகளை அறிந்தே நடைபெற்றது. 23 இலட்ச ரூபாய் செலவில் நடைபெற்ற இத்திருப்பணி, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே திருவருளால் செவ்வனே நடைபெற்று முடிந்தது. நான்கு ஆண்டுகள் எவ்வித மான தடங்கலும் இல்லாது தொடர்ந்து நடைபெற்ற இப்பணியில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான ஆண், பெண் தொழிலாளர்களில் ஒருவருக்கேனும் ஒரு சிறு விபத்தும் ஏற்படாமல் நடைபெற்றது அன்னையின் அருளே என்று கூறவேண்டும்.

திருப்பணி வேலைகள் முடிந்து குடமுழுக்கு விழாவிற்கு நாள் குறிப்பிடப் பெற்றது. அதற்கு ஏறக்குறைய 3 இலட்ச ரூபாய் செலவாகும் என்பது மதிப்பீடு. அதற்கான நிதி திரட்டும் முயற்சியில் திருப்பணிக்குழு ஈடுபட்டது. தெய்வபக்தியில் சிறந்த சில தனவந்தர்கள், குடமுழுக்கை நடத்தும் பொறுப்பை முற்றிலும் தங்களிடம் விட்டுவிட்டால், தாங்களே பொருள் திரட்டி அதை நடத்துவதாகக் கூறினர், ஆனால் திருப்பணிக்குழுவினர் அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை; 23 இலட்ச ரூபாய்நிதி திரட்டித் திருப்பணி செய்து முடித்துவிட்டு, 3 இலட்ச ரூபாய் திரட்டிக் குடமுழுக்கை நடத்தாது, பிறரிடம் அப்பொறுப்பை விடுவது சரியன்று என்று கருதினார்கள். மக்களும் இக் கருத்தையே கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரைத் திருக்கோயில் தோன்றியது முதல் பல குட முழுக்குகள் நடைபெற்றுள்ளன. ஆனால் பதினான்கு கோபுரங்களும் செப்பனிட்டு, அவைகளுக்கு ஒரே நேரத்தில் குடமுழுக்குச் செய்ததாக வரலாறு இல்லை. அத்தகைய ஓர் அரிய நிகழ்ச்சி 1963 சூன் 28 ஆம் நாள் நடைபெற்றதால் அதனை 'மாபெரும் குடமுழுக்கு' என மக்கள் போற்றியது மிக மிகப் பொருத்தமாகும்.

குடமுழுக்கு நடைபெறும்பொழுது விக்கிரகங்களைப் பீடங்களில் இணைப்பதற்கு மந்திரத் தகடுகள், பொன் முதலியன வைத்து மருந்து சாத்துவது மிக முக்கியமும் நுட்பமுமான பணியாகும். அம்மருந்து தயாரிப்பதில், அகில உலகிலும் தர்மபுர ஆதீனத்தார்கள் மிகவும் கைதேர்ந்தவர்கள் என்று புகழ் பெற்றவர்கள். மதுரைத் திருக்கோயிலுக்கு வேண்டிய மருந்துகளைத் தயாரிக்கும் பொறுப்பு தருமபுர ஆதீனகர்த்தர் அவர்களிடமே ஒப்படைக்கப்பெற்றது. அதுபோன்று மருந்து சாத்துவதில் அனுபவம் பெற்றவர்கள் நகரத்தார் சமூகத்தினர் என்று புகழ் பெற்றிருந்தனர். அதனால் திருக்கோயிலிலுள்ள எல்லா மூர்த்தி

களுக்கும் மருந்து சாத்தும் பொறுப்பு அனுபவம் மிக்க நகரத்தார் நண்பர்களிடமே ஒப்படைக்கப்பெற்றது. அவர்களும் அப்பணியைச் சிறப்பான முறையில் செய்து முடித்தனர்.

குட முழுக்கு விழாவிற்கு ஏறக்குறைய 10 இலட்சம் மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்ததால் வந்தவர்கள் யாதொரு சிரமமுமில்லாது கண்டுகளிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பெற்றன. வடக்கு ஆடி வீதியின் கீழ்க்கோடியில், பதினாறுகால் மண்டபத்திற்கு வடபுறம், ஆயிரக்கால் மண்டபத்திற்கு மேல்புறம் உயரமான திடல் அமைத்து அதில் பிரமாண்டமான யாகசாலை நிறுவப்பெற்றது. எட்டு வரிசையில் மக்கள் யாகசாலையை வலம்வரச் சுற்றிலும் அகலமான பாதைகள் அமைக்கப்பெற்றன. முன்புறம் 20 ஆயிரம் பேர் அமர்ந்து யாகங்கள் நடைபெறுவதைப் பார்ப்பதற்கு அலங்காரக் கொட்டகை போடப்பெற்றிருந்தது. யாகசாலையின் ஒரு மருங்கில் 100 அந்தணர்கள் வடமொழி வேதங்கள் நான்கையும் இடைவிடாது ஓதுவதற்கு நான்கு அரங்குகள் அமைக்கப்பெற்றிருந்தன. அது போன்று மற்றொரு மருங்கில் நால்வர் பாடல்களான தேவாரம் திருவாசகங்களை ஓத 100 ஓதுவார்களுக்கு நான்கு அரங்குகள் அமைக்கப்பெற்றன. ஒரே விழாவில் ஒரே இடத்தில் கூடி 100 ஓதுவார்கள் தேவாரப் பாடல்களைப் பண்ணுடன் இசைத்தது, அதுவரை எங்கும் கண்டிராத ஓர் அரிய காட்சியாக இருந்தது.

காஞ்சி காமகோடிபீட ஆச்சாரிய சுவாமிகள் புதுப் பெரியவர்களுடன் வருகை தந்தார். திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மதுரை ஆதீனகர்த்தர்கள் எழுந்தருளினர். சென்னை, கேரள ஆளுநர்களும் பல அமைச்சர்களும் வந்திருந்தனர். குடியரசுத்தலைவர் திரு. இராதாகிருஷ்ணன் வருவதாக இருந்தார். ஆனால் கடைசி நிமிடத்தில் உடல் நலமின்மை காரணமாக அவரால் வர இயலவில்லை. சிறப்பு அழைப்புப் பெற்ற விருந்தினர்களும் பொதுமக்களும் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், மலேயா, இலங்கையிலிருந்தும் வந்திருந்தனர். அனைவரும் மேல்தளத்தில் அவரவர்களுக்கு ஒதுக்கப்பெற்ற இடங்களில் சென்று அமர்வதற்கு நான்கு இடங்களில் உறுதியான படிக்கட்டுகள் செங்கல்—சிமிண்டால் கட்டப்பட்டிருந்தன.

குறிப்பிட்ட நேரத்திற்கு அரை மணிக்கு முன்பே, பட்டுப்பீதாம்பரங்களும், உருத்திராட்ச மாலைகளும் அணிந்த ஆதி சைவர்கள், கும்பத்துடன் 14 கோபுரங்களிலும் ஏறித் தயாராக இருந்தனர். வேதபாராயணத்தையும் தேவார இன்னிசையையும் ஒலிபெருக்கிகள் எங்கும் பரப்பிக் கொண்டிருந்தன. மக்களும் இசையில் ஆழ்ந்து மெய்ம்மறந்து அமைதியாக அமர்ந்திருந்தனர். குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் மாநிலக் காவல்துறைத் தலைவர் ஒரு கைத்துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டார், வெடிச்சத்தத்துடன் அத் துப்பாக்கியிலிருந்து பச்சை நிற நெருப்புப் பந்தமொன்று வானை நோக்கிச் சென்றது. அதைக்கண்டவுடன் மங்கல வாத்தியங்கள் முழங்கின. ஹரஹர என்று இலட்சோபு

லட்சம் பக்தர்கள் எழுப்பிய குரல் (ஒலி) வானைப்பிளந்தது. 14 கோபுரங்களிலும் குருக்கள் கும்பநீரைக் கலசங்களில் அபிஷேகம் செய்தனர். அதைக் கண்ணுற்ற மக்கள் பேரானந்த வெள்ளத்தில் மூழ்கினர்; வாழ்க்கையில் பெரும்பேறுபெற்றதாக எண்ணி வீடு திரும்பினர்.

பொதுவாகக் குடமுழுக்கு விழாவுடன் திருப்பணிக்குழுவின் வேலைகளும் முற்றுப்பெறும். ஆனால் மதுரையில் அதற்குப்பின்னும் 10 ஆண்டுகள் திருப்பணிக்குழு செயல்பட்டு வந்தது. அப்பொழுது அது மேற்கொண்ட பணிகளில் சில கீழே காண்பனவாகும்.

1) கோயிலின் தட்டுமுட்டுச் சாமான்களும், வௌவால்களும் அடைந்திருந்த ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு கலைக்கூடம் அமைத்தது. அக்கலைக்கூடம் இன்று பெருவாரியான வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கின்றது; தமிழர் சிற்பக் கலையையும் சமயக் கருத்துகளையும் நன்கு விளக்கக்கூடிய வகையில் கலைக்கூடம் அமைக்கப்பெற்றுள்ளது. அதன் மூலம் இன்று, நாள் ஒன்றிற்குச் சராசரி கோயிலுக்கு ரூ. 300/- வருவாய் வருகின்றது.

2) 12 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் அருச்சனைப் புத்தகங்கள் வெளியிட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பெற்றன. கூட்டுவழிபாட்டு முறையில் தினசரி காலை ஏழு மணிக்குச் சந்நிதியில் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் அமர்ந்து இலட்சார்ச்சனை நடத்துதல் இன்றும் தொடர்ந்து அன்றாட நிகழ்ச்சியாக நடந்து வருகின்றது.

3) பாண்டிய நாட்டில் சைவ நெறியை நிலைநிறுத்திய பாண்டிமாதேவிக்கும், அமைச்சர் குலச்சிறையார்க்கும் ஒரு நினைவுச்சின்னம் எழுப்பியது. ஆயிரக்கால் மண்டபத்திற்கும் கலியாண மண்டபத்திற்கும் இடையேயுள்ள இடத்தில் முழுவதும் சிமிண்டினால் கட்டப்பெற்ற ஓர் அழகிய மண்டபமே அச்சின்னம். தற்காலக் கட்டடக் கலையைக் குறிப்பதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அது சிமிண்டினால் கட்டப்பட்டது.

4) அம்மன் கோயில் உட்பிரகாரத்திலிருந்து இரண்டாம் பிரகாரத்திற்கு வருவதற்கு ஒரு பாதையும், இரண்டாம் பிரகாரத்திலிருந்து சுவாமி கோயில் வெளிப் பிரகாரத்திற்குச் செல்ல ஒரு பாதையும் திறந்துவிடப் பெற்றன. முதலில் அவைகளைத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சிலரும், இன்று அதன் பயனைக்கண்டு பாராட்டுகின்றனர்.

5) கோயில் வரலாற்றுநூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டதுடன், ஒவ்வொரு கோபுரவாயிலிலும் அக்கோபுரம் பற்றிய குறிப்புகளைக் கொண்ட கல்வெட்டுகள் பதிக்கப்பெற்றன.

6) கோயிலில் எந்தப் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியையும் கோயிலினுள்ளும், சித்திரை வீதியிலும் எங்கிருந்தாலும் கேட்கும்படியாக ஒலி பெருக்கி நிலையம் அமைக்கப்பெற்றது.

7) திருப்பணிக் குழுவின் இறுதிப் பணியாயினும் தலைசிறந்த பணி, மதுரை அரசி மீனாட்சிக்கு 14 இலட்ச ரூபாயில் ஒரு சிறந்த வைரக்கிரீடம் செய்து, 11—12—72-ல் சூட்டி மக்கள் அனைவரையும் மகிழ்வித்ததேயாகும்.

உ

வடபழநி அருள்மிகு ஆண்டவர் திருக்கோயில்

வடபழநி, சென்னை-26.

தொலைபேசி: 421676

திருமுருகன் தலங்களுள் தொன்மை வாய்ந்த தென் பழநியில் பழநியாண்டியாகவும், சென்னை, வடபழநியில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளித்துக்கொண்டு கலியுக வரதனாய் எழுந்தருளியிருப்பவர் வடபழநி ஆண்டவர். வடபழநி ஆண்டவருக்கு வைகாசியில் விசாகப் பெருவிழா, கந்தசஷ்டி பெருவிழா, பங்குனி உத்திர பெருவிழா முதலியவை இவ்வாலயத்தில் முக்கிய விழாக்களாகும். கந்த சஷ்டி, பங்குனி உத்திர பெரு விழாக்களில் இலட்சார்ச்சனைகள் மிக விமரிசையாக நடைபெறும். மாதாந்திர கிருத்திகைக்கும், ஆடி, கார்த்திகை மற்றும் தை மாதங்களில் விசேஷ கிருத்திகைக்கும் பெருவாரியான பக்தர்கள் தரிசனத்திற்காக வருகிறார்கள். பிரதி தினமும் ஆண்டவனுக்குச் சந்தனக் காப்பு, விபூதி, பஞ்சாமிர்த அபிஷேகம், பால் அபிஷேகம் முறையே ரூ. 101/- ரூ. 31/- ரூ. 10/- கட்டணங்களில் செய்யப்பட்டுகின்றன. திருமணங்கள் அதிக அளவில் நடைபெறுகின்றன. திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணிக்கு நிதி உதவி அளிப்பவர்கள் "நிர்வாக அதிகாரி" முகவரிக்கு அனுப்பி வடபழனி ஆண்டவர் அருளுக்குப் பாத்திரராகுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அறங்காவலர் குழு:

திரு. வி. டி. முனுசாமி செட்டி
திரு. ஏ. எஸ். இராமன்
திரு. லீ. பாலகிருஷ்ணன்

சி. வீ. இராசாராம், பி.ஏ., பி.எல்.,
நிர்வாக அலுவலர்.

மதுரைக் கும்பாபிஷேகம் சிவப்பிரபாவம்


தெ. தெக்ஷிணாமூர்த்தி பட்டர்

மதுரைக் கும்பாபிஷேகம் என்று சொன்னால் அது மதுரக் கும்பாபிஷேகம் என்று பொருள்படும். அஃதாவது அழகான குடங்களால் நீராட்டுதல் என்று பொருள். நீராட்டுதல் கடவுளுக்கே. எங்கும் பிரகாசமாய், ஆனந்த பூர்த்தியாகி, ஆன்ம கோடிகளுக்கும் அபூதமாய் இருந்து ஆண்டருள் புரிபவன் கடவுள்.

''உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முரு விறந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நத்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு நாமோ''.

மூர்த்தி பேதங்கள்

''கல்லாலின் புடையமர்ந்து நான் மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்க ளல்வர்க்கும் வாக்கிறந்த பூரண



மாய் மறைக்கப்பாலா, யெல்லாமாயல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்வாம்'' என்றபடி ஆன்மாக்கள் உஜ்ஜீவனார்த்தம், மூர்த்தி, தலம், தீர்த்தமாயும், குருலிங்க சங்கமமாயும்,

அடியாருள்ளக் குறிப்பிற் கேற்கப், பல்வேறு வடிவங்களாயும் திருவுருக்கொண்ட மூர்த்த பேதங்களும், லீலா வைபவங்களும், திருவருட்பிரபாவங்களும் அதிகமாகும். அனந்த திருவுருவங்களைப் பூண்டு கடாக்ஷிக்கப் புறப்பட்டு ஷெ பரார்த்தங்களையடையும் படிக்கு, அவைகளைத் தெரிந்து அனுபவிக்கத் தக்க விவேகத்தையும், அறிவிற் கெட்டாவிடத் தறிந்து நடக்குமாறு வேதாதி கலைகளையும், அக்கலைகளில் சந்தேகந் தோன்றிய விடத்தில் தெரியுமாறு ஆசார்ய பீடங்களையும், இன்னும் உலகிற்காதாரமான எவ்வகைப் பொருள்களையுமளித்து, ஆன்மாக்களுள்ளந்தோறும் அபூதமாயிருந்தும், ஆன்மாக்கள் உணராவிடத்துத்தாமே, அவரவர்க்கது வாயுமிருந்த திருக்கோலங்களே மூர்த்த பேதங்களாகும்.

மதுரைக் கோயில் வரலாறு

அப்பேர்ப்பட்ட மூர்த்தங்களைக் கொண்ட ஹாலாஸ்ய க்ஷேத்திரம் என்று சொல்லப்பட்ட மதுரையம்பதியில் அரசு செய்பவர் மீனாக்ஷிசுந்தரேஸ்வரராவர். அப்பேர்க்கொத்த மீனாக்ஷி சுந்தரேஸ்வரருக்கு வருகிற ஆனி மாதத்தில் நடைபெறவிருப்பது கும்பாபிஷேகம் என்று சொல்லுகிற குடமுழுக்கு விழாவாகும். அக்கும்பாபிஷேகமும் பதினெண் கிரியையோடு கூடியதாகும். மேற்படி கும்பாபிஷேகமும் ஆகம சாஸ்திர முறைப்படி செய்வதாகும். த்வாதசாந்த க்ஷேத்ரம் என்று சொல்லுகிற மதுரையம்பதியில் 1-ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரை சாஸ்திர ரீதியிலும், அப்போதைக் கப்போது ஏற்பட்டிருக்கிற இடையூறுகளைத் தவிர்த்தும், முகமதியர் ஆட்சிக் காலமுதல் இன்றுவரை சட்டதிட்ட வட்டங்களுடனும் பூஜைகளும் விழாக்களும் நடந்துகொண்டிருக்கின்றன. நாயக்கமன்னர் காலத்தில் சாஸ்திர ரீதிக்கு எதுவும் முரண்பாடானது இல்லாது நடந்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மதுரையில் முதன் முதலில் கோயிலையும் நகரத்தையும் அமைத்துக் கோயில் பூஜை முதலிய வழிபாடுகளை நடத்துவதற்கென ஏற்பாடுகள் செய்து, நிர்வாகம் ஆறு பேர்களிடம் இருந்து வந்தும் அன்றும் இன்றும் பல மாறுதல் ஏற்பட்டுத் தவிர்த்தும், அவை முறைப்படி நடந்து வந்துள்ளன. ஆறுபேர் நிர்வாகங்களில் சுந்தரபாண்டிய பிரமாதிராயர் பூஜா காரியமும், தேவகாரியமும், மனுநீதி கண்ட பிரமாதிராயர் பிரதான மூர்த்திகளின் இரண்டு சன்னிதிகளில் பரிசாரகமும் செய்துவந்தவையே தற்சமயமும் நடந்துகொண்டு வருகின்றன என்பது அன்பர்கள்அறிந்த விஷயமாகும்.

மதுரைக் கும்பாபிடேகங்கள்

சிவன், சக்தி என்ற இரண்டின் இணைப்பைச் சேர்ப்பதற்கு எட்டுவித மருந்து வகைகளாலும், கிரியா ரூபமாகவும், மந்திர ரூபமாகவும் குடங்களை வைத்து இளங்கோயில் (பாலாலயம்) எழுந்தருளி அதன் பிறகு அபிஷேகம் செய்வதே கும்பாபிஷேகம் என்று சொல்லும் குட முழுக்கு விழாவாகும். இதற்கு முன் கும்பாபிஷேகம் செய்ததாகக் குறிப்பொன்றும் கிடைத்ததாகத் தெரியவில்லை என்று சரித்திர ரீதியில் தெரியவருகிறது. கி. பி. 1708ல்

விஜயரெங்க சொக்கநாதர் காலத்தில் சுந்தரேஸ்வரருக்கு மட்டும் அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது. அதன்பிறகு கி. பி. 1877ல் ஏழு கோவில் நகரத்தார்களாலும், கி. பி. 1923-ல் கோவில் ரிசீவராக இருந்த முத்து. கரு. வெ. அழகப்ப செட்டியார் அவர்களாலும், 1963-ல் தமிழ்வேள் பி. டி. இராஜன் அவர்கள் தலைமையிற் கூடிய குழுவினராலும் நடந்ததைத் தவிர வேறில்லை. தற்சமயம் குழுத் தலைவர் அவர்களுடைய தலைமையிலும் இறைபணியாளர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் முயற்சியாலும் நடைபெற விருக்கிறது என்பது அன்பர்கள் அறிந்த செய்தியாகும்.

கும்பாபிஷகம் செய்வது என்பது எளிதான காரியமாகாது. பூர்வ ஜன்ம நிகுதி இருந்தால்தான் நடத்த முடியும் என்பது சாஸ்திர சம்மதமாகும்.

ஆகமங்கள்

ஆகமங்கள் இருபத்தெட்டு. அவை: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்ம், சகஸ்ரம், அம்சமான், சுப்ரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சர்வோத்தரம், பாரமேஸ்வரம், கிரணம், பேதம், வாதுளம் என்பவைகள். இவ்விருபத்தெட்டும் சகுண கிரியா மார்க்கங்களை விசேஷமாய் நிருபிக்கும். இவ்விருபத்தெட்டினுள், காமிகம் முதல் அஜிதம் வரை ஐந்தும் கௌசிக முனிவர்க்காகவும், தீப்தம் முதல் சுப்ரபேதம் வரை ஐந்தும் பாரத்வாஜ முனிவர்க்காகவும், ரௌரவம் முதல் விபவம்வரை ஐந்தும் கௌதம முனிவர்க்காகவும், புரோத்கீதம் முதல் வாதுளம் வரை எட்டும் அகஸ்த்யமுனிவர்க்காகவும், ஈஸ்வரரால் கூறியருளப்பெற்றன, அவைகளில் காமிகம், காரணம் முதலிய ஆகமங்களால் கூறப்படும் கிரியா மார்க்கமே கும்பாபிஷேக விஷயம் ஆகும். அதில் கூறப்பட்ட சமயம் சைவ சமயமே. சைவம் என்பது சுத்தம் எனினும் சிவபெருமானைப்பற்றிய வைகளையும் இலக்ஷணங்களையும் சொல்லி வழிபடுவோர்களைக் குறிப்பதேயாகும். இவர்கள் விபூதி ருத்ராக்ஷ காவ்யாதிகளை அணிந்து வேதாகம நெறியே வழிபட்டிருப்பவர்கள். அதில்,

ஆகமநெறியாகச் சொல்லும் சமயம்	7
சாங்கிஷத்தோடு அஷ்டாவதானம்	8
இதில் பேதமாயுள்ளது	16
புறச் சமயம்	3
பாட்டன் முதலிய சமயம்	38
பாஷண்டபதம்	90

அவற்றுள் சைவம், சிவாத்விதம், சம்மேளனம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் இவைகள் அஷ்ட சைவம். சைவபேத மாயுள்ளது ஊர்த்வ சைவம், அனுதி சைவம், ஆதி சைவம், மகாசைவம், சைவம், அபேத சைவம், அந்தர சைவம், குணசைவம், நிர்க்குண சைவம், அத்வாசைவம், யோக சைவம், ஞான சைவம், அவாந்தர சைவம், கிரியா சைவம், சுத்த சைவம், நாலுபாத சைவம், பேத சைவம் என்னும் பதினுறு சைவமாம். இவையன்றி அஷ்ட வாமாவது, சிவசமவாதி, ஐக்கிய வாதி, சங்கிராந்தவாதி, பிரவாகேஸ்வர வாதி, காபாலிகவாதி, அவிகாரரவாதி, பேதாபேத வாதி, அநேகேஸ்வரவாதி என்பனவாம். வேதாங்கீசாரமான வைதீகத்திற் பேதமானது நியாயம்,

வைசேஷிகம், மீமாம்சம், சாங்க்யம், வைணவம், பாட்டம், பிரபாகரம், வியாகரணம். இவ்வெட்டுடன் அன்றி மாயாவாதம், பாஸ்கர்யம், சப்தபிர்மவாதி, புராணிகன் என்பனவாம். மேற்சொன்ன சப்த சைவங்களுள் சைவத்தின் பகுதியே சப்தவிதமாயிருக்கின்றது. அவை அனுதி சிவம், ஆதிசைவம், மகாசைவம், அனுசைவம், அவாந்தர சைவம், பிறவாசைவம், அந்தரசைவம், என்ற ஏழுவிதமாயிருப்பதால்,

1) சிவனே அனுதிசைவன்.
2) சிவபெருமான் முகம் ஐந்தில் தீக்ஷிதரான சுகாதி ரிஷிகளே ஆதி சைவர்கள்.
3) ருஷிகளின் கோத்திரரும் தீக்ஷிதருமான சிவதத்வங்களை அனுஷ்டிப்பவர்களே மகா சைவர்கள்.
4) சிவ சம்ஸ்காரங்களை அனுஷ்டிப்பவர்களான க்ஷத்திரியர்களே அனு சைவர்.
5) சைவதீக்ஷா சம்பன்னரான ப்ரேஷ்யகாரர்களே அவாந்திர சைவர்கள்.
6) சைவதீக்ஷா சம்பன்னரான அம்பரிஷ்டுலாவாதிகளே பிறவா சைவர்.
7) தீக்ஷாவிதாரவைர்களே அந்தர சைவரென்று ஆகமங்கள் சொல்லுகின்றன.

சிவபெருமான் முகம் ஐந்தில் தோன்றித், தீக்ஷிதரான சுகாதி ரிஷிகளான ஆதி சைவர்கள்மட்டுமே பரார்த்தாலாய பூஜைக்கு அருகதை உள்ளவர்கள். வேறு எவருக்கும் அதிகாரம் கிடையாதென்றும்; மற்றவர்கள் ஆத்மார்த்த பூஜைக்கு அருகதை உள்ளவர்கள் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

ஆதலால் வரப்போகும் கும்பாபிஷேகத்தில் ஈசன் முகத்தில் தோன்றிய தீக்ஷிதர்களாகிய ஆதிசைவப் பெருமக்கள் பல இடங்களிலிருந்து வந்து கலந்துகொண்டு நடத்திவைப்பது மீனுக்ஷி சுந்தரேஸ்வரருடைய அருளேயாகும். அதில் அனுக்ஞை, விக்னேஷ்வர பூஜை, வாஸ்து பூஜை, மிருத்சங்கிஹணம், ரக்ஷாபந்தனம், கிரஹமகம், கிராமசாந்தி, ப்ரவேச பலி, ரக்ஷோக்நஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், திசாஹோமம், கலாகர்ஷணம், யாகசாலாப்ரவேசம், யாக பூஜை, அஷ்டபந்தனம், பிம்பசுத்தி, திரிகண்ட ஸ்பர்சாகுதி, யாத்ரா தானம், கும்பாபிஷேகம், மஹாபிஷேகம், முதலானவைகள் விரிவாக நடத்தத் தர்ம கர்த்தாக்குழுத்தலைவர்களும், நிர்வாக அதிகாரிகளும் ஏற்பாடு செய்வது சாலச்சிறந்ததாகும்.

தவிர எல்லா க்ஷேத்திரங்களைக் காட்டிலும் த்வாதசாந்தமான மதுரையம்பதியானது மீனுக்ஷி பீடமாகவும், ச்யாமள பீடமாகவும் விளங்கிவருகிறது யாவரும் அறிந்த விஷயமாகும். ஏனெனில் மீனுக்ஷி சுந்தரேஸ்வரர் தேவ மானுடர்கட்குத் திருவருள் செய்யத் திருவுள்ளங்கொண்டு இக்கலியுகத்தில் சிவபெருமானுக்குள்ள சின்னங்கள் இவ்வளவுதானே என்று கூறுதற்கடங்காது, அடியார் வீஷ்டப்ராப்தராக, மாணிக்கம் விற்கச் செட்டியாராகவும், வைகை அடைக்க ஒட்டராகவும், விறகு

சுமந்து வில்லியர் போலவும், மாமனுக வந்து தவசி போலவும், அரசாள மன்ன ராகவும், அருச்சுனனுக்காக வேடராக வும், எல்லாம் வல்ல சித்தராகவும், கௌரி என்பார்க்கு விருத்த வேதிய ராகவும், சிரகிரியில் மருத்துவச்சியாக வும், பன்றிக் குட்டிகளுக்காகப் பன்றி வடிவாகவும் தனக்காகத் தூதுவராக வும், திருமால் மச்சாவதாரத்தில் வலைஞராகவும், தமிழ்ச் சங்கத்திற்குப் புலவராகவும், பிர்ம விஷ்ணுகளுக்காக மலைவடிவாகவும், பிரபுலிங்க லீலையில் மத்தளம் வாசிப்பவராகவும், வளையல் விற்பார் போலவும், சிறுத்தொண்ட ரிடத்து ஜங்கமராகவும், தாருகா வனத்தில் அதிதியைப் போலவும், யோகியாயும், முனிவராயும், குதிரை யோட்டியும், ஓலை காட்டியும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும், சோறளித் தும், ஆசாரியராயும், சிஷ்யராயும் திருவுருவங்கொண்டு அவரவர்கள் இஷ்டம்போல் வேண்டிய போகங்களை அளித்தும் இடுக்கண்களை ஒழித்தும் எல்லாச் சித்திகளையும் உதவியவர், ஒப்புயர்வில்லாத சிவனேயாவர்.

ஆனதால் எம்பெருமானுக்கு எல்லாம் சொந்தமேயாயினும் ஒன்று மில்லாதவரேயானதால் அறிஞர்கள் உலகமெல்லாம் இறைவனின்றி வேறில்லை, உலகத்திலுள்ள சமயங்கள் எல்லாம் இறைவனையே குறிக்கும் என்பர். மீனாக்ஷி சுந்தரேஸ்வரர், பிண்டிகை சக்தியும், லிங்கம், சிவமு மாகும். எனவே கிரியா ஞான சக்தி ஸ்வரூபம் சிவலிங்கம் எனப்படும். ஆதலால் எல்லாவற்றிற்கும் காரண ரூபமாயுள்ளது அது. (லிங்-லயம், கம்-தோற்றம்) சிவபெருமான், புறத்தே சிவலிங்க முதலிய திருமேனிகளுங் குருவுஞ் சங்கமும் ஆதாரமும் ஆகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக் கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டு அருளுவர் ஆனதால், சங்காரகாலம் வரையும் சாந்நித்யராய் இருந்து ஆன் மாக்களுக்கு அனுக்கிரஹிக்கும்படி செய்வார் என்பதில் ஐயமே இல்லாத தால் இக்குடமுழுக்கு விழா அவசியம் செய்யவேண்டியது.

"விரிவிலா அறிவிஞர்கள் வேறொரு
சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற்
கேற்ற தாகும்"
"கோடி மறைகளினுங் கூறரிய
வான்பொருளைத்
தேடி யறியுந் திடமெங்கே—நாடகத்தா
லவனேநா மாகியறிவ ரவரே
சிவமென்பார் வேறில்லை தேர்"

என்று கூறப்பட்டதால் இறைவரது திருவுருவங்களையும் திருச்சின்னங்களை யும் கூறுது, இவ்வளவிலேயே விட்டு அவரது சைவசமயக் கொள்கையே கடைப்பிடிப்போமாக. ஹிந்து மதத் திற்குப் பிரதானமாக விக்ரஹ ஆரா தனைகள் ஆகமங்களில் அதிகமாக இருப் பதால் அவ்விக்ரஹங்களுக்கு அடிக்கடி கும்பாபிஷேகங்கள் செய்தால் தான் சான்னித்யங்கள் ஏற்படும். மனுஷ்ய மானத்தில் 12 வருஷமாகத் தெரியும். தேவமானத்தில் 12 நாளேதான்.

சொக்கேசன் அருளும் தருமை பிறந்த வரலாறும்

அ. கல்யாணசுந்தர தேசிகர்

''உன்னைச் சிங்காரித்து உனது அழகைப் பாராமல் என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன்......அன்பிலேற்கு உன் தாள், தருகுவையோ சொக்கநா தா'' என்று தாம் செய்யும் தவறுணர்ந்து அவன் திருவருள் வேண்டி ஏங்குகிறது ஓர் அருளுள்ளம். அதே அருளுள்ளம் சொக்கநாதரையே நோக்கித் ''தேவரீர் இம்மாமதுரையின் மாமன்னர்; இம் மதுரையிலே திருவிளையாடல்கள் பல புரிந்துள்ளீர்; அவற்றிலே சிறப்பாகக் கொள்ளத்தக்கதும் அருமையானதும் 'எல்லாம் வல்ல சித்தராக' வந்து நிகழ்த்தியதுதான். தேவர்களும் நல்லவர்களும் தொழுதேத்தும் மதுரைக்குத் தலைவராக உள்ள தேவரீர், உம்மையே நினைத்துருகும் அன்பர்களுக்கு அருள் புரிவதல்லால் வன்பருக்கு துன்மார்க்கர்க்கு அருள்புரியமாட்டீர். அப்படியானால் தேவரீரை எல்லாமும் வல்ல சித்தர் என்று புகல்வது ஏன்? அது எவ்விதம் பொருந்தும்? எல்லாம் வல்ல சித்தர் என்றக்கால் என்னுடைய பொல்லாக் கருத்தை அகற்றப் போகாதோ?'' என்று வினா எழுப்பியது.

எல்லாம் வல்ல சித்தர்

சொக்கநாதர் திருவாய் மலர்ந்து விடை சொல்லவில்லை. சொல்லாமற் சொல்லி விளங்கவைக்கும் சித்தரல்லரோ அவர்? ஆகவே வினாக்களை எழுப்பிய அவ்வுள்ளத்தே ஒரு தெளிவையும் உண்டு பண்ணினார் அவர். அந்த அருள் உள்ளம் அமைதி கண்டது. அத்தெளிவுக்கு இவ்வினா எழுப்பிய திருவுள்ளத்திற்குடைய அந்த அடியவரையே கருவாக ஆக்கிக் காட்டினார். அவரையே; சிந்திக்க வைத்தார். ''என் போலே மல கடினர் எவ்விடத்தும் கண்டதுண்டோ? அன்பு ஏதும் இல்லாத எனை ஆண்ட எண்ணத்தால், இன்பே, மதுரைக்கு இறைவரே, தேவரீர் நீர் எல்லாம் வல்ல சித்தரே! சிறிதும் ஐயுறவு கொள்ளுவது பொருந்தாது;

நீர் உணர்த்தில் உணர்வேன். உணர்த்திரேல் நாயேன் கணத்தும் உணரும் வகை காணேன். புன்கட்டுத் தோலைப் புதுக்கி மயக்கமறக் கண்கட்டு வித்தை போல் காட்டுவீர், பண்கட்டுப் பூணுவேன் தன்னை இன்பப் பூரணத்தில் பூண அருளுவீர்,'' என்பது அதுகண்ட தெளிவு.

இதன் விளைவாக இந்த இருபதாம் நூற்றாண்டிலும் ஓர் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார், அந்தச் சொக்கநாதப்பெருமான். அதுவும் நமது பழம்பெரும் தென்பாண்டி நாட்டிலே அவராண்ட மதுரையம்பதியிலே நாமும் காண, அதன் விளக்கமாக உள்ளது தான் இந்த வரலாறு, இதில் கண்ட பெரியவர் தருமை ஆதீனத்தை நிறுவிய குருஞானசம்பந்த பரமாசாரியரே யாவார்.



அக்காலத்திலே தமிழ் பிறந்தது. முச்சங்கம் வைத்து அதனை வளர்த்தது, இப்போதும் வளர்த்து வருகிறது என்ற பெருமை உடையது மதுரை மூதூர். அதனை ஆண்ட தமிழ் மன்னர்கள் பாண்டியர்கள். கயிலையை விட்டு இங்கு வந்து அவ்வரச பீடத்தில் சோமசுந்தரராக அமர்ந்து, அந்தத் தமிழ்ச் சங்கத்தில் இறையனார் என்ற ஒரு புலவராக இருந்து தமிழ் வளர்த்தாரா சொக்கநாதர். இப்பெருமை அவருக்கு மட்டுமேயென்றில்லாமல் அம்மை அங்கயற்கண்ணியும், குமரனும் (உக்கிர குமரன்) இங்கு எழுந்தருளி வந்து நாட்டாட்சி, மொழியாட்சி நடத்தி மக்களையும், நம் தமிழ் மொழியையும் வளர்த்தனர் இம்மாமதுரையிலே. அதனாலே பழம்பெரும் நாடு, தமிழ்நாடு என்ற சிறப்புகள் பல பெற்றது இப்பாண்டி நாடு.

தருமை முதல்வர்

எந்த நாட்டுக்கும் இல்லாத இத்துணைச் சிறப்புகள் பல பெற்ற பாண்டி நாட்டிலே அமண் மாசறுத்து அற்புதம் நிகழ்த்தினார் திருஞானசம்பந்தர் இறை அருள் துணைக்கொண்டு. வந்திக்குக் கூலியாளாக வந்து வெளிப்பட்டார் சொக்கநாதர்; மண் சுமந்தார்; பிரம்படியும் பட்டார்; பாரோர் அறிய மாணிக்கவாசகர் புகழ் பரவியது. சைவ வைணவ குரவர்களாகப் பலர் இந்த நாட்டிலே தோன்றிச் சமயம் வளர்த்திருக்கிறார்கள். இந்த நெறியிலே வந்தவர் தருமை ஆதீனத்தின் முதற் குரவர், குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். குமரகுருபரர் சொல்லுவார், 'அமண் மாசறுத்த அந்தத் திருஞானசம்பந்தரே பிள்ளைமை விடுத்துத் தள்ளரும் பருவத்தில் குருஞானசம்பந்தராக வந்தருளியுள்ளார்'

என்று. சோழநாட்டிலே அவதரித்துப் பாண்டிநாட்டிலே சைவ சமயத்தை மீளவும் நிலை நாட்டினுர் திருஞான சம்பந்தப் பெருமான், ஓராயிரம் ஆண்டு களுக்கு முன்னுலே. மீண்டும் 16-வது நூற்ருண்டின் பிற்பகுதியிலே பாண்டி நாட்டிலே செல்வச் சீவில்லிபுத்தூரிலே சைவ வேளாள மரபிலே சுப்பிரமணிய பிள்ளை, மீனுட்சி அம்மை என்பார்க்கு ஒரு தவப்புதல்வராக வந்துதித்தார் ஞானசம்பந்தர் என்னும் பிள்ளைத் திரு நாமத்தோடு நம் குருஞானசம்பந்தர். திருவருள் துணைக்கொண்டு சோழ நாட்டிலே தஞ்சைத் தரணியிலே தருமையம்பதியிலே எழுந்தருளி வந்து தங்கி ஒரு மாபெரும் சமய பீடத்தை உண்டாக்கிச் சமயம் காத்து வளர்த்து வருகிறுர் சந்தான சாரியாராக, திருக் கயிலாய பரம்பரையிலே, நந்தி மரபிலே மெய்கண்ட சந்தானத்திலே.

இவ்வாருக அவதரித்த ஞான சம்பந்தர், தமது பதினுருவது பிராயத் திலே தம் தாய் தந்தையரோடு மதுரை யம்பதிக்கு அங்கயற்கண்ணி உடனுறை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானை வழிபட வந்தார், ஒரு சமயம். அங்குத் தங்கிச் சிறப்பாக வழிபாடுகள் நிகழ்த்தினர் அவர்கள். இவ்வாருக வழிபாடுகளை இனிதே முடித்துக்கொண்டு இறைவ ரிடம் பிரியா விடைபெற்றுத் தம்மூர் (சீவில்லிபுத்தூரு)க்குத் திரும்ப விரும் பினர் பெற்றேர். தம் மகனுரையும் உடன் வர அழைத்தனர். உடன் வர மறுத்தார் அவர். தனியே விட்டுச் செல்ல மனம் துணியவில்லை அப் பெற்றேருக்கு; மீண்டும் மீண்டும் வற்புறுத்தி அழைத்தனர். அதற்கு விடையாக "இந்த உடல் தந்த உத்தமர்கள் தாம் இருவீரும். ஆனுலும் இந்த உடலுக்கு உயிர் தந்த எனது தாயும் தந்தையுமாகிய அங்கயற்கண்ணி யும் சொக்கநாதப் பெருமானும் இங்குள்ளனர். நீங்கள் அழியும் தன்மை யுடையவர்கள். என்றும் அழியாது என்னைக் காக்கும் பெற்றேர் இவரே யாவர்—யான் இங்கேயே இவரடியில் தங்கி இருக்கவே விரும்புகிறேன் இவரைப் பிரிந்திருக்க ஆற்றகில்லேன். கவலற்க. உடன்வர ஒருப்படேன். செல்க'' என்று உறுதியாகச் சொல்லி விட்டார். இவ்வுறுதிகண்ட பெற்றேர் தமது மகனுடைய மெய்யான நிலை கண்டு அதனைத் தடுக்க அஞ்சி ஒருவாறு மனம் தேறி அவரை அங்கே விட்டுப் பிரிந்து சென்றனர்.

பெட்டகம் பெற்றுர்

அது முதல் ஞானசம்பந்தர் மதுரை யிலே நாள் முழுவதும் சொக்கநாதர் ஆலயத்திலேயே தங்கியிருந்து வழிபட்டு வருவாராயினர். விடிவதற்கு முன்னரே விழித்தெழுந்து, நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, பொற்ருமரைத் தடத்திலே மூழ்கி, நீறணிந்து ஆலய வழிபாட்டுக்குச் செல்லுவார். அந்த நேரத்திலேயே அடியவர்கள் பலரும் அத்தீர்த்தத்தின் கரைகளிலே சிவபூசை வழிபாடியற்றி நெக்குருகி அமர்ந்திருக் கும் நிலையும் கண்டு செல்லுவார். அதே போலச் சிவபூசை செய்து சிறப்புப்பெற விரும்பியது அவருள்ளம். அந்நன்நெஞ் சத்திலே ஏக்கம் குடிகொண்டது. வேண்டுவார் வேண்டுவதே ஈவாராகிய சொக்கநாதரின் சந்நிதியிலே நின்று தம் ஏக்கத்தை வெளியிட்டு வேண்டிக் கொண்டார். அவர் உள்ளத்து விழை வின் முதிர்ச்சிகண்டு அன்றிரவு அவர்

நித்திரையில் சொக்கநாதர் ஓர் அடியவர் உருவில் எழுந்தருளி ''அன்பனே உனது விழைவுக்கேற்ப நாம் பெட்டகக் கோயிலோடு பொற்றாமரை வாவியின் ஈசானத் திக்கிலே நீரினுள்ளே எழுந்தருளியிருப்போம். எடுத்துப் பூசிப்பாயாக'' என்றருளிச் செய்தார். இது உற்றது தேவகாலமாகிய அதிகாலை நேரத்தில். உடனே விழித்தெழுந்து, பெருமான் கருணையை வியந்து போற்றி, விரைந்து தம் காலைக் கருமங்களை முடித்துக்கொண்டு, பொற்றாமரைக் குளத்திலே பெருமான் அருளிச் செய்தபடியே ஈசானத் திக்கிலே சென்று நீரில் மூழ்கி எழுந்தார். அவர் திருக்கரத்தில் பெட்டகக் கோயிலோடு சிவலிங்கத் திருவுருவொன்று மின்னிற்று. கரை காணாத உவகை மேலீட்டால் கரைந்தொழுகும் கண்ணீர் வார அதனை எடுத்துச் சென்று சொக்கநாதப் பெருமான் திருச்சந்நிதியில் இட்டார். அப்பொழுது அவர் நின்ற நிலையை அவர் வாய்மொழியாலேயே அறியலாம்.

''கண்ணுக் கினிய பொருளாகி யேஎன்
கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத
மேஎன்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும்
ஓர்பூரண வாரியுள்ளே
நண்ணும் படிச்செய் மதுரா
புரிச்சொக்க நாயகனே''

''அடியேன் விண்ணப்பம் கேட்டருளி அதன் வண்ணமே அருளியுள்ளீர். இனி இதனைப் பூசித்துய்தற்கேற்ப ஞானாசாரியரையும் தேவரீரே எனக்கு அனுக்கிரகிக்கவேண்டும், பெருமானே, என்று வேண்டி நின்றார். முன்போலவே அன்றிரவும் அவர் கனவில் பெருமான் வந்து தோன்றித் ''திருவாரூரின்கண் சென்று நமது உபதேச பரம்பரையில் வந்துள்ள ஞானப்பிரகாசனை நாடு'' என்றருளிச் செய்து மறைந்தார். அதே நேரத்தில் திருவாரூரிலுள்ள ஞானப்பிரகாசர் கனவிலும் எழுந்தருளி ''என் அன்பன் ஞானசம்பந்தன் உனை நாடி வருகின்றான். அவனுக்கு முறையாகச் சிவஞான உபதேசம் செய்துவைப்பாயாக'' என்றருளிச் செய்தார். இவ்விதமாக இருவருள்ளும் ஒருவரை ஒருவர் காணும் வகையில் தொடர்பு படுத்தி வைத்தார் சொக்கநாதர்.

சிவஞான உபதேசம்

இக்கனவு நிகழ்ந்ததும் பிரம முகூர்த்த காலமாகவே ஞானசம்பந்தர் துயில் நீங்கி இறைவர் தம்பொருட்டு எளிவந்து உணர்த்தியருளிய செய்தியை நினைத்து ஆனந்தம் மேலிட, வழக்கம் போலவே பொற்றாமரையில் நீராடித் தூயராகிப் பெருமான் சந்நிதியிற் சென்று வணங்கி, அவர் நிகழ்த்திய அற்புதத்தை வியந்து போற்றி, அவரிடம் பிரியா விடை பெற்று, மதுரையை விட்டு அரிதின் நீங்கி, வழியில் திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, திருவாஞ்சியம் முதலிய பல தலங்களையும் வழிபட்டுக்கொண்டு, அடுத்த சோமவார நன்னாளில் அதிகாலை நேரத்தில் திருவாரூரை வந்து அடைந்தார். கமலாலயத் தீர்த்தத்தில் மூழ்கித் தூய்மை செய்துகொண்டு, தம் குருமூர்த்தியைத் தேடி ஆரூர்ப்பூங் கோவிலினுள்ளே விரைந்து சென்றார். அங்கே சித்தீஸ்வரத்தலத்தில் உள்ள மேதா தட்சிணாமூர்த்தி சந்நிதியில் தமது மாணவரின் வருகை நோக்கி ஞானப்பிரகாசர் ஆவலோடு எழுந்

தருளியிருந்தார் தம் ஞானாசாரியரைக் கண்டதும் காந்தம் கண்ட இரும்பு போல விரைந்து சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தாம் கொண்டுவந்திருந்த பூசாமூர்த்தியையும் அவர்முன் இட்டுப் பேச்சற்ற மோன நிலையில் நின்றார். அதே நேரத்தில் பெருமான் பணித்தபடியே அந்தச் சந்நிதியிலே சிவபூசையை முறையாக எழுந்தருளப் பண்ணி வைத்துச் சிவஞானோபதேசமும் செய்துவைத்தார் ஞானப்பிரகாசர். தமது குருமூர்த்தியைக்கண்ட நிலையில் தமது உணர்வு எவ்விதம் இருந்ததென்பதை ஞானசம்பந்தர் உரையாலேயே கண்டு மகிழ்வது சிறப்பாகும்.

"கண்டேன்இப் பாசம் கழிந்தேன் அமுதைமுகந்து
உண்டேன் சுகாநந்தத் துள்ளிருந்தேன்—வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்பிர காசனையே நான்" என்றும்,
"வான்பார் கமலைத் திருஞான சம்பந்த மன்னனெங்கோன்
ஊன்பார் உடற்பவ நீக்கிடவோமொழி யோர்வசனம்
தேன்பாகு கற்கண்டு இளநீர் வளைமுறி சீனிகன்னல்
ஆன்பா லினும்தித்தித்து ஊற்றாய்ப் பெருகல் அதிசயமே" என்றும்

தாம் கண்ட ஆனந்தானுபவ நிலையை விளக்கியுள்ளார். இந்த நிலையிலே அவ்விடத்தமர்ந்து தம் குருபணிவிடை இனிது செய்திருந்தார்.

"நிற்க" என்றதும் நின்றிருந்தவர்

அக்காலத்திலே ஞானப்பிரகாசர் திருவாரூர் ஆலய நிர்வாகத்தையும் மேற்கொண்டிருந்தார். ஆகலின் அவர் தம் அடியார்கள், மாணவர்கள் புடைசூழ அவ்வாலயத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருந்து பூஜா கால தரிசனமும், அன்பர்களுக்கு ஞானோபதேசமும், சாத்திர தோத்திர விசாரணைகளும் பண்ணியிருப்பது வழக்கம். அர்த்த சாம பூசை முடியும் மட்டும் இவ்விதம் அங்குத்தங்கியிருந்து அந்தத் தரிசனத்தை முடித்துக்கொண்டு சம்பிரதாயப்படி கைவிளக்கு, கைத்தீவர்த்தி முன்செல்லச் சிவ சிந்தனையில் திளைத்தவராய் அவர் திருமடத்துக்கு வந்தருளுவதும் வழக்கம். இவ்விதமாக நிகழ்ந்து வருங்காலத்தில் ஒருநாள் அர்த்தசாம பூசை முடிந்து குருமூர்த்திகள் திருமடத்திற்கு எழுந்தருளும் நேரத்தில் கைவிளக்குப்பணிவிடை செய்யும் தொண்டர் ஏதோ காரணத்தால் அங்கில்லை இது போன்றதொரு வாய்ப்பினை ஆவலோடு எதிர்நோக்கியிருந்த நம் குருஞானசம்பந்தர் ஓடோடிச் சென்று அப்பணிவிடையைத் தாமே மேற்கொண்டு முன் சென்றார். குருமூர்த்திகள் வழக்கம் போலத்தமது திருமடத்து முன்னிலையை அடைந்ததும் கைவிளக்கேந்தி நிற்பாரிடம் "நிற்க" எனப்பணித்து உட்சென்று துயில்கொண்டார். குருவாணையின் வண்ணமே ஞானசம்பந்தரும் அவ்விடத்தே நிலையாகக் கையில் விளக்கேந்திச் சிவசிந்தனையில் திளைத்தவராக நின்றிருந்தார், அன்றிரவு பெருமழை பொழிந்தது. அவ்வுணர்வு பெற்றாரில்லை நம் ஞானசம்பந்தர்.

மறுநாட் காலையில் திருமடத்து முன்னிடத்துக்குச் சாணந் தெளித்துத்

தூய்மை செய்வதற்கு வந்த குரு பத்தினி, முதல்நாளிரவு பெருமழை பெய்திருத்தலையும், ஞானசம்பந்தர் நின்றிருந்த இடத்தில் அவரைச்சுற்றி ஒரு சில அடித்தொலைவுவரை தரையில் தண்ணீரே படாமல் மழைக்கு முன்பு எவ்விதம் தரை காய்ந்திருந்ததோ அவ்விதமே இருப்பதையும், ஞான சம்பந்தர் சிவசிந்தனையில் திளைத்தவராக நிகழ்ந்ததேதும் அறியாராகக் கையில் விளக்கேந்தி நிற்பதையும், அவரேந்தியுள்ள விளக்கு ஒளிமங்காது பிரகாசமாக எரிந்துகொண்டிருப்பதையும் கண்டு உள்ளே ஓடோடிச் சென்று ஞானப்பிரகாசருக்கு உணர்த்தினர். ஞானப்பிரகாசர் வெளியே வந்து தமது மாணவர் நிற்கும் நிலைகண்டு சென்று தழுவி அவரை வாழ்த்தி "நீர் நம்மைப் போலவே உம்மை நாடிவரும் பக்குவர்களுக்கு அருளுபதேசம் செய்யும் குருராயராகும் நிலையை அடைந்துவிட்டீர். உம்மால் பல ஆன்மகோடிகள் பல்லூழிக் காலம்வரை ஈடேற இருக்கின்றன. ஆகவே உமது விருப்பம் போலச் சென்று தொண்டுசெய்வீராக" எனப் பணித்தார். இவ்வுரை கேட்ட ஞானசம்பந்தர் மனம் பதைத்து "அடியேன் என்ன பிழை செய்தேன்! எவ்வாறு உம்மைவிட்டுப் பிரிந்திருப்பேன்! என்று கசிந்துருகி, "எனக்கெனச் சுதந்திரம் ஏது! எல்லாம் என் குருவாணையின்படிதானே நிகழும்" என்று உருகிக் கேட்டார். அவர் சொல்லால்—

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும்
தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சை
யோ இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர
காசசிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி அப்படி
யாக உரைத்தருளே"

என்று விநயமாகக் கேட்டார். இதற்கு மறுமொழியாக ஞானப்பிரகாசர் "இங்கிருந்து வடக்கே இரண்டு யோசனைத் தொலைவிலுள்ள மாயூரத்துக்குக் கீழ்பால் தருமராஜன், அகத்திய முனிவர் போன்ற அடியார்கள் பலராலும் வழிபடப்பெற்றதும், வில்வாரண்யம் என்று வழங்கப்பெறுவதுமான தருமபுரத்தில் சென்று மடம் உண்டு பண்ணிச் சிவஞான சித்தாந்த பரிபாலன பீடாதிபதியாகச் சந்தானம் வளர்த்து வாழ்வீராக" என ஆணை தந்தார். இதனை ஏற்றுத் தருமபுரம் வந்தடைந்தார் குரு ஞானசம்பந்தர்.

தருமையின் தொடக்கம்

தவஞானச் செல்வர் ஒருவர் வருவார். அவரிடம் தம்மிடமுள்ள ஆலய நிர்வாகம் முதலிய பொறுப்புகளை அளித்துவிட்டுச் செல்லவேண்டும் என்று எதிர்பார்த்து அங்குத் தருமபுரத்தில் அகத்திய முனிவரின் மாணவர்கள் காத்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்தது வீண்போகவில்லை. ஞானபானுவாக நமது ஞானசம்பந்தர் அங்கு வருவதைக் கண்டார்கள். அவரை எதிர் ஏற்றுத் தம்மிடமுள்ள ஆலயபரிபாலனம் முதலிய பொறுப்புகளை எல்லாம் அவரிடம் அளித்துவிட்டு, அவற்றை நிர்வாகம் செய்யத்தக்கதாக அட்டமாசித்திகளையும் அவருக்கு உபதேசம் செய்து கொடுத்து அவ்விடம் விட்டு அகன்றனர் அத்தபோதனர்கள். அன்று முதல் இன்றுவரை தருமபுரத்தில் இவ்

வாதீனத் திருமடம் ஒரு ஞான அரசாக நின்று சிறப்புப்பெற்று வருகிறது. அது ஒரு சிவஞான ராஜதானியாக, அதனை நாடி வருவோருக்கு ஒரு கலங்கரை விளக்கமாக ஒளிசிந்தி வருகிறது. இது நிகழ்ந்தது கி. பி. 1565ல் என்று கால எல்லை வகுக்கின்றனர், காலக் கணக்கர்.

உயிரால் ஞான சம்பந்தரே

இவ்வாதீன அவிச்சின்ன பரம்பரை தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இப்போது இவ்வருட் பீடத்தில் 26வது குருமூர்த்திகளாக எழுந்தருளி ஞானச் செங்கோல் ஏற்று நடத்தி வருபவர்கள் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். இவ்வருட் பீடத்தில் உருவால் யார் வந்து அமர்ந்தாலும் உயிரால் குருஞான சம்பந்தரே இங்கிருந்து ஆட்சி நடத்துவதாகக் கொள்ளப்படுவதால் எல்லோரும் 'ஞானசம்பந்தர்' என்றே வழங்கப் பெறுவர். ஆனாலும் ஆட்சிக்கு விளக்கமாகத் தெரிய, இன்ன ஞானசம்பந்தம் என்று விளங்கவைக்க, அவர்கள் தீட்சா நாமத்தையும் சேர்த்து இன்னின்ன ஞானசம்பந்தம் என்று குறிப்பிடுவது வழக்கத்தில் இருந்து வருகிறது.

குமரகுருபரர், வெள்ளியம்பல வாணர், தமிழாகரர், சம்பந்தசரணாலயர், அழகியதிருச்சிற்றம்பலவர், படிக்காசு முனிவர் முதலிய பல அருளாளர்கள் இவ்வாதீனத் திருக்கூட்டத்தில் இருந்து சமயத்தொண்டு, மொழித் தொண்டுகள்செய்து சிறப்பித்திருக்கிறார்கள். சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, சொக்கநாதக் கலித்துறை, ஞானாவரணம், முத்திநிச்சயம், தசகாரிய அகவல், சோடசகலாப் பிரசாதசட்கம் முதலிய முதல் நூல்களை குருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளார். பின்வந்த பல ஆசாரியப் பெருமக்களும், திருக்கூட்டத்து அடியவர்களும் பலப்பல சாத்திர தோத்திர நூல்களை இயற்றி உள்ளார்கள். இறைவர் திருவருள் துணைக்கொண்டு பல அற்புதங்களை நிகழ்த்தி அவ்வப்போதும் மக்களுக்கும் நாட்டுக்கும் உற்ற துன்பங்களைப் போக்கிக் காத்திருக்கிறார்கள். விரிக்கிற் பெருகும், இச் செய்திகள் இப்போது பலரும் அறிந்தவை. ஆகவே விளக்கமாகச்சொல்லாது விடப்படுகின்றன.

உன்னைவிட நீங்குமுயிர் ஒன்றில்லை
ஆதலினால்
என்னைவிட நீங்குவதும் இல்லைநீ—
பொன்னைவிடப்
பூந்தேன் அலருடையாய் பொங்குமது
ராபுரியில்
வேந்தே பிரியா விடை......

என்று ஏங்கி நின்ற குரு ஞானசம்பந்தரை இப்போது பலரும் காணத் தம் திருக்கோவிலின்கண்ணே அழைத்து அமர்த்திக்கொண்டு ஓர் திருவிளையாடல் புரிந்திருக்கிறார் சொக்கநாதர் அண்மையிலே. அவர் ஆலயத் திருப்பணிகள் பல செய்து 1963ல் மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தச், சென்றமுறை முயற்சிகள் மேற்கொண்டபொழுது திருப்பணித்தலைவர் இங்குத் தருமைக்கு வந்து அச்செய்தி சொல்லித் 'திருப்பணி, மகாகும்பாபிஷேகம் குறித்தபடியே சிறப்பாக நிறைவேற ஆசி வழங்க வேண்டு'மென்று அப்போது இவ்வருட் பீடத்தமர்ந்திருந்த கயிலைக் குருமகா சந்நிதானத்தினிடம் வேண்டிக்கொண்டார். ''சொக்கன் திருவருள் வழியே வளரும் இவ்வாதீனம் அவன் பணியில்

ஓரளவு ஈடுபடும். அதற்கான உதவிகள் செய்வோம். அங்கயற்கண்ணி உடனுறை நம் தெய்வம் சொக்கநாதன் துணையிருக்கத் தாங்கள் மேற்கொண்டிருக்கும் பணி செம்மையாகவே நிறைவுறும்; கவலற்க '' என்று துணிவு தந்தார்கள் கயிலைக் குருமகா சந்நிதானமவர்கள்.

ஓர் அற்புத நிகழ்ச்சி

அப்பணியில் 'சொக்கநாதர் முன்னுள்ள இராஜகோபுரம் திருப்பணிக்காகும் செலவு முழுவதும் ஒரு லட்சத்துக்குமேல் உள்ளதை இவ்வாதீனச் செலவில் நடத்திடுக' எனப் பணித்தார்கள். அதனை ஏற்றுச் சென்ற திருப்பணிக் குழுவினர் திருவருள் வேறுவிதமாக எண்ணியிருந்ததென்பதை அப்போது அறியாத நிலையில் இங்குச் சொல்லிய வண்ணமே செய்துவிடுவதாகச் சொல்லிச் சென்றார்கள். ஆனால், நடந்தது வேறொன்று. அக்கோபுரப் பணிக்கான செலவை வேறொருவர் கொடுக்க முன்வந்ததை ஏற்று அவர் பெயரிட்டு அதற்கான பணத்தையும் அவரிடம் பெற்று முடித்துவிட்டனர். இதனை அறிந்த கயிலைக் குருமூர்த்திகள், குறை ஒன்றும் சொல்லாது ''சொக்கனுக்கென்று எடுத்துவைத்த பணத்தை அவன் பணிக்கே கொடுத்துவிடுகிறோம் எதற்கேற்புடையதாக இருக்கிறதோ அவ்விதமே செய்க'', என்று பணித்துப் பணமும் வழங்கினார்கள். பணம் பெற்றுச் சென்றபின் திருப்பணித் தலைவர் மனத்தில் புகுந்து தம்முடைய சந்நிதி இரண்டாம் கோபுரப் பணிக்கென அத்தொகையை ஏற்றுக்கொண்டார் சொக்கநாதர் அதே நேரத்தில் மேலே கண்ட குருஞானசம்பந்தரின் குறையையும் நிறைவேற்றி வைத்தருளினார். பெரும்பாலும் சுவாமி சந்நிதிக் கோபுரக்குடைவறைகளில் அதிகாரமுடையாராகிய நந்தியம் பெருமான் திருவுருவைப்பதே வழக்கம். ஆகம சம்பிரதாயம் அது. அவ்விதம் அத்திருவுரு மூன்றும் கோபுரக் குடைவறையில் எழுந்தருளப் பண்ணிவைக்கப்பட்டிருக்கிறது. சொக்கநாதப் பெருமான் சந்நிதியில். மேலே சொல்லியிருப்பது போலக் குருஞானசம்பந்தர் கயிலாய பரம்பரையில் நந்தி மரபில் வந்தவரல்லரா? ஆகவே, அந்தக் குரு சந்தானத்தில் வந்தவருக்கு அதற்குரிய இடத்தைத் தம் முன்னிலையில் அளித்தருளத் தருணம் பார்த்திருந்திருக்கிறார் அப்பெருமான். அத்தருணம் வந்துவிட்டது, இப்போதென்று அதனை அத்திருப்பணிக் குழுவினர் மூலமாகவே எளிதில் செய்து முடித்துவிட்டார், அவர் ஆணையின் வழியே அந்த இரண்டாம் கோபுரக்குடைவறையில் குருஞானசம்பந்தப் பெருமான் திருவுரு ஒன்றைச் செய்தமைத்திருந்தார்கள் யாரும் நினையாதே. இவ்விதமாக அற்புதம் நிகழ்த்திய சொக்கநாதர் குருஞானசம்பந்தப் பெருமானுக்குத் தம் சந்நிதியிலே கோவிலும் கொடுத்து நித்திய நைமித்திக வழிபாடுகளும் நடைபெறச் செய்திருக்கிறார். அந்தச் சந்நிதி இப்போது விளக்கம் பெற்று வருகிறது. பலர் அங்கு வந்து தம் குறையிரந்து வேண்டி, வேண்டிய வேண்டியாங்கு அருளப்பெற்று மகிழ்கிறார்கள். அது ஒரு பிரார்த்தனைத் தலமாக இக்கோவிலில் இப்போது விளங்கி வருகிறது. அந்த அருள் உள்ளத்தின் ஏக்கத்தை இவ்விதமாகப் போக்கிவிட்டார் சொக்கநாதப்பெருமான். இன்னும் பல நிகழ்ந்திருக்கின்றன. விளக்கவேண்டுமேயானால் அஃது ஒரு தனிநூலாகும்,

ஆலந் தரித்தலிங்கம், ஆலவாய்ச்
சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—
பாலொளியாம்
அத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா—

ஆலவாய் ஆலயமும் ஆகம விதிகளின் அமைப்பும்

எம். ஐயாமணி சிவம்

ஆலவாய்ப்பதியில் ஆன்மகோடிகள் உய்யும்வண்ணம், திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிராநிற்கும் அருண்மிகு அங்கயற்கண்ணம்மையை ''ஆகம விபின மயூரீம்'' என்று பெரியோர்கள் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். அஃதாவது ''ஆகாயம் என்ற மேகத்தைக்கண்ட மயில்'' என உவமையிட்டார்கள். வேதமாகிய பசுவினிடத்துப் பொழியும் பாலாகிய சிவாகமக் கடலுள் எளியேன் புகுந்து ஆலவாய்ச் சொக்கர் ஆலய அமைப்புகளையும் அங்கயற்கண்ணம்மை ''எண்ணி லாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும், உண்மையாவது பூசனை'' என்ற பேருண்மை உணர்ந்து பாண்டியன் மகவெனத்தோன்றிச்செங் கோலோச்சி'' நான்மாடக் கூடலென நலந்திகழ் நகரமைக்க அருள்பாலித்த போதே, அண்ணலார் அமைத்த ஆகம நெறி வழுவாமேயமைத்த திருநகர அமைப்பை ஒரு சிறிது விளக்க முன் வந்துள்ளேன்.

காமிக ஆகம அமைப்பு

சைவ ஆகமங்களில் முதலாவதாக உள்ள 'காமிகம்' என்ற ஆகமத்தில் காணப்பெறும் நகர பேதங்களில் சர்வ தோபத்ரம்'' என்ற அமைப்பில் எழுந்த நகரம் மதுரை என்று கூறிடின் மிகை யாகாது.


நந்தியாவர்தஞ்ச பத்ரஞ்ச ப்ரகீர்ணகம்
க்ராமாக்ர ஹாரயோர் ந்யாஸமேவம்
பரோக்தம் விசேஷக:

என்று ஆகமங்களில் கண்டபடி சுற்றிலும் நான்கு வீதிகளுடனும், சம சதுர அமைப்புக்களுடனும் நகர நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். திருக்கோயில் அமைப்பும், ஆலவாய் அண்ணலின் இலிங்கமான அளவைக்கொண்டு உபபீடம், அதிஷ்டானங்களும், நாகர, திராவிட, வேசர

பேதத்துடன் கைலாசம் என்றமுறை யில் விமானமும் அமைத்துள்ளதையும் காணமுடியும். இதே அமைப்பை விமான இலக்ஷணத்தில்,

"சதுஸ்சாலா சதுஷ்கூட
யுக்தை : கைலாஸ ஏவஹி"

என்று காமிகாகமம் கூறுகிறது. இதனையே "நான்மாடக்கூடல்" என்று தமிழில் கூறுவர். சைவ, ஆகம முறைகளில் இருந்து சிறிதும் வழுவாது அமைக்கப்பெற்ற திருக்கோயில் ஆலவாய்ச் சொக்கேசர் திருக்கோயிலே ஆகும். "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க' என்பது தண்டமிழ் வாசகம்.



1. ஆலய நித்ய வழிபாட்டு நெறிகளிலும் ஆகமச் செறிவைக்காணலாம்.

"பாஸ்கரேதயாத் பூர்வம்
ஸ த்ரிபாத த்ரி ணடிகா l
உஷ: கால மிதிப்ரோக்தா
பூர்வான்னஸ்து தத: பரம் ll
பாஸ்கரோதய மாரப்ய
சார்த்த ஸப்ததச நாடிகா : l
பூர்வசந்திரி திப்ரோக்தா
உபசந்நிர்த்த தர்த்தக : ll
உபசந்தியாத மாரப்ய யாமோ
மத்யன்ஹ உச்யதே ll
பாஸ்கராஸ் தமயாத்பூர்வம்
த்ரிபாதேநத்ரி நாடிகா l
ப்ரதோஷ இதிவிக்யாதா
ஸாயங்கால மதஸ் ருணு ll
ப்ரதோ ஷாந்தம் ஸமாரப்ய l
த்ரிபாதேந த்ரி நாடிகா l
ஸாயங்கால மிதிப்ரோக்தம்
அர்த்தயாமந் தஸ்ருணு ll
ஸாயான் ஹாந்தம் ஸமாரப்ய
த்ரிபாதேநத்ரி நாடிகா l
அர்த்தசாமம் இதிப்ரோக்தம்
இதிஷட்கால நிர்ணயம் ll

என்ற ஆகம வாக்கியத்தின்படி சூரியஉதயத்திற்கு முன், அஃதாவது 5 மணி அளவில் திருவனந்தலும், 7 மணி முதல் 12 மணி வரை காலசந்தி திரிகாலசந்தி, உச்சிக்கால பூஜைகளும் சூரிய அஸ்தமன வேளையில் சாயங் காலபூஜையும், இரவு 9 மணிக்கு அர்த்தஜாமபூஜையும் நடைபெற்று வருகின்றன. இவைகள் காரணம், காமிகம் என்ற சிவாகமமுறைகளின் படி உள்ள பூஜா முறைகள் ஆகும்.

2. உற்சவங்கள்

காரணாகமம் மகோற்சவ விதிப் படலத்தில் கூறியுள்ளபடி

1 "உத்ஸவம் காரயேத்நீமான் புஷ்யார்ந்தம் ஹிபுஷ்யகே"
தை மாதத்தில் பூச நன்னாளிலும்,

2 "மாகமாஸே மகாந்தம் வாஷஷ்டியந்தம் வாப்ரஜாயதே"
மாசிமாதத்தில் 8 த்வஜங்களுடன் கூடிய மண்டலத் திருவிழாவும்,

3 "உத்ராந்தந்து பால்குன்யாம் சித்தாந்தந்து சைத்ரமாஸகே"
சித்திரை மாதத்தில் சித்திரையில் தீர்த்தம் வரும் திருக்கல்யாண விழாவும்

இப்படி 12 மாதங்களும் ஆகமங்களில் கூறிய முறைகளின் படிக்கே திருவிழாக்கள் நடைபெறுதலும் காணலாம்.

அவ்வப்போது நடைபெறும் குடமுழுக்கு விழாக்களும் நல்ல சிவாகம பண்டிதர்களைக் கொண்டு சிறிதும் வழுவாராத வண்ணம் நடத்தப்பெற்று வருகின்றது.

கர்ப்பக்கிருஹத்திலுள்ள ஆலவாய் அண்ணல், அங்கயற்கண்ணம்மை திருவுருவங்களைச் சைவ, ஆகம முறைகளின்படி சமய, விசேட, நிர்வாண திக்ஷைகளும், ஆசாரிய அபிஷேகமும் பெற்றவர் தவிர, ஏனையோர் ஆதி சைவரே ஆயினும் (பட்டர்) தீண்டுவதில்லை என்ற நியதியில் ஒவ்வொரு சிறிய விஷயமும் சைவ, ஆகமக் கலைவளர்க்கும் கருவூலமாகத் திகழ்ந்துவரும் பெற்றிமைகாணலாம். சைவ ஆகமங்களில் அன்றி வேறு எந்த நூல்களிலும் காணப்பெறாத 100 கால் மண்டபங்கள், 1000 கால் மண்டபங்கள் முதலிய மண்டபங்களும், சிவாகமங்களில் காணப்படும் 25 மூர்த்திகளின் த்யானவடிவ அமைப்புகளும், ஐந்துவிதமான நிருத்த மூர்த்திகளின் ஸ்தானங்களும், தங்கம், வெள்ளி, செம்பு, சிலை, சுதையாக ஐந்து முறைகளில் அமைக்கப்பெற்ற திருவுருவப் படிவங்களும் ஒருசேரக் காணும் வாய்ப்பு மதுரைத் திருக்கோயிலில்தான் காணக் கிடைக்கிறது.

மேலும் சைவாகம சிற்பசாஸ்திரங்களில் காணுகின்ற பாதபந்தம், பத்மபந்தம், பிரதிசுந்தரம் முதலிய வர்க்க பேதமான உபபீட அமைப்புகளும், விமானங்களில் கைலாசம், மேரு, மந்தரம் முதலிய சித்ர விசித்ரபேதங்களும் காணமுடிகிறது. உலகிற்கே ஒரு கலைக்கூடமாக விளங்குகின்ற இந்த ஆலவாய்த் திருக்கோயில் மதுரையில் முன்னாளில் ஆகம சாஸ்திரங்களில் கற்றுத்தேர்ந்த பண்டிதராக விளங்கிய பட்டர் அகிலாண்ட சிவாசாரியார் என்பவர் தொகுத்துள்ள மூலாகமச் செறிவு நிறைந்த ''அகிலாண்ட சிவாசாரியம் பத்ததி'' என்ற பத்ததி வழியே நித்யநைமித்திக வழிபாடுகளும், அகோர சிவாசாரியார், ஈசான குரு



தேவர் முதலிய பத்ததிக்காரர்களின் பத்ததிகளின் படிக்கும், சைவ புராணத்தில் உள்ள 'ஹாலாஸ்ய மகாத்மியம்' என்ற நூலின் படிக்கும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. இவை முழுவதும் ''மன்னும மாயேந்தரத் திருந்து சொன்ன'' ஆகம முறைகளின்படியே நடைபெற்று வருகின்றன இதனை மாற்றவோ, வேறு முறைகளைப் புகுத்த

வோ முயல்பவர்கள், தங்கள் எண்ணம் கைகூடப்பெறாமல் செல்லும் வழியறியாது "குறிக்கோளிலாது கெட்டேனே" என்ற அப்பரடிகள் திருவாக்கின் வண்ணம் நலம் கிடைக்கப்பெறார் என்பது திண்ணம். கலைநுட்பமும், கல்வியறிவின் திறமை நிறைவும் காண ஆலவாய்ச் சொக்கர் கோயில் ஓர் எடுத்துக்காட்டாக நிற்கின்றது. இடையே புதுமை புகுத்துதல் என்ற இடையூற்றால் பழமைச்சிறப்புக் குன்றாமல் என்றும் நின்று நிலவத் திருவருளை வழுத்துகின்றேன்.

"ஒழுக்கம் அன்பு அருள்ஆ சாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவுஅ டக்கம் அறிவொடர்ச் சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணிஅ றங்கள்"

(சித்தியார்—செய். 113)

அரங்கம்

மதுரை மாநகரில் திருக்குறள் அரங்கேற்றம்

பண்டித மீ. கந்தசாமி புலவர்

மக்கள், வாழ்க்கையில் குறைவின்றி வாழவேண்டும். கண்டும் கேட்டும், உண்டும் உயிர்த்தும், உற்றும் நிலவவேண்டுமெனப் பெரும்பாலான பெற்றோர் கருதுவர். அவர் நிலமும் புலமும், தோட்டமும் தோப்பும், வீடும் வாயிலும், ஆடும் மாடும், நெல்லும் புல்லும், பொன்னும் மணியும் தம் மக்களுக்கெனச் சேர்த்துவைப்பர். அங்ஙனமே கடவுட் பற்றுக்கொண்டு, ஒழுக்கநெறியிலுயர்ந்து, கள்ளுண்ணாது, பொய்பேசாது, சூதாடாது, பிறர்மனை விரும்பாது, அயலாரை வஞ்சியாது, இம்மையின்பமும், மறுமையின்பமுமெய்தி மக்கள் சிறக்கவேண்டுமெனப் பெரும்பாலான சான்றோரெண்ணுவர். அதனால் அவர் அறம்பொருளின்பம் வீடுபற்றிய ஆயிரமாயிரம் நூல்களை யியற்றி யுதவுவர்.

சான்றோர் நூற் செல்வம்

தம் புதல்வர் புதல்வியர்கள் பெருவாழ்வு வாழவேண்டுமென்னும் உயர் நோக்கத்தாலே பெற்றோர், உண்ணாதும் உறங்காதும் இரவு பகலாகப் பெரும்பாடுபட்டு அச்செல்வ வகைகளை இம்மியிம்மியாக முயன்று ஈட்டித் தொகுத்து வைப்பர். அவ்வாறே சான்றோரும் தம் நுண்ணறிவால் மக்கள் கடைப்பிடிக்கக்கூடிய உயர் கருத்துக்களை நுனித்து நுனித்து, ஆய்ந்து ஆய்ந்து, பல நாளாகப் பாடுபட்டுணர்ந்து, அவற்றைத்தாமும் கைக்கொண்டு, அவற்றின் விளைவுகளைக் கண்டு தொகுத்து நூலாக்குவர். பெற்றோர் தொகுக்குஞ் செல்வம் பொருட்செல்வம். சான்றோர் தொகுக்குஞ்செல்வம் நூற்செல்வம். பெற்றோர் தம்மக்கட்கென்று தொகுப்பர். சான்றோர் பொதுமக்கட்கென்று தொகுப்பர்.

செல்வத்தொகுப்பு வழி

இவ்வாறாய செல்வ வகைகளில் பொருட்செல்வம் தன்னல நோக்காய்த் தொகுக்கப்படுவது. நூற்செல்வம் பொதுநல நோக்காய்த் தொகுக்கப் படுவது. தம் மக்கள் பன்னெடுங் காலம் பொன்னும் பொருளும் படைத்தவராய்ப் பெருவாழ்வு வாழ வேண்டுமென்னுங் கருத்தால் நல்வழி யானன்றி யல்வழிக் கலப்பானும் பொருள் தொகுப்பர் பெற்றோர். சான்றோரோ பொதுமக்கள் வழிவழி யாகப் பெருவாழ்வு வாழவேண்டுமென எண்ணி, மறந்தும் அல்வழிப் பொருள் கலந்துவிடலாகாதெனக் கண்ணுங் கருத்துமாகக் கருத்துப் பொருளைத் தொகுப்பர். அங்ஙனந் தாந்தொகுத்த கருத்துப்பொருட் குவியலில் மக்களைத் தீவழிப்படுத்தும் வேண்டாத கருத்தும் இருத்தல் கூடுமெனச் சான்றோர் அஞ்சுவர். சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகத் தாம் இருத்தலான் அவர் அங்ஙனம் அஞ்சுதல் இயல்பு.

பழுதறு நூல்களாக்க முயற்சி

மேலும் உயிரினம், அமைதி தெளிவு மயக்க நிலைகளில் மாறி மாறிச் செல்லும் வழக்குள்ளது. எனவே அமைதியும் தெளிவும் உள்ளபோது நற்கருத்தும், மயக்க நிலையுள்ளபோது தீக்கருத்தும் ஒருவர்வழித் தோன்றும். அதனாலேதான் எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினு, மப்பொருண் மெய்ப்பொருள் காணவேண்டு மென்பார் தெய்வப் புலவர்செம்மல். ஒருவர் தொகுத்த கருத்துப்பொருட் களஞ்சியத்திலுள்ள மெய்ப்பொருள் பொய்ப்பொருள்களைப் பகுத்துணர்ந்து பொய்ப்பொருளைக்களைந்து மெய்ப்பொருளாகவே நிலைக்கச் செய்யவேண்டும். இம்மியளவேனும் பொய்ப் பொருட் கலப்பிருக்குமேற் பயில்வார் பாழ்படுவ ரென்றுகொண்டு அப்பொய்ப்பொரு ளொழிப்புக்கு யாது செய்யவேண்டு மென்று எண்ணலாயினர். சான்றோர், காலப்போக்கில் தம் நூல்களைப் பழுதறு நூல்களாக்க ஒரு முடிவுகொண்டனர்.

சான்றோர்க்குத் தோன்றிய முடிவு

முன்னர்க் கூறிய மூன்று நிலைகளில் மாறி மாறிச் செல்லும் இயல்பினரான சான்றோரை யொருங்கு கூட்ட வேண்டும். அவர்கள் கூடும் அவ்விடத் திற்கு அரங்குஎன்று பெயரிடவேண்டும். அவ்வரங்கில் தம் நூலையேற்ற வேண்டும்'' என்று முடிவு செய்தனர். அரங்கிற் கூடிய பலரிற் சிலர், மயக்க நிலையிலிருந்தாராயினும் ஏனையோர் தெளிவு நிலையிலிருப்பார். மயக்க நிலை யிலுள்ளோர்க்கு நூலின் பொய்ம்மை மெய்ம்மை தெரியாது போயினும் தெளிவு நிலையிலுள்ளோர்க்கு அவை தெரியாமற்போகா. அவை பொய்ம்மை மெய்ம்மைகளை யுணர்த்துதலான் அல்லன நீக்கி நல்லன வாக்குவர் எனக் கருதினர். இங்ஙனம் செய்தமையால் நூல்கள் யாவும் பழுதறு நூல்களாயின. அவற்றை மாணவர் பயின்றனர். நாட்டிற் பண்பாடு வழிதழி நிலவினது.

அரங்கேற்ற முறை

இம் முறையே அரங்கேற்ற முறை யாம். அரங்கேற்றத்திற் கலந்து கொள்ளுமறிஞர், கல்விகேள்வியறிவு ஒழுக்கம் குடிப்பிறப்பு கடவுட்பற்று களில் மிக்காராய்ச், செப்பம்படைத்

தாராய்த் திகழ்வர். நண்பர் பகைவர் அயலாராகிய இம்முத்திறத்தாரில் எத் திறத்தார் நூலாயினும் ஒருபாற் கோடாது நூலில்வரும் எழுத்துச் சொற்பொருள் யாப்பணிகளைத் துருவிக் கேட்டுத் தமக்குத் தோன்றும் ஐயப் பாடுகளை ஆசிரியர்பால் வினவி அமைதி நோக்குவர். தக்க அமைதி வாராமற் போயின் மாற்றுவர். நாட்டு நன்மை கருதி, நாட்டிற் பல நல்ல பழைய கருத்துகள் நிலவுதல் கருதி நாடாளும் மன்னர் அரங்கைக் கூட்டி யுதவுவர். புலத் துறை முற்றியிருப்பின் மன்னரும், இன்றேற் புலவரும் அரங்குத் தலைமையேற்பர். தலைமையேலாது போயினும் முன்னின்று நடாத்தி முடிக்கும் பொறுப்பை யேற்பர் அந்நாளைய மன்னர்.

அரங்கேற்றத்தின் பயன்

அரங்கேறிய நூல்களே சிறுவர் சிறுமியர்க்குப் பாட நூல்களாகி வந்துள்ளனவென அறிகிறோம். ஒரு நூல் பற்றி, அதனைக் கற்கப்புகும் ஒருவர், இஃது எவரான் ஆக்கப்பெற்றது? இதன் முதனூலெது? இஃது எவ் வெல்லைக்கண் வழக்கிலுள்ளது? இந் நூற்குப் பெயரென்னை? இஃது இயன்ற முறையெது? இந்நூல் எப்பொருள் நுவல்வது? இதனைக் கேட்டற்குரியா ரெவர்? இதுகற்பதால் கைவரும் பயன்யாது? என இங்ஙனம் எட்டு வகையால் தமக்குள் வினவி அறிந்து கோடல் வேண்டு மென்பர் சான்றோர். மேலும் அவர், இவ்வெட்டனையும் அறிதலோடமையாது அந்நூல் தோன்றிய காலமும், அஃது அரங்கேறிய களமும், அது தோன்றக் காரணமுமாகிய இம் மூன்றனையுந் தெரிந்து கோடலும் சாலு மென்பார். இவர் தலைமையில், இவரிவர் கூடிய வரங்கில், இவர் காலத்தில் இஃது அரங்கேறினதெனத் தெரிந்து கொள்ளின் அந் நூலியல்பை முன்னரே துணிந்துகொள்ளக் கூடும்.

சிறப்புப் பாயிரம்

மேற்கூறிய பதினொருவகை வினக் களுக்குரிய விடையாகிய செய்திகளைக் கொண்ட பகுதிக்குப் பாயிர மென்பது பெயர். ஆயிரம் விதத்தாற் சிறந் திருந்தாலும் பாயிரமில்லாது போயின் அது பனுவலாகாது. பனுவ லென்பது பன்னிப்பன்னி அஃதாவது சொல்லிச் சொல்லிக் கற்பதற்கேற்ற நூலாம். ஓவியமில்லாத மாடமும், கோபுர மில்லாத மாநகரும், அணிகலமில்லாத மாதரும் போலும் பாயிரமில்லாத நூல். பாயிரமென்பது முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை யென்றெல்லாம் வேறுவேறு பெயர்பெறும். இப் பலபெயர்களாலே பாயிரத்தின் சிறப்பு இனிது விளங்கும். இது பொதுவும் சிறப்பும் என இருவகைப்படும் இங்குச் சொன்ன இவையடங்கிய பாயிரம் சிறப்புப்பாயிரமாம். ஒன்றற்குக் கூறியது பிறிதொன்றற் கேலாது தனித்தனி யொவ்வொரு நூலுக்கே பொருந்துதலால் சிறப்புப்பாயிர மெனப்படும். நூலாசிரியனுக்கு ஆசிரியன், உடன்கற்றோன், மாணுக்கன், உரையாசிரியன் என்னும் இவர்களுள் எவனேனும் ஒருவனாற் சிறப்புப் பாயிரங் கூறப்படும்.

அரங்கேற்றத்தில் தொல்காப்பியம்

ஒல்காப் பெரும்புகழ்த் தொல் காப்பியமே இந்நாளைய தமிழ் நூல்களில்

தொண்டு கிழமானது, அந்நாள் தொல்காப்பியமும் அரங்கேறியுள்ளது. அஃது அரங்கேறிய செய்தி அதன் சிறப்புப் பாயிரத்தால் நன்கு விளங்கும். அச் சிறப்புப்பாயிரம் அகத்தியர் மாணவர் பன்னிருவரில் ஒருவரும், தொல்காப்பியர்க்கு இன்னுயிர் நண்பராகியும் உடன் மாணவராகியும் அமைந்தவரும், மாபெரும் புலமையாளருமான பனம்பாரனாரால் அருளப்பெற்றது. ஆழி வடிம் பலம்பநின்ற பாண்டியன் முன்னிலையில் புலத்துறை முற்றிய அதங்கோட்டாசான் தலைமையில், இடைச் சங்கத்தில் தொல்காப்பியம் அரங்கேறியது. இவ்வாசான் அதங்கோடென்னு மூரினர்; அகத்தியர் மாணவர்; தொல்காப்பியர்க்கு நண்பர்; பனம்பாரனார் பாராட்டுப் பெற்றவர். "அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசா னென்பார், பனம்பாரனார்: அதங்கோடு குமரிமாவட்டத்துள்ளதோரூர், அதங்கோடு, இதாங்கோடென மரீஇ இந்நாள் 'திருவிதாங்கோடு' என வழங்குவதுமாகலாம்.

சங்ககாலத்தேயன்றிச் சங்கமரீஇய காலத்தும் அரங்கேற்றம் வழக்கத்திலிருந்தது புதுமையானதன்று. செந்தமிழ்த்தாய் அணிமேகலையாய்த் திகழும் மணிமேகலையும், அவட்கேற்ற கலம்பலவற்றுள் நலம்பல தரூஉம் சிலம்பும் அரங்கேறிய செய்தி, அவ்வந் நூல்களாற் போதரும், "இவ்வாறைந்து முரைசா லடிகளளரு மதுரைக் கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" எனச் சிலப்பதிகாரப் பதிகத்தொடர்கள் சாத்தனார் தலைமையிற் சிலப்பதிகார அரங்கேற்றம் நிகழ்ந்தது விளக்கும். "இளங்கோ வேந்த னருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திறம் மணிமேகலை துறவு, ஆறைம் பாட்டினு ளறிய வைத்தனன்" என்ற மணிமேகலைத் தொடர்கள், இளங்கோவடிகள் தலைமையில் மணிமேகலை அரங்கேறினது புலப்படுத்தும். தலைமைபற்றித் தொல்காப்பிய அரங்கேற்றத்துக்கு அதங்கோட்டாசான் பெயரும், சிலப்பதிகார மணிமேகலை அரங்கேற்றங்களுக்கு முறையே சாத்தனார் இளங்கோவடிகள் பெயர்களுங் கூறப்பெற்றன.

வேறொருவகை யரங்கேற்றம்

இனிப் புதுவகையானதோர் அரங்கேற்றமும் ஒருகால் நிகழ்ந்தது. அஃது இறையனா ரகப் பொருளுரை யரங்கேற்றம். இறையனார் இயற்றித்தந்த அகப்பொருளுக்கு மதுரை மருதனிள நாகனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலானோர் உரை கண்டனர். அவ்வுரைகளில் மெய்யுரை பொய்யுரை காணவியலாது புலவர் குழாம் மயங்கியபோது வானகத்து ஒரு திருச்சொல்லெழுந்தது. அதன்படி உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பானைப் பைங்கண்ணன்,

புன்மயிரன், ஐயாட்டைப் பருவத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை யென்றிகழாது, அவனுழைப் போந்து வேண்டியழைத்துக்கொடு வந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூடி, வெண்சாந்தணிந்து, கன்மாப் பலகை யேற்றி, அவனை மேலிரீஇத் தாங்கீழிருந்து, தத்தம் உரையை யுரைப்ப, எல்லாரும் முறையே யுரைப் பக்கேட்டு வாளாவிருந்து, இளநாகனுர் உரைத்தவிடத்துக் கண்ணீர் ஒரோ வழி வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, நக்கீரர் உரைத்த போது சொற்ரொறும் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப் பவிருந்தான். அதனுல் மெய்யுரை பெற்ரும் இந்நூற்கென்ருர்.

பொதுமறை யரங்கேற்றம்

மதுரையில் திருக்குறள் அரங் கேற்றம் பற்றி இறுதியாக அறிய லுறுவோம், தொண்டைநாட்டுத் திருமயிலையில் பிறந்துவளர்ந்து வாழ்ந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தாம் யாத்த திருக்குறள் அரங்கேற்றத்துக் கென மதுரை வந்தா ரென்னுங் கூற்றுப் பசுமலை நாவலர், கணக்காயர், டாக்டர் பாரதியாரவர்களால் தக்க சான்றுகள் காட்டி மறுக்கப் பெற்றுள்ளது. பாண்டிநாட்டுக் கோநகராகிய மாமதுரைக்கட் டோன்றிப் புலத்துறை முற்றிப் பல்கலைக் குரிசிலாய் வாழ்ந்த பொய்யாமொழியார், பழியில்வழிச் செல்லும் செழியர் வேண்ட, அவர் வேண்டுகேட் கிணங்கி யாட்சிக் குழுத் தலைவராயமர்ந்து, சிங்களஞ் சோனகஞ் சாவகமாதிய தீவுபலவினும் வானவர் தலைவரென வாழ்ந்த அம் மீனவர் கொடிபறக்க உதவினுர். அங்ஙனம் வாழும்போது தமது பல்றலையாய நுண்ணறிவு தமிழகத்துக்கும் உலகுக்கும் உதவக்கருதிக் கழியநெடியநாண் முயற்சியால் அவருள் திருக்குறள் கருவாகி உருக்கொண்டது.

திருக்குறள் அரங்கேற்றத் தலைவர்

மக்களுக்கிடையில் திருக்குறள் ஆட்சி வலுத்தது. கேட்டோர் கடுகைத் துளைத் தெழுகடலைப் புகட்டிய காட்சி போல்வ தென்றனர். மற்றுஞ் சிலர் அணுவைத்துளைத் தெழு கடலைப் புகட்டிய மாட்சிக் கொத்ததென வாயாரப் பாராட்டினர். அக்காலத்துப் பாண்டியனுன உக்கிரப்பெருவழுதி, பொதுமறையாகிய திருக்குறள் மாசு மறுவற்றதெனப் புலப்படுத்தற்கு அரங்கேற்ற ஏற்பாடு செய்தான். அரசியல் முறையானே நாடெங்கும் அறியப் பெற்றிருந்த நாயனுர், தம் கருத்துக் கருவூலமான திருக்குறளை அறிஞர் பலர் முன்னிலையில் விரித்துக் கூறுவரென்னுஞ் செய்தி யெங்கும் பரவினது. ஆடவரும் பெண்டிருமான புலமை நலம் படைத்தவரும், பொது மக்களுமானவர் மாநகரி லொருங்கு குழுமினர். திருவள்ளுவர்க்கு ஒப் பாரும் மிக்காருமான வேறு புலவர் எவரு மின்மையான் தலைமை தாங்கற் குரியார் இலராயினர். ஆகவே அறிவுத் தலைமகளாகிய கலைமகள் திருவுருவும், அங்கிங்கெனுதபடி யெங்கும் நிறைந்த ஆண்டவன் திருவுருவும் அரங்கில் தலைமையிடத்தை யழகுறுத்தின.


கேட்டவர் உவகையும் சொல்லியோர் பூரிப்பும்

தெய்வப்புலவர், ஆயிரத்து முந்நூற்று முப்பது பாட்டுகளையும்

பாயிரத்துடன் படிப்படியாக விளக்கிக் கூறினர். வள்ளுவர் தெள்ளுரை கேட்டு அங்கு உள்ளவர், 'நாநலம் படைத்த இவர், மாசற்ற சில சொல்லல் தேற்றியவர். எனவேதான் தாம் பல சொல்லக் காமுற்றுரிலர். இவர் கருத்துகள் கேட்டாரைப் பிணிக்க வல்லன. கேளாரும் வேட்பமொழியுஞ் சிறப்பின. இம்மிக்காரொடு தலைப்பெய்து யாம் அறியாதனவெல்லாம் அறியப் பெற்றேம்; யாண்டு பலவாக நரையில வாயினேம், என்று ஒருவர்க்கொருவர் சொல்லி மகிழ்ந்தனர். விளக்கங்கூறுந் திருவள்ளுவர் நிகழ்வின்கண் சொற் பொருள்களின் சுவைநுகர்வானும், புகழ் பொருள் பூசை பெறுதலானும், எதிர்வின்கண் அறம் வீடு எய்தலா மென்னும் உணர்வானும் இடையறாத இன்பம் உற்றனர், திருக்குறள் தெளிவுரை கேட்டவர்கள், கடலமுதுண்டவர் போலக் களிப்புற்று உடலும் உயிரும் தளிர்த்தனர்.

பொய்யாமொழிக்குப் புலவர் புகழுரை

அரங்கேற்றத்திற் பங்குகொண்டார் பலராயினும், தமிழகப் புலவர் குழுவினராய்த் தமிழகராய்ந்த சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரும், தலைமை தாங்கிய இரு திருவுருவங்களுக்குரிய நாமகளும், இறைவரும் திருக்குறள் பற்றிய தமது கருத்துக்களை யொவ்வொரு வெண்பா வாயிலாக வெளிப்படுத்தினர். நான்முகன் நாவிலிருந்து படைப்புக்காலத்தில் நான் மறை பகர்ந்து, இடைக் காலத்தில் வியாசன் நாவிற்றங்கிப் பாரதம்பாடி, இக்காலத்தில் திருவள்ளுவர் நாக்கில் வீற்றிருந்து திருக்குறள் கூறினேன்' என நாமகள் சொன்னாள். திருக்குறள் தெய்வத்தன்மை படைத்த கற்பக மரத்து மலர் போன்றது. கற்பகப்பூ எக்காலத்தும் தன்னழகு கெடாது; நெடிய பல காலமாயினும் ஒரே நிலையிலிருந்து தேனைச் சொரியும். அங்ஙனமே திருக்குறளும் பொலிவு



குன்றாமல் உயர்ந்த கருத்தை வழங்கிய வண்ணமிருக்குமென இறைவர் பாராட்டினர்.

செம்மன வழுதியின் விம்மிதப் பேருரை

துணை புரிந்து அரங்கேற்றத்தைச் சிறப்பித்த உக்கிரப்பெருவழுதி, திருக்குறள் விளக்கவுரை கேட்டு விம்மிதங் கொண்டான். கவியரங்கேறிய சங்கத் தலைவனுதலால் தானும் தன் கருத்தை வெண்பாவால் விளம்பினான். நான்முகன் திருவள்ளுவராகப் பிறரறியாமல் உருக்கொண்டுவந்து நான் மறையாகத் தான் வடமொழியிற் சொன்ன உயர்ந்த பொருள்களை முப்பாற் பொருளாகத் திருவாய் மலர்ந்தருளித் திருக்குறளாகத் தென்மொழியிற் றந்தானெனப்புனைந்து பாடினான். கல்வியிற் பெரியராகிய கபிலர், திருக்குறளரங்கேற்றத்திற் கலந்துகொண்ட பெரும் புலவர்களி

லொருவர். அவர் திருக்குறட் கருத்துகளை நினைக்கிறார். அவை யாழ்ந்து கொண்டே செல்கின்றன. அக்கருத்துகளைத் தாங்கியுள்ள பாட்டுகளைக் கருதுகிறார். அவை ஒன்றே முக்காலடியுடையனவாக அறிகிறார்.

ஒப்புயர்வற்ற திப்பிய உவமை

இந்த ஏற்றத் தாழ்வை யெண்ண வெண்ண அவர்க்கு வியப்பு எல்லை மீறியது. அவர் தம் வியப்புணர்ச்சியைத் தக்க வெடுத்துக்காட்டால் விளக்க முனைந்தார். வைகறைப் போதில் வையை வடகரைப் பகுதிக்குச் சென்றனர். சென்றவர், சிறிய புல்லின் நுனியில் தினையளவுக்கும் போதாத பனிநீரைக் கண்டார். அருகில் வானளாவிய கரிய நெடிய பசிய ஓலை காய்களைக்கொண்ட பனை, அவர் கண்ணுக்குப் புலனாயது. பனித்துளி இளங்கதிரிற் கபிலர் பார்வையிற் பட்டது பனையுருவத்தோடு. அவர் கண்ணுக்குச் சிறிய துளியில் நீண்ட பனை வடிவம், பசிய ஓலை குரும்பைகள் உருவம் ஆகியவை தெளிவாய்த் தெரிந்தன. அப்போது ஒன்றே முக்காலடியில் உயர் கருத்துகள் தோன்றும் திருக்குறள் நினைவுகொண்டார். இதற்குமேல் திருக்குறட் பெருமை விளக்க வேறு எவர் என்ன சான்று காட்ட முடியும்? சிறிய பாட்டுகளில் அரிய கருத்துகளைக் கூறும் திருக்குறள் சிறிய வடிவில் பெரிய பனையுருவை யடக்கிக் காட்டும் பனித்துளிபோல்வது என்றார் கபிலர்.

நுண்ணிய கருத்துகள்

கபிலருக்கு இளைத்தவரல்லர் அவர் நண்பர் பரணர். திருவள்ளுவர் ஒரு வகையில் உலகளந்தார். திருமால் ஒரு வகையில் உலகளந்தார். திருவள்ளுவர் அளந்தது எவராலும் அளக்கப்படாத கருத்துப் பொருள். திருமாலளந்தது மிக வலியவரில் ஒரு சிலர் அளக்கும் காட்சிப்பொருள். திருமால் உலகளக்கத் தாமே குறளானார். திருவள்ளுவர் உலகளக்கத் தாம் குறளுருவை உருவாக்கினார். குறளுருவைக் கொண்ட திருமால் அவ்வுருவாலேயே உலகளக்க முடியாதென நெடுமாலானார். திருவள்ளுவர் தாந் தோற்றுவித்த குறளுருவாலேயே உலகளத்தற்றொழிலைச் செய்து முடித்தார். இம் முறையால் திருமாலை நோக்கத் திருவள்ளுவரே சிறப்புடையரென்றார் பரணர். இத்தனை யரிய பெரிய கருத்துகள் கொண்டது இப் பாட்டு.

> மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு
> மாணடியான்
> ஞால முழுது நயந்தளந்தான்—
> வாலறிவின்
> வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால்
> வையத்தா
> ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.
> —இதனை

நுனித்துணர்ந்து படிக்கப்படிக்கப் பல நுண்ணிய கருத்துக்ள் புலனாகும்.

தீராத நோய்தீர்த்த திருக்குறள்

திருக்குறளரங்கேற்றத்தால் தீராத தலைவலி யொருவருக்குத் தீர்ந்துள்ளது. தீராத நோய்களைச் சிறந்த கருத்துள்ள நூல்களைக் கேட்பித்து இன்று வெளி நாடுகளில் மருத்துவர் தீர்க்கின்றனர். அன்றே சாத்தனார்க்கிருந்த ஒரு பக்கத்துத் தலைவலியைத் திருக்குறள் தீர்த்துள்ளது. சீந்திச் சருக்கரை, சுக்குத்தூள், தேன் என்னும் மூன்றுங் கலந்த கலப்பு, மருந்தாய்த் தலைவலி தீர்க்கும்.

அவ்வாறே அறம் பொருளின்பமாகிய முப்பாலுங் கலந்த கலப்பாகிய திருக்குறள், சாத்தனுர் தலைவலிக்குமருந்தாகி அதனைத் தீர்த்தது. இந்நிகழ்ச்சியை உடனிருந்து கண்டவர் ஒரு புலவர். அவர் மருத்துவர்; தாமோதரனுரென்னும் பெயரினர். அம்மருத்துவப் புலவர் பாடிய,

சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்— காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு,—என்னும்

இந்தப் பாட்டு அதற்குச் சான்ருகத் திருவள்ளுவ மாலையிலுள்ளது.

முடிப்புரை

மேலும் புலவர் பலர் திருக்குறளிற் ருந்தாங் கண்ட சிறப்பியல்புகளை நல்ல பல உவமைகள்கொண்டு விளக்குவர். மதுரைப் புலவராதலால் வையையாற் றிற் கண்ட காட்சியை உவமை கூறுவர். மணலைத் தோண்டுந்தோறும் நீர் சுரக்கும். அதுபோலத் திருக்குறளை ஆராயுந்தோறுங் கருத்துச் சுரக்கும். இன்னமும் புதல்வர்கள் வாய் வைத்துச் சுவைக்குந்தோறும் தாய் மார்பிற் பால் சுரக்கும். அதுபோல் குறட்பாக்களை நினைக்குந்தோறும் புத்தம்புதிய கருத்துச்சுரக்கும் என ஒரு புலவர் கூறுவர். பல புலவர்கள் திருக்குறளின் பால் இயல் தலைப்புகளை அளவிட்டுரைப்பர். மற்றுஞ் சிலர் வடமொழி நான்மறைக் கிணையானது திருக்குறளென்பதைப் பலவகையான் வற்புறுத்துவர். அரங்கேறிய நூல் களிலே திருக்குற ளொன்றுக்குத்தான் அரங்கேற்றத்திற் கலந்துகொண்ட புல வர்களின் பாராட்டுப் பாடல்களின் ருெகுப்புத் "திருவள்ளுவ மாலை" யென்னும் பெயரால் இன்றளவும் நின்று நிலவுகிறது. இதனுலே அது மாசுமறு வற்ற தென விளங்கும். இவ்வாறு திருக்குறளரங்கேற்றம் இம்மாட மதுரையில் பெருக்கமாக நிகழ்ந்தது. இங்ஙன மில்லாமல் புலவர்களைத் தாழ்த்தும் பொருந்தாச் செய்திகள் சில இவ்வரங் கேற்றம் பற்றிச் சிலர் கூறுவர். அவை விரிவஞ்சி விடப்பெற்றன.

யாம் இரப்பதை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனு மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே.

(பரிபாடல் 5-ம் பாடல்)

மதுரையின் மாண்பு

வ. பெருமாள், எம்.ஏ.,பி.டி.,

மதுரை, மதுராபுரி, மருதை, கூடல், நான் மாடக் கூடல், ஆலவாய், நெடு மாடக் கூடல் முதலிய பொருள் பொதிந்த பெயர்கள் மதுரைமாநகர்க்கு உண்டு. மதுரம் என்னும் சொல் இனிமையைக் குறிக்கும். மதுரமான தமிழ், இந்நகரில் எப்போதும் (எக்காலத்திலும்) சிறப்பாகச் செழித்து வாழ்வதால் இது மதுரைஎனப் பெயர் பெற்றது. இறைவன் சடாமகுட அமிழ்து சிந்தி எங்கும் மதுரம் கமழ்ந்ததால் இந்நகர், மதுராபுரி என்னும் பெயர் பெற்றது. மருத வளம் மிகுந்து விளங்குவதால் இப்பேரூர்க்கு மருதை என்னும் பெயரும் தோன்றிற்று. தமிழ்ப்புலவர்கள் பலரும் இந்நகரில் கூடித் தமிழ் ஆய்ந்ததால் இந்நகர் கூடல் எனவும் பெயர் பெற்றது.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்குத் தக்க எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள் சங்ககாலப் புலவர்கள். கூடு என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியது 'கூடல்'. இந்நகருக்கு நான்மாடக் கூடல் என்னும் பெயரும் உண்டு என்பதை,

"வன்றிறல் வருணன் விட்ட மாரியை
விலக்க ஈசன்
மின்திகழ் சடையி னின்று நீங்கிய
மேக நான்கும்
குன்றுபோல் நிவந்து நான்கு
கூடமாக் கூடலாலே"

என்னும் பாடலால் அறியலாம். ஆலமரத்தை முகப்பில் எல்லையாகக் கொண்டதாலும், சிவபெருமான் ஆணையின்படி தலையும் வாலும் கூடுமாறு ஆலகால நாகம் வளைத்துக் காட்டியதாலும் இந்நகர், ஆலவாய் என்றும் ஆலவாய்க் கோயில் என்றும் வழங்கலாயிற்று. அனைத்து வளமும் ஒருங்கே பெற்ற மதுரை மாநகர்க்கு 'நெடுமாடக் கூடல்' என்னும் பெயரும் உண்டு. இவ்வுண்மையைப் பின் வரும் பாடல் வாயிலாக நன்கு அறியலாம் :

"பைந்தரோ டுடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறிழுக்கி—
எங்கும்
தடுமாற வாகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூடல் அகம்,

மேற்குறிப்பிட்ட பெயர்களைத் தவிர இந்நகர் கன்னிபுரம், சீவன் முத்தித் தலம், துவாத சாந்தம், பூலோக சிவலோகம் முதலிய பெயர்களாலும் குறிக்கப்படுகின்றது. மதுரை என்னும்

சொல்லில் பொருட் செறிவும் நயமும் அமைந்திருக்கும் பெற்றி அதனை நுணுகி ஆய்ந்தால் புலனாகும். மதுரை என்னும் சொல்லில் மது, துரை, மரை ஆகிய மூன்று நயம் வாய்ந்த பொருட் கூறுகள் அமைந்திருப்பது மகிழத்தக்கது. (மது- தேன், அமுதம், பால், வசந்தம்; துரை - பெருமகன்; மரை-மான், தாமரை) சுருங்கக் கூறுமிடத்து மதுரையில் மது உண்டு; துரை உண்டு; மரை உண்டு. செழுமையின் சின்னமாக மதுவும் (தேன்), பெருமையின் அறிகுறியாகத் துரையும் (பெருமகன்), தெய்வீகத்தின் அடையாளமாக மரையும் (தாமரை) மதுரையில் திகழ்வது சிந்திக்கச் சிந்திக்க நயம் தந்த வண்ணம் இருக்கின்றது.

புலவர் சிறப்பு

வேறு எந்த நகரிலும் தோன்றியிராத அளவிற்கு மதுரை மாநகரில் புலவர் பலர்தோன்றி மிகச்சிறப்பாக வாழ்ந்தனர். பாண்டி நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும், சேர சோழ நாடுகளிலிருந்தும் மதுரைக்கு வந்த புலவர்களைத் தவிர, மதுரையிலேயே புலவர் பலர் பிறந்து வளர்ந்து பெரும் புகழுடன் வாழ்ந்தனர். அவர், தம் பெயர்களுக்கு முன்னால் தம் ஊர்ப் பெயராகிய மதுரையை இணைத்தே குறிப்பிடுவது மரபு. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரை ஆசிரியர் கோடங் கொற்றனார், மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார், மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் உற்றனார், மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார், மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார். மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார், மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார், மதுரைக் கண்டர தத்தனார், மதுரைக் கண்ணத்தனார், மதுரைக் கண்ணனார், மதுரைக் கணக்காயனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரைக் கதக்கண்ணனார், மதுரைக் கவுணியன் பூதத்தனார், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக் காஞ்சிப் புலவர், மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார், மதுரைக் கூத்தனார், மதுரைக்கொல்லன் புல்லர், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைச் சுள்ளம் போதனார், மதுரைத்தத்தங்கண்ணனார், மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார், மதுரைப் பள்ளி மருதங் கிழார் மகனார்சொகுத்தனார், மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார், மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார், மதுரைப் புல்லங்கண்ணனார், மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனார், மதுரைப் பெருங் கொல்லனார், மதுரைப் பெருமருதனார், மதுரைப் பெருமருதிள நாகனார், மதுரைப் போத்தனார், மதுரை மருதங் கிழார் மகனார் பெருங்கண்ணனார், மதுரை மருதனிள நாகனார், மதுரை வேளாசான், மதுரை வேளாதத்தர் ஆகிய புலவர்கள் மதுரை மாநகரில் வாழ்ந்தவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும். இவர்கள் சங்கப் புலவர்கள். இவர்கள் எல்லோரையும் மதுரைப் புலவர்கள் என்றும், மதுரையைப் புலவர் நகரம் என்றும் குறிப்பிட்டால் முற்றிலும் பொருந்தும். சங்க கால மதுரை முதுபெரும் புலவர்களால் அணி செய்யப்பெற்றுச் சிறப்புடன் விளங்கிற்று. இப்புலவர்களின் மாண்பினையும்

நுண்மாண் நுழைபுலத்தையும் எடுத்துரைப்பின் இக்கட்டுரை விரியும்.

முத்துச் சிறப்பு

தமிழர்கள் உவந்து போற்றிய மணிகள் ஒன்பது. அவற்றை நவமணி என்று குறிப்பிடுவது மரபு. அவற்றுள் முத்து தலையாயது. அது தமிழர் வாழ்வில் நிலையான இடம் பெற்றுவிட்டது. ஆரம், தரளம், நித்திலம் முதலிய சொற்கள் முத்தைக் குறிக்கும். பாண்டிய நாடு முத்துக்குப் பெயர் பெற்றது என்பதைத் 'தென்னாடு முத்துடைத்து' என்னும் தொடரால் அறியலாம். பாண்டிய நாட்டு முத்து, பார் புகழும் நன்முத்தாகச் சிறந்து விளங்கிற்று, என்பதை இலக்கியச் சான்றுகளும் வரலாற்றுச் சான்றுகளும் தெளிவாக மெய்ப்பிக்கின்றன. பழங்காலத்தில் கொற்கையிலும், இடைக்காலத்தில் காயல்பட்டினத்திலும் முத்துக் குளித்ததைப்போல் இன்றும் தூத்துக்குடியில் முத்துக் குளித்தல் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது, என்பது ஈண்டு நினைவுகூறத்தக்கது. தூய வெண்மையான பல்லிற்கு முத்தை உவமையாகக் குறிப்பிடுவதைத் தமிழிலக்கியத்தில் பரக்கக் காணலாம். உலக வழக்கிலும் காணலாம். தாம் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளுக்கு முத்தான முத்துப் பெயரைச் சூட்டிப் பெற்றோர் அகமகிழ்வதை நாம் இன்றும் காண்கின்றோம். முத்து, முத்துக்குமரன், முத்துக்குமாரசாமி, முத்துரங்கன், முத்துராமன், முத்துராமலிங்கம், முத்துக்கிருட்டிணன், முத்துசாமி, முத்துவேல், முத்துவேலு, முத்தையா, முத்தையன், முத்தப்பா, முத்தப்பன், முத்துக்கறுப்பன், முத்தண்ணன், முத்துமாரி, முத்துலிங்கம், முத்தரசன், முத்தரசு, முத்துமாணிக்கம், முத்திருளாண்டி, முத்துக்கண்ணன், முத்துக்கண்ணு, முத்தம்மா, முத்தாயி, முத்துநாயகி, முத்துலட்சுமி, முத்தரசி, முத்துமாலை, முத்துமணி ஆகிய முத்து முன்னிடுகைப் (Prefix) பெயர்களும் இன்பமுத்து, பேரின்பமுத்து, காத்தமுத்து, சோதிமுத்து, ஞானமுத்து, நல்லமுத்து, நாகமுத்து, நாச்சிமுத்து, பேச்சிமுத்து, பச்சைமுத்து, பிச்சைமுத்து, சுடலைமுத்து, சவுரிமுத்து, மதுமுத்து, மதுரமுத்து, மருதமுத்து, மதலைமுத்து, மாரிமுத்து, வீரமுத்து, செயமுத்து, அங்கமுத்து, தங்கமுத்து, அல்லிமுத்து, வேதமுத்து, செல்லமுத்து, சின்னமுத்து, பெரியமுத்து ஆகிய முத்து பின்னிடுகைப் (Suffix) பெயர்களும் மக்கட் சிறப்புப்பெயர்களாகத் தமிழர்களிடையே வழங்கி வருவதைக் காணலாம். இவற்றுள் சில ஆண்களுக்கு மட்டும் உரியவை. சில பெண்களுக்கு மட்டும் உரியவை; சில இருபாலர்க்கும் உரியவை. தமிழரின் சிறப்புப் பெயர்களில் முத்து எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கின்றது என்பதற்கு இவை போதிய சான்றாகும்.

முத்து முத்தாகக் கண்ணீர் சிந்தினான் என்று கண்ணீர்க்கு முத்தை உவமையாகக் கூறுவது தமிழ் வழக்கு. குழந்தை தாய்க்கு இடும் வாய்முத்தமும் தாய் குழந்தைக்கு இடும் முத்தமும் முத்துப் போன்று விலை மதிக்க முடியாதவை. எனவேதான் முத்தம் என்னும் சொல் வாய் முத்தத்திற்கும் முத்துக்கும் பொதுப் பெயராக அமைந்திருக்கின்றது.

யானைத் தந்தம், பன்றிக் கொம்பு சிப்பி, கமுகு (பாக்கு), வாழை, நந்து (நத்தை), சங்கு, மீன், கொக்கு, நங்கையர் கழுத்து, செந்நெல், மூங்கில், கரும்பு, பசுவின் பல், பாம்பு, மேகம், சந்திரன், உடும்பு, முதலை, தாமரை ஆகிய இருபது இடங்களிலிருந்து முத்துகள் கிடைக்கின்றன. இவ்வுண்மையை,

" தந்திவராக மருப்பிப்பி பூகந் தனிக்கதலி
நந்து சலஞ்சலம் மீன்றலை கொக்கு நளினமின்னார்
கந்தரம் சாலி கழைகன்னல் ஆவின்பல் கட்செவிகார்
இந்து உடும்பு கராமுத்தம் ஈனும் இருபதுமே"

என்னும் செய்யுளால் அறியலாம்.

பாண்டியனின் வெண்கொற்றக் குடை, பேரொளி வாய்ந்த நன்முத்துகளால் ஆகியது. அவன் நாட்டில் சங்குகள் ஈன்ற கடல் முத்துகள் குவிந்து கிடக்கும். இவற்றைத்தவிரப் புன்னை மரங்களிலிருந்து உதிர்ந்து குவிந்த அரும்புகளும், பந்தலைப்போல் அழகு செய்யும் பாக்குமரப்பாளையிலிருந்து கீழே உதிர்ந்த மணிகளும் சிதறிக்கிடக்கும் இவை யாவும் பார்ப்பதற்கு உண்மையான முத்துகள் போலத் தோன்றும். இவ்வாறு பாண்டி நாடு பண்டைய நாடாக விளங்கியதோடு முத்து நாடாகவும் திகழ்ந்தது. முத்தமிழ் வளர்த்த முத்து நாட்டின் முத்துக்காட்சியை முத்தொள்ளாயிரம் நன்கு விளக்குகின்றது. இதோ அச் சொல்லோவியம் :-

" நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவி மொட்டும்
பந்தர் இளங்கமுகின் பாளையும்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றும் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு"

கோவலனைக் கள்வன் எனத் தவறாகஉணர்ந்து ஆராயாது கொன்றான் பாண்டிய வேந்தன். அவன் மனைவி (கோப்பெருந்தேவி) அணிந்திருந்த சிலம்பு முத்துப்பரல் கொண்டது என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது. ' யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே' (சிலப்பதிகாரம்: மதுரைக் காண்டம்: வழக்குரை காதை: 69) என்னும் பாண்டியன் வாக்கு நோக்கத்தக்கது.



சுருங்கக் கூறுமிடத்துத் தென்னாட்டு முத்து, தமிழர் பெருவாழ்வில் மிக ஆழமாக வேர் ஊன்றிவிட்டது.

மதுரைப் பழமொழி

மதுரையைப் பற்றியும் மதுரையை ஒட்டியும் தமிழ்மொழியில் பல பழமொழிகள் எழுந்துள்ளன. அவை மதுரையின் பல்வேறு சிறப்புகளை

எடுத்துரைக்கும் வகையில் அமைந்திருக் கின்றன. தொன்று தொட்டு மதுரை தலைசிறந்த திருத்தலமாக விளங்கு கின்றது. ''மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்றால் புண்ணியம் கிடைக்கும்'' என்னும் தெய்வீக நம்பிக்கை இந்நாட்டில் தொன்று தொட்டு நிலவி வருகின்றது. 'மதுரை யைப் பார்ப்பது பெருமை; பாராமல் இருப்பது சிறுமை, 'மதுரை பாராதவன் கழுதை', 'மதுரை பாராதவன் மாபாவி' ஆகிய இரு பழமொழிகளும் மதுரையின் தெய்வீகப் பெருமையை எடுத்துரைக்கின்றன. பாண்டி நாடு மரியாதை மிகுந்த நாடு; அதற்கு வடக்கில் மரியாதை சிறிது குறைவு, என்னும் பொருள்பட 'மதுரைக்கு வடக்கே மரியாதை இல்லை' என்னும் பழமொழி அமைந்துள்ளது. 'இந்தி யாவில் உள்ள தலைசிறந்த சக்தித் திருத் தலங்களில் மதுரையும் ஒன்று' என் பதைக் 'காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி' என்னும் பழமொழி வாயிலாக அறியலாம். உங்கள் வீட்டில் அம்மா ஆட்சியா? அப்பா ஆட்சியா? என்னும் பொருளில் உங்கள் வீடு மதுரையா? சிதம்பரமா? என்று விடுகதைப் பழமொழியாகக் கேட்பது மரபு. 'மதுரை என்றால் அம்மையார் ஆட்சி' என்று பொருள் 'சிதம்பரம் என்றால் அப்பா ஆட்சி என்று பொருள். மதுரையில் குடிகொண்டுள்ளவள் இறைவி (மீனாட்சி). தில்லையில் (சிதம்பரம்) குடிகொண்டுள்ளவன் இறைவன் (நடராஜப்பெருமான்). 'மதுரைக்கு வழி வாயிலிருக்கிறது' என்பது மதுரையைப் பற்றிய மற்றொரு பழமொழி. 'அழகர் மலை ஊறுகாய் என்றால் அழுத பிள்ளை யும் சோறு உண்ணும்' என்பது பாண்டி நாட்டு மதுரை மாவட்டப் பழமொழி யாகும். பாண்டி நாடே பழம்பதி யாகும், என்பதும், 'மங்கலப் பாண்டி வளநாட்டு மதுரை, என்பதும் வரலாற் றுடன் தொடர்புடைய பழமொழி களாகவே நிலைத்து விட்டன. இவ்வாறு மதுரை, தமிழர் பழமொழிஇலக்கியத் தில் நன்கு நிலைபெற்றுவிட்டது. முற் காலத்தில்கிரேக்க நாட்டின் தலைநகராக விளங்கிய 'ஏதென்ஸ்' பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்தது. மதுரை யும் ஏதன்ஸைப் போலப் பண்பாட்டின் இருப்பிடமாக விளங்குவதைக் கண்ட மேனாட்டார் 'மதுரை இந்தியாவின் ஏதன்ஸ்' என்று குறிப்பிட்டனர். அது மதுரையைப் பற்றிய வரலாற்றுப் பழ மொழியாக நிலைத்து விட்டது.

'' அன்பேஎன் அன்பேஎன் றன்பால் அமுதரற்றி
அன்பேஎன் பாக அறவழியும்—அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான் ''

(திருக்களிற்றுப் –செய். 55)

கேட்டது கிடைக்கும்! நினைப்பது நடக்கும்!

அருள்மிகு வள்ளிநாயகி தேவகுஞ்சரி உடனுறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குமாரவயலூர்.

திருச்சி மாவட்டம்.

ஆதி நாதர் ஆதிநாயகி அமர்ந்த திருக்கோயில், அருணகிரிநாதர், பொய்யா கணபதியின் புகழ்பாடி வயலூர் பெருமானின் பேரருளால் திருப்புகழைப் பொழிந்திட்ட புனித தலமாகும்.

பழமையான தலவிருட்சம் வன்னிமரம் உள்ளது. ஆதிநாதர் ஆதிநாயகியை பூசனை செய்ய தனது ஞானவேலால் உருவாக்கிய சக்தி தீர்த்தம் உள்ளது. திருமுருக கிருபானந்தவாரியார் தலைமையில் ஐந்து லட்ச ரூபாய் செலவில் திருமண மண்டபம், யாத்திரிகர் விடுதி, கோபுரங்கள் அண்மையில் திருப்பணி செய்யப்பட்டு, வேண்டுவார்க்கு வேண்டுவன வரங்களை நல்கி வினைதீர்க்கும் அழகு வேலவன் கண்கண்ட தெய்வமாக விளங்கி வருகின்றார்.

ஊன் உடம்பை அலங்கரிக்கும் ஆபரணங்கள் வயலூரானின் அருள் உருவை அலங்கரிக்கும் தங்க கவசத் திருப்பணியில் சேர்ந்தால் எத்துணை சிறந்த பயன் நமக்கு ஏற்படும். நினைத்தாலே மெய் சிலிர்க்கின்றது.

வாருங்கள் வயலூரை நோக்கி, தாருங்கள் தங்கத்தை, தங்கக் கவச திருப்பணிக்கு.

அறங்காவலர்கள்:
திரு. வி. எம். கணேசன்
பேரூர். திரு. எம். தருமலிங்கம்
திரு. ஆர். சி. லிங்கையயன் செட்டியார்
திரு. பொ. கிருஷ்ணன்

திரு. அ. தருமலிங்கம்,
அறங்காவலர் குழுத்தலைவர்.

திரு. இரா. சிவதேவு
செயல் அலுவலர்.

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி, (மதுரை மாவட்டம்).

தரிசனம்: மலைக்கோவில் பூஜை வகைகளுக்கு

	சாதாரண நாட்களில்	திருவிழா நாட்களில்
நுழைவு:	ரூ.	ரூ.
1. நுழைவு (அர்த்த மண்டபத்திற்கு அருகில்) நபர் 1க்கு	1/-	1/-
2. சிறப்பு அனுமதி (அர்த்த மண்டபம் அருகே)	10/-	10/-
3. விளா பூஜை	2/-	2/-
4. உச்சிக்காலம்	2/	5/-
5. சாயரட்சை	2/-	10/-
6. இராக்காலம்	2/	5/-
அபிஷேகம்:		
1. பஞ்சாமிர்த அபிஷேகம் பால் உள்பட	10/-	10/-
2. பால் அபிஷேகம்	2-25	2-25
3. தீர்த்தம்	1-50	1-50
அர்ச்சனை:		
1. அஷ்டோத்திரம்	1/-	1/-
2. சகஸ்ரநாமம்	1-50	1-50

	சாதாரண நாட்களில்	திருவிழா நாட்களில்
3. தீபாராதனை (சூடம் உள்பட)	ரூ. 0-25	ரூ. 0-25
அலங்காரம்:		
1. ராஜ அலங்காரம்	10/-	10/-
2. வேட அலங்காரம்	10/-	10/-
3. தங்க கவசம்	250/-	250/-
இதர இனங்கள்:		
1. காவடி காணிக்கை	1/-	1/-
2. காதுகுத்து	1/-	1/-
3. பள்ளியறை தீவட்டி	3/-	5/-
4. பள்ளியறை வெண்சாமரம்	1/-	3/-
5. அபிஷேக பஞ்சாமிர்தம் கிலோ 1க்கு	4/-	4/-
6. ஆண்டவரை தங்கரதத்தில் புறப்பாடு செய்ய	750/-	750/-
7. ஆண்டவரை தங்கமயில் வாகனத்தில் புறப்பாடு செய்ய	200/-	200/-
8. முடிகாணிக்கை	1-25	1-25

துணை ஆணையர் — நிர்வாக அதிகாரி.

மதுரைத் திருவிழாக்கள்

S. சந்திரசேகர பட்டர்

திருவிழா என்று தென்மொழியிலும், உற்சவம் என்று வடமொழியிலும் வழங்கப் பெறும் தெய்வத்திரு உலாவானது, பாசச் சேர்க்கையால் மயக்கமுறும் மக்களைப் பாசமயக்கத்தில் இருந்து விடுபடச் செய்யும் சாம்பவீ தீட்சையாக ஆகமங்கள் கூறுகின்றன. முன்செய்வினை காரணமாக, அங்கம் நலிவுற்று, நோயுற்றுக் கோவில் சென்று வழிபட இயலாதோர்க்கும், மற்ற எல்லா வகையினருக்கும் ஆண்டவனின் அருள் நோக்கையும், ஆண்டவன் மூலமான ஆசார்யனின் அருள் நோக்கையும் அடையச் செய்வதே சாம்பவீ தீட்சையான உற்சவங்களாகும். இதையே,

> "மண்ணி னிற்பிறந் தார்பெறும்
> பயன்மதி சூடும்
> அண்ண லார்அடி யார்தமை,
> யமுதுசெய் வித்தல்
> கண்ணி னல்அவர் நல்விழாப்
> பொலிவுகண் டார்தல்
> உண்மை யாமெனி னுலகர்முன்
> வருகென வுரைப்பார்"

எனச் சேக்கிழார்பெருமான், விழாக்களின் இன்றியமையாமைபற்றியும் அவற்றின் புண்ணியம்பற்றியும் கூறியுள்ளார்கள். ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் அவர்களும், பூம்பாவைப் பதிகத்தில் உற்சவத்தின் பெருமையைப் பாடியருளியிருக்கிறார்கள்.

> "உற்சவ விளக்கந் தன்னை
> யுரைத்திடினுயிர தற்கு
> முற்சன னங்கள் விட்ட
> முகிழ்த்ததோர் கருணை யாலே
> தற்பரந் தரும மாகித்
> தனிக்கொடி கட்டி உண்மைச்
> சிற்பரத் துயிர்க்கண் முத்தி
> சேர்த்திடச் செய்வார் மன்னே"

என உற்சவத்தின் பலனைப், பணிமா சாத்திரம், என்னும் நூலில் கூறியிருக்கிறார்.

பாண்டி நாட்டுப் பதினான்கு திருத்தலங்களில்,சிறப்புற்றமதுரைத்தலத்தில் ஒரு வருடத்தில் 13 விழாக்கள் ஏற்படுத்தப்பட்டுப் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றன. அவைகளாவன:

சித்திரை விழா :

சித்திரை மாதத்தில் நடைபெறும் திருக்கல்யாண விழாவாகும் இது. இந்த

விழாவில்தான், ஸ்ரீ மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம், திக்விஜயம், திருக்கல்யாணம், திருத்தேர் உலா ஆகியன கண்கொள்ளாக் காட்சியாக நிகழ்கின்றன. நாயக்கர் காலத்திற்கு முன்னதாகத் திருத்தேர் உலாவும், திருக்கல்யாண விழாவும், தைமாத மக நக்ஷத்திரத்தில் துவங்கி நடந்துவரும், மாசிமண்டல உற்சவத்தில்தான் நடந்து வந்தனவாம். சித்ரா பௌர்ணமி தினத்தில் மதுரை மாநகரில் ஓடும் வைகை நதிக்கு எழுந்தருளிக் காட்சி தரும் ஸ்ரீகள்ளழகர் பெருமான், மதுரைக்கு மேற்கில் இருக்கும் 'தேனூர்' என்னும் சிறு கிராமத்தின் வழியாக ஓடிவரும் இதே வைகை நதியில் எழுந்தருளிக் காட்சிதந்து வந்தாராம்.

மாசி மாதத்தில் அறுவடைகள் பூர்த்தி பெறுத நிலையில், அம்மை மீனாட்சிக்கும், ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கும் நடக்கும் திருக்கல்யாண விழாவையும், திருத்தேர்விழாவையும் தொடர்ந்து காணவர இயலவில்லையே என்ற வேளாண்மைப் பெருமக்களின் குறையை நீக்கவேண்டும் என்றும், ஸ்ரீ கள்ளழகர் சித்ரா பௌர்ணமிக்கு எழுந்தருளும் தேனூர்க் கிராமத்தில் கூடும் மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்க இயலவில்லையே என்றும் எண்ணினார் மன்னர் திருமலை நாயக்கர்.

அவர் எண்ணத்தின் பூர்த்திதான் நாம் இன்று ஸ்ரீமீனாட்சியம்மை திருக்கல்யாணவிழாவும் திருத்தேர் உலாவும், ஸ்ரீகள்ளழகர் வைகைக் காட்சியும் ஆகிய எல்லா விழாக்களையும் ஒருங்கே பார்க்கும் பாக்கியமாகும். இந்தச் சித்திரைவிழாவும், பன்னிரு நாள்களிலும் மாசிவீதியிலேயே ஸ்ரீமீனாட்சி சொக்கேசப் பெருமான் எழுந்தருள்வார்கள்.

வைகாசி விசாக விழா :

திருக்கல்யாணவிழாக் கொண்டாடிய ஸ்ரீமீனாட்சி சொக்கேசருக்கு வைகாசி வசந்த விழா எடுக்க எண்ணினார் மன்னர். அந்த விழா முழுவதும் தம் செலவிலேயே, முழுவதும் தம்மதான ஒரு மண்டபத்திலேயே நடத்தவும் அவர் எண்ணினார்.

எனவே சுவாமி சன்னிதித்தெருவில் கோவிலுக்கு மிகவும் அருகில் உள்ளவீடுகளில் வசித்திருந்து பூஜாகைங்கர்யங்களைச் செய்து வந்தார்கள் ஆதிசைவ மரபிலுதித்த அர்ச்சகர்கள். அவர்களைச் சந்தித்தார் திருமலை மன்னர். பின் அம்மன்னர் ஸ்ரீசொக்கநாதர் கோவிலின் வடக்கு வாயிலில் அர்ச்சகர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்துச் சுவாமி சன்னிதித்தெருவில் தற்போது, 'புது மண்டபம்' என்று வழங்கப்பெறும் வசந்த மண்டபமும், அதன் இருபுறத்தே நீராழிமண்டபமும், கிழக்கே வசந்த விழாநீர்த் தொட்டியும் அமைத்தார். வைகாசி மாதம் விசாக நட்சத்ரத்தோடு முடிவுபெறும் 10 நாள் விழா சிறப்புற அங்கு நடைபெற்றுவருகின்றது, அன்றுமுதல்.

ஆனி விழா :

அடுத்து ஆனி மாதம் நடைபெறும் ஊஞ்சல் விழா மூலநட்சத்ரத்தோடு முடிவடையும் 10 நாள் விழா.

ஆடி விழா :

ஆடிக் கேட்டை நட்சத்ரத்தோடு முடிவடையும் 10 நாள் விழாவான முளைக் கொட்டு விழா முழுவதும் ஸ்ரீ மீனாட்சிக்கேதான். இந்த விழாவை முடித்த பின்தான் விவசாயப் பெரு மக்கள் விவசாய வேலைகளைத் துவங்கு வார்களாம் பண்டை நாள்களில். இந்த விழா கோவில் ஆடி வீதிப் பிரகாரத் திலேயே கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் நடைபெறும் குதிரை வாகனக் காட்சியும், புஷ்பவிமானக் காட்சியும், சைத்யோபசாரக் காட்சியும் மிகச் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

ஆவணி விழா :

அடுத்து வரும் ஆவணி விழா அவிட்ட நட்சத்ரத்தோடு பூர்த்தி யாகும் 18 நாள் விழாவாகும். இந்த விழா ஐந்து கொடிகள் ஏற்றிச் சிறப் பாகத் துவங்கப்படும். துவக்கத்தின் 6 நாள்கள் சந்திரசேகரர் உத்ஸவ மாகும். தொடர்ந்து மீனாட்சி சொக்கேசர் ஆவணிமூலவீதியில் எழுந் தருளுவார். பிட்டு உத்ஸவம் என்றும் இதைச் சொல்லுவார்கள். பிட்டுக்காகச் சிவன் கூலியாளான நிகழ்ச்சிகளும் இந்த உத்ஸவத்தில் சிறப்புற நடித்துக் காட்டப்படுகின்றன. உலகநன்மைகளுக் காகவும், மக்களின் பாச நீக்கத்திற் காகவும் நடைபெறும் எல்லாவிழாக்களை யும்விட இந்த விழாச் சிறப்புமிக்கது.

ஒவ்வொரு நாள் விழாவிலும், மதுரையம் பதியில், பக்தர்கள் பொருட்டுச் சொக்கநாதப் பெருமானுல் ஆற்றப்பட்ட திருவிளையாடல்களின் பெருமையை விளக்கும் முறையில் ஓதுவார் மூர்த்திகளாலும், அர்ச்சகப் பெருமக்களாலும், மற்ற எல்லாச் சமூக ஊழியர்களாலும், பாவனுரூபமாக நடித்துக் காட்டவும், பாடலாகப் பாட வும், உரையாக நிகழ்த்தவும் செய்து அவர்களுக்கு யானை ஏற்றம், பல்லக்கு ஏற்றம் முதலான சகல மரியாதை களும் கொடுத்து ஆண்டவனின் திருவிளையாடல் தத்துவங்களைப் புரிய வைப்பதோடு, வேற்றுமையற்று எல்லா நிலைஊழியர்களுக்கும் கௌரவமளிக்கப் படும் ஒருமைப்பாட்டு உணர்வை உலகத்தோர்க்கு அளிக்கும் உயர் உணர்வு விழாவாக இது திகழ்கிறது.

முதல் நாள் விழா	—	கருங்குருவிக்கருளியது
2ஆம் நாள் விழா	—	நாரைக் கருளியது
3ஆம் நாள் விழா	—	மாணிக்கம் விற்றருளியது
4ஆம் நாள் விழா	—	தருமிக்குப் பொற்கிழியளித்தருளியது
5ஆம் நாள் விழா	—	உலவாக்கோட்டையருளியது
6ஆம் நாள் விழா	—	பக்த பாணனுக்கு உதவியருளியது
7ஆம் நாள் விழா	—	வளையல் விற்றது; ஸ்ரீசொக்கநாதர் பட்டாபிடேகம்
8ஆம் நாள் விழா	—	நரிபரியாக அருளியது
9ஆம் நாள் விழா	—	பிட்டுக்கு மண் சுமந்தது; பிட்டு வாணிச்சிக்கு அருளியது
10ஆம் நாள் விழா	—	விறகு விற்றருளியது

மேற்கூறிய திருவிளையாடற் புராணத் தொடர்பான உற்சவங்களில், கோவில் பணியில் ஈடுபட்டுள்ள அந்த அந்த இனமக்களின் பிரதிநிதிகளைத் தக்கமரியாதையுடனும்மேளதாளங்களுடனும் அழைத்துவரச் செய்து சொக்கநாதப் பெருமான் திருவுலாவோடு உடன் வரச்செய்து குறிப்பிட்ட திருவிளையாடல் பற்றி விவரிக்கப்பட்டபின் யானை, குதிரை, பல்லக்கு ஆகியவற்றில் இருக்கச்செய்து அவரவர்கள் இருக்கைகளில் மரியாதையுடன் விட்டு வருவது பாண்டிய மன்னர்கள் காலந்தொட்டு நடந்துவரும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

புரட்டாசி விழா :

அடுத்துப் புரட்டாசி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி விழாவில் மீனாட்சி உற்சவமூர்த்திக்கு விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெறுவதுபோல் மூலமூர்த்திக்கும் விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நடந்துவருகின்றன.

ஐப்பசி விழா :

ஐப்பசி மாதம் சுக்ல ஷஷ்டியோடு முடிவடையும் தேவியின் கோலாட்ட விழா. புது மண்டபத்தில் நடைபெற்று வரும் இந்த விழாவில் மீனாட்சி அம்மை உலாவரும்போது உடன் இசையோடு கோலாட்ட ஒலி முழக்கிவரும் கன்னிப் பெண்கள் எல்லோருக்கும் விநியோகம் முதலியன நடந்துவருகின்றன.

மேலும் இந்த மாதத்தில் பௌர்ணமி அன்றோடு முடிவு பெறும் ஐந்துநாள் பவித்ர உற்சவம் மிகப்புனித மிக்கது. சுவாமியின் விழாவிலும் பூஜாகாரியங்களிலும் ஏற்படும் குறைகளை நீக்கக் கூடியதாகவே இந்த விழாக் கொண்டாடப்படுகிறது. இந்த ஐப்பசி மாதத்தில் இருவிழாக்கள் தனித்தனியே நடைபெறுகின்றன.



கார்த்திகை விழா :

கார்த்திகை மாத தீப உற்சவம் திருவாதிரை நட்சத்ரத்தோடு முடிவு அடையும் 10 நாள் விழாவாகும் இது. 6ஆம் நாள் விழாவன்று இடபவாகனக் காட்சியும், 7ஆம்நாள் திருக்கார்த்திகையன்று ஓர் இடபவாகனக் காட்சியும், 10ஆம் நாள் விழா அன்று ஓர் இடபவாகனக் காட்சியும் காணக் கூடியது இந்த விழாவின் சிறப்பு அம்சமாகும்.

மார்கழி விழா :

மார்கழி மாதம் முழுதுமே விழாக் கோலம்தான். ஏறத்தாழ 15 ஏக்கர் அளவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கோவிலையே சிறியதாக ஆக்கும் அள

விற்குக் காலை 4 மணிக்கே தினம் பக்தர்கள் கூட்டம் பெருகுகிறது. திருவாதிரை அன்றோடு முடிவுபெறும் 10 நாள் எண்ணெய்க்காப்பு விழாவும், அதே நாள் 10 நாள் காலையில் மாணிக்க வாசகப் பெருமானை எழுந்தருள்வித்து ஓதுவார் மூர்த்திகளால் திருவெம்பாவை இன்னிசை முழங்கச்செய்விக்கும் விழாவும் நடைபெறுகின்றன. இந்த மாத அஷ்டமியன்று இடபவாகனத்தோடு திருத்தேரில் மீனாட்சி சொக்கேசப்பெருமான் எழுந்தருள்வதும் பக்தர்கள் கூட்டமும் காணக்கண் கொள்ளாக் காட்சியாகும்.

தை விழா :

தை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தைத் தீர்க்கமாகக் கொண்டு 10 தினங்கள் நடைபெறும் திருவிழா இது. பின் புனர்பூசத்தன்று கதிரறுப்புத் திருவிழாவும், பூசநட்சத்திரத்தன்று நடைபெறும் தெப்ப உற்சவமும் ராஜ உத்ஸமாகும்.

திருமலைமன்னரின் மந்திரியார் நீலகண்டதீட்சதர் புதுமண்டபம் சிற்ப வேலைப்பாடு நடக்கும்போது கூறப்பட்ட யோசனையின்போது ஏற்பட்ட ஐயத்தால் நடந்த நிகழ்ச்சி வரலாற்றில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது இது. நீலகண்ட தீட்சதர், திருமலைமன்னரிடம் வேண்டிக்கொண்டபடியே திருமலை மன்னர் மதுரையின் கிழக்கே தெப்பக்குளம் எடுப்பித்துத் தம்பிறந்தநாளில் பெருமானைத் தெப்ப உற்சவம் சொள்ளச்செய்து பரிகாரம் செய்தார்.

மாசி விழா :

தை மாதம் மகநட்சத்ரத்தில் துவங்கி எட்டுக்கொடிகள் ஏற்றி விநாயகர், சுப்பிரமணியர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய முதல்மூவருக்கும், சந்திரசேகரப் பெருமானுக்கும், மீனாக்ஷி சொக்கநாதப் பெருமானுக்கும், சண்டேசுரருக்கும் மாகவிழா எடுத்து மௌன உற்சவத்தோடு பூர்த்திபெறும் 40 நாள் விழா. (திருமலை மன்னர் காலத்திற்கு முன்புவரை இந்த விழாவின் போதுதான் கல்யாணம், திருத்தேர் உலா ஆகியன நிகழ்ந்தன.)

பங்குனி விழா :

பங்குனி உத்திரத்தோடு முடிவடையும் 10 நாள் விழா. தெற்குச் சித்திரை வீதியிலுள்ள வெள்ளியம்பல மண்டபத்திற்கு எழுந்தருளி விசேட சைத்யோபசாரங்களுடன் உலா நடைபெறும். 10ஆம் நாள் விழா அன்று திருவாப்புடையார் கோவிலுக்கு எழுந்தருள்வார் மீனாட்சி சொக்கேசர்.

பாண்டிய மன்னர்கள் காலத்தில் பொன்னனையாளுக்குக் காட்சியளித்த இந்தப் பங்குனி உத்திர நன்னாளில் சொக்கநாதப்பெருமான் மதுரையின் கிழக்கில் 12 மைல் தூரத்திலுள்ள திருப்பூவணம் சென்று வருவாராம். (எந்த ஊருக்கு மீனாக்ஷிசுந்தரேசுவரர் எழுந்தருளினாலும் சுவாமிக்கு வேண்டிய அபிஷேக சாமான்கள், திருமஞ்சனம், நிவேதனம், புஷ்பங்கள் எல்லாமே மதுரையிலிருந்து தான் செல்லும். தற்போது திருப்பரங்குன்றத்தில் நடைபெறும்ஸ்ரீ ஆண்டவர் சுப்பிரமணியர்க்கு நடக்கும் திருக்கல்யாண விழாவுக்கு எழுந்தருளும்போதும் இந்த முறையே நடந்துவருகின்றது) தினமும் ஸ்ரீ மீனாக்ஷி கோவில் அர்த்தயாம பூஜை ஒலிகேட்ட பின்பே உணவு அருந்திப் படுக்கச்செல்

வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் திருமலைமன்னர். ஒரு பங்குனி உத்திரத் தன்று ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்வரர் திருப்பூவணம் எழுந்தருளியபின் வைகையில் இருகரையும் புரள வெள்ளம் பெருக்கெடுத்துவிட்டது. ''சொக்கர் இராத் தங்கார்'' என்ற பழமொழியை நாம் காப்பாற்ற வேண்டுமே என நாயக்கர் எண்ணினார். மதுரையிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் பங்குனி உத்திர நன்னாளுக்காகத் திருப்பூவணம் எழுந்தருளியிருக்கும் மீனாக்ஷி சொக்கநாதப்பெருமானை இன்று வைகையில் பெருகி ஓடும் வெள்ளத்தினால் எந்தக் குறையும் நேர்ந்துவிடாது இக்கரை கொண்டுவந்துசேர்க்கும் தீரர்களுக்குத் தக்க சன்மானம் வழங்கப்படும் என்று பறைசாற்றப்பட்டது.

வீரர்கள் புறப்பட்டார்கள். பொங்கிப் பாய்ந்துவரும் வெள்ளத்தைப் பொருட்படுத்தாது எதிர்க்கரை சென்று மீனாட்சி சொக்கேசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் வாகனங்களைத் தோளில் சுமந்து இக்கரை கொண்டு வந்து சேர்த்தார்கள். தக்க சமயத்தில் சொக்கநாதர் அர்த்தயாமபூஜை நடைபெறத் துணிந்து உதவிய தீரர்களின் குடும்பத்திற்கென்றே ''சாமநத்தம்'' என்ற கிராமம் விடப்பட்டது திருமலை மன்னரால். இதுபோன்று ஓரிரு முறை நடைபெற்றதால் திருமலை மன்னர் ஆட்சிக்குப்பின், திருப்பூவணம் செல்லாமல் பங்குனி உத்திர நன்னாளில் மதுரை வைகை நதிக்கு எதிர்க்கரையிலிருக்கும் திருவாப்புடையார் கோவிலுக்கு ஸ்ரீமீனாட்சி சொக்கநாதரை எழுந்தருளச்செய்து திருவிழா கொண்டாடப்படுகிறது.

இங்குக் கொடியேற்றம் நடந்து சொக்கநாதப் பெருமானுக்கும் மீனாக்ஷியம்மனுக்கும் காலை, மாலை நடக்கும் விழாக்கள் 5.

ஸ்ரீ அம்பிகை மீனாட்சிக்கு மட்டும் கொடியேற்றம் செய்து காலை மாலை நடைபெறும் விழா ஒன்று.

கொடி ஏற்றம் இன்றி இரக்ஷா பந்தனத்துடன் மாலை மட்டும் நடத்துவன ஸ்ரீ மீனாட்சிக்கும் சொக்கநாதருக்குமாக மூன்று விழா (வைகாசி - ஆனி - பங்குனி).

தனியாக ஸ்ரீ மீனாட்சிக்கு மட்டும் நடத்தப்பெறும் திருவிழாக்கள் மூன்று (புரட்டாசி-ஐப்பசி-மார்கழி).

சந்திரசேகரர் புறப்பாட்டுடன் நடைபெறும் பவித்ரோற்சவம் ஒன்று.

இதைத் தவிர, ஆனி உத்திரத்தன்று நடராஜப் பெருமான் வீதியுலா, திருவாதிரையன்றுநடராஜப்பெருமான் வீதி யுலா, நாயன்மார்கள் அறுபத்து மூவர்க்கும் அவரவர்கள் திரு நட்சத்திரத்தன்று திருவுலா நடைபெற்று ஓதுவார் மூர்த்திகளால் அந்தந்த நாயன்மாரின் திருச்சரித்திரத்தைப் பாடலாக நிகழ்த்துவது ஆக என்றுமே திருவிழாவாக நடைபெறும் பதி மதுரையம்பதி ஒன்றே.

திருஞானசம்பந்தரும் ஏழாம் நூற்றாண்டுச் சமணமும்

ச. கங்காதரன், எம்.ஏ., எம்.லிட்.,

திருஞான சம்பந்தர் வேற்றுச் சமயத்தவருடைய உடை, நடை, உரை, ஒழுகலாறு முதலியவற்றைக் குறித்துப் பாடியருளியதை நோக்க, 'அவர் வேற்றுச் சமயத்தவர்பால் தீராத வெம்மையுற்றுப் பாடுகிறார், என்பது தெளிவு. சமணர், புத்தர் முதலிய வேற்றுச் சமயத்தவர் நூல்கள், அருளையே பெரும் பொருளாகக் கொண்டு திகழ்கின்றன. அங்ஙனம் அந்த அருளையும் சிறந்த பொருளாகக் கொண்ட திருஞான சம்பந்தர், அவர்களைப் பெரிதும் வெகுண்டு பேசுவானேன் என்ற கேள்வி உடனடியாக நம் உள்ளத்தில் எழுகிறது. இந்தக் கேள்வியைத் தாமே எழுப்பிக்கொண்டு விடை காண முயன்ற பேராசிரியர் திரு. பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு கருதுகின்றார்கள்.

"ஞானசம்பந்தர் முதலிய அருளாளர் உள்ளத்தில் சமணர், புத்தர்களாகிய பிற சமயத்தவர்பால் மாற்றருஞ்சீற்றம் உண்டானதற்குக் காரணம் ஒன்று இருத்தல் வேண்டும். எனினும்இத்துணை நெடுங்காலம் கழிந்த பின்பு நாம் அதனைக் காண்பதென்பது அரியதொரு செயலாகும். புத்த சமயம் அசோக மன்னரது ஆதரவால் வடநாட்டிலும், அவருக்குப் பின் வந்த வல்லாளர் சிலருடைய முயற்சியால் தென்னாட்டிலும் பரவி, நிலை பேறு பெற்றுப் பின்னர் நாளடைவில் சீர் குலைந்து போயிருக்கலாம். அரசியற் கட்சிகள் போலச் சமயங்களும், அரசியல் வலி பெறும் வரையில் மக்கட்கு நல்லன வாகத் தோன்றும்; அவ்வலியற்றதும் அவை தம்முடைய நலங்குன்றிச் சீரழிவது உலகியலில் இயல்பு. கௌதமருடையசமயமும் இவ்வாற்றால் சீரழிந்து போயிற்று எனலாம். ஆயினும் அவருடைய புத்தசமயமும் பிறவுமாகிய வேற்றுச் சமயங்களிடத்துத் தீராத செற்றமுண்டானதற்கு அஃது ஒன்று மட்டில் காரணமாக முடியாது." அக்கால நிலையினை நாம் தெளிய அறிந்து கோடற்கு வேண்டிய சான்றுகள் நிரம்பக் கிடையாத இக்காலத்தில் அது பற்றி நாம் பலவேறு காரணங்களைக் கற்பித்துக் கொள்வது நேரிதன்று, தெளிவும், மெய்ம்மையும் நிறைந்த சான்றுகளால், அக்கால நிலை விளங்கப் புலப்படுமாயின், அதுகொண்டு உண்மை

தெளிந்து நாம் பெருமகிழ்ச்சி கொள்ளலாம்.

சேக்கிழாரின் பெரிய புராணத்திலும், திருஞானசம்பந்தரின் திருவாக்குகளிலும் மதுரைத் தொடர்பான நிகழ்ச்சிகளால் நாம் பல செய்திகளை அறியலாம்.

1. சேக்கிழார், மதுரையில் பரவியிருந்த சமணசமயத்தைப் பற்றிக்கூறும் போது "மெய்வகை நெறியில் நில்லா வினையமண் சமயம்" என்று கூறுகின்றார். (பெ. பு. 2502) அரசன் முன் செய்தீவினைப் பயத்தினாலே, வினையை வற்புறுத்தும் சமணசமயச் சார்பினை அறமென நினைந்து நிற்கவே, மன்னிய சைவ வாய்மை ஆகிய வைதிக வழக்கமாகும் நன்னெறி திரிந்தது; சூழிருட் குழுக்கள் போல அமணர் மேவும் பாழிகளும், பள்ளிகளும் பூழியர் நாடு முழுதும் பெருகின.

'பாழி' என்பது சமணர், கடவுள் வழிபாட்டுக்கு அமைத்த கோயில்கள். 'பள்ளி' என்பது சமணர் குருமார்கள் கூடிப்பயின்று தங்குமிடங்கள். 'பாழி', 'பள்ளி' என வழங்குதல் பழைய சைவ மரபு என்பதைத் 'திருவரதைப்பெரும் பாழி, 'திருச்செம்பொன்பள்ளி' என்னும் தலங்களின் பெயர்கள்மூலம் அறியலாம்.

2. திருஞான சம்பந்தர் வருகையைச் சார்ந்து எண்பெருங்குன்றம், மேவும் அமணர் தங்கட் கழிவு அறிவுறுக்குமாறு தீக்கனுக்களும், தீய நிமித்தங்களும் தோன்றின. இதில் 'எண்பெருங்குன்றம்' என்பது மதுரையைச் சூழ்ந்துள்ள ஆனைமலை, முதலான எட்டுக் குன்றுகள். இவை ஒவ்வொன்றிலும் சமணர்கள் பள்ளிகள் அமைத்து ஆயிரமாயிரம் அமணக் குருமார்கள் தங்கித் தங்கள் சமயம் பரப்பினர். 'ஆனை மாமலை யாதி யாய விடங்களில் பல வல்லல் சேர்' (சம்பந்தர்)

"அஞ்சனங் கௌஞ்சங் கோவர்த் தனகிரி
கூடங் காஞ்சி
குஞ்சரஞ் சையமே கூடமே விந்த மென்னு
மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகுறு
மமணர்"
(திருவிளையாடற்புராணம்—யானையெறிந்த
படலம் 7)

ஈண்டுத் திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் குறிக்கும் பெருந்தொகைப் பாடலும் நாம் கருத்திற் கொள்ளத்தக்கது.

"பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
அரங்குன்றம் பேராந்தை யானை—
யிருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப
வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு"

சிவபிரான், கருணைத்திறத்தினால் தீய நிமித்தங்கள், தீய கனவுகள் மூலம் சமணர்க்கு முன்னறிவிப்புச் செய்தார். 'இவை சைவத்துக்குத் தாம் செய்த தீமைகளின் பயனாக வருவன' என்றறிந்து அவற்றினின்று நீங்கி உய்யும் வழியைத் தேடிச் சமணர்கள் தப்பித்திருக்கலாம். அவ்வாறு செய்யவொட்டாது தடுத்தது ஆணவ மறைப்பும், கன்ம நிலையுமாம். 'அறிவிக்க அறிதல் ஆன்ம இயல்பு; அறிவித்தாலும் அறியாமல் செய்தல் ஆணவவலியும், கன்ம நிலையுமாம் என்பது சைவசாத்திர உண்மைகள்.

திருஞான சம்பந்தரின் மதுரை வருகையைக் குறிக்கும்போது அமணெனும் பாவ இருஞ்சேனை இரிந்தோடப், புண்ணியத்தின் படையெழுச்சி போலவும் (பெ. பு. 2553) அமண் மாசு கழுவுதற்கும் (பெ. பு. 2554), அமணென்னும் வல்லிருள் போய் மாய்வதற்கும் அண்டமெலாம் கொண்டதொரு ஞானமணி விளக்கெழுந்து வருவது (பெ. பு. 2555)



போலவும் திருஞானசம்பந்தர் வந்தார் எனக் குறிக்கின்றார். ஈண்டுச் சமண் சமயச் சார்பால் தமிழ்ச்சமுதாயத்துக்கு உற்ற இருளைக் குறிக்கவே இவ்வாறு கூறியிருக்கலாம்.

4. பாண்டி நாட்டமைச்சர் குலச்சிறையார் பிள்ளையாரின் வருகையால் மதுரை மாநகர் பெற்ற பயனைக் குறிக்கும்போது,

"சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்,
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்
நன் றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வெற்றிகொள் திருநீற்று ஒளியினில்
விளங்கும்
மேன்மையும் படைத்தனம்'' என்பார்
—(பெ. பு. 2562)

ஈண்டுச் சமண் சமயச் சார்பு கொண்ட நாட்டையும், மன்னனையும்; சேக்கிழார் "நன்றியில் நெறியில் அழுந்திய நாடும், நற்றமிழ் வேந்தனும்'' என்று குறிப்பிடுகின்றார். தம்முணர்வின் தமியாகிய இறைவனே குருவாய் வந்து உயிர்கட்குச் செய்விக்கும் காட்டும் உபகாரம், காணும் உபகாரம் முதலியவற்றை அறிவிக்கும் இறைவனையும் அவரது செயலையும் உள்ளவாறு அறியா நிலை 'நன்றியில் நெறி' என்று குறிப்பிடப்படுகிறது. சிவஞான பாடியம் கண்ட சிவஞான முனிவர் 12ஆம் சூத்திரத்தில் "தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப், பின்னை மறைத்தல் பிழை'' என்னும் வெண்பாவுக்கு உரை வகுக்கும் போது "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்னும் திருக்குறளை மேற்கோள் காட்டிச் 'செய்ந்நன்றி மறவாச் சமயம் சைவம்' என்று எடுத்துக்காட்டியிருப்பது ஈண்டு நினைந்து மகிழ்தற்குரியது.

5. செற்றம் மீக்கொண்ட சிந்தையும், செய்கையும் உடைய அமணர், அரசனிடம் ஞானசம்பந்தர் மடத்தில் 'வெந்தழற்பட விஞ்சை மந்திரத்

தொழில் விளைத்தால் போதும்; அவர் இந்நகரத்தில் இருந்து ஓடுவார்' என அனுமதி பெற்றுப்பின் மந்திரத்தால் தீ உண்டாகாததனால், மன்னனிடம் தங்களது செல்வாக்கு அழியும் என்று பொதி தழல் கொண்டு தந்தொழில் புரிந்தனர். விஞ்சை மந்திரத்தால் வருங்கழல் அணிமையில் தீ மூள்வது போலவே காட்டுதலின்றிப் பெருங்கேடு விளையாது என்பது அத்தொழிலினர் கண்டது. இதை உணர்ந்தே மன்னன் ஒப்புதல் அளிக்கக் கொல்லாமை மறைந்துறையும் அமணர், மன்னன் அனுமதிக்கு மாறாக மடத்துக்கு வெந்தழல் வைத்தனர்.

6. 'பையவே சென்று பாண்டியற்கா'கெனப் பிள்ளையார் பணித்தவாறே (பெ. பு. 2607) வெப்பு நோயால் மன்னன் துன்புறும்போது சமணர்கள் "நின் அறநெறியை நீயே காத்தருள் செய்தி; உன் நோயை யாமும், அவரும் ஒக்கத்தீர்க்க மொழிந்து, பின் அவரால் தீர்ந்ததெனினும் யாமும் தீர்த்தோமாகவும் இசைவாய்" என்றனர். இதனால் சமணரின் பொய்ம்மை நெறி புலப்பட்டது. சமயக் கொள்கைக்கு மாறுபாடானதொரு அடாத செயலைச் செய்ய நேர்ந்தபோது, மேலும் சமய நெறி வழுவாது அதனைத் தீர்க்க வல்லதொரு உபாயம் கைக்கொள்ளத் தக்கது என்பது முறை, 'அத்தகைய உபாயம் இதுவேயாம்' என்று அரசனுக்குப் புகட்டினர். இக்கூற்றால் அக்காலச் சமணர், உண்மைச் சமணத்தின் செந்நெறியினின்று வழுக்கி வீழ்ந்தனர் என்பதும் நன்கு புலனாகிறது.

7. இறைவனது ஞானப் பாலுண்டு, திரு இலம்பையங் கோட்டூர்ப் பதிகத்தில் சிவபிரானது உரையையே தாம் பாடுவதாக "எனதுரை தனதுரை யாகப்" பாடிய திருஞான சம்பந்தர், சமணர்களை வெல்லுமுன் இறைவன் திருவுளமறியத் திருக்கோயிலுக்கு எழுந்தருளிக், 'காட்டுமாவதுரி' என்னும் பதிகத்தால் பரசமய நிராகரித்தலையும், 'வேத வேள்வி'யினால் நீற்று நெறியினை ஆக்குதலையும் வேண்டிப் பதிகம் பாடுகின்றார். முற்பதிகத்தில் 'வாது செய்யத் திருவுள்ளமே' என்று பாடித் திருவுள்ளமறிந்த பிள்ளையார், அவ்வாதில் கடைபோக வெல்லக்கருதிப் பிற்பதிகத்தில் 'வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே' என்று பாடுவதன் கருத்து உற்று நோக்கி மகிழ்தற்குரியது.

8. காலை எழுங் கதிரவனைப் புடைசூழும் கருமுகில்போல், பீலிசேர் சமண்கையர் பலரும் பிள்ளையார் ஒருவரை முன் சூழ்ந்து தமது நூற்பொருளை உரைத்தனர். வளவர்கோன் பாவையார் அஞ்சவும், ஆளுடைய பிள்ளையார் அம்மையாரைத் தேற்றி 'நீ நனி அஞ்ச வேண்டா, நிலையிலா அமணர்க்கென்றும் யானெளியேனலேன்' என்று கூறி 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப் பதிகம் பாடி வலப்பக்க வெப்பு நோயைத் தணித்தார்.

9. சுர வாதத்திலும், அனல் வாதத்திலும் தோல்வி கண்ட அமணர்களைப் 'பொய்யினால் மெய்யை ஆக்கப் புகுந்தீர் போமின் (பெ. பு, 2695) என மன்னன் கூறவும், தம் சமயத்தில் ஆழ்ந்த உறவுகொண்ட அமணர், சம்பந்தரைப் புனல் வாதத்திற்கு அழைத்தனர். அதுகண்டு அமைச்சர் 'இவ்வாதத்தை முடிவுக்குக் கொண்டு

வரவேண்டும்' என்று சொன்னபோது பொங்கிய வெகுளிகூரப் பொறுமை காரணமாகத், தங்கள் வாய் சோர்ந்து தாமே 'தனிவாதில் அழிந்தோ மாகில் வெங்கழு வேற்று வானிவ் வேந்தன்' என்று சமணர்கள் கூறினர். இதில் திருந்தி உய்யும் வகையையும், தாமே அழித்துப் பின்வரும் செயல் களுக்குந் தாமே காரணமாயினர்.

திருஞான சம்பந்தர் மதுரைத் தொடர்பான பதிகங்களில் அக்காலச் சமணம்பற்றிக் கூறும் கருத்துகள்:-

1. தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ்
சாதியி னீங்கிய அவத்தவத்தவர்-1-7-10.

2. ஆர நாகமாம், சீர ஞலவாய்த்
தேர மண் செற்ற வீர னென்பரே
—1-94-10.

3. குண்டிகைக் கையர்களோடு சாக்கியர்
கூட்டமும் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு—2-66-10.

4. குண்டிகைக் கையினர் குணமிலாத்
தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள்
பணிகிலர் —3-32-10.

5. ஆனை மாமலை யாதி யாய இடங்களிற் பல
அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேனலேன் திரு வாலவாய்
அரன் நிற்கவே—3-39-1.

6. மாகதக் கரிபோற் றிரிந்து புரிந்து
நின் றுணும் மாசுசேர்
ஆகதர்க் கெளியே னலேன் திரு வால
வாய் அரன் நிற்கவே—3-39-2.

7. அத்தகு பொருளுண்டு மில்லையு மன்று
நின் றவர்க் கச்சமா
ஒத்தொவ் வாமை மொழிந்து வாதிலழிந்
தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து சனங்கள்
வெட்குற நக்கமே
சித்திரர்க் கெளியேனலேன் திரு வால
வாய் அரன் நிற்கவே—3-39-3.

8. மந்திபோல் திரிந்து ஆரியத்தொடு
செந்தமிழ்ப்பய னறி கிலா
அந்தகர்க்கெளி யேனலேன் திரு வால
வாயர னிற்கவே —3-39-4.

8. ... ... எக்கர் தங்களைப் பல்லறம்
காட்டி யேவரு மாடெ லாங்கவர்
கைய ரைக் கசி வொன்றிலாச்
சேட்டை கட்கெளி யேனலேன் திரு வால
வாய் அர னிற்கவே—3-39-5.

10. ... . அவமே தவம் புரிவோமெனும்
சினகருக் கெளியேனலேன் திரு வாலவாய்
அரனிற்கவே—3-39-6.

11. சிந்தனர்க் கெளியேனலேன் திரு வால
வாய் அரனிற்கவே—3-39-7.

12. ... ... பொய்த்தவங்கொடு குண்டிகை
பீலி கைக் கொடு பாயிடுக்கி நடுக்கியே
பிறர் பின்செலும்
சீலிகட் கெளியேனலேன் திரு வாலவாய்
அரனிற்கவே—3-39-8.

13. வேமவத்தைச் செலுத்தி மெய்ப்பொடி
யட்டி வாய் சகதிக்கு நேர்
ஆமவர்க் கெளியேனலேன் திரு வாலவாய்
அரனிற்கவே—3-39-9.

14. பொங்கும் நூல்வழியின்றியே புலவோர்
களைப் பழிக்கும் பொலா
அங்கதர்க் கெளியேனலேன் திரு வாலவாய்
அரனிற்கவே—3-39-10.

15. வேட்டு வேள்வி செய்யா அமண் கையரை
ஓட்டி வாது செய்யத்திரு வுள்ளமே
—3-47-1.

16. பொய்த்தவ வேடத்தராஞ் சமண்
சித்தரை யழிக்கத் திரு வுள்ளமே—3-47-2

17. ஓதி யோத்தறி யாவம ணாதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
—3-47-4.

18. கையி லுண்டுழ லும்மண் கையரைப்
பைய வாது செய்யத்திரு வுள்ளமே
—3-47-5

19. வீறி லாதவ மோட்டமண் வேடரைச்
சீறி வாது செய்யத்திரு வுள்ளமே
—3-47-6

20. பரக்கு மாண்புடை யாயமண் பாவரைக்.
காக்க வாது செய்யத்திரு வுள்ளமே
—3-47-8.

21. மேலை வீடுண ராவெற் றரையரைச்
சால வாது செயத்திரு வுள்ளமே
—3-47-9.

22. கழிக்க ரைப்படு மீன்கவர் வாரமண்
அழிப்ப ரையழிக் கத்திரு வுள்ளமே
—3-47-10.

23. பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே
—3-51-1.

24. எத்த ராமம ணர்கொளு வும்சுடர்
—3-51-2.

25. எக்க ராம் அமணர் கொளுவும் சுடர்
—3-5-13.

26. துட்டராம் அமணர் கொளுவும் சுடர்
—3-51-4.

27. எண்ணிலா அமணர் கொளுவும் சுடர்
—3-51-5.

28. வஞ்சஞ் செய்து அமணர் கொளுவும் சுடர்
—3-51-6.

29. கங்கு லாரமண் கையரிடுங் கனல்-3-51-7.

30. ஏத்தி லாவமணர் கொளுவுஞ்சுடர்
—3-51-8.

31. தூவி லாவமணர் கொளுவுஞ்சுடர்
—3-51-9.

32. குண்ட ராமமணர் கொளுவுஞ்சுடர்
—3 51-10.

33. தேற்றமில் வினைத்தொழிற் றேரருஞ் சமணரும்
போற்றிசைத்து நின்கழல் புகழ்ந்து புண்ணியங்கொளார் —3-52-10.

34. வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
—3-108-1.

35. வைதி கத்தின் வழியொழு காதவக்
கைதவ முடைக் காரமண் தேரரை
—3-108-2.

36. மறைவ ழக்கமில் லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
—3-108-3.

37. அறுத்த வங்கமா றுயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடும்
—3-108-4.

38. அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களை—
—3-108-5.

39. வேட்டு வேள்வி செயும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
—3-108-6.

40. அழல தோம்பு மருமறை யோர்திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
—3-108-7.

41. நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவு நில்லா அமணரை
—3-108-8.

42. நீல மேனி யமணர் திறத்துநின்
சீலம் வாது செயத்திரு வுள்ளமே
—3-108-9.

43. அன்று முப்புரஞ் செற்ற வழகநின்
துன்று பொற்கழல் பேணு வருகரை
—3-108-10.

44. தேரரோ டமணருக்கு நல் காணையே
—3-1C5-10.

45. குண்ட ராயுள்ளார் சாக்கியர் தங்கள்
குறியின்கண் நெறியிடை வாரா
—3-120-10.

ஈண்டுச் சேக்கிழார், சம்பந்தர் ஆகிய இரு சைவப் பெரியார்களின் கூற்றுப்படி சமணரின் சமய வாழ்க்கை, சமுதாய அமைப்பு, நடைமுறை, வாழ்க்கை ஆகியவைகளைப் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

சமய வாழ்க்கை:—திருஞான சம்பந்தர் திரு இரும்பூளைப் பதிகத்தில்,

"இணையில் இரும்பூளை இடங்கொண்ட ஈசன்
அணைவில் சமண்சாக்கிய மாக்கிய வாறே"

என்று கூறுவதால், சமண், சாக்கியமும் இறைவன் அருளால் தோன்றின, என்பது தெளிவாகும். இந்து சமுதா

யத்தின் செல்வச் சீரழிவாலும், வேள்வி களைப்பற்றிய உண்மை அறிவின்மை யாலும் தோன்றிய சமண், சாக்கிய சமயங்கள் காலப் போக்கில், தம் கொள்கைகளை நன்கு பின்பற்ற முடியாத மக்களையுடைமையால், சமு தாயத்துக்குத் தீங்கு விளைத்தன.

சமண் சமயத்தின் கொள்கையாக, 'உலகத்தைப்பற்றிப் பல்வேறு வகைப் படக் கூறும் பல்வேறு கொள்கைகள் பிரபஞ்சத்தின் பலவகைப்பட்டவடிவங் களைத் தருகின்றன. அப்பல்வேறு கொள் கைகள் தம்முள் கலாமிட்டுக்கொள் வதற்குக் காரணம், ஒவ்வொரு கொள் கையும் பிரபஞ்சத்தை ஒரு கோணத் திலிருந்து பார்த்து (அதனுற் பிற கோணங்களிலிருந்துபார்க்கும் கருத்தை ஏலாமையின்) குறைபாடு உடைய தாகிறது என்னும் உண்மையை உணரா மையேயாகும், என்று 'இந்தியத் தத்து வத்திற்கு ஒரு முன்னுரை' என்னும் நூலில் திரு. சதீஷ் சந்திர சாட்டர்ஜி, திரு. D. M. தத்தா ஆகியோர் கூறுகின்றனர். இக் கொள்கைப்படி பார்த்தால், சமணம் மற்றுமுள்ள சமயங்களுடன் காழ்ப்புக் கொள்ளக் காரணமில்லை. ஆனுல் சமணர் காழ்ப்புக் கொண்டு, பிற சமயங்களைத் தாக்கி அழிக்க எண்ணங்கொண்டது. அவர்கள் சமயக் கொள்கையிலிருந்து வீழ்ந்த நிலையையே குறிக்கிறது. திருஞான சம்பந்தர் 'ஒருருவாயினே' என்று தொடங்கும் 'திருவெழு கூற்றிருக்கை' என்னும் திருப்பாடலில் 'ஐயுறு மமணர்' என்றே அமணரைக் குறிக் கின்ருர். 'கிரியை என மருவும் அவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்த மெனக் கிளக்கும்' என்னும் சிவப்பிர காசப் பாடல் கூறுவதுபோல, வேள்வி களின் உண்மைப் பொருளை உணர்ந் தால் ஞானம் வெளிப்படும். கிரியைகளை இந்நோக்குக்கொண்டு பார்க்கும் பார்வையின்மையாலேயே அமணர்கள் கிரியைகளைப் பழித்தனர்.

சமுதாய வாழ்க்கை: அமணர் சமய நிலையிலிருந்து வீழ்ந்தபோது அதன் தீய பயன்கள் தமிழரின் சமுதாய வாழ்க்கை யில் காணப்பட்டன, சுவேதாம் பரம், திகம்பரம் என்னும் இரு வகைப் பட்ட சமணத்தில் உடைகளை விலக்கிப் பெண்களுக்கு முக்தியில்லை என்று விலங் கிட்ட திகம்பர சமணமே தமிழ்நாட்டில் மிக்குப் பரவியிருந்தது. பெண்களுக்கு ஆன்ம உரிமையில்லை என்னும்போது சமுதாயத்தின் செம்பாதிக்கு-மழலைச் செல்வங்களை ஈன்று வளர்க்கும் மகளிர்க் குச் சமுதாய உரிமை மறுக்கப்படு கிறது; இறைவியின் ஞானப்பாலை உண்டவர் இக்குறைபாடுகளை நீக்கித், தமிழ்நாட்டுக்கு ஒளிவழி காட்டுகின் ருர். சமணர் செல்வாக்கால் தமிழ்நாடு பெற்ற இடுக்கணைக் குறிக்கும்போது 'அரும்பெறல் தமிழ்நாடு உற்ற தீங்கினுக்கு' என்று குறிப்பதால் சமணர் வாழ்க்கையால் தமிழ்ச் சமு தாயம் பெற்ற தீமையையே இவ்வாறு சேக்கிழார் குறிக்கிருர்.

'பாடக மெல்லடிப் பாவை' எனத் தொடங்கும் பதிகத்தில் 'தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ் **சாதியினீங்கிய அவத்தவத்தர்** என்று கூறுவது பொருள் பொதிந்த வாக்காகும். 'அவர்கள் கூறிய நெறியிலே நிற்கலாற்ருது, அதினின்றும் நீங்கிய அவத்தவத்தவர்கள்' என இத்தொடர் பொருள் தருகின்றது.

'நல்வினை நீக்கிய வல்வினையாளர்' என்று அச்சிறுப்பாக்கப் பதிகத்தில் குறிப்பிடுவதும் குறிக்கத் தக்கது. சமணர் தவத்தை 'வீறிலாத் தவம், அவத் தவம்' எனச் சைவ நூல்கள் கூறுகின்றன, தவமாவது மனிதனுக்கு உறுதிப் பொருளை உணர்த்துவதாயிருத்தல் வேண்டும். சமணர் தவம், உறுதிப்பொருளை உணர்த்துவதில் தவறுதலல்லாமல் உடலுக்கும் மிகுந்த வருத்தம் தருவதால் அவத்தவம், வீறிலாத்தவம் எனப்பட்டது. 'பொங்கு வெண்' எனத் துவங்கும் திரு அரிசிலித் தேவாரத்தில் 'குருளை யெய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்து' என்று கூறுவதால், இளமடவாரை முன்வைத்து வீண் அவத்தவம் செய்யும் நிலைமை குறிக்கப்பட்டது.

வளவர்கோன் பாவையை 'அஞ்ச வேண்டா, என்று அவரது அச்சத்தைத் தெளிவிக்கும்போது 'ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்' என்று சமணரைக் குறிக்கின்றார். இதனால் ஆரியம், செந்தமிழ் ஆகிய மொழிகளை நன்கு பயின்றும் 'கற்றதனால் ஆய பயன் என் கொல்' என்னும் குறளுக்கேற்ப அம்மொழிகளின் உண்மைப் பயனை அறியாதவர் அமணர் என்பது புலனாகிறது. சமணர்களில் ஆடவர் பொறை முதலாகிய நற்குணங்களை விட்டுச், சென்ற முதலாகிய தீக்குணங்களை முதலாகக் கொண்டது போலவே சமணமகளிராகிய கந்தியரும் தமக்குள் கலாங்கொண்டனர் என்பதைக்

> 'கந்தியர் தம்மிற் ருமே கனன்றெழு கலாங்
> கொள்ள
> வந்தவாறு அமணர் தம்மின் மாறுகொண்
> டுறுசெய்ய
> முந்தைய வுரையிற்கொண்ட பொறைமுத
> லாவையும் விட்டுச்
> சிந்தையில் செற்றமுன்னுந் தீக்குணம்
> தலைநின்றார்கள்— (2532)

என்ற பெரிய புராணப் பாட்டால் அறியலாம்.

வினைப்பயனைச் சமணர் அதிகமாக வற்புறுத்திக் கூறுகின்றனர். மனிதனே பிறதுணையின்றிப் பொறிகளை வென்று வீரராக (ஜினராக) வேண்டும் என்னும் கொள்கை, நாளாவட்டத்தில் வினைக்கே அடிமையாகி, வரும் துன்பங்களுக்கெல்லாம் காரணமான வினையைக் கண்டு பிடிக்கும் கருத்திலேயே காலத்தை மக்கள் செலவிட்டனர். கொடிமாடச் செங்குன்றூரில் நளிர்சுரத்தால் துன்புறும் மக்களுக்கு உய்தி தெரிவிக்குமாறு 'அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லுமஃதறிவீர், உய்வினை நாடாதிருப்பது உந்தமக்கு ஊனமன்றே, கைவினை செய்துஎம் பிரான்கழல் போற்றும் நாமடியோம், செய்வினை வந்தெம்மைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டம்' என்று பதிகம்பாடிக் கைவினை செய்வதன் மூலம் வினைச்சுழலிலிருந்து தெருள்நோக்கைக் (Optimism) காட்டி, மருள் நோக்கினின்றும் (Pessimism) மக்களை விடுபடச் செய்தார். மேலும் நீறணிந்த சைவர் முதலியோர் வரின், அவர் மேனிபட்ட காற்றுத் தீண்டினும் சமணர் அது பொறாது சினந்து கொண்டு ஓடுவர், (3.108.8) என்று கூறப்படுவதால் சமணர் நடைமுறை வாழ்க்கை நமக்கு நன்கு புலனாகிறது,

சம்பந்தர் வரலாறு மதுரையில் சமணர்களைக் காண்பதற்குமுன் அவர் வேறு எவ்விடத்தும் அவர்களைக் கண்டதாகக் கூறவில்லையாயினும், அவர்

அருளிச் செய்த பதிகங்கள் ஒவ்வொன்றிலும் (புத்த சமணம்பற்றிய குறிப்புகள் காணப்படாத பதிகங்கள்—முதல் திருமுறை 57, 73, 78 இரண்டாம் திருமுறை 2, 20, 43, 44, 67, 78, 79, 111, 112, 117 மூன்றும் திருமுறை 58, 63, 72, 94, 112, 113) அவர்களைச் சாடியுள்ளார். திருஞானசம்பந்தர் பதிகங்களிலிருந்து அக்காலத்து இருவகையான சமணர் கூட்டம் இருந்ததாகத் தெரிகிறது. சமணக் கொள்கையைத் தமக்குப் பிழைப்பாகக் கொண்டு வாழ்ந்து வருபவர்களைத்—தவமறைந்து அல்லவை செய்தொழுகுவாரைச்—சமுதாயப் பகைவர்களாகக் கடிகிறார். பிறிதொரு சமணர் கூட்டம் சமணத்தையே முடிந்த உண்மை நிலையாகக் கருதி, அவ்வாறு கருதியவாறே ஒழுகுவாரின் நிலைக்கு இரங்கி, உண்மை தெருட்டி, வெறும் விரதங்களால் பயனில்லை' என்பதை,

'வீடும் ஞானமும் வேண்டிரேல் விரதங்களால்
வாடின் ஞானமென் னவதெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம் வல்லாரடி சேர்வது ஞானமே''

என வற்புறுத்தி, 'ஞானம் ஈசன்பால் அன்பே' என்று ஞானம் உண்டவர் அறிவுறுத்துகிறார். ஈண்டு சமணர்களது கொள்கையின் மெய்யில்லாத தன்மையைத் தெருட்டும் திருஞானசம்பந்தர் திருமணச்சிவச்சுடரில் கலக்குமுன் திருத்தொண்டு நெறியையே வற்புறுத்தி வாழ்க்கைக்கு வழியாக அமைத்ததை,

"அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே''
(3-125-3)


என்ற தேவாரத்தால் அறியலாம். இவ்வாறு எந்தையிணையடிகளைத் தொழுது தொண்டு செய்து துன்பமில்லா இன்ப வாழ்வை நாமெல்லாம் பெற ஆலவாய் அண்ணல் அருள் புரிவாராக!

"மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழும் செயல்அறம் ஆனல் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும் செயற்குமுன் னிலையா மன்றே.''
(சித்தியார்—செய். 114)

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,

திருத்தணி.

செங்கை மாவட்டம், தமிழ்நாடு.



தொலை பேசி :

அலுவலகம் எண்.	25	மலைக்கோயில் எண்.	43
மலைப்பாதை எண்.	96	தங்கும் விடுதி எண்.	87

திருமுருகன் உறையுஞ்சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துச்சாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

" நினைத்ததை அளித்திடும், மனத்தினை உருக்கிடும் வழித்துணை வந்திடும் திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர் ! வாரீர் !!"

இத்தலம்

சென்னை — பம்பாய் இருப்புப் பாதையில் அரக்கோணம் சந்திப்பிலிருந்து

வடக்கே		14 கி. மீ.
சென்னை—திருப்பதிபாதையில்	"	84 கி. மீ.
திருப்பதியிலிருந்து	"	54 கி. மீ.
காஞ்சிபுரத்திலிருந்து	"	36 கி. மீ.

தரிசனம்

காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை

விசுவரூப தரிசனம்	காலை 6 மணி
காலைசந்தி அபிஷேகம்	காலை 8 மணி
உச்சிக்காலம்	காலை 10 மணி
சாயரட்சை	மாலை 5 மணி
அர்த்தசாமம் பூசை	இரவு 8 மணி

விழாக் காலங்கள்

1.	ஸ்ரீவள்ளித் திருமணப் பெருவிழா	பிப்ரவரி, மார்ச்சு
2.	சிவராத்திரி 1008 சங்காபிஷேகம்	மார்ச்சு
3.	ஸ்ரீதெய்வானைப் பெருமணவிழா	ஏப்ரல், மே
4.	ஆடிக் கிருத்திகை தெப்பப் பெருவிழா	ஜூலை, ஆகஸ்டு
5.	சஷ்டிப் பெருவிழா	அக்டோபர், நவம்பர்
6.	திருப்புகழ் திருப்படிவிழா	டிசம்பர் 31 தேதி

வேண்டுதல்

பாதி நன்கொடை திட்டத்தின் கீழ் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக்கொடுக்க விரும்புவோர் ரூ. 10,000-00 செலுத்தவேண்டுகிறோம்.

தணிகை முருகனுக்குத் தங்கத் தேர்பணி 6 மாத காலமாக நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்கள் காணிக்கையைத் தங்கத் தேருக்கு தங்கமாகவும், பிறப்பொருளாகவும் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டுகிறோம்.

பொருள்	தங்கும் வசதி—பணி செலவு 24 மணி நேரத்திற்கு எண்ணிக்கை	பணிசெலவு ரூ.	நபர்கள்	கூடுதல் நபர்கள்	மணி செலவு கூடுதல் நபர் 1க்கு
தலைமுடி இறக்கும் இடம்	6	3.00	5	2	0.75
சரவணப் பொய்கை	37	5.00	5	2	0.75
தணிகை இல்லம் !					
பெரிய அறைகள்	7	6.00	5	2	0.75
சிறிய அறைகள்	41	5.00	5	2	0.75
மிக சிறிய அறைகள்	4	3.00	2	—	—
இல்லங்கள்	26	10.00	6	3	0.75
பெரிய அறை		6.00	4	2	0.75
சிறிய அறை		5.00	2	1	0.75
குளிர்ச்சாதன இல்லங்கள்	2	20.00	6	3	0.75

கி. சிதம்பரம் பி. ஏ.,
நிருவாக அதிகாரி.

அறங்காவல் குழுத்தலைவர் :
புலவர். மி. ச. நடேசன்,

அறங்காவலர்கள் :
வி. எம். துரைசாமி ரெட்டி,
கலவை. அ. கோபாலகிருட்டிணன்

மதுரை இலக்கிய மேதைகள்

'சோமலெ'

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரம், நம் தலைமுறையிலும் பெரும் புலவர் பலரைத் தந்திருக்கிறது. அரசன் சண்முகனார், சோமசுந்தர பாரதியார், ஜெகவீரராம பாண்டியர், சூரியநாராயண சாஸ்திரியார் ஆகியோரைப் பற்றிச் சில செய்திகளைத் தெரிவிப்போம்.

அரசன் சண்முகனார் :

சோழவந்தானூர் மகாவித்துவான் அரசன் சண்முகனார், பேரறிஞராகவும் இலக்கியப் புலவராகவும், இலக்கணக் கடலாகவும், பெரும் கல்வியாளராகவும் விளங்கினார். தொல்காப்பியம் சேனாவரையம் முதலிய நூல்களை மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியாருக்குக் கற்பித்தவர் இவரே ஆவார். இவர் அடிக்கடி மகிபாலன் பட்டிக்குச் சென்று தங்கிவந்தார்.

சண்முகனாரின் இலக்கியப் பணிகளுக்கு மதுரையே மையமாக இருந்தது. மதுரையில் வித்தியாபானு அச்சகத்தின் உரிமையாளரும், குமண சரித்திரம் முதலிய பல சிறந்த நூல்களின் ஆசிரியருமான மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களுடன் தங்கிச் சண்முகனார், அவருடைய இதழுக்கு விஷயதானமும் செய்து வந்தார். இப் பெரும் புலவரின் நண்பர்கள் ரா. இராகவையங்கார், வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார், நாகை வேதாசலம் பிள்ளை (மறைமலை அடிகளார்) ஆகியோர் ஆவர்.


மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையைத் தொடங்கிவைத்த பெரும் புலவரும் சண்முகனாரே. அந்த அமைப்பை நிறுவிய பழனியப்ப செட்டியார், அண்ணாமலை செட்டியார் ஆகியோர் அடிக்கடி இவரை அழைத்துப் பெருமைப்படுத்தினர்; இலங்கைக்கும் இவரை அழைத்துச் சென்றனர். சண்முகனாரின் படம் அச்சபையில் இன்றும் உளது.

சோமசுந்தர பாரதியார்:

எட்டையபுரத்தில் பிறந்த நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் (1879-1959) மதுரை மாநகரிலேயே வழக்கறிஞராகவும் தமிழறிஞராகவும் ஏறத்தாழ 50 ஆண்டுகள் வாழ்ந்தார். ஹிந்தி

எதிர்ப்பு இயக்கத்தின் முன்னோடி என்று இவரைச் சொல்லலாம்.

இவர் சிறந்த தமிழறிஞர்; பெரும் புலவர்; 'திருவள்ளுவர்', 'சேரர் பேரூர்', 'சேரவேந்தர் தாயவழக்கு'ப் போன்ற ஆராய்ச்சி நூல்களையும், 'மாரிவாயில்' 'மங்கலக்குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி' என்னுஞ் செய்யுள் நூல்களையும் எழுதியிருப்பவர். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்று இயல்களுக்கு இவர் உரை



வகுத்துள்ளார். "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்ற நூலையும் இவர் படைத்துள்ளார். சோமசுந்தர பாரதியாருடைய பேச்சும் எழுத்தும் தமிழ் உணர்ச்சியை யூட்டும் ஆற்றல் பெற்றவை. பல அறிஞர்களுடைய நூல்களுக்கு வழங்கிய சிறப்புரைகளாலும் விழாக்களில் நிகழ்த்திய தலைமையுரைகளாலும் தமிழர்களைத் தட்டி எழுப்பிய சான்றோர் என்று இவரைக் கூறலாம். கடினமான நடையில் எழுதுவதில் இவருக்கு ஒப்பாவார் ஒருவரும் இல்லை எனலாம். சங்க காலத்துப் புலவர்களுடைய நடையைப்போலவே இவர் எழுதி வந்தார்.

நீதிமன்றங்களில் வழக்காடிப் பழகி இவருக்குக் கைவந்த ஆற்றலை இவர் தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பயன் படுத்தினர். இவர் ஆராய்ச்சித் துறையில் இறங்கிய காலம், ஆராய்ச்சி என்பதே அரும்புவிடாத காலம். தொல்காப்பிய உரை ஆசிரியர்கள் சொல்லிவிட்டார்களென்றால், அதனை எதிர்க்க எல்லோரும் கலக்கம் அடையும் காலம். ஆனால் சோமசுந்தர பாரதியாரோ மீசையை முறுக்கிக் கொண்டு, "நச்சினார்க்கினியர் சொல்லி விட்டால், நாம் கேட்க வேண்டுமோ?" என்று சிம்மக்குரலில் ஆவேசமாகக் கிளம்பிவிடுவார்; ஆராய்ந்து அந்த உரையாசிரியர்கள் சொல்லியதில் நயத்தையும் காட்டிக் குறையையும் காட்டுவார்.

பாரதியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தபோது நாவலர் ந. மு. வேங்கடசாமிநாட்டார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், மகாவித்துவான் இராகவையங்கார், சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை ஆகியோர் ஒருங்கே பணி புரிந்தனர். அவர்களுக்குத் தலைவராகச் சோமசுந்தரப்பெருமான் இருந்தாரென்றால் அவர்க்கு எவ்வளவு ஆற்றல் இருந்திருக்கவேண்டும்!

அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவில், சோமசுந்தர பாரதியாருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கப் பெற்றது. சிறு துரும்பும் பல் குத்த உதவுவது போல் பாரதியாருக்கு அந்தச் சிறப்பு வழங்குவதற்கு நானும் ஒரு சிறு காரணமாக இருந்தேன். "அவருக்குப் பட்டம் வழங்கப்பட்ட நேரத்தில் நான்

கேட்ட ஒலி, நான் கண்ட காட்சி இந்தத் தமிழ் நாட்டில் என்னுடைய வாழ்க்கையில் நான் கேட்டதும் இல்லை; கண்டதும் இல்லை;'' என்று ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் சொல்லியிருக் கிறார்கள்.

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் தொடங்கிய கப்பல் வணிகக் கழகத்துக்கும் இயக்கத்துக்கும் இவர் உறுதுணையாக இருந்தார் என் பதும் குறிப்பிடத்தக்கது.

ஜகவீரராம பாண்டியர் :

திக்கெல்லாம் புகழும் திருநெல் வேலிச் சீமையைச் சார்ந்த, ஜகவீரராம பாண்டியர், மதுரை மூதூரில் வாழ்ந்து நிலைத்த தொண்டு செய்து, தக்கவர் களிடத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கி னார். வீரபாண்டியக் கட்டபொம்முவின் வரலாற்றை மிக விவரமாகவும், தமிழ் நாட்டு மக்கள் நன்கு அறியும்படியும் செய்த பெருமை இவருக்கே உரியது. இவருடைய பேருழைப்பு ஈடும் இணையும் இல்லாதது. இவருடைய அடக்கமும் எளிமையும் இவ்வாறே போற்றத் தகுந்தவை.

இவர் வாழ்ந்த காலத்தில் தமிழுக்கு அரசினரின் ஆதரவு சிறிதும் இல்லை. எந்த வள்ளலையும் நாடிச் செல்லும் இயல்பு ஜகவீரராம பாண்டியர்க்கு அணுவளவும் இல்லை. தமது பெரு நூல்களைப் பிறர் உதவியின்றி இவரே எழுதியதோடன்றி இவரே அச்சுக் கோத்தும் வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. மேற்கொள்வதற்கு எவரும் அஞ்சக்கூடிய மிகப் பெரிய இலக்கியப் பணிகளையும் தன்னம்பிக்கையுடன் ஏற்று, அதற்குரிய இன்னல்களையெல் லாம் தாங்கி விடா முயற்சியுடன் முழு வெற்றி கண்டவர் ஜகவீரராம பாண்டியர்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் :

இவர் காலம் 1870-1903 வரை ஆகும். இவர் மதுரை மாநகரின் தென்மேற்கு எல்லையிலுள்ள பசுமலையை அடுத்த 'விளாச்சேரி' யென்னும் ஒரு சிற்றூரில் பிறந்தவர். தமிழ் ஆர்வத்தால், தம் பெயரையே, 'பரிதிமாற் கலைஞர்' என்று மாற்றிக் கொண்டவர்.

'நாடக இயல்' என்ற இலக்கணத்தை வகுத்து இவர் சில நாடகங்களை எழுதி யுள்ளார். இவருடைய நாடகங்கள் சிலவற்றில் அழகிய பழமொழிகளையும் எதுகை, மோனை, அழகு, அணி ஆகிய வற்றையும் இனிமையான தமிழையும் காணலாம்.

இவருடைய தமிழ் ஆர்வம் எல்லை யற்றது. சென்னைக் கிருஸ்தவக் கல்லூரி யில் தமிழாசிரியராயிருந்து, இவருக்கு ஏற்பட்ட தொடர்புகளின் காரணமாய் மேனாட்டு முறையையொட்டித் தமி ழிலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஆங்கில இலக்கியப் பாணியில் இவர் சில புதிய செய்யுள் வகைகளையும் தமிழில் பரப்பியுள்ளார்.

அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள்

திருக்கோயில், திருநெல்வேலி.

தொலைபேசி எண்: **30**

இத்திருக்கோயில் திருப்பணி 7—10—71-ல்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் **மு. கண்ணப்பன்** அவர்களால்

துவக்கி வைக்கப்பட்டு

திருக்குட நீராட்டு விழா 3—5—74ல்

அறநிலையத்துறை அமைச்சர்

மாண்புமிகு **மு. கண்ணப்பன்** அவர்கள்

முன்னிலையில் நடைபெற்றது, என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ப. இலக்குமணன், எம். ஸி.,
அறங்காவலர் குழுத்தலைவர்

வி. டி. ஏ. சேவுக பாண்டியன்
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள்:
எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை
வாமசுந்தரம் அம்மையார்
பி. சித்திரைப்பாண்டியன்
எஸ். எம். ஏ. நயினார்

தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், பேட்டை,

திருநெல்வேலி - 627010.

தமிழகக் கூட்டுறவு நூற்பாலைகளில் முதன்மையானதும் பெரியதுமான இவ்வாலை, தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு தரமான நூல்களை உற்பத்தி செய்து தமிழ்நாடு நெசவாளர் சங்கத்தின் மூலம் விநியோகித்து அதன்மூலம் தன்னால் இயன்ற அளவு நெசவாளர் சமுதாயத்திற்குச் சேவை செய்து வருகிறது.

1.	மொத்தக் கதிர்கள்	—	29,696
2.	உற்பத்தியாகும் நூல் ரகம்	—	20ன் முதல் 100ன் வரை
3.	பங்கு முதலீடு	—	ரூ. 56 லட்சம்
4.	நிதி ஒதுக்கீடுகள்	—	ரூ. 85 லட்சத்திற்கு மேல்

தொலைபேசி அலுவலகம்: 234, 884 இல்லம்: 764
தந்தி: கூப்ஸ்பின், திருநெல்வேலி

ஆர். ஆறுமுகம், பி. ஏ., (ஆனர்ஸ்) பி. எல்.,
தலைவர்.

மு. திருநாவுக்கரசு, பி. காம்.,
நிர்வாக இயக்குநர்.

மதுரை - வாய்மொழி இலக்கியத்தில்

சரஸ்வதி வேணுகோபால், M. A.,

தென்னகத்துச் சிறப்புகளுள் தலையாயது மதுரை நகர். அதன் தொன்மை பற்றியும், பாண்டியர்கள் ஆண்ட மாண்பு பற்றியும், சங்கம்வைத் துத் தமிழ் வளர்த்த பாங்கு பற்றியும் அறிய எத்தனை எத்தனையோ இலக்கியச் சான்றுகள் உள. அவையெல்லாம் கற்றோரால் அறியப்பட்ட, நெடுங்கால மாக வாழ்ந்து வருகிற 'எழுத்து மொழி' இலக்கியங்கள். இக்கட்டுரை யில் அந்தச் சிறப்புச்செய்திகளை விடுத்து 'வாய் மொழி இலக்கிய' மாகத் திகழ்கின்ற, 'கல்வி' என்பதே என்னவென்றறியாத பாமர மக்கள் உள்ளங்களில் எதுகை மோனையோடு தோன்றிய - தோன்றுகின்ற - ஓர் அழகு இலக்கியத்தில் காணப்படும் 'மதுரை' பற்றிய செய்திகளை யான் அறிந்த அளவு எடுத்தியம்ப முற்படுகின்றேன்.

அவ்விலக்கியத்தில் சிறப்பாகத், 'தாலாட்டுப் பாடல்கள்' மட்டும் எடுத்துக் கொள்கிறேன். பல்வேறு சாதியினரையும் நாடி, இப்பாடல் களைத் திரட்டிப் பார்க்கையில், முதன்மையாக மீனாட்சியம்மன், பின்னர் மதுரை நகர், சித்திரைத் திருவிழா, திருப்பரங்குன்றம், முருகனது சிறப்புகள், அவனுக்குப் படைக்கப்படும் காணிக்கைகள், கருமாத்தூர்த் தெய்வங்கள், பாண்டியர், கறுப்பசாமி, மதுரை மருத்துவம், வையை, நீதிமன்றம், கடை கள் போன்ற பல பற்றிய விறுவிறுப் பான செய்திகளை அழகு தமிழில், வாழ் வில் அன்றாடம் பழகுதமிழில், கொஞ்சு மொழியில் கண்டேன்.

தாலாட்டுப் பாடல்களைப் பார்க் கையில், பொதுவாகப் பெண் குழந்தை யைப் பாராட்டும் பொழுது 'மீனா' என்று அன்போடு அழைப்பதைப் பலரது பாடல்களிலும் காணமுடிகின்றது.

முதலில் அரிசன வகுப்பைச் சேர்ந்த சமுத்திராயி என்ற அம்மையார் பாடல்களிலிருந்து கிடைக்கும் அருமையான செய்திகளைக் காண்போம்.

1. மீனாட்சி அம்மையின் பூப் பல்லக்கின் எழிலைக் காண்பதற்கு அந்த அம்மையார் நமக்களித்திருக்கும் இரு கண்கள் போதா. அந்தப் பல்லக்கின் எழிலைத் தாலாட்டில் இணைத்துப் பாடுகிறது அம்மையின் அழகில் மயங்கிய உள்ளம்.

" பொழுதே மினுமினுங்கும் — மீனாளுக்குப்
பூத்தேரும் சோதி மின்னும்
சருகை சலசலங்கும் — மீனாளுக்குச்
சப்பரமும் சோதிமின்னும்
ராராரோ ரீராட — கண்ணே
ரெண்டு கையும் செண்டாட "

2. மீனாட்சி அம்மனின் திரு நீராட்டினைப்பற்றிக் கூறுகையில் கண்ணெதிரில் அக்காட்சி நடப்பது போன்று தோன்றுகிறது. அம்மனையும் பாடி அப்படியே தன் குழந்தையையும் எண்ணுகிறது தாயின் உள்ளம்.



" நாழி நறுக்கு மஞ்ச — கண்ணே
நன்னாழி பச்சை மஞ்ச
அரைச்சு வழிப்பாளோ — கண்ணே
அஞ்சுவகைக் கிண்ணத்திலே
தேச்சுக் குளிப்பாளோ — மீனா
தெப்ப மெல்லாம் பூமணக்க
கொத்தோடு சீவக்காயோ — மீனாளுக்குக்
கொடத்தோட நல்லெண்ணெய்
அள்ளிக் குளிப்பாளோ — மீனா
அத்தனையும் பூமணக்க "

3. சித்திரைத் திருவிழாவில் நடக்கும் செய்திகள் அனைத்தையும் சுருக்கமாக எளிமையாகக் குழந்தை யையும் தூங்க வைத்துக் கொண்டே கூறிவிடும் அழகையும் இந்தத் தாலாட் டில் காணலாம்.

சித்திரைத் திங்கள் முழுநிலா நாளில் அழகர் மலையை விட்டுத் திருமால் வெளிவந்து 'அப்பன் திருப்பதி'க்கு வந்து, பல காணிக்கை களையும் வழியில் பெற்றுக்கொண்டு தல்லாகுளம் வரை வருகிறார். அங்குச் சிறிது தங்குகிறாராம். பிறகு மறுபடி பயணந் தொடர்கிறது; வண்டியூரில் முடிகிறது. வையையில் ஒவ்வோர் ஆண்டும் அழகர் இறங்குகிறார். அவரைக் கண்குளிரக் காண்பதற்கு வருகின்ற மக்கள் (காணமுடியாமல் தவிப்பது வேறு செய்தி!) மகிழ்ச்சிப் பெருக்கில் 'அழகர்' மீது தண்ணீர் அடித்தல் (பீச்சுதல்) அனைவரும் வழி படுதல், அழகர் தம் தங்கை மீனாவுக்கு எத்தனையோ சீர்வரிசைகள் செய்தும் அந்த அம்மையார் சினந்து கொள்ளல் போன்ற செய்திகளைக் கூறும் பாட்டைக் கீழே காணுங்கள் :—

" சித்திரை மாதமோ — மாயாவுக்குச்
செல்லப் பவுர்ணயோ (பௌர்ணமி)
வாராயோ மாயாவு — கண்ணே
மலையை விட்டு வெளிவாங்கி
அப்பன் திருப்பதியோ — மாயாவுக்கு
ஆயிரக்கால் மண்டபமோ
காணிக்கை சப்பரமோ — மாயாவுக்குக்
கல்லாலே மண்டபமோ
தங்கினா தல்லாகுளம் — மாயாவுக்குத்
தண்ணி பீச்சு ஆயிரமோ
தங்கினா தல்லாகுளம் — மாயாவுக்குத்
தருகினா வண்டியூரு
வையையிலே (இ)றங்குவாரு — மாயாவு
வந்தவுக கையெடுக்க

பொய்யையிலே றங்குவாரு — மாயாவுக்கு
எல்லோரும் கையெடுக்க
தல்லா குளமும் விட்டு — கண்ணே
தண்டிகளும் பாதிவிட்டு
ஓறைக் கிணறும் விட்டு — மீனாட்சிக்கு
உண்டியலும் பாதிவிட்டு
ஆத்திலே பாதிவிட்டு
அத்தனையும் பத்தலேண்டு — மீனா
அழுதே போறாளே ''

இதே திருவிழாவினைத் 'தேவர்' இனத்தைச் சேர்ந்த வனப்பேச்சியின் பாடலிலும் கண்டேன்.

'' சின்ன சிறுமதுரை சீருபெத்த
பொன்மதுரை
மதுரை அளகரோ மாமதுரைச் சொக்கரோ
திருமால் அளகரோ — மீனாளுக்குத்
திருப்பூட்ட வந்தவரோ
வருசம் ஒரு தேதி — அளகர்சாமி
மலையை விட்டுக் கீழெறங்கி
தங்கினார் தல்லாகுளம் தருகினாரு
வண்டியூரு
எறங்கினாரு வையைநதி — அளகர்சாமி
ஏனுலச்சம் கையெடுக்க ''

4. திருப்பரங்குன்றத்தினையும் அங்கு வாழும் சுப்பையாவுக்கு ஆவலுடன், பக்தியுடன் படைக்கும் காணிக்கைப் பொருள்களையும் கூறும் பாங்கினைக் கவனியுங்கள்:—

'' ஊசி படர்ந்த மலை — சுப்பையாவுக்கு
உத்திராசம் காய்க்கும் மலை
பாசி படர்ந்தமலை — சுப்பையாவுக்குப்
பகளத் தேர் ஓடும் மலை
சாஞ்ச மலையா — சுப்பையாவுக்குத்
தேனும் தெனைமாவோ
தேனும் தெனைமாவோ — சுப்பையாவுக்குத்
தெகட்டாத செங்கரும்போ
கண்ணுள்ள தேங்காயே — கண்ணே
கணுவுள்ள செங்கரும்பே
பாக்குப் பதிங்கலமும் — கண்ணே
பச்சரிசி முக்கலமும்
எள்ளு இருகலமும் — சுப்பையாவுக்கு
எளந்தேங்காய் முந்நூறும்

திருப்பரங்குன்றம் கோயில் அருகே அமைந்துள்ள ஊருணி, சுப்பையா சன்னிதியில் தூண்டாமல் எரியும் விளக்கு ஆகியவற்றைக் கூறும் வரிகளைக் கீழே காணலாம்.

'' மலையைத் துளைச்சு மண்டபங்கள்
உண்டுபண்ணி
சனத்தை வரவழைச்சு — முருகன்
சக்தி விளங்குறரோ
அடியும் படித்துறையே, அமிர்தமுள்ள
ஊருணியே
இரும்பாலே ஊருணியாம் இருபுறமும்
தாமரையாம்
தாமரையை நூலெடுத்துத் தனிப்பசுவின்
நெய்யுருக்கி
தூண்டாம வெளக்கெரியும் சுப்பையா
சன்னதியில்

5. தாலாட்டுப் பாடல்களில் மற்றொரு சிறப்பான கூறு, தாய்மாமனை உயர்த்திக் கூறுதல். மாமனைப் பற்றித் தருமர், வீமர், அருச்சுனர் என வருணித்து விட்டு இறுதியில் '**பாண்டியர்**' என்றும் கூறுதலைக் காணலாம். மாமன் — தாயின் உடன் பிறந்தான்; பெருவீரம் படைத்தவனும். அவனது வீரத்தைப் பற்றிக் கூறுகையில்தான் இந்தப் 'பாண்டியன்' என்ற சொல் வருகிறது.

'' பத்துத் தலைநாகரு — கண்ணே
படுத்திருக்கும் தாழையிலே
பாத்துப் பூவெடுக்கும் — கண்ணே
பாண்டியரு ஓங்கமாமன்

6. 'கறுப்பசாமி கோயில்' தமிழகத்தில் இல்லாத இடமில்லை. மதுரையிலும் தல்லாகுளம், தெற்குக் கோபுரம், பாண்டி கோவில் முதலியபல விடங்களில் இக்கோயில்கள் இருப்பதை அறிவோம். பிள்ளைப்பேறு இல்லாதோர் பாண்டி கோவிலுக்குச் சென்று


வேண்டிக்கொண்டு கோயிற் சன்னிதிக்கு அருகே உள்ள சிறு செடிகளில் சிறு சிறு துணித் தூளிகளைக் கட்டித் தொங்க விடுவது மரபென்றறிந்தேன். பாண்டி, முனியாண்டி, மதுரைவீரன் போன்ற பல பெயர்கள் கொண்ட இந்தச் சாமி பற்றியும் தாலாட்டில் காணலாம்.

தெக்கித்தி முனியன்சாமி— கண்ணே
வடக்கித்திக் காளைகளே
மையத்திலே கருப்புசாமி—கண்ணே
மக்கவரம் தந்தாரோ
கரும்புதிங்கும் காளைச்சாமி—கண்ணே
கனிதிங்கும் கருப்புசாமி
பேருவாங்கும் முனியன்சாமி – கண்ணே
பிள்ளைவரம் தந்தாரோ?

இதில் இறுதியாகச் சொல்லப்படும் 'பிள்ளைவரம் தந்தாரோ' என்ற முனியன்சாமி பாண்டியையே குறிப்பிடும். மற்ருேரிடத்திலும் ''கட்டுக் கடங்காத காளையோட கருப்புச்சாமி'' என்ற வரிகளைக் காணலாம்.

7. கருமாத்தூர்ச் சாமிகள் எழுவரைப் பற்றிக் கூறும் தாலாட்டு ஒன்றும் கிடைக்கப்பெற்றேன். பேயம்மா, ஒச்சம்மா, ஆங்காளய்யர், மூஞண்டி, விருமாண்டி, கோட்டை மந்தை ராமன், நல்லகுரும்பன் ஆகியன அத்தெய்வங்களின் பெயர்கள்.

கல்லிலே நாருரிச்சு—ஏழுபேரு வாச
கானலிலே பூ முடிச்சு
புல்லெல்லாம் மணக்குமுல்லே—எங்கப்பன்
புண்ணியரு போகும் பாதை
தங்கக் கொடையாம்—ஏழுபேரு வாச
தாங்காத ராணுதமாம்
ராணுதத்தை முன் னடத்தி — பேயம்மா
நாடுவந்து சேந்தாளாம்
முன் தூணும் பின் தூணும் — ஒச்சம்மா வாச
முன்னே பலாமரமாம்
முன் தூணு சாயுதெண்டு — பேயம்மா
பிள்ளைதோ ராட்டருளாம்
பின் தூணு சாயுதெண்டு — ஒச்சம்மா
மக்கதோ ராட்டருளாம்
முத்துக் கொடையாம் — பொண்ணுங்க வாச
முந்நூறு பூமரமாம்
பூமரம் சோம்புதெண்டு— ஆங்காளய்யர்
பிள்ளைமுடி தந்தாரோ?
தவமும் குடுத்தாக — மூஞண்டி
தம்பேரும் கொண்டாக
மாலே தந்தா வாடுதெண்டு — ஆங்காளய்யர்
மைந்தர் தந்தார் விளையாட
விருமாண்டி வாசலிலே — குருதைக்கு ஒரு முகமாம்
சன்னதி மேலெருந்து — விருமாண்டி
சதுரகிளி பாடுருரு
குயிலிருந்து கூகுதில்லே — கோட்டை மந்தை ராமன்
மண்டகத்து மேலெருந்து
மயிலிருந்து கூகுதில்லே — நல்ல குரும்பன்
மண்டகத்து மேலெருந்து



8. குழந்தையைக் கொஞ்சுகையில்,

" மாணுமதுரை லிங்கம் — நான் பெத்த செல்லம்
மாமதுரை சொக்கலிங்கம்—"

என்று கூறுவது எத்துணை இன்பம் பயக்கிறது!

மற்றொரு பாடலில்—

'காசி விசுவலிங்கம் — கடம்பவன
சொக்கலிங்கம்''

என்று காண்கிறோம்.

9. பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த பர்வதம் அம்மையார் பாடிய தாலாட்டில் நெடுநாட் சென்று பிறந்த குழந்தையைத் தாய் தாலாட்டுவது போன்று வரும்வரிகள் என்னைக் கவர்ந்தன. அவற்றுள் ஒரு வரி 'மீனாட்சி அம்மன் மணி மண்டபத்தைக் கூறுகிறது.

'' மாடாப் புறுவே மழைக்கெல்லாம்
எங்கிருந்தே?
மகிமையுள்ள மீனாட்சிமணி மண்டபத்தில்
வீற்றிருந்தேன்

அதே தாலாட்டில் குழந்தையைக் கண்ணே, செங்கரும்போ, முத்தோ என்றெல்லாம் கூறி மகிழுமிடத்தில்—

'' கண்ணான கண்ணே கரும்பான செங்
கரும்போ
முத்தான முத்தோ முறுக விளைஞ்ச
முத்தோ
மீனாட்சி யம்மனுக்கு மூக்குத்திக் கேத்த
முத்தோ
சாலாட்சி யம்மனுக்குச் சால விளைஞ்ச
முத்தோ''

என்ற வரிகள் இடம் பெறுகின்றன.

அம்மனின் சோலை, கிளிகள், கோபுரம், சொக்கட்டான் ஆடி வெல்லுதல் அனைத்தையும் கூறும் மற்றோர் இனிய பாடலைக் காண்போம்:

'' மந்தாரப் பிச்சி மலரும் இருவாச்சி
கொண்டாட்டம் போடுதில்லே — மீனா
கோலச் சடை மேலே
செவப்புக் கிளிகளெல்லாம் — மீனாகிட்டே
சேதிகளும் சொல்லுதில்லே
பச்சைக் கிளிகளெல்லாம — மீனாகிட்டே
பக்கம் இருந்து பேசுதில்லே
வெள்ளைக் கிளிகளெல்லாம் — மீனாகிட்டே
வித்தாரம் பேசுதில்லே
சுத்தித் திருமதிலாம் — மீனாளுக்குச்
சூதாடச் சோலைகளாம்
பக்கத் திருமதிலும் — மீனாளுக்குப்
பந்தாடச் சோலைகளும்
சொக்கட்டான் ஆடி — மீனாளுக்குச்
சோவி பெரண்டாடி
பன்னெண்டான் ஆடி — மீனா
பாண்டியரைத் தோக்கடிச்சா
கல்லுத்தி காய்க்க கதலி பழம்பழுக்க
தீரப் பழுக்குதில்லே — மீனா
திருமதிலும் உள்ளாக
குருதை அசைய —மீனா
கோபுரமே சோதி மின்ன
ஆனை அசையுதில்லே — மீனா
ஆசை அலைவாசல்லே

மணிவாசகர் காலத்து மன்னவன் யார்?

சீ. இலட்சுமணன்

கற்போர் நெஞ்சினை நெகிழ்விக்கும் பாமணிகளை யாத்தருளிய மாணிக்க வாசகப் பெருமானின் காலத்தையும், அவர் காலத்து மன்னவனையும் பற்றிக் கற்றோர் பலர் கருத்துகள் பல வழங்கு கின்றனர். தமிழ் மலையாகிய மறைமலை யடிகள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டென ஆய்ந்துரைத்தார்கள். 'தமிழ்க்காசு' எனப் போற்றிப் புகழப்பட்ட தமிழறிஞர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், "கி. பி. 3-வது நூற்றாண்டில் மலையாளக்கரைக்கு வந்த சீரியக் கிருத்துவப் பாதிரிமார்கள், மணிவாசக அடிகளைப்பற்றித் தமது நாட்டுக்கு வரைந்த கடிதங்களில் குறித் துள்ளனர். ஆகவே மூன்றாம் நூற்றாண்டி னிறுதியே அடிகள் காலமென்பது விளங்குகின்றது"[1] எனக் குறிக் கின்றார்கள். கி. பி. 3-ஆம் நூற்றாண்டிற் குப்பின் கி. பி. 11-ஆம் நூற்றாண்டுகள் வரை அடிகள் காலத்தைக் கணிக் கின்றனர். "அடிகளார் அடைந்த முக்திநிலை முடிவில்லாததுபோல அடிகள் கால ஆராய்ச்சியும் முடிவு பெறாத வொன்று"[2] எனக் கொள்ள வேண்டியது போலும்.

பாண்டியர் வரலாற்றில் வரகுணன் என்ற பெயரினையுடையவர் இருவர் இருந்ததைக்கொண்டு, திரு. சதாசிவப் பண்டாரத்தார், திரு. ஔவை சு. துரை சாமிப் பிள்ளை போன்றவர்கள் மாணிக்க வாசகப் பெருமானை முதல் வரகுணன் காலத்தவர் எனக் குறிப்பர். இரண் டாம் வரகுணனே அடிகள் பாராட்டும் சம கால மன்னவன் எனத் திரு. மா. இராசமாணிக்கனார், திரு. K. G கிருஷ்ணன் போன்றவர்கள் கூறுவர்.

சிவபத்தியில் சிறந்தவனாகச் செப்புப் பட்டயங்களில் குறிக்கப்படுபவன் 2ஆம் வரகுணனே. அவனையே மணிவாசகர் "வரகுணனாந் தென்னவ னேத்து சிற்றம் பலத்தான்" எனப் பாராட்டு கின்றார் என்பர்." Varaguna II is according to us a great Siva devotee...... This is supported by statement in the Dalaway-puram plates that Varaguna II led a detached life devoted to the Lord having the crescent moon on his locks of hair. There fore we can conclude that Varaguna II who ascened the throne in 862 AD was

the contemporary of the Saint"[3] நம் பண்டைய மன்னவர்கள், ஒரு குறிப்பிட்ட சமய நெறிப்பட்டு ஒழுகினுலும் சமய வெறிப்பட்டார்களில்லை. ஆகவே கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் துணைக்கொண்டு ஆய்வது மிகவும் நல்லது.


திக்கெல்லாம் புகழ் திருத்தொண்டத்தொகை பாடியவர் வன்றொண்டராய சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் காடவர்கோன் கழற்சிங்கன் எனக்குறிப்பிடுவது 3ஆம் நந்திவர்மனையே யாகும், என அறிஞர் குறிப்பிடுவர், மூன்றும் நந்திவர்மன் காலம் கி. பி. 825—850 ஆகும். 'மாணிக்கவாசகர் சுந்தரர்க்குப் பிற்பட்டவர்' என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட வலுவுடைய கருத்தாகும்.

மேலும் மணிவாசகர் "ஈழம் சென்றது, ஏறத்தாழ கி. பி. 869 என "இராசநத்தகம்" என்ற சிங்கள நூல் குறிப்பிடுகிறது. ஆகவே கி. பி. 850க்குப் பிற்பட்டவனே மணிவாசகரின் சம காலத்தவனுகவேண்டும்.

வரகுணன் I ?

(1) முதலாம் வரகுணன் ஆட்சிக் காலம் கி. பி. 765-815 ஆகும். முதலாம் வரகுணன் ஜடிலன், ஜடிலவர்மன், நெடுஞ்சடையன், மாறஞ்சடையன், பராந்தகன், வரகுணன் என்றெல்லாம் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் குறிக்கப்படுகிறுன். திருப்பரன்குன்றம் கல்வெட்டுகளில் (E. P. ind Vol. VII No. 319 & 320) இவன் மாறஞ்சடையன் எனக் குறிப்பிடப்படுகிறுன். இக்கல்வெட்டின் காலம் கி. பி. 773—774 ஆகும். ஆனைமலையிலுள்ள இவன் காலத்து மாரன்காரியின் கல்வெட்டின் காலம் கி. பி. 770 ஆகும். ஆகவே இவற்றை ஊன்றுகோலாகக் கொண்டால் பராந்தகன் என்ற வரகுணன் (I) காலம் கி. பி. 765—815 ஆகும்.

(2) திண்டுக்கல் வட்டம் இராமநாதபுரத்தில் கல்வெட்டொன்றுளது. அக்கல்வெட்டில் காணப்படும் அதிகாரிகளைப்பற்றி Dr. K. V. இராமன் குறிப்பிடுவதாவது "Nakkan Pullan served king Varaguna II, his predecessor Pulla Nakkan served Sri Maran Sri Vallaban the Victor of Vilinjam, Idavai etc. his predecessor Parantaka Palli Velan served Nedunjadaian Parantakan.[4]



According Dalawaypuram plates "Sri Maran's father is mentioned as Jatila Parantaka. In the Sinnamannur bigger plates he is mentioned as Varaguna. There fore we are able to know that they refer to one and the same person is Jatila Parantaka was also called Varaguna. For us he is Varaguna. [5]

முற்கூறப்பட்ட மூன்று தலைமுறையினரும் முறையே வரகுணன் I, சீமாறன் சீவல்லபன், வரகுணன் II ஆகியோர் காலத்தவர் எனக் கல்வெட்டுப்படியும், செப்புப்பட்டயங்களின்படியும் சரியாக அமைகின்றனர். மேலும் வரலாற்று வல்லுநர் வேள்விக்குடி, சின்னமனூர்ச் செப்பேடுகளை ஆய்ந்து பராந்தக நெடுஞ்சடையனும், வரகுணனும் (I) ஒருவரே என நிறுவியுள்ளார்.[6]

ஆக மாற்றார் கூறும் வரகுணனை பராந்தக நெடுஞ்சடையன் மணிவாசகர் காலத்தவன் என்பது ஏற்புடையதா?


2ஆம் வரகுணனே

(1) இரண்டாம் வரகுணன் காலம் கி. பி. 862—880 ஆகும். இக்காலம் சுந்தரர் காலத்திற்குப் பிற்பட்டதாகும். மாணிக்கவாசகர் ஈழம் சென்றதாகக் குறிக்கப்படும் கி. பி. 869 இம்மன்னவன் ஆட்சியாண்டிலேயேதான் அமைகின்றது. "இரண்டாம்வரகுணன் மாணிக்கவாசகர், பட்டினத்தடிகளால் பாராட்டப்பட்டவன். 2ஆம் வரகுணன், அபராஜிதவர்மனைத் திருப்புறம்பியத்தில் வென்று திருவிடைமருதூரில் தங்கியதை சுந்தரர் குறிப்பிடவில்லை"[7] என்பர் திரு. மா. இராசமாணிக்கனார்.

The description of this king in this (Dalawaypuram) copper plates as the king "meditating Siva" is taken as sufficient evidence to settle the date of Manickavasakar as the contemporary of Varaguna II i. e. the later part of the 9th Century A. D. என திரு. K. V. இராமன் அவர்களும் குறிப்படுகிறார்.[8]

References

1. இலக்கிய வரலாறு—கா. சு. பிள்ளை பக்கம் 301
2. திருவாசகம் " நூலாராய்ச்சி "—ச. தண்டபாணி தேசிகர் தருமை ஆதீன வெளியீடு— பக்கம் 102
3. K. G. Krishnan at Seminar on Pandian History held at Madurai on 22—8—1971— 24—3—71
4. Some aspects of Pandiyan history in the light of recent discoveries—Dr. K. V. Raman Page 7
5. ibid Page 9
6. History of Pandya kingdom—A. K. N. Page 39
7. பெரியபுராண ஆராய்ச்சி—Dr. மா. இராசமாணிக்கனார்
8. Some aspects of Pandya history in the light of recent Discoveries—Dr. K. V. Raman


THE
PROPELLING POWER
BEHIND INDUSTRY...
DENA BANK
ASSISTS SMALL, MEDIUM
AND LARGE INDUSTRIES
TO PRODUCE MORE,
EMPLOY MORE,
EXPORT MORE.
If you are a manufacturer
in need of assistance,
visit the nearest DENA BANK
branch and find out how
DENA BANK can help you.
DENA BANK
Head Office: Devkaran Nanjee Buildings,
17, Horniman Circle, Fort, Bombay-1.
RATAN BATRA
DB/E/183

மதுரை நாயக்கர்களும் கோயில் திருப்பணிகளும்

அ. கி. பரந்தாமனார் M. A.,

மதுரை நாயக்கர்கள் என்பவர்கள், மதுரைப் பெருநாட்டைக் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரைக்கும்—207 ஆண்டுகள் ஆட்சி செய்தவர்கள். அப்போது மதுரை நாடு என்பது இப்போதுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களும் திருச்சிராப்பள்ளியும் அடங்கிய பெருநாடாய் இருந்தது. இப்பெருநாட்டை விஜயநகரப் பேரரசின் ஆளுநர்களாய் இருந்து ஆட்சி புரிந்தவர்கள் ஆறு நாயக்கர்கள். அவர்கள் விசுவநாத நாயக்கரும் 1529–1564) முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கரும் (1564—72), வீரப்ப நாயக்கரும் (1572—1595) இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரும் (1595—1601) முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரும் (1601—1609) முதலாம் முத்துவீரப்ப நாயக்கரும் (1609—1623) ஆவார்கள். ஏழாவது ஆட்சியாளராய் வந்த திருமலை நாயக்கர் (1623—59) அப்போது தலைக்கோட்டைப் போரில் தோற்றுச் சிதைந்துகிடந்த விஜயநகரப் பொம்மைப் பேரரசராய் இருந்த மூன்றாம் ஸ்ரீரங்கனோடு போராடிமுழுவுரிமை பெற்று அரசரானவர். இவரே விசுவநாதரை அடுத்து மிகுந்த புகழ்பெற்று விளங்கியவர். இவருக்குப் பின் வந்த இரண்டாம் முத்து வீரப்பர் (1659) முழுவுரிமை அரசராய் நான்கு திங்களே ஆண்டு மாண்டார். இவருக்குப் பின் வந்த சொக்கநாத நாயக்கர் (1659-82) மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர் (1682—89), மங்கம்மாள் (1689-1706) விஜயரங்க சொக்க நாயக்கர் (1706-32) மீனாட்சி அரசி (1732—36) ஆகியவர்கள் முழுவுரிமை அரசர்களாய் மாமதுரை நன்னாட்டை ஆண்டவர்கள். விசுவநாதர் மதுரை நகரைத் தலைநகராய்க்கொண்டு நாட்டை ஆண்டார். திருமலை நாயக்கரும் மதுரையைக் கோநகராய்க்கொண்டு மதுரைப்பெரும் நாட்டைச் சீரும்சிறப்புமாக ஆட்சி செய்

தார் சொக்கநாதரும் முத்துவீரப்பரும், மங்கம்மாளும், விஜயரங்க சொக்க நாதரும், மீனாட்சியரசியும் திருச்சி ராப்பள்ளியைத் தலைநகராய்க்கொண்டு அங்கேயே இருந்து மதுரை நாட்டை ஆண்டார்கள். இவர்கள் மதுரை நகரி லிருந்து ஆட்சி செய்யவில்லை என்பது குறிப்பிடற்குரியது. சந்தா சாகிப்பின் சதிக்கு இரையாகி நஞ்சுண்டு மாண்ட மீனாட்சி அரசியோடு 1736-ல் மதுரை நாயக்கர் பரம்பரையே முடிவடைந்து விட்டது. பதின்மூன்று மதுரை நாயக் கர்கள் மதுரைப் பெரு நாட்டை ஆண் டார்கள். இவர்கள் விஜயநகரத்தைச் சேர்ந்த வடுகர்கள்.



முதல் நாயக்கர் ;

விஜயநகரப் பேரரசரான புக்கரின் மகனான இரண்டாம் கம்பணரே முதல்முதல் மீனாட்சியம்மன் திருக் கோயிலுக்குத் திருப்பணிசெய்து மதுரை நாயக்கர்களுக்கு வழிகாட்டி வைத்தார். 1311-ல் மாலிக்காபூர் தமிழ கத்தின்மீது படையெடுத்து வந்து பெரும் பொருளைக் கொள்ளையடித்துச் சென்றான். 1317-ல் குஸ்ருகான் என்ப வன் படையெடுத்து வந்து தில்லிக்குத் திரும்பினான். துக்ளக் என்னும் பெய ரோடு தில்லி சுல்தானான உலூகான் என்பவன் 1324-ல் தமிழகத்தின்மீது ஒரு பெரும்படையை அனுப்பினான். இம்மூன்று படையெடுப்புகளுக்குப் பின்பு தமிழகம் தில்லி சுல்தான் பேரர சுக்குள் அடங்கிவிட்டது. துக்ளக், அசன்ஷா என்பவனை மதுரை நாட்டுக்கு ஆளுநராய் அமர்த்தினான். தென்ன கத்தில் அப்போது தில்லிக்கு எதிராக ஏற்பட்ட விடுதலை இயக்கத்தினால் அசன்ஷா மதுரைநாட்டின் முழுவுரிமைச் சுல்தானாய் விட்டான். இவனுக்குப் பின் மதுரை நாட்டில் அல்லாவுதீன் டாடாஜி, குத்புதீன், கியாஸ் உத்தீன்- தம்சானி, நாசிர் உத்தீன், ஹசன்கங்கு, பக்ருதீன் முபாரக்ஷா, அல்லாவுதீன் சிக்கந்தர் ஆகியவர்கள் ஆட்சி செய் தார்கள். இச்சுல்தான் ஆட்சி 48 ஆண்டு கள் நடைபெற்றது. இக்காலத்தில் மீனாட்சியம்மன் கோயில் பாழ்பட்டது. புக்கரால் அனுப்பப்பட்ட இரண்டாம் கம்பணர் 1371-ல் இவ்வாட்சியை ஒழித் துக்கட்டித் தமிழகத்தை விஜயநகரப் பேரரசில் இணைத்துவிட்டார். இவரே மகா மண்டலேசுவரராய் (Viceroy) இருந்து தமிழகத்தைக் கண்காணித்து வந்து 1374-ல் காலமானார்.

இக்கம்பணர், சுல்தான் ஆட்சியில் பாழ்பட்ட மதுரை நகர மீனாட்சியம்மன் கோயில் மதிற்சுவரைக் கட்டி முடித்து முஸ்லீம் படையெடுப்புக் காலத்தில்

நாஞ்சில் நாட்டுக்குக் கொண்டுபோயிருந்த திருவுருவத்தைக் கொண்டுவரச் செய்து, அதனை இக்கோயிலில் திரும்பவும் வைத்து, அதற்குத் திருவாபரணங்கள் செய்தளித்து, நாள்தோறும் வழிபாடு செய்வதற்காகத் திருவிளையாடற் கிராமத்தை விட்டுக் கொடுத்தார். இச்செய்தியைத் தாண்டவ மூர்த்திக் கவிராயர் இயற்றிய மதுரைத் திருப் பணிமாலைச் செய்யுள் குறிப்பிடுகிறது. அச்செய்யுள் வருமாறு:

பின்னொரு காலம் திருக்காப்பு
நீக்கித்தன் பேரன்பினால்
முன்னுள ஊர்களும் பின்புதி
தாய்விட்டு முக்கணர்க்கு
மன்னிய பூசை திருப்பணி
கூடல் வளரச்செய்தான்
கன்னியும் பொன்னியும் கங்கையும்
கொண்டருள் கம்பணனே.

இத்திருப்பணிமாலை நூல், மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் பல ஆண்டில் பாண்டித்துரைத் தேவரால் வெளியிடப் பட்டது.

ஆயிரங்கால் மண்டபம்

கி. பி. 1374க்குமுன் இரண்டாம் கம்பணரால் திருப்பணி செய்யப்பட்ட மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் 1529ல் விசுவநாத நாயக்கர், மதுரை நகரிலிருந்துகொண்டு மதுரைப் பெரு நாட்டை ஆட்சி செய்தபோது, பழுது பட்டுக் கிடந்ததைக்கண்டு, தமது கைப் பொருளைச் செலவு செய்து அக்கோயிலைப் பழுது பார்த்தார்; பல நகைகளையும் செய்து கொடுத்துச் சில ஊர்களையும் அளித்தார். இவ்விசுவ நாதருக்கு மதியமைச்சராயும் திறன் மிக்க படைத்தலைவராயும் இருந்த தளவாய் அரியநாத முதலியார், மீனாட்சியம்மன் கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டினார். இவ்வாயிரக் கால் மண்டபந்தான் இன்று கலைக் காட்சிக் கூடமாக இருந்துவருகிறது.

முதலாம் கிருஷ்ணப்பர் பாளையங் கோட்டைக்கு அருகில் தம் பெயரால் கிருஷ்ணபுரம் என்னும் நகரத்தை அமைத்து, அங்கே திருவேங்கட நாதர் கோயிலைக் கட்டி, அதற்கு இறையிலியாகப் பல சிற்றூர்களை அளித்தார்; அக்கோயிலுக்குத் தேர் ஒன்றும் செய்து கொடுத்தார்; சிவன் கோயிலையும் அங்குக் கட்டினார்; தெப்பக் குளத்தையும் வெட்டுவித்தார். இவர் மீனாட்சியம்மன் கோயிலிலும் பல திருப் பணிகள் செய்தார்; வெள்ளியம்பலமும், வடக்குக் கோபுரமும், திருமடைப் பள்ளியும், மூர்த்தியம்மன் மண்டபமும், இரண்டாம் பிரகாரத் திருச்சுற்று மண்டபமும், கொடிக்கம்பத்துக்கு முன் இருக்கும் வீரப்பர் மண்டபமும் கட்டினார்; மேலும் மீனாட்சியம்மன் ஆலய மண்டபத்தின் தூண்களுக்குப் பொற் றகடு போட்டார்; மீனாட்சியம்மனுக்குப் பொற்கவசம் செய்தளித்தார்; திருப் பணிமாலை, 'மத்தகப்போர் விசுவ நாதன் குமாரன் மனுமுறைக்கு, ஒத்துறப் பார்புரக்கும் கிருஷ்ண பூப குணக்கொண்டல்' இத்திருப்பணிகளைச் செய்ததாய் விரிவாயும் திட்டவட்ட மாயும் கூறுகிறது.

வீரப்ப நாயக்கர், தில்லைச் சிதம் பரத்தில் கூத்தப்பெருமானது திருக் கோயிலைச் சுற்றி வலிமைமிக்க மதிலைக் கட்டுவித்தார்; மீனாட்சியம்மன் திருக்

கோயிலில் இடபவாகனமும் பல்லக்கும் செய்துகொடுத்ததோடு மண்டபம் அமைந்த தோப்பும் அளித்தார்.

திருமலை திருப்பணி

திருமலை நாயக்கர் பொதுவாகத் திருப்பரங்குன்றத்து முருகப்பெருமான் திருக்கோயில், திருமாலிருஞ்சோலைக் கள்ளழகர் கோயில், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திருவரங்கம் பெரிய கோயில், திருவானைக்காவிலிருக் கும் சிவன்கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் ஆகிய இக் கோயில்களிலும் திருப்பணிகள் செய் திருப்பினும், மிகச் சிறப்பாக மதுரை நகரிலிருக்கும் மீனாட்சியம்மன் திருக் கோயிலுக்குச் செய்த திருப்பணிகளே அளப்பரியவை; அற்புதமானவை. இவர் மீனாட்சியம்மன் சந்நிதியில் உள்ள சங்கிலி மண்டபத்தைக் கட்டினார். இது கிளிகளை வைத்திருக்கும் இடத்துக்குத் தெற்கு வடக்காய் இருக்கிறது. இது மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் இருந்து சிதைந்துபட்ட கரியமாணிக்கப் பெருமாள் கோயில் தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. கி. பி. 7ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமண-சைவசமயப் பூசல்களுக்குப் பின் வைணவ-சைவப்பூசல்கள் நிகழ்ந்தன, இச்சைவ-வைணவ போராட்டங்களுக் குப் பின் சிவன் கோயில்களில் பெருமாள் சந்நிதிகளையும் அமைத்தற்குரிய இயக் கம் நடைபெற்ற காலத்தில் சிதம்பரத் தில்லைக்கூத்தப் பெருமான் திருக்கோயில் மதுரை மீனாட்சிசுந்தரர் கோயில் முதலிய பெருங்கோயில்களில் இருசமய ஒருமைப்பாடு ஏற்படப் பெருமாள் சந்நிதிகள் ஏற்பட்டன. இம்முறையில் மதுரை மீனாட்சிசுந்தரர் கோயிலிலும் கரியமாணிக்கப் பெருமாள் சந்நிதி ஏற் பட்டது. இது மாலிக்காபூர் படை யெடுப்பிலும், பின்வந்த வேறு இரண்டு படையெடுப்பிலும், மதுரை நாட்டில் நடைபெற்ற சுல்தான் காலத்திலும் அழிந்துபோய்விட்டது. இடிந்துபோய்க் கிடந்த இச்சந்நிதியிலிருந்த தூண்களைக் கொண்டே சங்கிலி மண்டபம் கட்டப் பட்டது. அம்மண்டபத் தூண்களி லிருக்கும் அனுமார், பஞ்சபாண்டவர் உருவங்களே, 'இத்தூண்கள் கரிய மாணிக்கப் பெருமாள் சந்நிதியிலிருந்து எடுக்கப்பட்டவை' என்பதற்குப் போதிய சான்றுகளாகும். சிதைந்த கரியமாணிக்கப் பெருமாள் சந்நிதி, பிற் காலத்தில் ஒருவாறு செப்பனிடப் பட்டது. ஆனால் கரியமாணிக்கப் பெருமாள் உருவச்சிலை இப்போது அதில் இல்லை. இக்கரியமாணிக்கப் பெருமாள் சந்நிதி மண்டபம், கூட்டுவழிபாடு நடத்தப் பயன்பட்டு வருகிறது. இதற்கு வடக்காடி வீதியில் உள்ள திருவள்ளுவர் கழகத்துக்குப் பக்கத்திலிருக்கும் மொட் டைக்கோபுரம் என்னும் வடக்குக் கோபுர வாயிலுக்கு எதிரில் பெரிய வாயில் இருப்பதைக் காணலாம்.

மேற்குறித்த மண்டபத்திற்குத் திருப்பணி செய்ததோடு திருமலை மன்னர் பின்னும் மீனாட்சியம்மன் திரு முன்பு அறுகாற் பீடத்தில் இருபெரு வாயிற் காவலர் (துவாரபாலர்) உருவங் களையும், சொக்கநாதர் திருமுன்பு அறுகாற் பீடத்தில் இருபெரு வாயிற் காவலர் உருவங்களையும் செய்துவைத் தார்; அந்த இரண்டு இடங்களிலும் பலி பீடங்களையும் கொடிக்கம்பங்களை யும் (துவஜஸ்தம்பங்களையும்) அமைத்து,

அவற்றைப் பொன்னால் கவசம் செய்து மாட்டி அழகு செய்தார். இத்திருப் பணிகளை மதுரைக் கோயில் திருப்பணி மாலைச் செய்யுள்கள் தெரிவிக்கின்றன.

தெப்ப விழா

திருமலை பூபதி வைணவராயினும் சோமசுந்தரப் பெருமான் மீது ஆழ்ந்த பக்திகொண்டிருந்தார். அவருக்கு நெடுநாள் இருந்த மண்டைச் சளிநோய் சோமசுந்தரப் பெருமான் திருவருளால் நீங்கியது என்பதே இதற்குக் காரணம். ஆதலால் அவர் மீனாட்சியம்மன் கோயில் ஆட்சியை அபிடேக பண்டாரம் என்பவரிடமிருந்து பணமும் நிலமும் கொடுத்து ஏற்றுக்கொண்டு அக்கோயிலில் பற்பல சீர்திருத்தங்களையும் தனிச் சிறப்புகளையும் செய்யலானார். அவர், கோயிலுக்கு 12,000 பொன் (24,000 ரூபாய்) வருவாய் கொடுக்கக்கூடிய ஐராவதநல்லூர் (அயிலனூர்), வலையபட்டி, வலையன்குளம், தொட்டியபட்டி. நெடுமதுரை, கொம்பாடி, பெரிய ஆலங்குளம், ஒற்றையாலங்குளம், சொக்கநாதன்பட்டி, ஆண்டிபட்டி, தாதன்பட்டி, சின்னமநாயக்கன்பட்டி, போடிநாயக்கன்பட்டி, கொண்டையன் பட்டி, தும்பிச்சிநாயக்கன்பட்டி, சண்பைக்குளம், விராலிபட்டி, கிள்ளி மங்கலம், சடைச்சிபட்டி முதலிய கிராமங்களை விட்டுக்கொடுத்துத் தம் பெயரால் ஒரு கட்டளை ஏற்படுத்தினார். இக்கட்டளை வருவாயிலிருந்து மீனாட்சியம்மனுக்கு முக்கால வழிபாடுகளும், சொக்கநாதப் பெருமானுக்கு உச்சி வேளை வழிபாடும், இளவேனிற்கால விழாவும் (வசந்தோற்சவம்), தெப்பத் திருவிழாவும் நடத்தப்படுகின்றனவாம்.

கோயில் வழிபாடு நடத்தி வந்தவர்களான விக்கிரம பாண்டியர் பட்டர் வகைக்கும் குலசேகர பாண்டியர் பட்டர் வகைக்கும் நீண்ட நாளாய்ச் சச்சரவு இருந்துவந்தது. கோயில் வழிபாடு செம்மையான முறையில் நடைபெற வேண்டுமானால் இச்சச்சரவு நீங்க வேண்டும். ஆதலால், திருமலை நாயக்கர் இன்ன இன்ன வகையினர் இன்னவை இன்னவை செய்யவேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுத்துத் தக்க முறையில் எல்லாம் நடைபெறுமாறு ஏற்பாடு செய்தார். இவ்வேற்பட்டால் கோயில் ஆட்சியில் ஒழுங்கும் அமைதியும் உண்டாயின.

நிர்வாகம் ஒழுங்குபட்டது

திருமலை, இவ்வாறு பட்டர்கள் நிருவாகத்தை ஒழுங்கு செய்தபின்பு சாத்திர வல்லுநரும், தமக்கு அமைச்சருமாக இருந்த நீலகண்ட தீட்சிதருடன் ஆராய்ந்து நான்கு பெருவிழாக்களையும், திருவிளையாடற் புராணத்தில் கூறப் பட்டுள்ள சில திருவிளையாடல்களை விழாக்களாக்கி அவைகளையும் நடத்த ஏற்பாடு செய்தார்; அவ்விழாக்களுக்கு வேண்டிய திருவாபரணங்களையும் செய்து வைத்தார். குதிரை வாகனத் தலைமுடிப்பாகை, இரத்தினக் கொண்டை, திருக்கலியாண முடி, நீலநாயகப் பதக்கம், குதிரை இரத்தின அங்கவடி, வீரகண்டை, இருதலைப் பட்சிப் பதக்கம், இரத்தின சூரிய காந்திப்பூ, இரத்தின வெண்டயம், நாகர் ஒட்டியாணம், குசாந்தரப் பதக்கம், துரைப்பதக்கம், சங்கு சக்கரப் பதக்கம், இரத்தினச் செங்கோல்,

பள்ளியறைக் காளாஞ்சி, சொர்ணக் கும்பா, பவளக்கொடி மாலை ஆகியவை திருமலை நாயக்கர் செய்துகொடுத்த வற்றுள் சிலவாம். இச்செய்திகளை மதுரைத் தூயமரியன்னை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த மு. கோவிந்தசாமி ஐயரவர்க்ளால் முன்புஆராய்ச்சி செய்து 1922ல் வெளி யிட்ட 'திருமலை நாயக்கர் சரித்திரம்' என்னும் நூலில் கூறப்பட்டிருப்பதால் அறியலாகும். மாசித் திங்களில் மீனாட்சி யம்மன் திருக்கலியாண விழாவும், தேரோட்ட விழாவும் நடந்துவந்தன. இம் மாசித் திங்கள் அறுவடை காலமாய் இருந்ததால் திருமலைநாயக்கர் கோயிலுக்காகச் செய்து கொடுத்த தேர்களை இழுக்க ஆள்கள் கிடைப்பது அரிதாகியிருந்தது. அக்காலத்தில் திருமாலிருஞ்சோலை மலையிலிருந்து கள்ளழகர் எழுந்தருளி மதுரைக்கு மிக அருகிலிருக்கும் தேனூர் வரை சித்திரா பௌர்ணமியன்று வந்துபோவது வழக்க மாயிருந்தது. இவ்விழாவிற்கு மக்கள் ஆயிரக்கணக்காய் வருவதைக் கண்ட திருமலை மாசித் திங்களில் நடந்துவந்த திருக்கலியாண விழாவையும் தேரோட் டத்தையும் சித்திரைத் திங்களில் நடக் கவும், சித்திரையில் நடந்துவந்த விழாக்களை மாசியில் நடக்கவும் மாற்றி வைத்தார்; மீனாட்சியம்மன் கோயில் பெருவிழாவை ஒட்டிக் கள்ளழகர் தேனூர்க்குப் போவதை விட்டு மதுரை வண்டியூர் வரைக்கும் வருமாறு செய்தார்; சைவத் திருநக ராய் விளங்கிவந்த பெருமைமிக்க திருமதுரையில் சைவக்கோயில் பெரு விழாவும், திருமாலிருஞ்சோலைமலை வைணவத் திருவிழாவும் அடுத்தடுத்து வரச்செய்ததால் இரு சமய ஒற்றுமைக்கும் பெருந்திரளாக மக்கள் கூடுவதற்கு வழிசெய்துவிட்டார். இன்றும் சித்திரா பௌர்ணமி பெரு விழா இலட்சக்கணக்கான மக்களைக் கவரும் விழாவாக இருந்துவருகிறது.

திருவிளையாடல்கள்:

திருவிளையாடல் புராணத்தில் கூறி யுள்ள திருவிளையாடல்களை விழாக்க ளாக மீனாட்சியம்மன் கோயிலில் நடை பெறவும் செய்தார் மன்னர் திருமலை. ஆதலால், திருவிளையாடல் விழாக்களுள் சில திங்கள்தோறும் இன்றும் நடை பெற்று வருவதைக் காணலாம்.

புரட்டாசித் திங்களில் அரண்மனை யில் நவராத்திரி விழா சிறப்பாய் நடை பெற்றதைப்போல மதுரைக் கோயி லிலும் நடைபெற மன்னர் திருமலை ஏற்பாடு செய்தார். இந்த விழா இன்றும் புரட்டாசித் திங்களில் சிறப் பாக நடைபெற்று வருகிறது.

மேலும் திருமலை பூபதி, தாம் பிறந்த தைமாதப் பூசநட்சத்திரத்தைக் கொண்டாடும் வகையில் வண்டியூர் மாரியம்மன் கோயிலுக்கு எதிரில் பெரிய தெப்பக்குளத்தை வெட்டுவித்து, அதில் அழகிய மைய மண்டபத்தை அமைத்து, அக்குளத்தில் தெப்பவிழா நடைபெற ஏற்பாடு செய்தார். இத் தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாகத் திருமலை பிறந்தநாளை ஒட்டிச் சித்திரைத் திருவிழாவுக்கு அடுத்த பெருவிழாவாக, ஆயிரக்கணக்கான மக்கள் கூடித் தரிசிக்கும் விழாவாக இன்றும் தைத் திங்களில் நடந்துவருகிறது.

புதுமண்டபம்:

திருமலை மேலும் சுந்தரேஸ்வரர் சந்நிதிக்கு எதிரில் மிக அழகிய சிற்ப வேலைகள் அமைந்த புதுமண்டபத்தைக் கட்டி அதில் வசந்தவிழா நிகழ்ச்சி நடத்தி வைத்தார். இப் புது மண்டபத்தைக் கட்டிய சிற்பி சுமந்திர மூர்த்தி ஆச்சாரி என்பர். இப் புது மண்டபத்தின் தூண்களில் திருமலை நாயக்கர் உருவமும் அவருக்கு முன்னிருந்தோர் உருவங்களும் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

புதுமண்டபத்தை முடித்துச் சில நாள்களானபின்பு திருமலை ஆவணிமூல வீதியைக் கோயிலுடன் சேர்த்து, அதையும் ஒரு பிரகாரமாக்கக் கருதி, ஆவணிமூல வீதியைச் சுற்றி மதிலெடுத்துப் புதுமண்டபத்துக்கு எதிரில் இராய கோபுரம் கட்ட எண்ணிக் கி. பி, 1654ல் நந்தன ஆண்டில் வேலையைத் தொடங்கினார். இதைப்போலவே 64 ஊர்களில் இராயகோபுரம்கட்ட வேலைதொடங்கப் பட்டது. மதுரை இராயகோபுரம் ஏறக்குறைய 60 அடி உயரமுள்ளது. "இக்கோபுரம் முடிந்திருந்தால் இந்தியாவிலிருக்கும் மிகச் சிறந்த கட்டடங்களுள் இதுவும் ஒன்றாக விளங்கும்" என்று மதுரை நகரவை ஆணையராய் இருந்த G. P. L. ஷெனாய் I. A. S., Bar-at-law அவர்கள் தமது 'கோயில் நகரம்-மதுரை' என்னும் சிறந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இராய கோபுர வேலை அந்த 64 ஊர்களிலும் நடைபெறாமல் நின்றுவிட்டது. மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கோயிலைத் தமிழகத்தில் உள்ள மற்றைக் கோயில்களைவிட மிகமிகச் சிறந்த கோயிலாகச் செய்த பெருமை திருமலை வேந்தருக்கே உரியதாகும்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் வில்லாபுரத்தில் மீனாட்சி அம்மனும் சொக்கநாதரும் எழுந்தருளுகிறபோது தங்கியிருக்க வசதியாய் இருக்கும் பொருட்டு எழில் மண்டபம் அமைத்தார். இதையும் மதுரைக் கோயில் திருப்பணிமாலைச் செய்யுள் குறிப்பிடுகிறது.

இவ்வாறு மதுரை நாயக்கர்கள் கோயில்களைக் கட்டி மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் பல திருப்பணிகள் செய்து விழாக்களை நடத்தி மக்கள் மனத்தில் இறைப்பற்று நின்று நிலவுமாறு செய்தார்கள். மதுரை நாட்டில் நாயக்கர் ஆட்சி இல்லாமலிருந்தால், சுல்தான் ஆட்சியே நீடித்திருந்தால், சைவமும், வைணவமும் என்னாகியிருக்கும்? சிவராஜதானியாகிய மதுரை என்னாயிருக்கும்? தமிழர் பண்பாடு எத்தகைய அவல நிலையுற்றிருக்கும்? கற்பனைக் கண்கொண்டு எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே இந்து சமயத்தையும் நந்தமிழர் பண்பாட்டையும் மதுரை நாயக்கர்கள் கோயில் திருப்பணிகளாலும், கோயில் விழாக்களாலும் பாதுகாத்து வந்ததை நன்றியுடன் தமிழர்கள் என்றும் மறவார்கள்.

மதுரை மீனாட்சியம்மை குறம்

பொ. முத்தரசு, எம். ஏ., பி. டி.,

'அமிழ்தினும் ஆற்ற இனியது' எனச் சிறப்பிக்கப் பெறுவது நம் தாய் மொழியாகிய தமிழ். அது அளவற்ற பல்வேறு வகையான இலக்கியச் செல்வம் வாய்ந்தது. அவற்றுள் இடைக்காலத்தில் இறைமணம் கமழப் புதுமை அழகோடு எழுந்தவை சிற்றிலக்கியங்கள் எனப் பெயர் பெற்றன; தொண்ணூற்றாறு வகையாக அவை பாகுபடுத்தப் பெற்றுள்ளன. இவ்வகை நூல்கள் அனைத்தும் இறைவனோடு உயிர்களுக்குள்ள இணைப்பை வற்புறுத்துவனவும், அவ்விணைப்புக்கு வழிவகுப்பனவும் ஆகும்.[1] இவ்வகை இலக்கியங்கள் பொருளாலும், வடிவாலும், அமைப்பாலும், நெறியாலும் புதுமை காட்டுவன. இப்பிரபந்தங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன குறம், குறவஞ்சி, பள்ளு என்பன. இவற்றில் தாழ்ந்த மரபினர் எனப்படும் குறவர், பள்ளர் ஆகியவர்களுடைய வாழ்க்கை முறையும், பேச்சும், பண்பாடும் முழு அளவில் சித்தரிக்கப்படுகின்றன.[2] இக் கட்டுரையில் "**மதுரை மீனாட்சியம்மை குறம்**" என்ற நூல் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆசிரியர் யார்?

பதினேழாம் நூற்றாண்டில் திகழ்ந்த ஆதி குமரகுருபர சுவாமிகளும், துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் பிரபந்த மன்னர்கள் என்று அறிஞர் களால் சிறப்பித்துக் கூறப்படும் சான்றோர்கள்.[3] ஆதி குமரகுருபர சுவாமிகள் இயற்றிய நூல்தான் "**மதுரை மீனாட்சியம்மை குறம்**". இதனைப் பதிப்பித்து வெளியிட்டுள்ள தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், இதன் ஆசிரியர் வேறு ஒரு புலவராக இருக்கக்கூடும் என்ற கருத்தைத் தெரிவித்தாலும்,[4] மரபு வழிப்பட்டதொன்றை அவர்கள் விடாது போற்றும் இயல்புடையவர்

கள்ளாதலால், இந்நூல் ஆதி குமரகுருபர சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட தென்பதில் கருத்து மாறுட்டத்திற்கு இடமில்லை எனலாம். மேலும் இந் நூலின் இறுதியிலுள்ள வாழ்த்துப்



பாடலில் "சீர்வாழி கச்சிநகர்த் திருமலை பூபதி வாழி"[5] என்பதினுலும், இதே கருத்துத் திருவாலவாயுடையார்கோயில் திருப்பணி மாலையில் (83) "புனவேலி தந்தனன் கச்சித் திருமலைப் பூபதியே" என வந்துள்ளமையாலும்,[6] திருமலை நாயக்க மன்னரால் சிறப்புச் செய்யப் பட்ட ஆதி குமரகுருபர சுவாமிகளே இதன் ஆசிரியர் என்று துணியலாம். இன்னும் இந்நூல் குறத்தி கூற்று என்பதற்கேற்ற முறையில் சற்று எளிய நடையில் அமைந்துள்ளது என்பதால், இது அவர் இயற்றியதன்று என மறுத்தல் பொருத்தமில்லை; பல்வேறு தொடர்கள் இந்நூலில் உள்ளன போலவே அவரியற்றிய மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், காசிக் கலம்பகம் போன்றவற்றிலும் அமைந்துள்ளன.[7]

குறமகள் குறி கூறுவது ஒரு மரபு :

மதுரைக் கலம்பகத்தில் **குறம்** என்னும் உறுப்பில் அமைந்துள்ள (பாடல் 78) பாடலின்[8] விரிவே **மீனுட்சி யம்மை குறமாக** வடிவெடுத்துள்ளது, என்று கூற இடமுண்டு. இந்நூலின் பாட்டுடைத் தலைவி மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மீனுட்சி யம்மை. இது சொக்கப் பெருமான் மீது காதல் கொண்ட ஒரு பெண்ணின், கைக்குறியும், பிறநிமித்தங்களும் கொண்டு குறத்தி, அத்தலைவியின் எண்ணம் நிறைவேறும் எனக் குறி கூறுவதாக அமைந்துள்ளது. இங்ஙனம் குற மகள் குறி கூறுவது தொன்று தொட்டு இன்றுவரை நாட்டுப்புறங்களில் இருந்து வரும் வழக்கமாகும். தொல்காப்பி யத்தில் வரும்,

"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"
(தொல்-களவு-24)

என்னும் நூற்பாவால் சுளகில் நெல் லிட்டு எண்ணிப்பார்த்துக் குறி

சொல்லும் 'கட்டுப்பார்த்தல்' என்பதும், தெய்வத்தை அழைத்து (அகவி) அவ்வுணர்வு மேலிடக் குறி சொல்லுதலும், பழைய வழக்கங்கள் எனத் தெரியலாம். கட்டுவிச்சி, 'அகவன் மகள்' (குறுந்தொகை) என இக் குறப்பெண்கள் கூறப்படுகின்றனர். குறத்தி குறி கூறுவதாக அமையும் நூல்கள், குறம், குறவஞ்சி என இருவகைப்படும். குறவஞ்சியில் குறத்தி கூற்றுடன், ஏனையோர் கூற்றுகளும், இசைதழுவிய நாடகப் பாங்கும் இணைந்திருக்கும். குறத்தில் குறப்பெண்ணின் கூற்று மட்டுமே இருக்கும். இதுவே இரண்டிற்குமுள்ள அடிப்படை வேறுபாடு. இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலச் செய்திகளையும் திறப்பட எண்ணிப்பார்த்துக் குறத்தி குறி கூறுவதாக இப்பிரபந்தம் அமைந்திருக்கும். [9]நாட்டுப் புறத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கத்தை அடியொற்றி எழுந்த இலக்கியமாதலின் எளிதில் பொருள் விளங்கத் தக்க ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, சிந்து, கண்ணிபோன்ற எளிய இன்னோசை மிக்க யாப்பு வடிவங்களாலே இது அமைந்திருக்கின்றது. இதனால் இன்புறுத்தலாகிய இலக்கிய நோக்கமும், நினைத்தவற்றை அடைவதற்கு இறைவன்பால் அன்பு செலுத்த வேண்டும் என்று உணர்த்தும் அறிவுறுத்தலும், எளிய இனிய சொற்களில் இயற்கையெழில், கற்பனை, கருத்துச் செறிவு, உவமை, உருவகம் ஆகிய அணி நலங்கள் புனையப் பெற்றிருக்கும் சிறப்பும் மிகத் திறமான புலமையோடு விளக்கப்படுகின்றன.

குறத்தியின் நயமான சொற்கள் :

இப்பிரபந்தத்தில் வரும் குறத்தி உலகியலறிவும், சொல்வன்மையும், குறிப்புணர்ந்து பேசும் திறமும், பேச்சின் இடையே தனக்குத் தேவையானவற்றை நயமாக உணர்த்திவிடும் பாங்கும், மதுரை நாயகியாகிய அங்கயற்கண்ணரமுதின் அடிமலர்களை மறவாத சிந்தையுமுடையவளாகக் காணப்படுகிறாள். பொதுவாகக் குறவர்கள் மலை வாழ் மக்களேயாயினும் மதுரைப் பெண்ஒருத்திக்குக் குறி சொல்லும் நிலையில் தன்னைப் 'பொதிய மலைக் குறத்தி' என அறிமுகப்படுத்துவதும், அம் மலையில் அங்கயற் கண்ணியின் திருவடியிணைகளை என்றும் மனத்துள் கொண்டிருக்கும் தமிழ் முனிவன் அகத்தியன் வாழ்கின்றான் என்பதும், நாடு, மொழி, இறை ஆகிய முத்திறப் பற்றுகளையும் உணர்த்தும் செறிவான கூற்றுகள். [10]'**கொல்லிப் பாவையோ**' எனத் தலைவியின் அழகைப் புகழ்வதும், குறிப்புணர்ந்து "**சொக்கலிங்கனைக் கூடி மேவுவாய்**" என்று எடுத்தஎடுப்பில் வாழ்த்துவதும் குறத்தி பெற்றுள்ள உலகியலறிவின் வெளிப்பாடுகள்.[11] வழிபாட்டுக்குரிய பொருள்களை எடுத்து வைக்கக் கூறித் தலைவியின் மோதிரக் கையை நீட்டச் சொல்லிப் பேசும் பேச்சோடு தன் குறி தப்பாது என்பதற்குச் சூளுரைத்தும், சொக்கர் வருவார் என்பதனை மும்முறை வற்புறுத்தியும் கூறி அது கேட்டுத் தலைவியின்முகம் மலரும் குறிகண்டு, தனக்கு ஓர் ஆடையும், ஒரு காசும் வைக்குமாறு நயமாகக் குறிக்கும் திறம் வியத்தற்பாலது. [12] அவ் வேளையில் இயல்பாக அவ்விடத்தில் நிகழும் பல்லியின் குரல், தன் உள்ளத்தெழுந்த கன்னிமார் குரல், இடக்கண் துடித்தல் ஆகிய நிமித்தங்களையும் உடன் கொண்டு தலைவியின்

மனம் மகிழ்ச்சியில் கூத்தாடச் செய்து விடுகிருள்.[13]

பின்னர்த் தன்னுடைய மலைவளங் கூறும்பான்மையில் பொதியமலையின் பல்வேறு சிறப்புகளிலும், தமிழ் முனிவன் அங்கு வாழ்வதும், தென்னந் தமிழும் பசுங்குழவித்தென்றற் கொழுந் தும் அங்குத் திளைப்பதும், அங்கயற் கணம்மையின் திருவருள் சுரந்து பொழிவதென அம்மலையில் அருவிகள் சொரிவதும், அம்மலையில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் அவள் அருளாட்சியில் பகை தவிர்ந்து நட்பும் பூண்டு அமைதியாய் இன்ப முடன் வாழ்வதும் எடுத்துக் கூறு கிருள். இக்கூற்றிலும் மேற்சொன்ன மூவகைப் பற்றுகளும் மிளிரக் காண லாம். பின்னர்த் தங்கள் மலைவாழ்க்கை எளிய, இனிய இயற்கைச் சூழலில் அமைந்ததென்றும், உணவும் உடையும் உறையுளும் எளியன என்றும், விருந் தோம்பலில் குறையில்லை என்றும், இவற்ருேடு நாடோறும் விழித்தெழும் போது அங்கயற்கண்ணியின் திருவடியில் விழுந்தெழுவதால் தங்கள் வினைப்பயன் கெட்டழிந்துவிடுகிறது என்றும் கூறு வது கருதத்தக்கது.[14] குறிச்சியின் தன்மையையும், குறவர்குலத்தையும் பற்றிக் கூறும்போது எல்லோரையும் வெடி சிரிப்பில் ஆழ்த்தும் நகைச் சுவையும் கலந்து பேசுகிருள்.

> "வெள்ளிமலைக் குறவன்மகன் பழனிமலைக்
> குறவனெங்கள் வீட்டிற் கொண்ட
> வள்ளிதனக் கேகுறவர் மலையாட்சி
> சீதனமா வழங்கி ஞரால்"
>
> — பாடல் 20

என்பது சான்ருகும். அத்துடன் தன் சொந்தக் குடும்பத்தில் நேர்ந்துள்ள வறுமை நிலையையும் அதற்குரிய கார ணத்தையும் மிகவும் நயமாகக் குறிப் பிடுவதோடு, இறைவன் எழுந்தருளி யிருக்கும் திருத்தலங்களை வழிபடுதலில் சிறிதும் தவறுவதில்லை என்பதைப் பேரன்போடும் பெருமித உணர் வோடும் குறிப்பிடுகிருள்.[15]

பேச்சுத் திசைமாறி வேறெங்கோ செல்லுகிறதே என்ற எண்ணம் தலைவிக்கு வாராதிருக்கத் தன் மூதாதை யர்கள் குறிசொன்ன வரலாற்றுடன், அவர்கள் சொன்ன குறியனைத்தும் பலித்துள்ளன என்றும், தான் அத் தலைவிக்குக் கூறும் குறியும் உறுதியாகப் பலிக்கும் என்றும் ஊக்கப்படுத்து கிருள்.[16] முக்காலமும் தெரிந்துரைப் பது தங்கள் குறச்சாதிக்கு மிக எளிது என்பதையும், எவ்வகையிலும் அரியதில்லை என்பதையும் கூறித் தன் பிள்ளைக்கு எண்ணெய்யும், ஆடையும், உணவும் பேச்சோடு பேச்சாகக் கேட்கிருள்.

தலைவியின் கைகள் சொக்கனை அணையும் :

இதற்குள் வழிபாட்டிற்குரிய பொருள்கள் எல்லாம் தொகுக்கப் பட்டமையின், முறைப்படியாக விநாயகர் வழிபாட்டையும், திருவிளக்கு வழிபாட்டையும் செய்து "மங்கையர்க் கரசியாம் அங்கயற்கண்ணமுதை மனத்துள் வைத்துத் தலைவி நினைத்த குறியைச் சொல்லத் தொடங்குகிருள். நெல்லைச் சுளகில்வைத்து முக்கூறு படுத்தி,ஒன்றைஇரட்டைபட எண்ணிய போது ஒற்றைபட்டதாலும், எண்ணிய அளவில் வேள்விமலைப் பிள்ளையார் இதயத்துள் தோன்றியதாலும், தன்

குலக்கன்னிமார் எழுவரும் உள்ணின்று உணர்த்தியமையாலும், தலைவி நினைத் தது தப்பாமல் நிறைவேறும் என்று அழுத்தமாகச் சொல்லுகிருள். அத்துடன் நெல்லளந்தபோது நல்ல இடத்தில் எழுந்த நிமித்தமும், பல்லியின் சொல்லும், பத்தினிப்பெண்கள் வாயால் கேட்ட விரிச்சியும், தும்மலும், ஆந்தையின்குரலும் நல்லநிமித்தங்களே என்றும் மிகச் சாதுரியமாகச் சொல்லுகிருள்.[17] பலவகைப்பட்ட சிறப்புகளையும் பெற விருக்கும் தலைவியின் கைகள் அவள் எண்ணியபடி சொக்கப்பெருமானின் தோள்களைத் தழுவும் என்றும், அந்த அருட்செயலை நினைந்து அங்கயற்கண்ணம்மையைக் கும்பிடவும் செய்யும் என்றும் கூறுவது மிக்க நயமுடையது.[18] தொடர்ந்து தலைவியின் மெய்க்குறிகளையும் கண்டு அவள் பெறப்போகின்ற பேறுகள் அனைத்தையும் கூறி, அவளது கையின் இரேகையைப் பார்த்து அவள் மனத்துகந்தனவெல்லாம் தடையின்றி நிகழும் விதத்தையும் சொல்லுகிருள். குறத்தியின் கூற்று ஒவ்வொன்றிலும் சொக்கரும் அங்கயற்கண்ணியும் மறவாது சுட்டப்பெறுதலினுல் தலைவியின் பேறு இறையனுருக்கு உகந்ததே; அதனேடு ஒட்டியதே என்ற கருத்து நன்கு வற்புறுத்தப்பெறுகிறது.

குறிசொல்லி முடிந்த பிறகு இங்ஙனம் கூட்டுவித்த அங்கயற்கண்ணியின் திருவருளுக்கு நன்றி செலுத்தும் பாங்கில் அவள் தென்னவன் மகளாய்த் தோன்றி உலகமுழுதாண்ட செல்வியாதலின் அவள் திருத்தசாங்கத்தை உள்ளன்போடு தலைவியைக் கூறச் செய்து தானும் சேர்ந்து பாடுகிருள்.[19] மலை, ஆறு, நாடு, நகர், தார், குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை ஆகியவற்றின் பெருமையும் சிறப்பும் இவ்விடத்து எடுத்துக் கூறப்படுகின்றன. ''நாரியிடப் பாகற்கு நஞ்சளித்த பாவியென்று, வாரியிடைச் செல்லாத வையை''யின் திறமும், ''பஞ்சவன்றன் நான்மாடக் கூடலில் கல்வலிது'' என்ற ஔவையின் பழம் பாட்டும், இன்னேரன்ன செய்திகள் பிறவும் புலவர்கள் மட்டுமேயன்றி மலைவாழ் மக்களும் அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்ருய் நிற்கின்றன. ''போகியாய் இருந்துயிர்க்குப் போகத்தைப் புரிகின்ருன் இறைவன்'' என்ற மெய்ப்பொருட் கருத்தைக் குறத்தியின் புகழ்ச்சிந்து நன்கு விளக்குகின்றது. பாண்டியன் குலத்துத் தோன்றியருளிய மீனுட்சியம்மையின் அடையாள மாலையாகிய வேப்பந்தார், அவளை மணந்த இறைவனுக்குக் கரும்பாகின்றது; இது

> "ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
> வானேர் அமுதம் புரையுமால் எமக்கு"

என்னும் தொல்காப்பியர் கூற்றை நினைவுபடுத்துகின்றது. மேலும் அங்கயற்கண்ணி திசையெட்டும் வென்று, உலகேழும் தான் கொண்ட அரசாட்சியை, ஊன்கொண்ட முடைத் தலையில் பலிகொண்ட தன் கணவனுக்குக் கொடுத்த சிறப்பும் மேற்கூறிய கருத்துக்குச் சான்ருகும். இறைவியின் திருவடியில் பிறையும் கொன்றையும் மணக்கும் என்ற நயமான குறிப்பும், குறியும் குணமும் இல்லாத இறைவனை அன்பினுல் அணைந்து அவற்றைக் கொள்ள வைக்கலாம் என்பதும் குறத்தி வாயிலாகவரும் நயம்செறிந்த கருத்துகள்.

"உலகெலாம் ஆகி வேறாய் உடனு மாய்"[20] நிற்கும் இறைவன் தன்மையை அவனோடு பிரியாதுடனுறையும் அங்கயற்கண்ணியின் புகழாகக் குறத்தி பாடுகிறாள். பழியஞ்சிய சொக்கருடன் கூடி வீற்றிருந்து நாடாளும் அரசாட்சியே பாரெல்லாம் புகழும் ஆட்சியென்பதும் அவள் வாயாலேயே வெளிப்படுத்தப்பெறுகிறது. அண்டப் பரப்பெனும் மணற் சிறுவீடுகளைக் கட்டிக் கணவனாகிய பித்தனுடன் விளையாடுகிறாள் அங்கயற்கண்ணி என்ற கருத்தால் படைப்பு, காப்பு, அழிப்பு என்ற முத்தொழில்களையும் குறத்தி மிக எளிய சொற்களில் விளக்கிவிடுகிறாள்.[21] "எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவள் நிற்பள்" அன்றோ?

இங்ஙனம் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த 'குறம்' என்னும் நூலால், ஆதி குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மையின் அளவிலாச் சீர்களை நாம் எளிய முறையில் தெளிவாக அறிந்து கொள்ளவும், பாடிப் பரவவும், நினைந்து போற்றவும் செய்தருளிய திறம் எண்ணி இன்புறத்தக்கது. நாட்டுப் பாடல் வரிசையைச் சார்ந்த இவ்விலக்கியத்தில் மிகச் சிறந்த மெய்ப்பொருட் கருத்துகளும், உலகியல் நடைமுறைகளும், நாடு, மொழி, இறைப்பற்றுகளும் எவ்வளவு இனிய, எளிய முறைகளில் விளக்கப்பட்டுள்ளன, என்று காணும்போது, கருவிலே திருவுடைய ஒரு கவிஞன் கையில், புல்லும் வல்லதொரு பெரும் படையாகும் என்பது புலனாகுமன்றோ? இன்னும் அச்சுக்கு வாராத நாட்டுப்பாடல் வடிவங்கள் முயன்று தேடி, அனைவர்க்கும் பயன்படச் செய்வது தமிழ்ப் பற்றுடையார் எல்லோரது கடமையுமாகும்.

மேற்கோள் விவரக் குறிப்பு:

1. நால்வர் நான்மணிமாலை—ஆராய்ச்சி முன்னுரை—பக்கம் 10, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
2. இலக்கிய விளக்கம்—புது இலக்கிய முறை—S. வையாபுரிப் பிள்ளை பக்கம் 110 தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
3. இலக்கியத் தோற்றம்—மு. கோவிந்தசாமி M. A. B. O. L;—பக்கம் 220-222. பாரி நிலையம், சென்னை.
4. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு—பக்கம் 11, ஸ்ரீ காசிமடம் பதிப்பு.
5. குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை குறம்—பாடல் 51
6. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்—மூன்றாம் பகுதி—குறம் சை. சி. கழகப் பதிப்பு.
7. ௸ ௸ ௸
8. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு - ஸ்ரீ காசி மடம் பதிப்பு, மதுரைக் கலம்பகம் பாடல் 78.
9. ௸ ௸ பக்கம் 125
10. ௸ மீனாட்சியம்மை குறம்—பாடல் 1—3.
11. ௸ ௸ —பாடல் 4.
12. ௸ ௸ —பாடல் 10.
13. ௸ ௸ —பாடல் 11.
14. ௸ ௸ —பாடல் 13—16.
15. ௸ ௸ —பாடல் 21.
16. ௸ ௸ —பாடல்கள் 22—23,
17. ௸ ௸ —பாடல்கள் 26—27.
18. ௸ ௸ —பாடல் 28.
19. ௸ ௸ —பாடல்கள் 31—39
20. சிவஞான சித்தியார்ப் பாடல் வரிகள்.
21. மீனாட்சியம்மை குறம் —பாடல்கள் 40—49.

பள்ளியறை வழிபாடு

ம. க. சுந்தரேச பட்டர்

திருக்கோயிலில் காலங்கள்தோறும் வழிபடுவது உத்தம சிவ புண்ணியம். மக்கள் அனைவரும் எல்லாக் கால வழிபாடுகளிலும் கலந்துகொண்டு வழிபடுதல் இயலாது. காலையிலோ மாலையிலோ வழிபட்டுப் பலர் பயன் அடைவர். மாலை வழிபாட்டிலும், இரவுப்பள்ளியறை வழிபாடு மதுரை முதலிய தலங்களில் விசேடமானது.

பள்ளியறை புறப்படுதல்:

சொக்கநாதர் சந்நிதியிலிருந்து அப்பெருமானுடைய திருப்பாதம் பல்லக்கில் எழுந்தருளப்படுத்தப்படும். இரண்டாம் பிரகாரம் மூலமாக அது அம்மன் சந்நிதிக்குக் கொண்டு செல்லப்படும். அப்போது சுவாமி கோயிலின் கம்பத்தடி முன்பு பெருமானுக்கு வேதம், திருமுறை முதலியவற்றை உரியவர்கள் ஓதி முடிப்பர். பின் நாதசுர இசையோடும் திருமுறை ஓதுவார்கள், திருமுறைப் பாராயணத்துடனே, அம்மன் சந்நிதிக்கு அதனை எழுந்தருளப் பண்ணுவர். அம்மனுக்குத் தீபாராதனை ஆனவுடன் பல்லக்கு, பள்ளியறையின் முன்பு கொண்டு செல்லப்படும். திருப்பாதத்தைப் பட்டர் கையில் ஏந்திப் பள்ளியறையில் கொண்டுபோய் எழுந்தருளப்பண்ணுவார். அங்குச் சோடசோபசாரதீபாராதனை நடைபெறும்; பள்ளியறை மங்கலத் திருப்பாடல் நாதசுரத்துடன் பாடப்படும்.

பள்ளியறை வரும்போது:

பள்ளியறைக்குச் சுவாமி வரும்போது அம்மன் சந்நிதிவரை நடைபாவாடை விரித்து வைப்பதும், அதில் பெருமான் நடந்து வருவதாகக் கொள்வதும் ஐதீகம். வரும் வழியில் சில இடங்களில் தீபாராதனை நடைபெறும். பிரமராகம் ஓதப்படும். வேதபாராயண கோஷங்களோடு பெருமான் பள்ளியறைக்கு எழுந்தருள்வதை இன்றும் காணலாம். பள்ளியறையில் தீபாராதனை முடிந்தவுடன் அனைவருக்கும் பால், சுண்டல், திருநீறு வழங்கப்படும். இதனோடு பள்ளியறை வழிபாடு நிறைவடையும்.

பள்ளியறைச் சிறப்பு:

பள்ளியறைக்குப் பெருமான் எழுந்தருளும் பல்லக்குத் தற்சமயம் வெள்ளியால் செய்யப்பட்டுள்ளது. இப்பள்ளியறை வழிபாடு ஒன்றைச் செய்வதற்குத் தான் திருமலை நாயக்கர் நாடோறும் வருகை தருவாராம். சம்பா, வடை, அப்பம், நைவேத்தியம் முதலியன அதற்கென உருவாக்கிய அம்மன் கோயில் மடைப்பள்ளியில் தயாராகி அனைவருக்கும் வழங்கப்படுமாம். நல்ல சந்தனம்



வழங்கப்படுமாம். இது பற்றித் திருமலை நாயக்கர் வரலாற்றில் குறிப்புக் காணப்படுகிறது. சந்தனக் கட்டையில் தங்க ஆணி அடித்துப் பச்சைக் கற்பூரம் சேர்த்து இழைக்கப்பட்ட மலாக்கா தேசத்துச் சந்தனக் குழம்பை நாள்தோறும் திருமலை நாயக்கர், பெருமானுக்கு அணியச் செய்து பக்தர்களுக்கும் வழங்குவித்து, தாமும் பூசி வழிபட்டுச் செல்வதுண்டாம். ஒருநாள் சந்தனம் இழைக்கும் பட்டர் பூசனைக்கு முன்பு சந்தனத்தைத் தம் உடம்பில் பூசிக்கொண்டு கோயிலின் ஒருபால் உறங்கிவிட்டார். நாயக்க மன்னர் கோயிலின் உள்ளே பிரவேசித்தவுடன் சந்தன வாடை வருவதைக் கண்டு பரிசாரகனை எழுப்பச் செய்து, அவன் ஆசையைப் பாராட்டி அவனுக்கு நாள்தோறும் சம்பாவும், சந்தனமும் வழங்கப் பணித்ததாக வரலாறு கூறுகிறது.

பள்ளியறைத் தத்துவம்:

இறைவன் வேறாகவும், உடனாகவும் இருந்து தொழிற்படும் தத்துவத்தில் இறைவன் இறைவியோடு உடனாக நின்று திருவருள் பாலிப்பதை இப் பள்ளியறை விழா உணர்த்துகின்றது. நாள்தோறும் நடைபெறுகின்ற கால வழிபாடுகளில் பள்ளியறை வழிபாடு ஒன்றில்தான் இறைவன் இறைவியோடு ஒன்றியிருந்து ஆன்மகோடிகட்கு அருள் வழங்குகின்றான். ஆதலால் இவ்வழிபாட்டிலேதான் மக்களுக்கு நாட்டம், அரசருக்கும் தேட்டம். இவற்றையெல்லாம் கருதியே பழைய காலத்திலிருந்து பள்ளியறை வழிபாட்டில் சுவாமிக்கு முன்பு ஓதுவார் திருமுறை விண்ணப்பம் செய்யவும், அத்தியான பட்டர் வேதம் ஓதவும், பாகவதர் பிரமதானம் பாடவும், ஆடல் பாடல்களோடு இவ்வழிபாட்டை ஏற்படுத்தியுள்ளனர். இவ் வழிபாட்டின் சிறப்புக்காக வயிநாகரம் நாகப்ப செட்டியார் கட்டளை ஏற்படுத்தியுள்ளார்.

சக்தியும் சிவனும் ஒன்றியிருந்து அருள் வழங்கும் நிலை இரண்டு. ஒன்று காலைத் திருவனந்தல் தரிசனம், மற்றொன்று பள்ளியறைத் தரிசனம். இத்தரிசனம் கிட்டியவர்களுக்குப் பேரின்பம் உடன் கிடைக்கும் என்பது சம்பந்தர் வாக்கு.

> அண்ணல் ஆலவாய்—நண்ணினான் தனை
> எண்ணியே தொழத்—திண்ணம் இன்பமே.

THE MADURAI PANDYAS

Dr. K. K. Pillay, M. A., D. Litt., D. Phill Oxon.)



Generally it is believed that the Pandyas had their original seat of power in Madurai, where the present city of that name stands. But there are legends which associate the early Pandyas with places like Korkai, Manalur, Kalyanapura andSouthern Madurai (Ten Madurai). How far these are historical it is difficult to decide The location of the earliest capital of the Pandyas in Ten Madurai which was said to be the seat of the First Tamil Sangam, finds mention for the first time in the commentary to the Iraiyanar Agappo-rul. But the probable date of this commentary is the 8th century A. D. and it professes to speak of a period of a by-gone age. Further it indulged in myths and legends involving gods and their association with the Sangam. Be that as it may, the commentary could not have invented the account of a Southern Madurai and a Kapadapuram as the seats of the two earliest Sangams if there were no basis for it at all. Though the Lemurian theory remains unproved, the fact of the earliest seat of the Pandyas having been a Ten Madurai is not unlikely. In this connection it may be noted that there is a Mathura near Java and this lends support to it.

Some poets of note belonged to the 1st Sangam while the celebrated Tolkappiyar belonged to the 2nd. The third Sangam was located in Vada Madurai, corresponding to modern Madurai. About twenty Pandyan monarchs are mentioned in the works of the third Sangam. Amongst these the most famous was the warrior king 'Talayalanganattuch Cheruvenra Pandyan Neduncheliyan'. It is significant that the name of this King Neduncheliyan figures in two Brahmi inscriptions discovered at Mangulam. It is also notable

that this king's victory at Talayalanganam is mentioned in the Larger Sinnamanur Plates of Rajasimha II, the Pandya.

The name of 'Pandya' is probably derived from Pandaiya or old, and not from 'Pandu' of the Mahabharata, as believed by some. The Pandyas are mentioned in Valmiki's Ramayana, Vyasa's Mahabharata, also later by Katyayana of the 4th century B. C. and Megasthenes, 3rd century B. C., and they find a clear reference in Asoka's inscriptions.

The normal extent of the Pandyan kingdom in the Sangam age corresponded to the modern Districts of Madurai, Ramanathapuram, Tirunelveli and part of Kanyakumari. The Sangam age which witnessed the most illustrious epoch of Tamil literature also synchronised with a glorious period of Pandya rule. If the Sangam fostered the great literature of Tamil, the Pandyas fostered the Sangam with the utmost enthusiasm. The Sangam age lasted during the first 3 centuries of the Christian era.

The Kalabhras

Sometime in the 4th century A. D. Tamilnad fell under a cloud, caused by the the incursions of the Kalabhras, whose indentity has been a keenly disputed question. The latest researches indicate that they were invaders from the Kannada country. An old inscription of Belur in Mysore speaks of a tribe of the region under the name Kalabhora. The Periyapuranam and Kalladam also support the view that the Kalabhras were Kannadigas. These predatory invaders were a composite group, consisting of Buddhists and Jains, and were responsible for confusion in the country. The Tamil Sangam collapsed and the Kalabhra rule which lasted till the last quarter of the 6th century was a dark age in the history of Tamil Nad. The Kalabhras were ultimately defeated by Simhavishnu Pallava and Kadungon Pandya. Kadungon Pandya became the founder of a new line of monarchs about A. D. 570 and they ruled with Madurai as their capital.

The Kadungon Dynasty

The rules of the Pandyan kings from Kadungon (c. A. D. 570-600) down to Maravarmam Rajasimha II (c. A. D. 900-20) has been described by some as the epoch of the First Pandyan Empire. But it is not quite justified. No doubt some of the Pandyas won victories over the Ay, Vels, Cholas, Pallavas and Kongu chiefs but they did not result in permanent conquests. For the most part, the domain of the Kadungon dynasty was confined from Madurai to Kanyakumari. Koccadayan Ranadhira (c. 674-720) seems to have won victories over the Chera, Chola and Chalukya kings and the Kongu chieftains. Maravarman Rajasima I (c. A. D. 720-67) won several battles in the conflict with the Pallavas. Parantaka Nedunjadayan (c. A. D. 767-811) was perhaps the greatest warrior of the Kadungon dynasty and he won victories over the Pallavas the Ay, Vel and Adigaman. But no permanent annexation of territories seems to have ensued from all these victories. Regarding his successor, Sri Mara Srivallabha (c. A. D. 811-62) the Larger Sinnamanur Plates speak of his victory over the Kerala king, the Pallava monarch, the Ceylon ruler and also over one Maya Pandya. Further, Sri Vallabha is stated to have won a victory over a confederation of Gangas, Pallavas Cholas, Kalingas and others at Kudamukku. But his triumph was short-lived; whether he was defeated at Tellaru in 854 by Nandivarman III or

not, the Pallavas were more powerful than the Pandyas during the latter part of Srivallabha's reign.

During the reign of Varaguna II (862-95), the eldest son of Sri Mara Srivallabha, the Pandya-Pallava conflict reached the final stage. Ultimately there followed the battle of Tiruppurambiyam about A. D. 895. The Pandyan king was vanquished but as a conseqence of this battle, it was Aditya Chola, the ally of the Pallava king, emerged as a powerful ruler in the south.

Parantaka Viranarayana (895-907), the younger son of Sri Mara Srivallabha, subdued Ugran Kottai, destroyed Pennagadam, fought with the ruler of Kongunadu and finally destroyed the Kongar at Tenur.

Rajasimha Pandya (907-31) was defeated by the Chola king Parantaka I about A. D. 910. Rajasimha desperately fled to Ceylon and sought the Ceylon King's help. But the army sent by the latter was defeated at Velur. Rajasimha then fled to Kerala, the homeland of his mother. But he received no help from there, and so his inglorious reign ended about A. D. 931. Though this marked the lowest ebb of the Pandyas, it cannot be held that it saw the end of the Kadungon dynasty because Colan Talaikonda Vira Pandya who ruled for some time was a son of Rajasimha.

From A. D. 931 to 946 we find no Pandya inscription. It is presumable that during this period, the Pandyan king ceased to rule or was reduced to an insignificant position. Parantaka Chola I seems to have brought the Pandya country under his control.

Meanwhile Vira Pandya, the son of Rajasimha II has risen to prominence and succeeded in re-establishing the Pandyan power. However, during his rule (c. A. D. 946-966) there were frequent struggles with the Cholas. Vira Pandya is stated to have killed a Chola king, probably Gandaraditya, and hence he has been known as 'Cholan, Talaikonda Vira Pandya', However, Aditya II, the Chola king (A. D. 956-69) took revenge on Vira Pandya by defeating him and eventually cutting of his head.

Thus ended the Kadungon dynasty. During the period the kings performed several Tulabharas and Hiranyagarbha danas. Brahmin settlements were established in several places. In fact, this age witnessed, perhaps tnrough the Pallava influence, the domination of Brahmins and the Aryan ways in the court and in the country. The patronage of Tamil was not conspicuous during the period. Names of men and places underwent a change from Tamil to Sanskrit.

The progress of Tamil literature was not prominent though the age saw the outpourings of several Nayanmars and Alvars. Buddhism was on the decline but there was acute rivalry between Jainism and Hinduism.

The Chola supremancy

After intermittent attempts by the Chola kings from the time of Parantaka I there appeared the epoch-making conquest of the Pandyan kingdom by Raja Raja I, probably by A. D. 994, and it came to be organised as the Raja Raja Pandinadu. Raja Raja effectively re-established the revenue system of the conquered Paṇḍya country.

Rajendra I, the son and successor of Raja Raja I, continued the Chola supremacy over the Pandyan kingdom; the Pandyan king no doubt continued to rule as a subordinate ruler. Rajendra I devised the method of appointing Chola Pandyan Viceroys from among the members of the Chola royal family. From A. D. 1022 to 1070 the Chola Pandya Viceroys exercised rule over the Pandyan country. The system did not succeed in preventing the rise of rebellions in this period and it was discontinued in the time of Kulottunga I.

Recovery of the Pandyas

Though Kulottunga I's formal supremacy over the Pandyas was maintained till the end of his reign, gradually the Chola's hold on the south became weak and we hear of the rule of the 'Five Pandyas'. The Pandyas seem to have recovered their position and waged successful wars with the Cholas and Cheras in the latter part of the 11th century and early 12th century. Among the Pandyas of the period, Maravarman Srivallabha (c. A. D. 1132-63) was an able ruler. It is learnt that his contemporary Venad ruler Viraravivarman paid tribute to him. Maravarman Srivallabha was ruling in South Pandinad. At the same time Jatavarman Parantaka Pandya (c. A. D. 1087-1132) ruled at Madurai. A valiant king, he also won victories against the contemporary Chera ruler.

கலைத்துறையில் ஆர்வத்துடன் பணியாற்றிக் கொண்டிருந்த போதே, திடீரெனத் துறவு மேற்கொண்டு தென்னாடு முழுவதும் பயணம் செய்து வந்தார். நாடகவுலகு ஒரு நல்ல தொண்டரைத், தலைவரை இழக்க விருந்தது. நல்ல காலமாக, அவருடைய வளர்ப்புத் தந்தையாகிய கஞ்சிரா மான்பூண்டியா பிள்ளையின் விருப்பிற்கிணங்கி மீண்டும் நாடகவுலகில் நுழைந்தார். இவ்வமயம் அவரது பணி, நாடக ஆசிரியர் என்ற நிலையில் தொடங்கியது. வள்ளி வைத்தியநாத ஐயர், அல்லி பரமேவசுர ஐயர் ஆகியோரின் நாடக சபைகளில் ஆசிரியராகி, நடிகர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தார். வேலுநாயரின் சண்முகானந்த சபையும் அவரது பணியைப் பெறும் பெருமை பெற்றது.

சமரச சன்மார்க்கசபையை அமைத்தவர்

1910-இல் மதுரையில், சங்கரதாஸ் சுவாமிகள் சமரச சன்மார்க்க சபையைத் தோற்றுவித்தார். இச் சபையில்தான் மதுரையின் சிறந்த இசைப் புலவர் மாரியப்ப பிள்ளை, எஸ். ஜி. கிட்டப்பா சகோதரர்கள், எம். ஆர். சுவாமிநாதன் போன்றவர்கள் சுவாமிகளிடம் சிறந்த முறையில் பயிற்சி பெற்றுப் பிற்காலத்தில் புகழ் வாய்ந்த கலைஞர்களாக விளங்கிப் பெருமை பெற்றனர். 1918-இல் சுவாமிகள்

மதுரைத் தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபாவை உருவாக்கினுர். நாடக உலகில் பெரும் புகழ் வாய்ந்த கலைஞர் களாக விளங்கிய டி. கே. எஸ். சகோதரர்கள் தங்கள் கலை வாழ்வைத் தொடங்கிப் பயிற்சி பெற்று வளர்ச்சி யுற்றது இச்சபையிலேயே ஆகும்.

ஒழுக்கநெறியை வலியுறுத்தியவர்:

சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடக உலகிற்குச் செய்துள்ள தொண்டு அளவிடற்கரியது. கலையுலகக் குப்பை கூழங்களை ஒதுக்கித் தள்ளித் தூய்மைப் படுத்த முனைந்தவர் அவர். நாடகக் கலைஞர்கள் நல்லொழுக்கத்தைப்பற்றிக் கவலைப்படாதவர்கள்; ஒழுக்கக் கேட்டிற் கும் காரணமானவர்கள் என்று சமுதாயம் கருதிக்கொண்டிருந்த காலம் அது. இக்கருத்துத் தமிழ்நாட்டிற்கே யுரிய தனியுடைமை யன்று என்பது உண்மையே. மனுவின் கருத்துப்படி ஒருவன் மற்ருெருவனின் மனைவியிடம் பேசுவானுனல் அவன் குற்றவாளி ஆவான். ஆனுல் அவனுக்கு ஒரே ஒரு சலுகை உண்டு. எவரும் ஒரு நடிகனின் மனைவியுடன் பேசலாம் என்பதுதான் அது. நாடகக் கலைஞர்களைப் பற்றிச் சமுதாயம் கொண்டிருந்த மதிப்பீடு இது. மேல் நாட்டிலோ அண்மையில், பதினுரும் நூற்ருண்டில், ஷேக்ஸ்பியர் வாழ்ந்துகொண்டிருந்த காலத்திலும் கூட நாடகக்கலைஞர்களை நாடோடிகளாக, நல்லொழுக்க நெறி களைப்பற்றிக் கவலைப்படாதவர்களாகக் கருதி ஒதுக்கிவந்தனர். தமிழ்நாட்டி லும் நாடகக் கலை நலிந்ததற்கு முதற் காரணம் கலைஞர்களின் நெறியற்ற வாழ்க்கையே. தமிழ்ச் சமுதாயம் அவர் களைக் கொலைஞர்கள், கொள்ளையர்கள் போல் ஒதுக்கிவைத்து வந்தது. இவ்வாறு ஒதுக்கப்பெற்ற சமுதாயத் தால் கலையை வளர்க்க வியலாது என்று கண்டார் சங்கரதாஸ் சுவாமிகள். ஆகவே கலைஞர்கள் வாழ்வில் வரன் முறைகள், நெறிமுறைகள் வேண்டும் என்று வலியுறுத்தினுர். ஆனுல் அவரது கருத்து வெற்றியுறவில்லை. வயதுவந்த கலைஞர்களிடம் தம் கருத்துத் தோல்வி அடையவே, சிறுவர்களைக் கொண்டு நாடகக் கலையை வளர்க்க முற்பட்டார். கட்டுப்பாடுகளுடன், நல்ல பழக்க வழக் கங்களை வலியுறுத்திப் பண்பட்டவர் களாக வளர்த்து, அவர்களுக்கு நடிப்புக் கலையும் பயிற்றுவித்தால், நல்ல பக்குவம் பெற்ற கலைஞர்களைப் படைக்க முடியும் என்று நம்பினுர் இந்த நம்பிக் கையில் உருவாகியதே மதுரைச் சன் மார்க்க சபை. சிறுவர்களுக்கு நடிப்புக் கலையில் பயிற்சியளிப்பதும், வாழ்க்கை நெறியை வலியுறுத்துவதும் அவருக்கு எளியனவாக இருந்தன. இதைத் தொடர்ந்து தமிழகத்தில் பல 'சிறுவர் நாடக சபைகள்' தோன்றின. மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபை, மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, மதுரைத் தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை போன்றவை இவ்வாறு தோன்றியவையே. இந்நாடக சபைகள் நாடகக் கலையை வளர்ப்பதில் பெரும் பங்கு பெற்றன எனலாம். திரையுலக நட்சத்திரங்களான எம். ஜி. சக்கரபாணி, எம். ஜி. இராமச்சந்திரன், காளி என். ரத்தினம், பி. யு. சின்னப்பா போன்றவர்கள் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பயிற்சிபெற்று உருவானவர்களே. இவர்களைப்

போன்றே கே. சாரங்கபாணி, நவாப் இராசமாணிக்கம், பி. டி. சம்பந்தம், எஸ். எஸ். முத்துக்கிருஷ்ணன், டி. பி. பொன்னுச்சாமி பிள்ளை, எம். ஆர். இராதா, எம். எம். மருதப்பா, சிதம்பரம் ஜெயராமன் போன்ற நடிகர்கள் மதுரைப் பால மீனரஞ்சனி சங்கீத சபையில் உருவானவர்கள். இத்தகைய சிறந்த நடிகர்களை உருவாக்கிய பாலர் சபைகளைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். அவர்தம் மேற்பார்வையில் இருந்த சிறுவர்களிடம் பொடி போடுதல், புகை பிடித்தல் போன்ற பழக்கங்கள் கூட இருக்கக்கூடாது என்று கண்டிப்பாகக் கண்காணித்து வந்தார். டி. கே. எஸ். சகோதரர்கள் போன்ற பண்புமிக்க கலைஞர்களை உருவாக்கித் தந்த பெருமை அவருக்கு உண்டு.

நடிப்புத்திறன்

சங்கரதாஸ் சுவாமிகள் சிறந்த நாடக ஆசிரியர்; நடிப்புக் கலையில் வல்லவர்; தம் தோற்றத்திற்கேற்ப வேடங்களைத் தேர்ந்தெடுத்து நடித்து வந்தார். எமதருமனாக அவர் வேடம் போட்டு நடிக்கும் காலத்தில் கண்டவர்கள் அஞ்சுவதுண்டு. ஒரு முறை இரவில் எமதருமனாக நடித்த சுவாமிகள் அதே வேடத்துடன் குளிக்கக் கிணற்றங்கரைக்குச் சென்றபோது அவரது தோற்றத்தைக் கண்டு ஒரு மூதாட்டி அதிர்ச்சி யடைந்து இறந்து விட்டதாகக் கூறுவதுண்டு. அவர் இரணியன், எமன், இராவணன் போன்ற வேடங்களில் தோன்றும் போது 'சுவாமிகள் இயமதருமராசாவாகத் தோன்றும் காட்சி வருகிறது, கர்ப்பிணிகள் கொட்டகையை விட்டு வெளியே செல்லவும்' என்று அறிவிப்பது வழக்கம். அந்த அளவுக்குத் தோற்றத்திலும் நடிப்பிலும் தாம் மேற்கொண்ட பாத்திரமாக மாறுகிறதிறன் சங்கரதாஸ் சுவாமிகளுக்கு உண்டு. ஆதலின் நடிப்புக் கலையில் வல்ல அவர், சிறந்த நாடக ஆசிரியராக விளங்கியதில் வியப்பில்லை.

சிறந்த நாடக ஆசிரியர்

நடிப்புக் கலையில் பயிற்சி அளித்தது மட்டுமின்றி அவர் ஏறத்தாழ நாற்பது



நாடகங்களையும் எழுதியுள்ளார். அவருடைய நாடகங்கள் அனைத்தும் பிற்காலத்துத் தோன்றிய நாடக சபைகளால் நடிக்கப் பெற்று வந்தன. அவர் காலத்தில் மக்களிடையே நாட்டுப் பாடல்களாகவும் வாய்மொழிக் கதைகளாகவும் உலவி வந்தவைகளையும்,

புராண இதிகாசக் கதைகளையும் நாடகங்களாக்கி அவர் மேடையேற்றினார். சதி அனுசூயா, சீமந்தனி, அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, வள்ளி திருமணம், பார்வதி கல்யாணம், சுலோச்சனா சதி, சத்தியவான் சாவித்திரி போன்றவை அவருடைய நாடகங்களில் குறிப்பிடத் தகுந்தவை. காப்பியக் கதைகள் பல அவரால் நாடக உருப்பெற்றன. கோவலன், மணிமேகலை, பிரபுலிங்க லீலை, பாதுகா பட்டாபிஷேகம், லங்கா தகனம், லவகுசா போன்றவை அவ்வாறு எழுந்த நாடகங்கள். அவர் ஈழநாட்டிற்குச் சென்றிருந்த போது இலங்கை வாழ் தமிழர்களுக்காகப் பூதத்தம்பிவிலாசம், மணிமாலிகை என்ற இரு நாடகங்களையும் இயற்றி அளித்தார். இவற்றுள் பூதத்தம்பி விலாசம் இன்று வரை நடிக்கப்பெற்று வருகிறது. இவை மட்டுமின்றி, மிருச்சகடி என்ற வடமொழி நாடகத்தையும், சிம்பலைன், ரோமியோ ஜூலியட் என்ற ஆங்கில நாடகங்களையும் அவர் தமிழில் ஆக்கித் தந்துள்ளார். இந்நாடகங்கள் அனைத்தும், எளிய இனிய சந்தப்பாடல்களும், கருத்துச் செறிவும் கற்பனை வளமும் கொண்ட உரையாடல்களும் கொண்டு விளங்குகின்றன.

நாடகச் சீர்திருத்தம்

சங்கரதாஸ் சுவாமிகள் காலத்திற்கு முன்னர்த் தமிழகத்தில் நடிக்கப் பெற்று வந்த நாடகங்கள் பெரும்பாலும் இசைப்பாடல்களால் ஆனவை. வரையறுக்கப்பட்ட உரையாடல்கள் கிடையா. நடிகர்கள் பாடல்களுக்கிடையிடையே தம் மனம்போனபடி உரையாடல்களை உரைநடையில் அள்ளி வீசுவதுண்டு. நடிகர்களின் திறனுக்கேற்றவாறு இவ்வுரையாடல்கள் நீண்டு செல்லும். அக்கால நடிகர்கள் பெரும்பாலும் கல்வியறிவு குறைந்தவர்களாக இருந்தமையால் அவர்களது பேச்சு, தரமின்றிச் சில நேரங்களில் அருவருப்பையூட்டும். ஆபாசத்தின் எல்லைக்குச் செல்வதும் உண்டு. நாடகத்தோடு தொடர்பில்லாத தனிக் கச்சேரியாக அமைவதும் உண்டு. இந்த நிலையை மாற்ற முயன்றவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

தமிழ் வசனம் அமைத்தவர்

சங்கரதாஸ் சுவாமிகள் நாடகக் கலையில் செய்த மற்றொரு சீர்திருத்தம் நாடகங்களில் வரையறுக்கப்பட்ட உரையாடல்களையே கையாளவேண்டுமென்று வற்புறுத்தியதாகும். தாம் இயற்றிய நாடகங்களில் அவரே உரைநடைப்போக்கில் உரையாடல்கள் அமைத்திருந்தார். சுவாமிகள் இசைப் பாடல்கள் இயற்றுவதில் வல்லவர். எனினும் நாடகங்களில் பாடல்களுடன் நீண்ட வசனங்களும் அமைத்தார். நீண்ட உரையாடல் அக்காலத்தில் 'தமிழ் வசனம்' என அழைக்கப்பட்டது. 'சுலோச்சனா-சதி' என்ற நாடகத்தில் இந்திரஜித் சுலோச்சனையிடம் 'களவுத் திருமணம்' தமிழருக்குரியதே; நெறிமுறையானதே என்று வாதாடும் இடத்தில் நீண்ட உரையாடல் அமைந்துள்ளது. தொல்காப்பியத்தில் கூறப்படும் எண்வகை மணங்கள்; அவற்றுள் களவு, கற்பு என்பனவற்றின் நிலை போன்ற கருத்துகளை விளக்குகிறான், இந்திரஜித்தாக நடித்துவந்த டி. கே.

சங்கரன் அவர்கள் இந்த நீண்ட வசனத்தைப் பேசும்போது மக்கள் இடைவிடாது கைதட்டி ஆரவாரிப்ப துண்டு. மக்களின் வரவேற்பை உணர்ந்த பின்னர்த் ''தமிழ் வசனத் துடன் கூடிய நாடகம்'' என்று விளம்பரங்கள் வெளிவந்தன. "தாரை துகில் மறந்து சந்திரனுக்கு எண்ணெய் தேய்க்கும் காட்சியைக் காணத் தவரு தீர்கள்'' என்ற விளம்பரங்கள் வெளி யாகித், ''தாராசசாங்கம்'' போன்ற அருவருக்கத்தக்க நாடகங்கள் வெளி வந்து கொண்டிருந்த காலத்தில், தமிழ் வசனங்களைப் பொழிந்து மக்கள் உள்ளங்களைக் கவர்ந்த பெருமை சுவாமிகளுக்கே உரியது.

இலக்கியத்தரங் கொண்ட உரையாடல்கள்

சங்கரதாஸ் சுவாமிகள் ஆழ்ந்த தமிழறிவும், சிறந்த இலக்கியப் பயிற்சியும் கொண்டவராதலின் அவர் அமைத்த பாடல்களும், உரையாடல் களும் இலக்கிய நயம் வாய்ந்தவையாய் விளங்குகின்றன. 'அபிமன்யு சுந்தரி' என்ற நாடகத்தில் ஒரு பகுதி. சுந்தரி யின் திருமண ஏற்பாடுகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. மண மகளுக்கோ கலக்கம், தன் காதலன் வரவேண்டுமேயென்று. மங்கல வாத்தி யங்கள் முழங்குகின்றன. துந்துபி தும்தும்தும் என்றும், சங்குகள் பம்பம்பம் என்றும், தாளவகை, சல்லரி, மல்லரி, கரடிகைகள் தீம் தீம் தீம் என்றும், முரசு பேரிகை மிருதங்கங்கள் தோம் தோம் தோம் என்றும் முழங்கு கின்றனவாம். அவை ஒன்று சேர்ந்து ஒலிக்கும்போது தும் பம் தீம் தோம் தும் பம் தீம் தோம்—துன்பம் தீர்ந் தோம் 'துன்பம் தீர்ந்தோம்' என்று ஒலிக்கின்றனவாம் என்று மணமகள் மகிழ்வதாகக் காட்டுகிருர் சுவாமிகள்:

தமிழ்ப்புலமை

மதுரையில் ஒருமுறை சுவாமி களின் கோவலன் நாடகம் நடிக்கப் பெற்றது, கோவலன் மதுரைக்குப் புறப்படும் நேரத்தில் 'மாபாவி யோர் கூடிவாழும் மதுரைக்குப் போக வேண்டாம்'' என்று தடுக்கிருள் கண்ணகி. இக்காட்சி நடந்துகொண் டிருக்கையில் மதுரை மக்களை மாபாவிகள் என்றமையால் மக்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. சுவாமிகள் நாடகத்தின் இடையிலேயே மேடைக்கு வந்து, மக்களை அமைதிப்படுத்தினர். 'மா' என்பவள் இலக்குமி. 'பா' என்பது பாரதியைக் குறிக்கும். 'வி' என்பது மலைமகளைக் குறிக்கும். மா பா வி யோர் கூடி வாழும் மதுரை என்பது அலைமகளும், கலைமகளும், மலைமகளும் கூடிவாழும் மதுரை என்றே பொருள் படும். கோவலனுக்குத் தீங்கு நேர விருப்பதால் இங்கு வேறு பொருள் தொனிக்குமாறு இத்தொடர் அமைக் கப்பட்டிருக்கிறது, என்று விளக்கினர். இந்நிகழ்ச்சியை திரு. டி. கே. சண்முகம் அவர்கள் தம் 'தமிழ் நாடகத் தலைமை யாசிரியர்' என்ற நூலில் விளக்கி யுள்ளார். சுவாமிகளின் சிறந்த தமிழ்ப் புலமைக்கும், காலமறிந்து செயல்படும் திறனுக்கும் இந்நிகழ்ச்சி ஒரு நல்ல சான்ருகும்.

தமிழிசை முழக்கம்

சுவாமிகள் தமிழ்மொழியின்மீது தணியாக் காதல் கொண்டவர். தம்

நாடகங்களில் ஆங்காங்கே தமிழின் சிறப்பை எடுத்துரைக்கிறார். அவரது காலத்திற்கு முன்னர்த் தமிழ் என்ற பெயரால் மணிப்பிரவாளம் நாடக மேடைகளில் ஆட்சி செய்துகொண்டிருந்தது. தெலுங்கு இசையில், மணிப்பிரவாள நடையில் பாடல்கள் முழங்கிக்கொண்டிருந்தன.

வேதவேதாந்த வைபோகி ஈரேழு விசுவசம்
ரக்ஷண சுயோசெ ரோஜபா
பானுப்ர காசம ஹானு பாவவெடி
தேனுகா சூரசம்ஹரி—சதா—தேவபதிவிநுத
சௌரி சரோஜ பாதமே
உதரப யோதர பதவண மேனிய
மதன ஜனகவன மாலி அஜ வந்திர
குணசாலி சரோஜ பாதமே
வரகோ கனனக யுரபீ தாம்பர
பரமபுருஷ சங்கதாரி பக்த பாப நாசன குடாரி
[துருவ நாடகம் பாடல் 48]

என்பது போன்ற "தமிழ்"ப் பாடல்கள் நாடக மேடைகளில் முழங்கிக் கொண்டிருந்த காலத்தில், சுவாமிகள் எளிய இனிய சந்தப்பாடல்களை இழைந்தோடச் செய்தார்.

" தேவிமலர்ப் பாதஇணை சென்னிமிசை
நான் கொண்டேன்
ஆவிஉடல் பொருள் மூன்றும்
அன்பாகச் சமர்ப்பித்தேன்"
[சீமந்தனி நாடகம்]

போன்ற தமிழ்ப் பாடல்கள் இவரால் இயற்றப் பெற்றன. இவர் இயற்றிய நாடகங்களில் உரைநடைப் பகுதியில் உத்தரப்பிரதியுத்தர சம்பாஷணை, மங்கள நிமித்தமாக, 'சந்தோஷப் பரிதனுகி' யென்பன போன்ற வடமொழிச் சொற்கள் கலப்பும் உண்டு. தனித்தமிழ் இயக்கம் தோன்றாத காலம் அது. முந்தையோர் மணிப்பிரவாள நடையை ஒப்புநோக்கச், சுவாமிகள் கையாண்டது எளிய இனிய தூய தமிழ்நடை என்றே கொள்ளலாம். அவருடைய பாடல்களில் உணர்ச்சிக்கேற்ற ஓசை நயம் தானே வந்து அமைகிறது.

" கிடுகிடுவென அண்டம் நடுங்கிடக்
கேட்டதொனியினால் தேவர் ஒடுங்கிடக்
கிட்டுவேன் தட்டுவேன் வெட்டுவேன்
கேவலம் நீரெனையே வெலும் வீரரோ"
(சுலோச்சனாசதி நாடகம்)

என்ற வரிகளில் சீற்றத்தின் குரல் பாடலின் சந்தத்திலே ஒலிப்பதைக் காணலாம். திக்கு விசயம் செய்ய விரும்பும் சந்திராங்கதன் தன் தோழனிடம் தன் விருப்பை எடுத்துக் கூறுகிறான்.

"திடமுடனெதிர்வரு பகைவரை
விரைவொடு புறமுதுகிட ஓட்டிச்
செருக்கள முழுதுயிர் பிணக்குவியலுற
ஜெயக்கொடி நிலைநாட்டிச்
சித்திரவில்லிலெனக் கிணையுற்றவர்
சற்றிலையென வெற்றிமாலை சூட்டித்
தீரமோடுவர நாடினேன் புகழைச்
தேசமெங்கும் சாட்டி"
(சீமந்தனி நாடகம்)

என்கிறான். இப்பாடலைத் தோடி ராகத்தில் பாடுகிறான் சந்திராங்கதன். வெற்றுடலும் வீறுகொண்டெழுமாறு அமைந்துள்ள சந்தம் இப்பாடலுக்குத் தனிவேகத்தைக் கொடுக்கக் காணலாம். இதே நாடகத்தில், சந்திராங்கதன் ஒரு பெண்ணைக்கண்டு மயங்குகிறான். அவன் எழிலைப்பாடுகிறான். சொற்கள் காதல் கனிவோடு குழைகின்றன.

"வானபூமியில் வாழுவாள் இவளோ
மதிவதனி இருகொடிய கணைவிழியாள்
மனமகிழ
ஒருவரோடு
மருவியுறவு செய்தினு மிளமை யழியாள்
மலர்கள்நிறை கொடி எனவு மிவளிடை
ஒடியுமென நடை தளரு மியல்பினள்"

என அமைந்துள்ளது அப்பாடல். இவ்வாறு சந்தநயத்துடன் கூடிய இனிய தமிழிசைப் பாடல்களை நாடக மேடைகளில் முழங்கச் செய்த பெரியார் சங்கரதாஸ் சுவாமிகள்.

காலத்திற்கேற்ற கருத்துகள்:

மக்களிடையே வழங்கிவந்த கதைகளையும் நாடகமாக்கிய சுவாமிகள், காலத்திற்கேற்ற கருத்துக்களை ஒவ்வொரு நாடகத்திலும் வலியுறுத்தத் தவறவில்லை. அவரது 'கோவலன் நாடகம்' இளங்கோவின் சிலப்பதிகாரத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டது, என்று குறை கூறப்படுகிறது. கோவலன் கதை அவர் காலத்திற்கு முன்னரே நாட்டுப் பாடலாகப் பரவிவந்தது. கோவலன் கோவிலவனாகவும் கண்ணகி 'கர்ணகி'யாகவும் மாதவி 'மாதகி' என்ற பாதகியாகவும் மக்கள் நாவில் நடமாடி வந்தனர். அக்காலத் தெருக் கூத்துகளில் கோவிலவன் கதை மாதகி என்னும் பாதகியின் கொடுமையைக் காட்டவே இடம் பெற்றது. மாதகி போட்ட சொக்குப்பொடியால் மயங்கிய கோவிலவன் வெட்டுண்டு கிடந்தகாலத்தும், கர்ணகி அவன்மேல் விழுந்து அழுதபோது எழுந்திருந்து ''மாதகி என்றால் மடிமேல் வா, கர்ணகியென்றால் கடக்கப் போ'' என்று பாடுவதுண்டு. இறுதிக் காட்சியில் கர்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனின் குடலைப் பிடுங்கி மாலையாக்கிக் காளியாக நின்று கோர தாண்டவம் ஆடுவாள். இந்தத் தெருக் கூத்து நாடகத்தை ஓரளவு பண்படுத்தி அமைக்கப் பெற்றதே சுவாமிகளின் கோவலன் நாடகம். சுவாமிகளும் பரத்தமையின் கொடுமையை இந்நாடகத்தில் வேகமுடன் சாடுகிறார். கோவலனைக் குற்றவாளியாக வழக்கு மன்றத்தில் நிறுத்தி வழக்கை ஆராய்ந்து, மன்னன் தீர்ப்புக் கூறுவதும், கோவலன் மரண வாக்குமூலம் அளிப்பதும் சுவாமிகள் கோவலன் நாடகத்தில் புகுத்திய புதுமை. காலத்திற்கேற்ற கோலத்துடன் இந்நாடகம் நடிக்கப் பெற்றது என்பதே உண்மை.

முடிவுரை:

இவ்வாறு, சங்கரதாஸ் சுவாமிகளின் வரலாற்றை ஆராய்ந்தால் அவர் தமிழ் நாடகக் கலைக்குச் செய்த தொண்டு புலனாகும். நாடகக் கலைஞர்களிடையே நல்லொழுக்கத்தை வலியுறுத்தியதும், நாடகங்களில் வரையறுக்கப்பெற்ற உரையாடல்களை நல்ல தமிழில் உலவ விட்டதும், இனிய தமிழில் இசைப்பாடல்களை முழங்கச் செய்ததும், காலத்திற்கேற்ற கருத்துகளை நாடகங்களின் மூலம் பரப்பியதும் அவருடைய பணிகளில் குறிப்பிடத் தக்கவை. இருபதாம் நூற்றாண்டு நாடக வளர்ச்சியின் முன்னோடியாகத் திகழ்ந்த சங்கரதாஸ் சுவாமிகள் மதுரையிலேயே தம் பணியைத் தொடங்கி வளர்த்து, நாடகத் தமிழை வளரச்செய்தார். மதுரையும், தமிழும் உள்ளளவும் மக்கள் அவரை மறக்க வியலாது. அவருடைய நாடகங்களில் சுலோச்சனாசதி, சீமந்தனி, சதிஅனுசூயா, அபிமன்யு சுந்தரி என்ற நான்கு நாடகங்களும் அச்சில் வெளிவந்துள்ளன. ஏனைய நாடகங்களையும் வெளியிட்டுத், தமிழ் மக்கள் அந்நாடகங்களையும் சுவைத்து மகிழுமாறு செய்வது கலையன்பர்களின் கடமையாகும்.

மதுரைக் கலம்பகம்

பூ. சொல்விளங்கும்பெருமாள்,
எம். ஏ.,

இன்றைய கவிதையமைப்பிற்கும், சங்கச் சான்ருேர் பாடலமைப்பிற்கும் சொல்லினும் பொருளினும் நிரம்ப வேற்றுமைகளுள்ளன. ஏதேனும் ஓருணர்வை இயற்கைப் பின்னணியில் நிலைபெற்ற கருத்துகளோடு வீரிய வில்லைகளாக்கித் (Capsules) தனித் தனிப் பாடல்களாகத் தந்துள்ளனர் அவர்கள். பின்னர்க் கதைகளைக்காவியங் களாகக் கவிதை வடிவில் தந்தனர். இறையுணர்வு மேலோங்கி வந்ததும் அகவுணர்வுப் பாடல் துறைகளைக் கொண்டு இறையுணர்வுப் பாடல்கள் வெளிப்பட்டன. பின்பு இறைவனைமைய மாகக் கொண்ட கதைகள், கவிதைகளை வாய்க்காலாக்கினர். அரசர்கள் முதலிய மேலோர் கதைத் தலைவர்களாயினர். எல்லாத்துறைகளிலும் பாடல்களை யாத்து அலுத்த அறிஞன், மரபுகளை மீறிமீறிப் புதுமை செய்த புலவன், மீண்டும் புதுமைகளைப் புகுத்தப் புகுந்து பல்வேறு பாவகைகளில் அகம், புறம், இறை, சமுதாயச் செய்திகளைப் பாடத் தொடங்கினன். அந்த முயற்சியால் ஏற்பட்ட கவிதைவளர்ச்சியின் பலன் தான் கலம்பகம்.

" களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல் " எனவரும் தொண்டரடிப்பொடியாரின் நாவில் உதிர்ந்த சொற்களில், கலம்பகம், அழகிய பலநிறப் பூக்களாலான மாலை யாக உருவாகியதைக்கண்டு உவக் கிருேம். இச்சொல்லுக்குப் பொருள் காணவந்த நச்சினர்க்கினியர், " பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பக மாலை " என்று பகர்ந்துள்ளார். ஆகலின் புதுமை வனப்பும், பலவகைச் சுவைகளும் கொண்டு பலவகைப் பாடல் வகைகளாலும், செய்திகளாலும் பொலிவுற விளங்குவது கலம்பகம் என்பது தெளிவாம். ஒன்ருேடொன்று வடிவாலும் ஒலியாலும் தொடர் பில்லாத வீணை, மத்தளம், புல்லாங் குழல்போன்ற இசைக்கருவிகள் இணைந்து ஒலித்துச் செவிக்கு இசை யின்பம் ஏற்படுத்துவதைப்போன்று கலம்பகமும் பலவகைச் சந்தங்கள், கருத் துகள், சுவைகள் சேர்ந்து இதயத் திற்கும், சிந்தைக்கும் இன்பமூட்டு கின்றது.

உறுப்புகள்

தொண்ணூற்ருறு பிரபந்த வகை களுள் ஒன்ருன கலம்பகத்தின் உறுப்புகள் பதினெட்டு என்பர். அவை யாவன; 1. புயம்; 2. தவம்; 3. வண்டு; 4. அம்மானை; 5. பாண்; 6. மதங்கு;

7. கைக்கிளை; **8.** சித்து; **9.** ஊசல்; **10.** கிளி; **11.** மடக்கு; **12.** ஊர்; **13.** மறம்; **14.** காலம்; **15.** தழை; **16.** இரங்கல்; **17.** சம்பிரதம்; **18.** கார் தூது.

குமரகுருபர சுவாமிகள்

ஸ்ரீ வைகுண்டத்தில், சண்முகசிகாமணிக்கவிராயருக்குமகனாய்த்தோன்றிய சுவாமிகள் அமைப்பழகும் கருத்தழகும் நிறைந்த பதின்மூன்று சிற்றிலக்கியங்கள் படைத்தார். அவர் சிறுவராய் இருந்த காலத்தில் ஊமையராய் இருந்ததாகவும், திருச்செந்திலாண்டவன் கருணையால் பேசும் ஆற்றல் பெற்றதாகவும் கூறுவர். அவர் மதுரையில் இருந்த காலத்தில் மன்னர் திருமலை நாயக்கரின்அவையில் அருள்மிகுமீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்பாடி அரங்கேற்றுங்கால் அம்மையே பிள்ளை வடிவாக வந்து அவருக்கு ஒரு முத்துமாலை பரிசளித்ததாகக் கூறுவர். அதன் பின்னர் மதுரைக் கலம்பகம் பாடினார்.

அகத்துறை — பாடலாமா?

மதுரைக்கலம்பகத்தில் மதுரைச் சொக்கநாதரின் புகழும் மீனாட்சியம்மையின் அருட்டிறனும் பெரிதும் பாராட்டப்படுகின்றன. அகத்துறைப் பாடல்கள் வாயிலாகவும், புறத்துறைப் பாடல்கள் வாயிலாகவும் இறைவன் இறைவியரது செவ்வி புலனாக்கப் படுகிறது. 'பேரின்பத்தைப் பாட வேண்டியவர்கள் சிற்றின்பத்தை வாயிலாகக் கொள்வது ஏன்?' எனச் சிலர் ஐயுறுகின்றனர். 'மாணிக்கவாசகர் போன்ற அறநெறிச் செம்மல்களும் ஏன் காதலை வாயிலாக்கிப் பாட வேண்டும்?' என்கின்றனர்.

முதலாவது:

காதல் வாழ்க்கையைத் தமிழ்ச் சமுதாயமும், தமிழ்ச்சான்றோரும் வெறுத்து ஒதுக்கியதில்லை. அது தூய்மையானது; இயற்கையோடொட்டியது; கூறப்போனால் இறைவனை அடைய அதுவே வழியென்றுகூட அறவோர் கருதுகின்றனர்.

தொல்காப்பியமும்,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி"

என்றே துறவுக்கு வழிகாட்டுகிறது.

இரண்டாவது:

சீவான்மாவும் பரமான்மாவும் கூடியிருந்தவை. அவை பிரிந்து பின் கூடவேண்டும். கூடுவதில் ஓர் இன்பம் வேண்டும் என்பதற்கு முதற்சான்றாகக் காதலர் சேர்வதை அன்றி வேறெதனை எடுத்துக்காட்டாகக் கூறமுடியும்? திருமாலும் திருமகளும் முறையே இராமனாகவும் சீதையாகவும் பிரிந்து, பின் ஊழ்வினையால் கூடியதைத்தானே கம்பரும், "பிரிந்தவர் கூடினால் பேசலும் வேண்டுமோ" என்றார். ஆகவே பிரிந்த தலைவனும் தலைவியும் இடையறாது, இடைவிடாது ஒருவரையொருவர் நினைப்பதைப் போன்று ஊழ்வினையால் பரமான்வாகிய தலைவனிடமிருந்து சீவான்மாவாகிய தலைவி பிரிந்தது, மீண்டும் கூடவே. தலைவனைக் கூடாது வாழும் வாழ்க்கை 'வாழாவெட்டி' என ஒதுக்கப்படும். இடையறாத நினைவின்றேல் காதலர்வாழ்வு கயிறறுந்த பட்டமாகும்; உணர்வுப் பாலம் உடைந்து காதல்வாழ்வு வீணாகும். வீண்வாழ்க்கை யொழித்து மாண்வாழ்க்கை மேற்கொள்ள வேண்

டும், என்பதற்காகவே சான்றோர் விண் வாழ்வைக் காட்டக் காதல் வாழ்வை எடுத்துக் காட்டுகின்றனர்.

மூன்றாவது:

காதலனைக் காணாத காதலிக்கு ஏற்படும் உடல் வேறுபாடு, உணர்வு வேறுபாடுகள் இறைவனை நினைந்தேங்கும் ஆன்மாவிற்கும் உண்டு.

நான்காவது:

கண்டது கொண்டு காணாதது காட்டல் உலகியற்கை. அதுபோலக் காணுங் காதலைக் கொண்டு காணாத மேல் இன்பத்தைக் காட்டுகின்றார்.

ஐந்தாவது:

"நினைத்தொறும் காண்தொறும் பேசுந்
தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்
தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய்
கோத்தும்பீ"

எனத் திருவாசகம் கூறுமாறுபோல் காதலிக்கும் பக்தனுக்கும் உணர்வு ஒன்றேயன்றோ; காதலனை நினைந்து, கண்டு, பேசி, எலும்பு உள்நெக உருகினால் காதலின்பம் கூடும். அதுபோல் அகக் கண்ணால் கண்டு, நினைந்து, பேசி, எலும்பு உள்நெக உருகினால் பேரின்பம் எளிதில் கூடும். ஆகவே பேரின்பக் குளத்தில் மூழ்கித் திளைக்கக் காதல் துறைகளைச் சான்றோர் அமைத்து அமைதி கண்டனர். சிலவற்றைக் காண்போம்.

உடம்பு ஏன்?

தோழியொருத்தி தலைவியிடம் சொக்கநாதராம் தலைவரின் இயல்பைக் கூறுகிறாள். ஒருவர் மற்றவருக்கு ஏதேனும் பொருள்தர வேண்டுமாயின் அவருக்கெனச் சொந்தமாக ஏதேனும் பொருள் இருந்தாலன்றோ முடியும்! வெறுங் கை முழம் போடுமா? பொருளில்லாவிட்டால் போகட்டும். உடம்பாவது அவருக்கெனச் சொந்தமானதோ? இல்லை. அதையும் ஒரு பாதியைத் திருமாலுக்கும், மற்றொரு பாதியை உமைக்கும் கொடுத்துவிட்டுத் தமக்கென ஒன்றுமின்றியிருக்கிறார். இவர் பிறருக்கு அருளுவது எவ்வாறு? அதுதான் போகட்டும். தமக்கென, வெள்ளி அம்பலமும், பொன்னம்பலமும் இருக்க இவர் நின்று ஆடுவது எங்கே? மனிதர்கள் நுழைய முடியாத, புகவிரும்பாத புறங்காட்டிலன்றோ? ஆகவே தமக்கென்று உடம்பும் இல்லாமல், தமக்கென்றுள்ள இடத்தையும் இழந்துநிற்கும் இந்தப்புராரியை நாம் இரந்து ஏதேனும் கேட்டால் அவர் எவ்வாறு தருவார்? என்பது போன்று அமைத்து ஆசிரியர்இறைப்பெருமையை வெளிக்காட்டுகிறார்.

"ஒன்றே யுடம்பங் கிரண்டே யிடும்பங்
குடப்பொன்றிலார்
என்றே யறிந்தும் பினின்றே யிரங்கென்
றிரக்கின்றவா
குன்றே யிரண்டன்றி வெண்பொன்
பசும்பொன் குயின்றேசெயும்
மன்றே யிருக்கப் புறங்கா டரங்காட
வல்லாரையே"

நயம்

சிறுசெய்தியையும் நயம்பட உரைப்பதில் வல்லவர் குமரகுருபர சுவாமிகள். மதுரைச் சோமசுந்தரர் வளையல் விற்பதற்காகத் திருவிளையாடல் புரிந்து வெளியே புறப்பட்டு வருகிறார். அவர் மீது காதல்கொண்டு ஏங்கிய மகளிரின் கைவளைகள் கழன்று விழுகின்றன. 'ஆமாம், இந்தச் சோமசுந்தரர் வரி


வளைகள் விற்பதற்காக வெளியே வந்தாரா? வாங்குவதற்காக வந்தாரா? என்று நயம்பட வினவுகின்றார்.

"பொலங்கொண்ட வரிவளைகள்
விற்பதற்கோ கொள்வதற்கோ
புறப்பட்டீரே"

கூடுவாயா?

தலைவனை நினைந்து தலைவி வருந்தி வாடுவதை அவனிடம் தோழி கூறுகிறாள். அங்ஙனம் கூறுகையில் தலைவிக்கும் சொக்கநாதருக்கும் ஒப்புமை தோன்றுமாறு கூறுகிறார்.

"உண்பது நஞ்சமால் உறக்க மில்லையால்
வண்பதி கூடலே வாய்ந்த தென்னுமால்"



இறைவனே, உலகமக்களின் நலம் கருதி நஞ்சினை உண்டாய்; உலகத்தவர் நன்றாக அமைதியோடு உறங்கும் வண்ணம் நீ தூங்காது காத்தாய்; உலகத்துள் நிறைந்த நீ கூடலில் உறைகிறாய்; எம் உள்ளத்திலும் உறைய வேண்டும்; என் உள்ளத்தை உன் கூடலாக்குவாயா?' என்பனவெல்லாம் தோன்ற உலகச் சிற்றின்பச் சொற்களான உண்பது, உறக்கம், கூடல் என்பவற்றை இட்டுப் பேரின்ப வாழ்வை அச்சொற்களைச் சுமக்கச் செய்துள்ளார்.

திருக்கோயில்

இறைவனை எங்குக் காணலாம்? 'கள்ளத் திருக்கோயில்' காணலாம். உள்ளமாகிய திருக்கோயிலில் அவனைக் காணலாம், என்று கூறிவிட்டால் குமர குருபர சுவாமிகளின் முத்திரை பதிந்ததாகுமா? 'கள்ளத் திருக்கு ஓயில்' காணலாம். ஆற்றில் நீர்மொள்ளும் போது, பானையில் காற்று இருந்தால் நீர் உள்ளே போகுமா? சற்றே சரித்துப் பானைக் காற்று வெளியேற ஆற்று நீர் உள்ளே போகும். அதுபோல் கள்ளமும் திருக்கும் மாறுபாடும் உள்ளத்திற்குள் நிறைந்திருந்தால் இறைவன் உள்ளே வருவானோ? சாக்கடையில் தேனீ வருமா? ஆகவே 'கள்ளத் திருக்கு ஓயில்' இறைவனைக் காணலாம்' என்கிறார்.

சொல்லேருழவர்

சுவாமிகள் 'சொல்விளையாட்டில் சிறந்து விளங்கியவர்' என்பதற்கு அவர் எழுதிய மடக்குப் பாடல்கள் சான்று. ஒரே சொல் மற்றோர் இடத்தில் வந்து வேறொரு பொருளைத் தரும். ஒரே மனிதன் சிலருக்குத் தந்தையாகவும், சிலருக்கு மாமாவாகவும், சிலருக்குச் சிற்றப்பாவாகவும் ஆகிறதைப்போல ஒரேசொல் சூழ்நிலைக்கேற்பப் பொருள் மாறுபடுகிறது. சொக்கநாதருக்கு,

"உரங்கொள் பல்கல னென்பர வாமையே
உணர்வு றுமையு மென்பர வாமையே"

அவர் அணிவது என்பு, அரவு, ஆமை முதலியன; அவர் மீது என் நெஞ்சம் பற்றுததற்குக் காரணம் என்நெஞ்சு உண்மையன்பால் அவனைப் பரவாமையே என்கிருர். 'என் பரவாமை' என்றும் என்பு, அரவு, ஆமை என்றும் சொற்களைத் தாமாகவே விளையாடவிடுகின்ருர்.

அணிகள்

ஒரு செவிலி, தன்மகள் தலைவனை அடைவாளோ? மாட்டாளோ? என்று ஏங்குகிருள். அவள் தலைவியின் உடம்பில் முத்து, பொன், பவளம் போன்றவை குவிந்துகிடக்கின்றன என்கிருள்; அவள் அழுதால் முத்துதிரும்; பசலைப்பட்டால் பொன் பூக்கும்; வாயோ பவளக்காடு. வாய்திறந்தால் முத்துக்கோட்டை.

> " கண்முத் தரும்பின கொங்கைபொன் பூத்த
> கனிபவளத்
> தொண்முத் தரும்புமென் பெண்முத்து "

கைக்கமலம்

நீடு நான்மாடக்கூடலில் பொலியும் மதுரை நாயகனைச் செவிலிபோன்றோர் தம் மகளுக்கு அருளவேண்டுகின்றனர். பிறைசூடியைப் பெண்கள் தம் கமலக் கரம் கூப்பி வணங்குகிருர்கள். இதனைச் சுவைபட "நிலவைக் கண்டு கமலம் குவிவது போன்று, இறைவனே உன் தலைமுடிப் பிறையைக் கண்டதும் அவர்களது கைகளாகிய தாமரைமலர்கள் இயல்பாகக் குவிந்து விடுகின்றன," என்கிருர்.

அவனுடம்பும்

ஒரு தலைவிக்குஓரையம் ஏற்பட்டது. 'அருட்கூடல் பெம்மான்மீது பட்ட பிரம்படி' என்மீதும் பட்டது. இன்றேல் எனக்குண்டான காதல்நோயால் என் உடம்பு ஈடழிந்துவிட்டது. இதற்குக் காரணம் அப்பெருமானின் உடம்பும் இப்படி ஏதேனும் காரணத்தால் ஈடழிந்து இருக்குமோ? அவளது உடம்பு ஈடழியக் காரணமென்ன?

> " பாடா எம்மனையும் நாடாள் எம்மனையும்
> பயிலாள் தண்டலையும் முயலாள்
> வண்டலையும்
> ஆடாள் மஞ்சனமும் தேடாள் அஞ்சனமும்
> அயிலாள் அன்னமுமே துயிலாள்
> இன்னமுமே "

இறைவன் திருப்பாடலன்றிப் பிற பாடாத பெற்றியும், உற்றவர் உறவினை நாடாத இயல்பும், அவனருட் கடலிலன்றி வேறுயாண்டும் உடல் முழுகாதிருக்கும் தன்மையும், அவன் திருவிளையாடலன்றிப் பிற ஆடல்வேண்டாதிருத்தலும், அவன் அருள் நிழல் சேராப் பண்பும், உள்ள அழகுக்கு வழி தேடுவதன்றி புற அழகை ஒதுக்கும் அழகும் இருந்தால் பரமான்வாகிய காதலன் சீவான்மாவாகிய காதலியை விட்டு எங்கே செல்வான்? குமரகுருபர அடிகள் மண் இருட்காதலைப் பாடுகிருரா? விண் அருட்காதலைப் பாடுகிருரா? என்பதனை இதனல் அறியலாம். இறைவன்மீது உண்மையான காதல் ஏற்பட்டால் உடம்பைப் பற்றிக் கவலை கொள்ளாதிருக்க வேண்டும் என்கிருர் அடிகள்.

நியாயமா?

மதுரையில் தெப்பத்திருவிழா நடைபெறும். பலவூர்மக்களும் வந்து வடம் தொட்டுத்தேர் இழுத்து இறைத் தொண்டு புரிவர். அவ்வாறு சென்ற ஒரு பெண்ணின் மீது தோழியர் குங்குமத்தைப் பூசுகின்றனர். 'நன்னீர் நிறைந்த தெப்பத்திற்குள் கிடக்கும்

சொக்கரைக் கரையேற்றுகிறீர்கள்; காமமாம் மடுவுக்குள் கிடக்கும் என்னை மட்டும் குங்குமச் சேற்றுக்குள் அமிழ்த்துகின்றீரே; இது என்ன நியாயம்?''

" இட்ட மாம்சொக்கரைக்கரை யேற்றினீர்
மட்டில் காம மடுப்படிந் தேற்கெனே
கொட்டு வீர்பின்னும் குங்குமச்
சேற்றையே''

பொய்வித்தை

சம்பிரதம் என்னும் கலம்பகஉறுப்பு இந்திரசால வித்தையில் வல்லவன் ஒருவன், தன் சிறப்பைத் தானே கூறுவதைக் குறிக்கும். யாரும் எளிதில் செய்யும் செயல்களையே, அவன் அற்புதச் செயல்கள் எனக்கூறிச் சொல் வித்தை செய்கிறான். ஆகவே குமர குருபர அடிகள், 'இந்திரசால வித்தை எனக் கூறி வருபவர்கள், சமுதாயத்தை ஏமாற்றுபவர்கள், எனக் கோடிட்டுக் காட்டுகிறார் எனக்கொள்ளலாம். ஞானி களாலும், சித்தர்களாலும் செய்யப் படும் இயற்கை இறந்த செயல்களை யாரும் செய்திட முடியாது. மேலும் ஞானிகள் செய்தாராயின் தம் முயற்சி யால் செய்வதாக நினையார்; தந்நலத் திற்கும் செய்யார்; ஏதேனும் ஒருயிரை இறை நிலைக்குக் கொண்டுவர அஃதுதவு மாயின் செய்வரேயன்றிப் பிறவழிகளில் பயன்படுத்தார். ஆனால் சால வித்தைக் காரர், கூற்றும் செயலும் வேறு பட்டவர்; அதனால் வயிறு வளர்ப்பவர். இறையுணர்விற்கும் அவருக்கும் தொடர்பில்லை; வயிற்றுணவே முதனோக்கம்; ஆதலின் சாலவித்தைக் காரர் செயலில்புதுமையில்லை; ஏமாற்றே எனக் கோடிட்டுக்காட்டுகிறார்.

இமைப்பிலடுக்கல்

இந்திரசால வித்தைக்காரன், ஒரு நொடிப்பொழுதில் இந்தப் புவி, கடல் அனைத்தையும் மறைப்பேன்; மறைந்து



மீண்டும் கொண்டுவருவேன்; உள்ளங் கைக்குள் எட்டு மலைகளையுங் கடலையும் அடக்கிக் காட்டுவேன்; மதுரைச் சொக்

களையும், சித்த மகத்துவங்களையும் ஒரு சொல்லுக்குள் அடக்குவேன்' என்கிறான். நமக்கும் வியப்பாக இருக்கிறது. சற்றே சிந்தித்தால் 'குமரகுருபரர் சொல் விளையாட்டில் எப்படியொரு மாபெரும் இந்திரசால வித்தையைக் காட்டுகிறார்' என வியக்கிறோம். இமைக்கும் போது கண்ணை மூடினால் உலகம் மறைகிறது; திறந்தால் மறைந்த உலகம் மீண்டும் தெரிகிறது. உள்ளங் கைக்குள் எள்+துவரை+கடலை (எட்டுவரை கடலை) இவற்றை அடக்க முடியாதா? ஓம் எனும் சொல்லுக்குள் இறைமகத்துவம் அடக்கம் தானே! இதனையே,

"மட்டறு கடற்புவி யனைத்து
மொரிமைப்பினின்ம
றைத்துடன்வி டுத்திடுவனேற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள
டக்கிடுவன்"

என்கிறான்.

குமரகுருபரர் காலத்தில், பண்டை நாள் சித்தர்கள் போர்வையில் பலர் போலிகளாய்த் திரிந்திருக்கக் கூடும். சமுதாயச் சீர்கேடுகளைத் தகர்த்தெரியும் போக்கில் சுவாமிகள் பின் தங்கி விடவில்லை, என்பதனை இஃதுணர்த்துகிறது.

கதைகள்

இந்நூலில் ஆசிரியர் எடுத்தாண்ட கதைகள் பல. 1) இறைவன் பிட்டுக்கு மண்சுமந்தது. 2) வளையல் விற்றது. 3) வலைவீசிப் பெண்வேட்டது 4) சரப அவதாரத்தில் நரசிங்க வலி அழித்தது. 5) ஞானசம்பந்தருக்குத் தாளம் வழங்கியது. 6) பாணபத்திரருக்காக ஏமநாதனைத் துரத்தியது. 7) தழுவக் குழைந்த காஞ்சிப்புராண வரலாறு. 8) சித்தனை அங்கம் வெட்டியது. 9) சண்டேசநாயனார் வரலாறு. 10) வெள்ளானை சாபம் தீர்த்தது. 11) யானை எய்தது. 12) கல்லானைக்குக் கரும்பருத்தியது. 13) காயாரோகண மூர்த்தி வரலாறு. 14) பன்றிக்குட்டிக்குப் பால் அருத்தியது. 15) பாண்டியன் சுரம் தீர்த்தது. 16) விருத்த குமார பாலரானது. 17) சுந்தரமூர்த்தி நாயனார். ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தது. 13) பதஞ்சலிக்கு நடஞ் செய்தது. 19) மாபாதகந்தீர்த்தது. 20) கரிக்குருவிக்கு அருள் புரிந்தது.

இறையியல்பு

மதுரைச் சொக்கநாதரின் அருள் வெள்ளத்தில் தாம் முழுகிக் குளித்த அனுபவத்தால் சுவாமிகள் பிறரையும் தம் வழியில் அழைத்து இன்புற வேண்டுகின்றார்.

"என்போடு உள்ளமும் நெக்குரு கப்புக்கு
என்போல்வார்க்கு
அன்போடு இன்பம் அளித்தருள் கூடல்எம்
மடிகேள்"

என அவனியல்பைக் காட்டுகிறார். அம்மட்டோ; 'அவ்விறைவன் எளியவர்களுக்காக இறங்கிவந்து இரங்குகின்றான்' என்று நமக்கு நம்பிக்கையும் ஆர்வமும் ஊட்டுகின்றார். "எளிய கரிக்குருவிக்கும் இரங்கிய இறைவன் எங்களுக்கும் இரங்கானா? "எளியார்க்கும் எளியனன்றோ?" இரங்குபவன்தானே என்று யாரேனும் ஆணவம் கொண்டு இறையுணர்வு தம் உள்ளத்துட் புகாமல் இரும்பு, வெள்ளி, செம்புக்கோட்டைகள் கட்டிக்கொண்டு இருந்தால் விட்டு

விடுவானோ? ஒரு சிரிப்பால் அக் கோட்கைளை உடைத்தெறியும் தோள் வலியும் உடையவனன்றோ. இதனைக்,

> "கேளார் புரஞ்செற்ற வில்நாரி தோயக்
> கிளர்ந்துற்றதோர்
> தோளாளர்"

என்கிறார். குமரகுருபரர் புனைந்த இம் மதுரை கலம்பக மாலையில் கருத்தாழமும், பக்தி நெகிழ்வும், மதுரைப் பெருமையும், கற்பனை நயமும், சந்த நடையும், புராணக் கதைகளும், அகத் துறைகளும் நிரம்பிக் கற்போருக்கு மகிழ்வும், மன வெழுச்சியும், இறையன்பும் கிடைக்க வழி வகுக்கின்றனவென அறிகிறோம்.

✪

மதுரைச் சங்கப் புலவர்கள்

டாக்டர் தா. வே. வீராசாமி, எம். ஏ., பி. எச். டி.

பழங்காலத்தில் மக்கள் ஓரிடத்தில் தங்கி வாழாமல் திரிந்து, பின்னர் வளமான இடங்களைக் கண்டு அவற்றில் கூடி வாழத் தலைப்பட்டனர். ஒரு தொழில் புரியும் மக்கள் ஒரு தெருவில் வாழ்ந்தனர். பல தொழில் புரிவோர் பொதுவாகக் கூடிச் செயலாற்றவும், கடவுளைத் தொழவும் பல மன்றங்கள் அமைத்தனர்.[1] இவ்வாறு பல சிற்றூர்கள் பேரூர்களாக மதுரை, புகார், வஞ்சி, காஞ்சிபோன்ற நகர்கள் சிறப்புற்று விளங்கின.

'தமிழ் கெழு கூட' லாகக் காட்டுவார் காரிக் கண்ணனார்.[2] இங்ஙனம் மொழியோடு ஒன்றுபட்டுச் செந்தமிழ் நிலமாய் வளர்ந்தது மதுரை.

இப்புலவர்கள் நகர நாகரிகத்தில் புதியன பல கற்றிருந்தனர். இயற்கையில் தோய்ந்த பல சங்கப்பாடல்களுக்கும், இவர்கள் பாடிய அகத்திணையில் ஆழ்ந்த, 'நகர் மணம்' வீசுகின்ற பாடல்களுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. வாழ்க்கை, நடைமுறை, கற்பனைக் காட்சி, அரசியல் மாறுபாடுகள், புதிய மெய்ப்பொருட் கலவை ஆகியவற்றை மதுரைப் புலவர்கள் பாடிய பாடல்களால் அறிகிறோம்.

விலங்குகளின் வாழ்க்கை இப்புலவர்களுடைய கருத்தைக் கவர்ந்ததுபோல் பறவைகளின் வாழ்க்கை கவரவில்லை, பறவைகளிலும் புறவைவிட மயில் இவர்கள் மனத்தில் நன்கு இடம் பெற்று உள்ளது. 'மயிலின்' நிறம் மணியின் நிறம் போன்றது என்று கூறும் போதும், மயிலைத் தோணிக்கு உவமையாகக் கூறும் போதும்[3] புலவர்களின் செல்வப் பற்றும், 'வையை மிதவைப்' பற்றுமே வெளிப்படுகின்றன.

விலங்கின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போதும் அவற்றின் உணவைப் பற்றியே பெரிதும் பாடுவர். நரி, பச்சை ஊனை உண்பதும்,[4] கரடி, இருப்பைப் பூவை வெறுத்தால் புற்றகழ்வதும்[5], எருமை குவளையைத் தின்பதும்[6], குரங்கு கனி வகைகளை உண்பதும்[7] இடம் பெறும்போது நகர் வாழ்வில் உண்டாட்டு மிகுந்த வளமான வாழ்வு எழுந்ததைக் காண்கிறோம். உழவின் பயனையும், வணிக வரவையும் செல்வ மதுரை நன்கு துய்த்ததை இதனால் உணர்கிறோம்,

புலி பற்றிய உயர்வான செய்திகளை இவர்கள் பாடுவது குறைவு. மழையில் யானையைத் தாக்க எண்ணும்[8] புலியின் சூழ்ச்சிஉணர்வை வெளிப்படுத்துவர். ஒரு சமயம் அப்புலி வென்றாலும் அதன்

வீழ்ச்சியை எதிர்நோக்கும் செந்நாயைக்[9] காட்டி அதன் வெற்றிப் பேற்றை வீழ்த்துவர். மேலே கண்டவற்றை நன்கு கூர்ந்து பார்த்தால் அது புலியின் இழுக்காகத் தோன்றுது. அதனைக் கொடியாகக் கொண்ட சோழனைக் குறிப்பாகத் தாழ்த்தும் வண்ணம் மதுரைப் புலவர்கள் பாடினர்கள் என எண்ண முடிகிறது.

விலங்குகளிலே யானையைப்போல் மதுரைப் புலவர்களின் கருத்தைக் கொள்ளை கொண்டவை வேறு எவையுமில்லை. மணற் குன்றினைக் காணும் போதும், யானையைக் கண்டனர்.[10] யானையின் குரலில் இடியின் குரலைக் கேட்டனர்.[11] பிடியைப் புணர்ந்த யானையின் கைபோலத் தினையைப் பார்த்து மகிழ்ந்தனர்.[12] புலியிடமிருந்து தன் பிடியானையைக் காக்கும் ஆண் யானையின் ஆற்றலைப் போற்றினர்.[13] அப்புலியைக் கொன்று தன் கொம்பை அருவியில் கழுவியபோது[14] பாராட்டினர்.

யானைகள் பகைவர் மதிலை அழித்த போது அவற்றைப் போற்றினர்.[15] இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணத்தைக் காணும் போது யானைகள் வடக்கேயுள்ள வேங்கட மலையில் இருந்து தம் நகரின் தலைவனும் பாண்டியன் படையில்[16] அழகுற அமைந்ததேயாகும். இங்ஙனம் பாண்டியன் படையாக யானைகள் வெற்றி தேடித் தந்தமையைப் பாராட்டுவதன் வாயிலாகத் தம் தலைவனைப் புகழ்ந்த மன நிறைவைப் பெற்றனர்.

மேலும் ஒரு செய்தி நமக்கு வியப்பூட்டுகிறது. மதுரை உள் நாட்டு நகராயினும் இந்நகரில் பிறந்த புலவர்களின் நெஞ்சில் கடல் பற்றிய கருத்து வெள்ளம் அலை மோதிய வண்ணம் இருந்தது. கடலாடலை விரும்பினர்.[17] கயிறு கட்டிய உளியை எறிந்து மீன் பிடித்து வைகறையில் திரும்பும் கடல் வாழ்க்கையைப் பாடும் போதும், மீன் கொழுப்பைக் கொண்டு விளக்கெரித்தனர்[18] எனக் கூறும்போதும் இவர்கள் நெஞ்சில் 'நெய்தல் வாழ்வு' நிறைந்தூடுருவியிருந்ததைக் காணலாம். இதற்கும் மேலாகக் கடலைக் காணும் போது பாண்டியனின் படையை எண்ணினர்.[19] இவற்றையெல்லாம் எண்ணும்போது மதுரை மக்களின் அக மனத்தில் கடல் வாழ்வில் கொண்ட ஆர்வம் புலப்படும். இவர்கள் கூறும் கடல் வாழ்க்கைச் செய்திகள் பண்டு தொட்டுப் பயின்று வந்தவையாக உள்ளன. இவற்றால் முந்தைய பாண்டியரின் தலைநகர்கள் கடற்கரையில் இருந்தமை, அவை கடல் கோளுக்கு இரையானமை, பின்னர் நடு நாட்டில் இருந்த ஊராம் மதுரை வந்து நிலை பெற்றமை, மதுரை வந்தும் மீன் கொடியை மாற்றாமை ஆகியவை பற்றி எண்ணும்போது பண்டைய கடல் கோளும், பாண்டியரின் தலைநகர் மாற்றமும் பழங்காலச் செய்திகளாயினும் ஓரளவு உண்மையாயிருக்கக் கூடும் என நம்பமுடிகிறது.

மதுரைப் புலவர், சிலவற்றை வெளிப்படையாகவே கூறியுள்ளனர். மதுரை வாழ்வில் கள்ளும் காமமும்[20] பெற்றிருந்த இடத்தை மறைக்கவில்லை.

மேலும், செல்வ மதுரையில் திருட்டும் இருந்ததை அறிகிறேம். உளி, வாள், நூலேணி போன்றவற்றுடன், தோலடி நீலக்கச்சு ஆகியன அணிந்து, விலை உயர்ந்த அணிகலன்களை விரும்பிக் கள்வர் மதுரையில் சுற்றி வந்தனர். அவர்களைக் கைக்கொள்ள,[21] உறங்காமல் காவல் காத்த ஊர்காவலரு மிருந்தனர். இவைகளெல்லாம் நகர் நாகரிகத்தில் தவிர்க்க முடியாத தீய விளைவுகளாகச் சங்க காலத்தில் வளர்ந்தன.

இவற்றினும் மேலாகக் கற்பனை உலகில் பல வகையிலும் செயற்கை ஒப்பனைகள் புகுந்தன. வணிக உலகில் பெருமதிப்புப் பெற்ற பொருள்களாம் பொன்னும் மணியும் உவமையாகப் பல இடங்களில் வருகின்றன.[22] வாடைக் காற்றில் அசையும் வேழவெண்பூவை அரசனுக்கு வீசும் வெண்கவரியாகக் காண்பர்.[23] நெல்லிக் கனியின் வடிவில் கூடப்பொற்காசைக்[24] கண்டார்கள். என்றல் மதுரை வாழ்வில் பொருளியல் தாக்கம் எவ்வளவு வலிமை பெற்றிருந் தது எனத் தனியே கூறவேண்டா.

மதுரை நகரில் பழங்கதைகளும் புதுக்கதைகளும் பரவி வளர்ந்த சூழ் நிலையையும் நன்கு காணமுடிகிறது. ஒரு முலை இழந்த திருமாவுண்ணி போன்ற பழங்கதைகளும்[25] மக்க ளிடையே வழங்கின. தமிழ்நாட்டின் தொன்மைக்கடவுளாம் முருகன், சூரரை அழித்த கதையுடன், தொழுநையாற்றில் மகளிர், தழை யாடை உடுத்தும் வண்ணம் மரமேறிய கண்ணன் கதை,[26] மன்னர் குலத்தை வேரோடழித்த பரசுராமன் கதை[27] ஆகிய வடநாட்டுக் கதைகள் பரவு வதற்கு மதுரைநகர் இடமளித்தது. புதிய மக்களின் வரவும், மதுரை மக்கள் பிறநாட்டிற்குச் சென்று வந்த விளைவும் இக்கதைகள் வளரவும், கலக்கவும் வகை செய்தன; இதனல் புதிய எண்ண ஓட்டங்களுக்கு நெறி அமைத்துத் தந்தன.



செவ்வானில் கொக்கு நிரை பறந்தால் முருகவேள் மார்பில் முத்தாரம்[28] பற்றிக் கருத்துச் செல்லும் அளவு மதுரைப் புலவர்களின் கற்பனை படர்ந்தது. மேலும் ஒரு படி உயர்ந்து அந்தி மாலையையும் நீலக் கடலையும் காணும்போது 'இருபெருந் தெய்வங்கள் இயைந்தது'[29] போன்ற காட்சியைக் கண்டனர். இக்காட்சியில் சிவன் திருமால் ஆகிய கடவுளர்களை இணைக்கும் உணர்வை (சங்கர—நாராயணன்)

அறிகிறோம். அல்லது ஆண்கடவுள் பெண் கடவுள் ஆகிய இருவகை வழிபாட்டையும் ஒன்றாக இணைக்கும் உணர்வைக் (உமையொரு — பாகன்) காண்கிறோம். இவ்வாறு மதுரை வாழ்வில் இயற்கையில் கடவுளைக் காணும் உணர்வையும், அது வளர்ந்து பல கடவுளாகிப் பின் இணையும் ஒருமை உணர்வையும் காண்கிறோம்.

இப்புலவர்களின் உள்ளத்தில் உயர்ந்த பண்புகளாக விளங்கியவை அன்பு, அருள், ஈகை.[30] இப்பண்புகளே காலந்தோறும் மனித இனத்தை வாழ்விக்கும் பேராற்றல்களாக விளங்குகின்றன. இவற்றைக் கண்டுணர்ந்து பேணும் பெருவாழ்வாகச் சங்க கால மதுரை திகழ்ந்தது. எனவே மதுரை நகர் அமைப்பு, பண்டை நாகரிகத்தின் வளர்ச்சி எனக் கொள்வோமானால் மதுரைத்தமிழில் வளர்ந்த கல்விஅறிவு உயர்ந்து ஓங்கிய பண்பாட்டின் முதிர்ச்சியாகக் கொள்ளலாம்.

மதுரையிலேயே பிறந்து வாழ்ந்த 56 புலவர்களைக் காணும்போது பண்டைய தமிழ்ச் சங்கம் மதுரையில் அமைதற்கு ஏற்ற சூழ்நிலை இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. சங்க காலத்தில் வேறு எந்த நகரத்திலும் இவ்வளவு புலவர்கள் கூடியிருந்ததையோ வாழ்ந்திருந்ததையோ காண முடியவில்லை. இம்மதுரைப் புலவர்கள் பல தொழிலில் ஈடுபட்டிருந்தனர். (மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், போன்றோர் பெயர்களால் அவர்கள் செய்த தொழில்கள் வெளிப்படும்). இவ்வாறு வாழ்வோடு ஒட்டிப் பல உண்மைகளைக் கண்டனர், இப்புலவர்கள் தமிழ் மொழியை மிகச் சிறந்த முறையில் போற்றினர். இதனைச் சிறுபாணாற்றுப் படையில்,

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை" (66-67)

எனச் சுட்டுவதால் அறியலாம்.

(சங்க இலக்கியமாக எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மட்டுமே கொள்ளப்பட்டுள்ளன.)

அடிக்குறிப்புகள்:

1. குறுந்தொகை (உ. வே. சா. பதிப்பு 1937) பக்.—88. 89.
2. புறநானூறு—58
3. அகநானூறு—272, 344
4. நற்றிணை—352
5. அகநானூறு—247
6. அகநானூறு—56
7. குறுந்தொகை—373 நற்றிணை—251
8. அகநானூறு—92
9. குறுந்தொகை—141
10. அகநானூறு—360
11. அகநானூறு—144
12. நற்றிணை—317
13. குறுந்தொகை—215
14. அகநானூறு—272
15. அகநானூறு—164
16. அகநானூறு—27
17. குறுந்தொகை—144
18. நற்றிணை—388, 215
19. புறநானூறு—351 அகநானூறு—204
20. புறநானூறு—316 நற்றிணை—369
21. மதுரைக் காஞ்சி—635, 647
22. அகநானூறு—172, 360
23. நற்றிணை—241
24. அகநானூறு—363
25. நற்றிணை—216
26. அகநானூறு—59
27. அகநானூறு—220
28. அகநானூறு—129
29. அகநானூறு—360.
30. நற்றிணை—352, அகநானூறு—75, 335 புறநானூறு—334

மங்கையர்க்கரசியாம் மானி

டாக்டர் டி. முத்துக்கண்ணப்பன், எம்.ஏ., பி.எச்.டி.,

மனைவியை 'வாழ்க்கைத்துணை' யென்று வழங்குகிறார் வள்ளுவர். அது சிறந்த பொருள்பொதிந்த சொல். ஆண் ஒரு பாதி; பெண்ணொரு பாதி; இவ்விரு செம்பாதிகளின் ஒன்றிப்பே உயிர், வாழ்வு, உலகம். அதன் விளக்கமே மங்கை பங்கனின் மாண்புறு வடிவம்.

"ஒரு பெண், தன் கொழுநனுக்கு அன்னை போன்று அன்பைப் பொழிபவள்; பணியாளைப் போன்று தொண்டு புரிபவள்; திருமகள் போன்று அழகும் ஆக்கமும் பூண்டு பொலிபவள்; பூமியைப் போன்று பொறுமை பூண்டவள்; கன்னி இன்பத்தைக் கனிந்து வழங்குவதில் விலைமாதினைப் போன்றவள், சாமர்த்தியமும், சதுரப்பாடும், சூழ்ச்சியும் வல்ல மதியமைச்சாய் விளங்கும் மாண்பினள்" என்று கூறுகிறது பின்வரும் கவிதை:

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்-
வன்னமுறும்
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்"

மங்கையர்களின் மாண்பினை விளக்கும் பண்டைக் காவியங்களில் தலை சிறந்தது சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம். அதில் கற்புநிறை காத்தலிலும், கடவுள் வழிபாட்டினிலும் ஒப்புயர்வற்று விளங்கிய உத்தமப் பெண்ணடியார்கள் பலரைக்காணலாம். திருநீலகண்டக்குயவர் தெய்வீக மனைவியார், திருநீல நக்கரின் சீர்மிகு துணைவியார், அங்கணனால் "அம்மையே" என அன்பொழுக அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார், அருள் மகனை ஈன்று, ஆருயிர்க் கணவர்க்கும் கடவுள் நெறி காட்டித் தாமும் அக்கண்ணுதல் பெருங்கருணைக் கடலில் கலந்துவிட்ட இசைஞானியார், சமணச் சகதியில் ஆழ்ந்து சூலைநோய்கண்டு துடித்த தம்பியாரைக் கைகொடுத்து மீட்டுத் திருவெண்ணீற்றால் தூய்மைப்படுத்தித் துயர்துடைத்த திலகவதியார்போன்று எண்ணற்ற பெண்ணடியார்களைக் காண்கிறோம்.

சோழன் மகளாய்ப் பிறந்து, பாண்டியனின் வாழ்க்கைத் துணைவியாய்ப் பொலிந்து, ஞாலத்தின் நங்கையர்கட்கெலாம் அரசியாய்த் திகழ்ந்து, மாதவரெலாம் ஏத்தும் கங்கை வேணியரின் தொண்டராய்த் துலங்கிய மங்கையர்க்கரசியாரை, நமது

தொண்டர் சீர் பரவுவார் நான்கு புராணங்களில் குறிப்பிட்டுள்ளார்.

*1. திருஞானசம்பந்தர் (2) குலச்சிறையார் (3) நின்றசீர்நெடுமாறர் (4) மங்கையர்க்கரசியார்.

மங்கையர்க்கரசியார் சோழ மன்னனின் அருந்தவப் புதல்வியாவார். அவரது இயற்பெயர் மானி என்றே கூறப்படுகிறது. மானம் உடையவனே மனிதன். மானம் உடையவள் மானி. மங்கையர்க்கு மானமே கற்பு. கற்பே மானம். மானத்தைக் காப்பவள் மானி. பாண்டிய மன்னனின் மானத்தைப் பாண்டிப் பேரரசின் மானத்தைத் தென்றமிழ் நாட்டின் மானத்தினையே காத்த காரிகையன்றோ இம்மானியார்; 'சைவம் தென்னாட்டின் தனிச்சொத்து' என்ற பொருளைக் குறிப்பதன்றோ 'தென்னாடுடைய சிவன்' என்ற தொடர். தென்றமிழ் மண்ணில் மண்டிக்கிடந்த அமணக்காரிருளை, இத் தெய்வத்திருமகள் தோன்றிக் கடிந்து இரியச் செய்யவில்லையானால் சைவச் செந்நெறி மல்கி மறைந்து விட்டிருக்குமன்றோ? கொழுநனின், குடியின், குலத்தின், நாட்டின் மானத்தைக் காத்த மங்கையின் இயற்பெயர் மானி என அமைத்தது எவ்வளவு பொருத்தம்! தீர்க்க தரிசனமும், தெய்வத் திருவருளும் பெற்றிருந்த பெற்றோர் இட்ட திருநாமம் அன்றோ அது!

திருத்தொண்டர் புராணத்துக்கு வித்தாய் விளங்கும் திருத்தொண்டத் தொகையும், திருத்தொண்டர் திருவந்தாதியும் முறையே, வரிவளையாள் மானி; பாண்டிமா தேவியாம் மானி என்றே அழைக்கின்றனர். தென்னாட்டு வரலாற்றை முன்னாட்டும் பேறுபெற்ற, செல்வக்குன்றத்தூர்ச் சேக்கிழாரும் 'வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி' என்றே போற்றுகிறார். திருத்தொண்டர் திருநாமக்



கோவையும் 'மானியார்' என்றே சாற்றுகிறது. திருத்தொண்டர் திருநட்சத்திரப்பாடலும் 'மானியார்' என்றே ஓதுகிறது. அம்மையாரின் அற்புத சாதனைக்கு அடிகோலிய அண்ணல் ஆளுடைய பிள்ளையாரும்

ஆலவாய்ப்பதிகத்து முதற்பாட்டிலேயே 'மங்கையர்களுக்கெல்லாம் அரசிபோல் பவளும் வளவர்கோன் பயந்த பாவையு மாகிய மானி' என்றே பொருள்பட

" மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மாட மானி"

என்றே பாடுகிறார். மங்கையர்க்கரசியாம் மானியார், வான்புகழ் கொண்ட கற்புக்கரசியாராக விளங்குகிறார்; திருமகள் போன்று எழில்மிகு பாவையாய்த் திகழ்ந்தார்; இறையருள் பெற்ற தொண்டர்களும் பரவும் தூய தெய்வத் திருமகளாய்த் துலங்கினார்.

அம்மையார் தெய்வ மங்கையர். தென்றமிழ்ப் பாண்டி நாட்டில் பரவியிருந்த சமண மதத்தை அறவே அழித்துச்சைவசமயத்தைத், திருநீற்றுச் செந்நெறியைப் பழமைபோல் திக்கெலாம் பரப்ப இறைவனால் அனுப்பப்பட்ட தெய்வத்திருத்தூதர். இக் கருத்தையே நம்பியாண்டார் நம்பி,

"வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியாம் மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரால்
" நாசம் விளைத்தாள் அருகந் தருக்குத் தென் னாட்டகத்தே"

என்று பாடுகிறார்.

" சிவன் திரு நீற்றினை வளர்க்கும்
............பாண்டிமாதேவி' என்றும் பத்தி
யார்கின்ற பாண்டிமா தேவி "

என்றும் வானவரும் போற்று திருஞான சம்பந்தப் பிள்ளையார் பாடுவதும் இக் கருத்தையன்றோ!

' பொன்னி மன்னவன் பயந்த தெய்வக் குலமகள்'
' வாலி தாகிய சைவவான் பயிரினை வளர்ப்பான்
வேலி யாகியோர் '

என்றும் ஏத்துகிறார் பரஞ்சோதி மாமுனிவர். அவர் பின்னும் ஒருபடி மேலே போய் அம்மையாரை, விளக்கு; மணி விளக்கு; சைவ மணி விளக்கு; ஒளியால் விளக்கும் சைவ மணி விளக்கு; உலகெலாம் மன்னிக் கோதிப் புகழ் ஒளியார் விளக்கும் சைவ மணி விளக்கு' என அடுக்காக, அழகாகப் பாராட்டிப் பாடிப் பரவசமடைகிறார்.

' ஆண்டகை வளவர் கோமான் உலகுய்ய அணிந்த செல்வப்
பாண்டிமா தேவியார்தம் பாதங்கள் பரவ லுற்றேன்'

எனப் போற்றுகிறார் குன்றத்தூர் அடிகளார்.

இனி அம்மையாரின் சாதனையைச் சற்றுக் காண்போம். அம்மையாரின் கணவன் கூன்பாண்டியன். இவன் சத்துருசாதனன் என்ற பாண்டிய மன்னனின் மைந்தன் என்று கூறுகிறது, பரஞ்சோதித் திருவிளையாடல். பாண்டியன் பிறவியிலேயே கூன் முதுகுடையவன். அக்குறை பண்டை விதியின் பயன் என்பதை, 'வல்வினை வலியால் மெய்யில் வலியகூன் அடைந் தான்' என்ற அடிகளார் குறிப்பிடுகிறார். பரஞ்சோதி மாமுனிவர். எனினும் அவன் தோள்வலிமையும் தாள்வலிமையும் கொண்டவன். பேராற்றலும் பூண்டவன்; சேர, சோழப் பேரரசர்களை வென்று புறங்கண்டவன். 'ஓர் குடைக்கீழ் நில மூன்றும் காவல் புரிந்து கோலோச்சிப் புண்டோய் குருதி மறக் கன்னிப் புகழ்வேல் வழுதி' என்று இவனது வீரத்தையும் வெற்றியையும் புகழ்ந்து பேசுகிறது திருவிளையாடல்.

தன்பால் தோற்று அடிபணிந்த சேரப்பெருமன்னன், வானை வருடும் யானைகளையும், பொன்னையும் மணியையும், பொற்புறு கன்னியரையும் ஈட்டுப் பொருளாகத் தந்து தன் நாட்டை மீட்டுச் சென்முன் என்றும், சோழப் பேரரசன் தான் இனிது ஈன்ற திலக மணிந்த பெண்யானை போன்ற வலிவும், உழைப்பும், கன்னித் தன்மையும், கவின் மிகு உருவும் கொண்டு, மின்னிச்சுடர் விடும் சைவ மணிவிளக்கத் திருவாய்த் திகழ்ந்த மங்கையர்க் கரசியை மகட் கொடையாக அப்பாண்டியனுக்கு அளித்துத் தன் நாட்டைத் திரும்பப் பெற்றுத் திரும்பினன் என்றும் பேசுகிறது திருவிளையாடல்.

நெய்வேலி என்ற விடத்தே நிகழ்ந்த போரில் இப்பாண்டி மன்னன் பகைவரை வென்று வெற்றி வாகைசூடி 'நெய்வேலி வென்ற நெடுமாறன்' என்று புகழப்பட்டான் என்பதும் பேசப் படுகிறது.

இம்மாண்புறு வேந்தர் வேந்தனின் மதியமைச்சர் குலச்சிறையார் என்பவர். அவர் "கோதறு குணத்தின் மிக்க குலச் சிறை என்பான் ஆங்கோர், மேதகு கேள்வியான் என்றும்...... குணனுங் கேள்வித் தலைமையும் மதியும் மிக்க வன்" என்றும் புகழப்படுகிருர்.

பாண்டியன் 'மங்கையர்க்கரசியாம் மானியை மணந்து சீலம் மிக்க இக்குலச் சிறையாரையும் சீதனமாகப் பெற்று வந்தான்' எனப் பேசுகிறது திருவிளையாடற் புராணம்.

இத்தகைய மாண்பெலாம் பெற்ற மறவேந்தன், வாழையடி வாழையென வந்த தன் சைவச் செந்நெறியைத் துறந்து சமணப் புன்னெறி வலையில் சிந்திச் சீரழிந்து கிடந்தான். சமணக் கருமேகம் இவன் நாட்டைச் சூழ்ந்து படர்ந்து சூனியமாக்கிவிட்டது. இதுவும் பண்டை வினையின் பயனேதான்.

இதனையுணர்ந்த மானியார் மனங் கவன்ருர்; அமைச்சர் அதிர்ச்சியுற்ருர். எனினும் சோர்ந்துவிடவில்லை. 'நாயக னுக்கும் நாட்டிற்கும் சமணம் விளைத்த களங்கத்தை அடியோடகற்றிப் பழைமைபோல் சைவ நெறியை விளங்க வைப்பேன்' என அம்மையார் சூளுரைத் தார்; அமைச்சர் குலச்சிறையாருடன் சூளுரை செய்தார்.; முடித்தற்குரிய காலத்தையும் இடத்தையும் எதிர் நோக்கி நின்ருர். அவநெறியோட்டித் தவநெறி காட்டப் பிறந்த பரசமய கோளரியாம் ஞானசம்பந்தப் பெரு மானின் நல்வரவையறிந்தார். ஆளுடைய பிள்ளையார் ஆலவாய் அடைந்ததும் அமைச்சருடன் சென்று அவர் அடியிணையில் வீழ்ந்தார். அவரது ஆலவாய் வருகையையறிந்த சமணர்கள் உள்ளம்சாம்பினர்; திருஞானசம்பந்தப் பெருமானை மடத்துடன் தீயிட்டுக் கொளுத்தி யழிக்கத் திட்டமிட்டனர், அவ்வாறே விரைந்து தீயுமிட்டனர்; உண்மையை யுணர்ந்தார் ஞானபானு. இந்நிகழ்ச்சிக்குக் காரணமாய் நின்ற நெடுமாறனை, அத்தீப்பற்றப்பணித் தார். மன்னன் வெப்புநோய் கண்டு வெதும்பினன். சமணர்கள் அவன்பால் விரைந்தனர்; மந்திரத்தாலும் மருந் தாலும் அச் சுரந்தீர்க்க முயன்றனர்; பயனில்லை. நோய் கடுமையாயிற்று' வேந்தன் தீயிற் புழுவெனத் துடித்

தான். அரசியாரும் அமைச்சரும் மன்னனை அணுகி, ஆளுடைய பிள்ளை யாரே நும் நோயைத் தீர்த்து ஆளும் அருளுடையாராவர்; அவரை அழைக் கலாமே' என இதமாக இயம்பினர். ஞானசம்பந்தப் பெருமானின் திருநாமம், மன்னன் செவியில் நுழைந் ததும் நோய் தணிந்தது போன்று அவனுக்கே தோன்றியது. இசைந்தான் மன்னன். சில விநாடிகளில் அங்கு எழுந் தருளினர் காழிவள்ளலார்' மன்னன் வணங்கிப் பொன்னுசனத்தில் இருக்க இறைஞ்சினன். ஆளுடைய பிள்ளையார் 'மந்திரமாவது நீறு' என்ற பதிகத்தை யோதி, 'வெள்ளை நீறு தொட்டு அங்கை யால் நீவியதும், உள்ளகூனேடு வெப்பும் ஒழிந்தது; மன்னன் மகிழ்ந்தான்; புதுவாழ்வுபெற்றுப் பொலிந்தான். அமணர்களின் பொய்மையையும், புரட் டையும் அரசன் நன்கு புரிந்துகொண் டான். ஆனல் அடங்காத அமணர்கள் ஞானசம்பந்தரை மீண்டும் அனல் வாதத்துக்கும், புனல்வாதத்துக்கும் வலிந்து அழைத்தனர். இறுதியில் அவற்றிலும் தோற்று மானமிழந்து மதிகெட்டுக் கழுவேறி மாய்ந்தனர். அவர்களோடு சமணமும் சாய்ந்தது; சைவசமயம் திருநீற்று நெறி பழைமை போல் புத்துயிர் பெற்றுத் திக்கெலாம் பரவித் திகழ்வதாயிற்று.

இந்த ஒப்பற்ற சாதனைக்குச்சமயப் புரட்சிக்குச்-சைவ மறுமலர்ச்சிக்கு மூலகாரணமாய் விளங்குபவர், நமது மானியார்-மங்கையர்க்கரசியார்என்பது வெள்ளிடைமலை. மனைவியர் மனம்வைத் தால் இரும்பான கணவனையும் பத்தரை மாற்றுப் பசும்பொன்னுக்கலாம். மூர்க் கரையும், முரடரையும் ஈவிரக்கமும் ஈரநெஞ்சமும் கொண்ட இனியவராக் கலாம்; பொல்லாதவரையும் நல்லவ ராக்கலாம்; பேடியையும் பெருவீரனுக் கலாம்; நாத்திகம் பேசி நாத்தழும் பேறியவனையும் ஆத்திக நெறி காட்டும் அருளாளனுக்கலாம். இது கற்புடைய நங்கையர்களுக்குக் கைவந்த கலை. தாய்மை விவரிக்க முடியாத அற்புத ஆற்றல் படைத்தது; தூய பெண்மை, எளிதில் புரியாத, புலனுகாத ஒரு மாயச் சக்தி படைத்தது. பெண்ணே சக்தி. சக்தியே பெண் அன்றோ; எனவே மங்கையர் மனம் வைத்தால் சாதிக்க இயலாதது ஒன்றும் இல்லை.

இந்தச் சாதனையில் அம்மை யாருக்கு உறுதுணையாயிருந்தவர் குலச் சிறையார். சிறை என்ற சொல் காவல் காப்பு, அரண் என்றெல்லாம் பொருள் படும். தென்னுடைய சிவநெறிக் குலத்தில் அரணுகக் காப்பாகக்காவலாக விளங்கிய அமைச்சர் பெருமானுக்குக் குலச்சிறையார் என்ற பெயர் பொருத்த மானது.

அம்மையாரின் வரலாற்றைப் பாட வந்த தொண்டர்சீர் பரவுவார் (சேக்கிழார்), அமுதையும் ஞானத் தையும் அம்பிகை குழைத்தூட்ட உண்ட அந்தணர் மாமணியாம் ஆளுடைய பிள்ளையார் தம் திருவாயி னின்றும் எழுந்த புனித வாக்கால் புகழ்ந்து பாடும் பேறு பெற்றவர் அம் மையார், என்னே இவர் மாண்பு! என அதிசயித்து மெய்ம் மறந்து நிற்கிருர்; அவரை 'அடியேன் என்னவென்று பேசுவேன்? எவ்வாறு பேசுவேன்? எனக்கென்ன தகுதியுளது?' என்று

சிந்திக்கிறார்; பின்னர்ப் 'பாண்டியன் நெடுமாறனின் சைவ நெறிக்குத் துணையாக நெடுங்காலம் கூடவே இணைந்து வாழ்ந்து, குற்றமற்ற அக்கொழுநரோடு கூடவே ஈசன் நிழலடைந்து இனிதிருக்கும் அருளும் பெற்றார்' என்ற செய்தியை மட்டும் அடக்கமாகக் கூறி அமைதியடைகிறார்.

"பூசுரர்சூளாமணியாம் புகலி வேந்தர்
போனைஞர் வம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறுந் தவத்தினரைச்
செப்புவதுயாம் என்னறிந்து? தென்னர் கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசில் நெறி யவரோடுங் கூட ஈசர்
அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார்"

என்பதே அத்திருப்பாட்டு.

வரிவளைக் கைமானியாம் மங்கையர்க்கரசியாரை நாமும் போற்றி, அவர் திருவருளைப் பெற்றுத் திகழ்வோமாக.

உலகெலாம் தழைவுற ஆள்பவள்

இராகம் : கேதாரம் — தாளம் : ஆதி

பல்லவி

நமைக்காக்கும் நான்மாடக் கூடலின் நாயகி
நாடும்பொரு ளொடுபுகழ் ஞானமும் தருபவள் (நமை)

அனுபல்லவி

அழகொளிர் உயர்சிங்கா சனத்தினில் அமர்பவள்
அருளிந்த உலகெல்லாம் தழைவுற ஆள்பவள் (நமை)

சரணம்

விரும்பிடும் அறுபத்து நான்கென விளம்பிடும்
விளையாடல் மதுரையிற் புரிந்துளம் மகிழ்ந்திடும்
அரன்திருப் பங்கினில் அணிபெற அமர்ந்திடும்
அங்கயற் கண்ணியென அடியவர் புகழ்ந்திடும் (நமை)

—மீ. இராமநாதன்

மதுரை மூதூர் மாநகர்

டாக்டர் தி. முருகரத்தனம், எம்.ஏ., பி.எச்.டி.,


மதுரை மாநகரத்தின் அமைப்புப் பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிபாடலாலும்,மதுரைக்காஞ்சியாலும், சிலப்பதிகாரத்தாலுமே ஓரளவு அறிய முடிகிறது. காஞ்சியும் சிலம்பும் கூறும் கருத்துகளை இங்குத் தொகுத்துக் காணலாம். கோட்டை, வாயில், பல்வேறு தெருக்கள் ஆகியவை பற்றியே இவ்விலக்கியங்கள் சிறப்பாகப் பேசுகின்றன.

	மதுரைக் காஞ்சி கூறும் நகரின் கூறுகள்	சிலம்பு கூறும் நகரின் கூறுகள்
1.	... ...	இளை சூழ் மிளை
2.	மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கு	வளைவுடன் கிடந்த வலம்புணர் அகழி
3.	விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை	கடி மதில்
4.	அணங்குடை நெடுநிலை	... ...
5.	வையை அன்ன வழக்குடை வாயில்	சுருங்கை வீதியும் வாயிலும்
6.	மலையின் நிவந்த மாடம்	... ...
7.	அறங்கூறு அவையத்தார்	... ...
	காவிதிமாக்கள் (அமைச்சர்) வணிகர்	... ...
	நாற்பெருங் குழுவினர் ஆகியோர் உறையும் தெருக்கள்	நால்வேறு தெரு
8.	நாளங்காடி அல்லங்காடி	அரசு விழை திருவின் அங்காடி வீதி பயங்கெழு வீதி (இரத்தினக் கடைத் தெரு) பொற்கடை வீதி அறுவை வீதி கூல வீதி

9. ... ... கடைகழி மகளிர்
வையங்காவலர்
மகிழ்தருவீதி
எண்ணெண் கலையோர்
இருபெருவீதி

10. ... ... சந்தி, சதுக்கம்,
மன்றம் கவலை,
மறுகு, ஆவணவீதி,

11. சமண, பௌத்த,
அந்தணர் பள்ளிகள் ... ...



மதுரைமாநகர்பற்றி இருநூல்களும் கூறும் கருத்துகளை வகுத்துக் காணலாம். சில கருத்துகள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன :

1. இருநூல்களும் அரண்பற்றித் தெளிவாகப் பேசுகின்றன. அகழி, கோட்டைமதில், வாயில் ஆகியவை பேசப்படுகின்றன.

2. வணிகக் களங்களாகிய அங்காடிகள்—நாளங்காடி, அல்லங்காடி—விரிவாக விளக்கப்படுகின்றன. இவ்வங்காடிகளில் எழும் ஆரவாரங்களையும் விற்பனையாகும் பல்வேறு பண்டங்களையும்பற்றி மதுரைக்காஞ்சி பரக்கப் பேசுகிறது. பொன், மணி முதலிய உயர் பொருள்களின் செழிப்பைச் சிலம்பு இயம்புகிறது.

3. சிலப்பதிகாரம் பொதுமகளிர் பெருகவாழும் தெருக்களை விரித்துப் பேசுகிறது. மதுரைக்காஞ்சி அவர்களுக்குரிய தெருக்களைச் சுட்டிப்பேசவில்லை. ஆனால் அந்நூல் மதுரையின் இரவு நிகழ்ச்சிகளை விரித்துரைக்கும் முகத்தான் அப்பெண்டிரின் ஒழுக்கங்களை விளக்கியுரைக்கிறது.

4. இருநூல்களும் நால்வேறு மக்கள் வாழ்வுபற்றிப் பேசுகின்றன. 'நால்வேறு மக்கள்' என்னும் தொடருக்கு ஒப்ப முடிந்த ஒருபொருள் கூறப்படவில்லை. ஆரிய மரபான நால்வருண மக்களே இங்குப் பேசப்படுகின்றனர், என்பது ஒரு சாரார் கருத்து.

இவற்றை எண்ணிப் பார்க்கின்றபோது 'மதுரை மாநகரை விளக்குவதில் சில புனைந்துரை மரபுகளை ஆசிரியர்கள் மேற்கொண்டனரோ' என்ற வினா எழுகிறது. நாட்டு வருணனை பாடுவதில் பண்டை நாள்தொட்டே சில மரபுகள் இருந்திருக்கின்றன. நாட்டு வருணனை

பாடுகின்றபோது நான்குதிணைகளைப் புனைந்துரைப்பது ஒருமரபு. இதனை மதுரைக்காஞ்சி ஆசிரியர் பின்பற்றி யிருக்கிறார். ஆறு பருவங்களையும், ஆறு பொழுதுகளையும் புனைந்துரைத்தல் ஒரு மரபு. இம்மரபினை இவ்விரு நூலாசிரி யர்களுமே மதுரை நகர் வருணனையில் பின்பற்றியிருக்கின்றனர்.

இவ்வாறே நால்வருண மக்களும் நால்வேறு தெருக்களில் வாழ்கின்றனர் என்று உரைத்துவைப்பது ஒரு நகர் வருணனை மரபு போலும். அவ்வாறே பொது மகளிர் பற்றிப் புனைந்துரைத்து அதன்வழி நகரின் செல்வச் செழிப்பை விளக்குவது ஒரு மரபு போலும். ஆதலால்தான் மதுரைக் காஞ்சி, அவர்கள் தொழில்பற்றிப் பேசுகிறது; சிலம்பு அவர்கள் தொழிலும், தெருவும் பற்றிப் பேசுகிறது. நகரின் செல்வச் செழிப்பைப் புனைந்துரைக்கும் மரபாகப் பல்வேறு பண்டங்களையும், பண்டம் பகர்வோரையும், அவற்றால் எழும் ஆரவாரங்களையும், கடைத் தெருக்களையும் புனைதல் ஒரு முறை போலும். மதுரைக் காஞ்சி பல்பண்டங்களைப் பேசுகிறது; சிலம்பு உயர்பண்டங்களைப் பேசுகிறது. நகர் என்றால் அரண் கூறவேண்டும், அகழி கூறவேண்டும் என்பதும் மரபு.

இவ்வாறாக மதுரைக் காஞ்சியிலும், சிலம்பின் ஊர்காண் காதையிலும் வெறு மரபுகளையே காணுகிறோமா? உண்மையான மதுரையையே காணுகிறோமா?

பண்டைத் தமிழகத்தில் கட்டிடக் கலை நூல்கள் இருந்திருக்கின்றன. 'நூல் நெறி மாக்கள் பால்பெற வகுத்த பத்தினிக் கோட்ட'மே செங்குட்டுவன் கண்ணகிக்கு எழுப்பியது. மயன் என்னும் தேவதச்சன் வழங்கிய கட்டிடக் கலையும் பண்டையோர் அறிந்ததே. இவற்றில் நகர அமைப்புகள் பேசப் படுதல் கூடும். அருத்த சாத்திரங்கள் அரசின் கூறான அரண் பற்றிப் பேசுகின்றன. அரசரின் தலைநகர்க்கான அரணே அதுவாம். இவ்வரணே கோட்டை மதிலாம். உள்ளே நகரமும் கோவாமும் கோவிலும் உண்டு. இவற்றை அறிந்த மாங்குடி மருதனும் இளங்கோவடிகளும் தாமே தம் நூலில் மதுரையைப் படைத்துவிட்டனரா? அதனைக் கண்டுதான் கூறினரா? பரிபாடல், இதழ்விரிந்து வரும் தாமரை போன்று மதுரை அமைந்தது, எனக் குறிப்பிடுகிறது. இன்றைய மதுரை ஓரளவு அப்படித்தான் விளங்குகிறது. ஆனால் பரிபாடல் ஆசிரியர் போற்றும் அண்ணல் திருமால் கோயில் நடுவண் இல்லையே! அம்மை கோவிலன்றோ இருக்கின்றது! இவ்வம்மை கோவிலும் அதனை ஒட்டி எழுந்த நகரமும் எழுந்தகாலம் சங்க காலத்துக்கும் பின்னைக்காலம் ஆயிற்றே!

ஆதலால் இலக்கியங்கள் காட்டும் மதுரை மாநகரின் உண்மை அமைப்பினை எவ்வாறு அறிவது? மரபினை நீக்கி மெய்யினைக் காணவேண்டும். அம்மெய்யும் வரலாற்றால் வலிவு பெறவேண்டும். இவ்வகையில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையே துணையாகும். இவற்றால் இத்துறையால் ஆராய்ச்சி வளர்தல் வேண்டும். பின்னரே உண்மை காணலாம்; மதுரை மூதூர் மாநகரையும் அறியலாம்.

மதுரை நாட்டுப்புறப் பாடல்கள்

ர. அய்யாச்சாமி, எம். ஏ.

ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை என்பார்கள். கவிஞர் கோமானாகிய கம்பரே ஏற்றப்பாடலில் கட்டுண்டு நின்றார் என வரலாறு உண்டு. ''மூங்கில் இலைமேலே தூங்குபனிநீரே,'' என்று பாடினான் உழவன். அதற்குப் பொருத்தமாக அடுத்த அடியைப்புலவர் பெருமான் கற்பனை செய்து கொள்ள இயலவில்லை. ஏற்றம் மிதித்த குடியான வனே, மறுநாள், அவருக்குத்துணை வந்து, ''தூங்கு பனிநீரை வாங்கு கதிரோனே,'' எனப் பாடவேண்டி இருந்ததாம்.

மதுரையை அடுத்த ஒருவனம்; அடர்ந்தவனம். அதன் அடர்த்தி எப் பேர்ப்பட்டது.

" ஈப்புகுந்தால் இறகொடியும்
இண்டப் பிணக்காடு;
கொசுப்புகுந்தால் இறகொடியும்
கொங்கர் இளங்காடு."

மதுரையையே மையமாகக் கொண்ட ஒரு சொல்லோவியம் :

தென்மதுரைச் சொக்கர்
மண்சுமந்தார் அப்போ;
வைகைஅணை கட்ட
வாங்கிக்கொண்டார் கூலி;
வாணிச்சி கைப்பிட்டு
வாயிலிட்டுப் போனார்;
ஒருதட்டு மண்போட்டு
மறுபடியும் வருவார்;
வாணிச்சிகைப் பிட்டுக்கு
வந்துவந்து நிற்பார்;
பிள்ளையாரே வாரும்
பிடித்தேனையா ஏற்றம்.

கல்வியில்சிறந்த புலவர்பெரு மக்களும், ஆன்மீகச் சுடர்செறிந்த அடியவர்களும் ஆலவாய் அழகனுடைய திருவிளையாடலைக் கவிதையிலும், உரை நடையிலும் பலவாறாகப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். ஆனால் இந்த ஏற்றப் பாடலில் உள்ள எளிமையும் நயமும் அவர்களுக்கும் எட்டாதவை. வாணிச்சி கைப்பிட்டுக்கு, இறைவன் வந்து வந்து நிற்பாராம். அது அவருடையகுழந்தைத் தனமா ? குறும்பா ? பொருள் பொதிந்த தெய்வத்திருவிளையாடலா? சொல்லோசை, வந்து வந்து, நம் சிந்தையை மெல்ல மெல்ல மயக்குகிறது. எழுத்தறிவு இல்லாதவன் ஆனாலும், ஏற்றம் மிதிக்கும் குடியானவன், பத்தே வரிகளில் ஓர் அற்புதத் திருவிளையாடலை, முத்து முத்தாகச் சித்திரம் தீட்டி விடு கிறான்.

இவனைப் போலவே, தமிழகத்து நாட்டுப்புறமக்கள் அனைவரும் கற்பனைத் திறம் படைத்தவர்கள்; கேள்வி ஞானம் மிகுந்தவர்கள்; இறையன்பு நிறைந்தவர்கள்; நம்முடைய புராண இதிகாசக் கதைகளை நன்கு உணர்ந்தவர்கள். ஆகவே அவர்கள் வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்கள் தனிச்சிறப்பு வாய்ந்து விளங்குவதில் வியப்பேதும் இல்லை. செயற்கையரண் இன்றிக் காட்டிலே விரிந்து மணம் வீசும் அழகிய மலர்களைப் போன்றவை, அந்தப் பாடல்கள். மக்களின் உள்ளக்கிளர்ச்சிகளை வடித்துநிரப்பிய மாணிக்கக் கலயங்கள் அவை.

நாட்டுப்புறப்பாடல்களைப் பல வகையாகப்பிரிக்கலாம். ஆயினும், வேலை செய்யும் போது பாடும் தொழிற்பாடல்களே எண்ணிக்கையில் மிகுந்தவை. சுவையை அடிப்படையாக எடுத்துக் கொண்டால் காதற் சுவையே பெரும்பாலான பாடல்களில் ஊடுருவி நிற்கக் காணலாம். அதற்கு அடுத்தபடியாக வருவது தாய்மை அன்பு.

நாட்டுப்புறப்பாடல்களில் சாகா வரம் பெற்றவை, தாய்மை அன்பு தவழும் தாலாட்டுப்பாடல்கள். அழும் குழந்தையும், அதைத் தூங்கவைக்க இசைபாடும் அன்புக்குரலும் இருக்கும் வரையில் தாலாட்டுப் பாடல்களுக்கு அழிவே இல்லை.

மதுரை மாவட்டத்தில் வழங்கி வரும் ஒரு நாட்டுப்புறப்பாடல், சொக்கநாதப்பெருமானை, ஒரு சாதாரணக் குடியானவன் ஆக்கிவிடுகிறது. வயலிலே வேலை செய்யும் நாயகனுக்குச் சோறு கொண்டு போகிறுள் மீனுட்சி அம்மை. அப்புறம் நடப்பது என்ன?

மதுரைக்கு மேற்கசலே—புள்ளி
மான்அணையும் பொட்டலிலே
தரிசாக் கிடக்குதுண்ணு—சொக்கர்
தனிச்சம்பா போட்டாராம்
சம்பா கதிர் அறுத்து—சொக்கர்
தனித்துநிற்கும் வேளையிலே
சொர்ணக் கிளிபோல—மீனுள்
சோறுகொண்டு போனுளாம்
நேரமும் ஆச்சுதுண்ணு—சொக்கர்
நெல்லால் அடிச்சாராம்
கல்லோ கிடக்குதுண்ணு—சொக்கர்
கடும்கோபம் கொண்டாராம்
அள்ளி எறிஞ்சாராம்—மீனுள்
அழகான கூந்தலிலே
வாரி எறிஞ்சாராம்—மீனுள்
மார்மேலும் தோள்மேலும்
சோர்ந்து விழுந்தாளாம்—மீனுள்
சொக்கர் முகம்பார்த்து
களைத்து விழுந்தாளாம்—மீனுள்
கணவர் முகம்பார்த்து
அழுத குரல்கேட்டு—அழகர்
அலறிஓடி வந்தாராம்
சீரு கொடுத்தாராம்—மீனுவுக்குச்
சீமையிலே செம்பாதி
வரிசை கொடுத்தாராம்—மீனுவுக்கு
வைகையிலே செம்பாதி.

கள்ளமற்ற பாமரமக்களின் உள்ளத்திலே உதித்த கற்பனையல்லவா இது? கணவன் மனைவியர் பிணக்கும், சீதனம் போதவில்லையென்ற பூசலும், பெண்ணின் பிறந்த வீட்டார் காட்டும் பரிவும் ஏறக்குறைய நாள்தோறும் கிராமப்புறங்களிலே காணும் நிகழ்ச்சிகள். தான் கண்டு அனுபவித்த காட்சிகளையே கருப்பொருள் ஆக்கி மதுரையையும் அழகர்கோவிலையும் இணைத்துவிட்டான் நாட்டுப்புறத்துக் கவிஞன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மட்டுமல்லாமல், வேறு துறைகளிலும் மதுரை மாவட்ட நாட்டுப்புறப்பாடல்கள்

ஆட்சி செலுத்துகின்றன. சங்கம் இருந்து தமிழ் வளர்த்த மதுரையில் ஏட்டில் எழுதாத நாட்டுப்புறப்பாடல்களும் எண்ணற்றவை. அவை கூறும் செய்திகளும் அளவற்றவை. அவற்றில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துக் காட்டவே முற்படுகிறது, இந்தக்கட்டுரை.

"சொக்கருட கோவிலிலே
தூண்டா மணிவிளக்கோ?
மீனாட்சி கோவிலிலே
விடிவிளக்காய் நின்றவனே"

என்பது ஒரு தாலாட்டு. தன்னுடைய குழந்தைஎன்றும்நின்று வாழவேண்டும், என்பது அன்னையின் நிரந்தர ஆசை. அதைக் குறிப்பிடவே, அவன் ஆலயத்திலுள்ள நந்தா விளக்குக்குத் தன்மகனை ஒப்பிடுகிறாள் போலும்.

"மதுரைக்கு நேர்கிழக்கே
மாரியம்மன் தெப்பக்குளம்
மஞ்சள்நீர் ஆடப்போயி
மயிலாளை நான்மறந்தேன்"

என்று ஏங்குகிறான் ஒருகாதலன் பிரிவுத் துன்பம் அவனை வாட்டுகிறது. அவனுடைய காதலி, வானத்திலே இருக்கும் மீனைப்போல எட்டாத பொருள் ஆகிவிடுகிறாள்.

"மானத்திலே மீனிருக்க
மதுரையிலே நீஇருக்க
செலத்திலே நான்இருக்க நாம்
சேருவதும் எக்காலம்,"

என்று உள்ளம் பதைக்கிறான் இளைஞன். இருப்பினும் அவன், தன் அன்புக்கு உரியவளை எந்நாளும் கைவிட மாட்டான்; உறுதி கூறுகிறான்; ஆணையிடுகிறான்.

"கானமயிலே உன்னைக்
கைவிடலே என்னுசொல்லி
மீனாட்சி கோவிலிலே
வெட்டிபோட்டுத் தாண்டறேண்டி"

கிடைத்த தானியம் முழுவதையும் ஊரார் ஒன்றுக்கிப் பதப்படுத்தி, மறுநாள் சமைப்பார்கள். பூசைக்குப்பின்,



அதை அனைவரும் பங்கிட்டு உண்டு மகிழ்வார்கள். பரணி இரவில், அவர்கள் பாடும் பாடலின் முதற்பகுதி பின்வருமாறு :

பரணி பரணி பாப்பரணி
பஞ்சாய் ஓடிய திருப்பரணி
ஆரம்மா வீட்டிலே
ஏனம்மா பேசலே
கார்த்திகை கார்த்திகை என்றோமே
கார்த்திகை பிறந்ததைக் கண்டீங்களா
பரணியல்லோ பாடிவந்தோம்
குருணியல்லோ போடவேணும்
குருணி குருணி போட்டீங்கண்ணா
கோபால கிருஷ்ணனைப் பெற்றெடுப்பீர்.
நாடு பெருகட்டும் நன்மை சிறக்கட்டும்
பட்டி பெருகட்டும் பாலும் பெருகட்டும்
பாண்டியன் சீமையும் தானே சிறக்கட்டும்
கொய்யா கொழுமிச்சி குலுங்கிப் பழுக்கட்டும்
ஏலமும் காப்பியும் எடுத்து விளையட்டும்
பெலா பழுக்கட்டும் பிள்ளைக திங்கட்டும்
மஞ்சி விளையட்டும் இஞ்சி சிறக்கட்டும்
கொம்புத் தேனும் கூடிக் கிடைக்கட்டும்.

மதுரைத் திருக்கோயிலில் திருமுறை விண்ணப்பிக்கும் வரலாறு

வித்துவான் தா. குருசாமி

திருவாலவாயுடைய சொக்கநாதப் பெருமான், பூவுலகில் திருக்கோயில் கொண்டிருப்பது, மக்களினத்தார் வழிபட்டு உய்வு பெறுவதற்காகவே. திருஞான சம்பந்தப்பெருமான் திருப்பாடல் பெற்றுக், கூடல் ஆலவாயிலில் குலவி நிற்கின்ற இறைவன், 'தேவாரப் பாடல் நாடோறும் கேட்பதில் விருப்புடையவர்' என்பதனைப் பண்டை வேந்தர்கள் உணர்ந்து, திருமுறை ஓதுவார்கள் பலரை நியமித்துத் திருமுறை விண்ணப்பிக்கச்செய்தனர்.

ஆகமத்தில்

சிவபெருமானுக்குத் திருமுறை தூல சரீரம்; ஆன்மா சூக்கும சரீரம்; சத்தி அதிசூக்கும சரீரம். இவ்வாறு சிவாகமங்கள் ஓதுதலால் அம்மந்திர சொரூப (வேத)மாகிய திருமுறையினிடத்துச் சிவபெருமான் விசேடமாய் எழுந்தருளியிருப்பார், ஆதலின், திருமுறை திருத்தலங்களில் ஓதுதல் விதிக்கப்பட்டது. திருக்கோயில்களில் நித்திய, நைமித்திகத்தில் வேதபாராயணஞ் செய்வித்தன் மாத்திரையான் அமையாது, சிவாகமத்திலே பூசாந்தத்தில், 'திராவிட தோத்திரஞ் செய்க' என விதித்தபடி திருமுறைகளையும் ஓதும் வண்ணம் கற்கோயில் எழுப்பிய மன்னர்கள் விளைநிலம் முதலியன வழங்கி ஓதுவார்களை நியமித்த வரலாற்றினைக் கல்வெட்டுகள் உணர்த்தும்.

ஓதுவார் தன்மை

திருமுறைகளை ஓதுவோர் 'ஓதுவார்' என்பது பிற்கால வழக்கு. பண்டாரம் என்பதே முற்கால வழக்கு; இராசராச சோழன் கல்வெட்டில் ஓதுவார்களைப் 'பிடாரர்' என்று கூறுவது 'பண்டாரம்' —'பட்டாரக்கர்'— பிடாரர் என்று மருவியதே யாகும். இக்காலத்தும் பட்டாரகர் என்ற சொல் வழக்கில் உள்ளது. விதிப்படி ஓதுதலால் இவ்வோதுவார்களைச் சிவபெருமானாகவே பாவித்தனர். சிவபெருமானுக்கும் முத்திக்கும் உரித்தாய 'பண்டாரம்' என்னும் பெயரான் ஓதுவார் அழைக்கப் பட்டனர். பண்டாரம் என்னும் சொல்லுக்கு அரும்பொருள் இருக்குமிடம் என்று பொருள் கூறப்படும். திருமுறைகளே கருவூலம்; அத்திருமுறைகள் அவர் உள்ளத்தின்கண்

கிடைக்கப்பெறுதலால் 'பண்டாரம்' எனப்பட்டனர்.

கோயில் ஓதுவார் வழிமுறை

தளவாய் அரியநாத முதலியார் மூலம், விசுவநாதர் காலத்தில் அவர் அழைப்பையேற்று வந்த அலங்கார ஓதுவார் மதுரையில் ஏற்கனவே திருமுறை ஓதிவந்தவர்களோடு கலந்து அவர்க்குரிய மரியாதை வகைகளையும் பெற்றுவந்தனர். ஏற்கனவே திருமுறை ஓதுவதன்பொருட்டு மதுரையில் வாழ்ந்துவந்த மரபினர், திருமுறை ஓதுவதை விடுத்து உள்துறை நிருவாகத்தில் ஈடுபடுத்தப்பட்டு விட்டனர். அம் மரபினர் இன்று மெய்காவல் எனப் படுகின்றனர். திருமுறை ஓதும் மரபினர்க்கு மதுரைக்கோயிலில் புடையார் மூன்றும் நிருவாகம் மரியாதை இப்பொழுதும் வழங்கப்படுகிறது. அலங்கார ஓதுவார் மகன் சித்திரபுத்திர ஓதுவார். அவர்மகன் கனகசபாபதி ஓதுவார். அவர்மகன் வீதிவிடங்க ஓதுவார். அவர்மகன் தாண்டவமூர்த்தி ஓதுவார், மதுரைக் கோயிலில் திருமுறைப்பணி யாற்றி வருகின்ற போது திருக்கோயில் சார்பிலேயே நெல்லும் பொருளும் ஆண்டுதோறும் பெற்று வந்தார். தாண்டவமூர்த்தி ஓதுவார் காலத்தில்தான் திருமலை நாயக்கர் 'ஓதுவார்செங்குளம்' என்ற கிராமத்தை இறையிலி சாசனம் செய்து கொடுத்துச் செப்புப்பட்டயம் வழங்கி நிலையான முறையில் திருமுறைப்பணி செய்ய வழிவகுத்தார்.

ஓதுவார்பணி

மதுரைக் கோயிலில் ஓதுவார்பணி பெற்ற ஓதுவார்கள், விசேட நாள்களில் தலபுராணம் சொல்வதும், திருவிழாக் காலங்களில்திருப்பணிமாலை பாடுவதும், ஆண்டவன் அடியார் பெருமைபற்றிய விரிவுரை செய்வதும் வழக்கமாகும். அவ்வழக்கம் இன்றும் அப்படியே நடந்து வருகிறது. திருக்கோயிலின் புராதனச்சான்றேடுகளில் இவ்விவரங்கள் அடங்கியுள்ளன. செப்பேடுபெற்ற தாண்டவமூர்த்தி ஓதுவார் காலத்திற்கு பின்பு தோன்றிய தாண்டவமூர்த்திக் கவிராயஓதுவார், சொக்கநாத நாயக்கர்



காலத்தில் (கி. பி. 1689-ல்) தோன்றி இராணிமங்கம்மா காலம் வரை வாழ்ந்தவர் ஆவார். மதுரைக் கோயிலின் வரலாற்றைத் — திருப்பணி செய்தவர்கள் விவரத்தைச் செய்யுள் உருவில் பாடியவர் இவரே. 'சுந்தரர் வேடுபறி' என்ற கலிவெண்பாச் செய்யுளும் இவர் பாடியதாகக் கூறப்படுகிறது.

திருமுறை ஓதும் இடம்

விஜயரங்கசொக்கநாதர் காலத்தில் தொழிலட்டவணை தயார் செய்தபோது 'தேவாரம் அம்மன் சந்நிதி, விநாயகர் சந்நிதிகளில் ஏன் ஓதப்படக்கூடாது' என்று கேட்டதற்கு அப்போது இருந்த சிவகுருநாத ஓதுவார், தேவார திருவாசகங்கள் சிவ சந்நிதானத்தைத் தவிர, விநாயகர், முருகக்கடவுள், அம்பிகை முதலியோர் சந்நிதிகளில் ஓதி வரவேண்டும் என்பது சம்பிரதாய விரோதமட்டுமின்றி, உலக வழக்கத் திற்கே பொருத்தமின்றியும், நியாய முறையிலும் இருந்து வராமையாலும் அந்தந்த தெய்வ சந்நிதிகளில் அவரவர்க்குரிய பாடல்களை யாவரும் எப்பொழுதும் பாடிவந்தாலும் சொக்க நாதர் மூலஸ்தான சந்நிதி ஒன்றும், வெள்ளியம்பல நடராசர் சந்நிதி ஒன்றும் ஆக இரண்டு சிவ சந்நிதானங் களே தேவார திருவாசகங்கள் ஓதுதற் குரியனவாகும்' என்று வாக்குமூலம் கொடுத்திருப்பதை மதுரஞ் சுந்தர பாண்டிய ஓதுவார் 29—8—1936-ல் எழுத்துமூலம் விளக்கம் செய்திருக் கின்றார்கள். இவ்வாக்கு மூலப்படியே இன்றும் திருமுறை விண்ணப்பம் நடைபெற்று வருகின்றது.

நாடோறும் திருமுறை விண்ணப்பம்

நித்தியப்படி சுவாமி சந்நிதானத் தில் கொடிக்கம்பத்தின் முன்பு பள்ளி யறைச் சொக்கர் எழுந்தருளுங் காலத் தில் 'தேவாரம் அருளிப்பாடுக' என்ற வுடன் திருமுறை விண்ணப்பிப்பது வழக்கம். அக்காலத்தில் இருந்து இன்றும் நித்தியப்படி நடந்து வரும் திருமுறைப்பணி இது வாகும். இக்காலத் தில் ஒரே திருப்பாட்டு விண்ணப்பம் செய்யப்படுகிறது. கஸ்தூரிரங்கச் சொக்கநாதர் காலத்து வாக்குமூலத்தில் ஒருபதிகம் விண்ணப்பிக்கப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. பஞ்சபுராணம் என்பது பிற்கால வழக்கமாகும்.

பிரதோஷகாலத் திருமுறைப்பணி :

மாதவிசேடமாகிய பிரதோஷ காலத்தில் பெருமானும்பெருமாட்டியும் இடப வாகனத்தில் கபாலிமதிற் பிரகாரத்தில் வலமாக வரும்போது அஷ்டதிக்குகளிலும் முறையே கீழ்க் கண்டவாறு திருமுறைப்பண் ஓதப்பட வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. (1) நட்டபாடை (2) காந்தாரம் (3) பியந்தைக்காந்தரம் (4) சாதாரி (5) நட்டராகம் (6) தக்கராகம் (7) சீகாம ரம் (8) தாண்டகம் அல்லது செந்துருத்தி —என்ற பண்கள் ஓதப்பட்டன.

சித்திரை விழாவில் திருமுறைப்பணி

முதல் திருநாளில் ஆடிவீதியின் அஷ்டதிக்குகளிலும் தேவாரம்விண்ணப் பிப்பது வழக்கம். எட்டுத் திக்குகளிலும் பகற்பண் நான்கும் இராப்பண் நான்கும் ஓதப்படவேண்டும். ஐந்தாம் திருநாளில் வேடர்பறி லீலை —சுந்தரர் வரலாற்றை விரித்துக்கூறித் திருமுருகன் பூண்டி நிகழ்ச்சிகளை விவரித்து அத்தலப் பதி கத்தை ஓதுவதுண்டு. கள்ளர் வேடம் பூண்டு வந்து நிற்பவரை முன்னிலைப் படுத்திப், பொதுமக்களுக்கு நாடக பாணியில் விளக்கிக் கூறுதல் பண்டை வழக்கம். இவ்வரலாறு அழகிய கலி வெண்பாவால் பாடப்பெற்றுள்ளது. ஆறுந்திருநாள் கழுவேற்றலீலை சொல் வது, சமணர்வேடம் போட்டவரை முன்னிலையில் வைத்து நாடகபாணியில்

முன்பு நடந்தலில்லை. இஃது இன்று 'சைவ சமயஸ்தாபனலீலை' என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகிறது. எட்டாந் திருநாள் ஊடல் மாலை சொல்வது நிகழும். இதன் தொகுப்புப்பாடல்கள், கங்கை—உமை ஊடல் திருமுறைப் பாடல்களாக உள்ளன. அவையே இன்றும் சொல்லப்பட்டு வருகின்றன. பதினோராம் திருநாள் சப்தா வர்ணத்தில் திருப்பணி மாலையும் திருமுறையும் விண்ணப்பிக்கப்படும். பன்னிரண்டாம் நாள் சூரண உற்சவத்தில் திருத்தெள்ளேணம் பாடுதல் மரபு. இப்படியே மற்ற உற்சவங்களிலும் பாடுதல் உண்டாம். மார்கழி மாதம் மாணிக்கவாசகர் திருவிழாவில் 10 நாளிலும் திருவெம்பாவை ஓதுதல் வழக்கம்.

திருவெம்பாவை காப்புக்கட்டும் போதும், காப்பு அவிழ்க்கும்போதும் பண்டைக்காலத்தில் அரசர்கள் முன்னிலையில் நடப்பதும், பரிவட்டம் ஓதுவாமூர்த்திகளுக்குக் கட்டிச்சிறப்புச் செய்தலும் நடந்து வந்தன. மாணிக்கவாசகரை எழுந்தருளப்பண்ணி அவர் சுவாமியின் திருமுன்பு பாடிவருவதாக வழக்கம். அதற்காக நாள்பத்திற்கும் பட்டு வஸ்திரம் கட்டுவதுண்டு. இது பற்றி நாயக்க மன்னர் காலத்தில் பரிவட்ட மானிய வழக்கு நடைபெற்றதாக எழுத்துச் சான்றுகள் கூறுகின்றன.

வைகாசி, பங்குனி வசந்த உற்சவங்களில் சுவாமி முன்பு மேகராகக் குறிஞ்சித் திருப்பதிகம் பாடுதல் வேண்டும். ஆனி ஊஞ்சல் விழாவில் திருப்பொன்னூசல் பாட்டு விண்ணப்பித்தல் வேண்டும். இப்பாட்டுகளைத் தாளத்தோடு பாடிவருதல் மரபு என்பது கூறப்படுகின்றது.

திருமுறைக்கு மரியாதை

திருமுறை ஊழியம் உள்துறை நிருவாகத்தில் புடையார் மூன்றும் நிருவாகம் எனக் கூறப்பட்டு அதன்படி இன்றும் மரியாதை நடைபெறுகிறது. மண்டப தீபாராதனைக் காலத்தில் கோயில் (நிருவாகி) அரசருக்கு அடுத்த மரியாதை கொடுக்கப்பட்டுள்ளது. இக்காலத்தும் ஓதுவார்க்கு மரியாதை செய்த பிறகே கட்டளைதாரர்கட்கு மரியாதை செய்வது வழக்கம்.


தாண்டவ மூர்த்தி ஓதுவார் திருஞானசம்பந்தர் மடத்தில் மிகவும் அணுக்கமுடையவர். திருமடத்துத் தலைவர், மகேசுவர பூசைக்குமுன்பு பூசையில் நைவேத்தியமான பிரசாதத்தைத் திருமடைப்பள்ளியின் உள்ளே சுவைபார்த்து வந்ததை அறிந்த இராமநாதபுரம் மன்னர் இப்படி முன்னுக உண்ணலாமா? என்று வினவியபோது, இவ்வோதுவாமூர்த்திகள்,

> " கண்டும் புசிப்போம்யாம் காணுமை
> லும்புசிப்போம்
> கொண்டும் கொடுத்தும் பணி
> செய்வோம்—பண்டு
> குடத்திற்குள் பொன்னழைத்த
> கோமான்சம் பந்தன்
> மடத்திற்கு நாங்களடிமை "

என்று சமத்காரமாக விடையளித்து இப்பாடலை வழங்கினூர்.

திருமுறை குடும்ப வித்தை

திருமுறைப் பயிற்சி குடும்ப வித்தையாக இருப்பினும், முற்காலத்தில் திருஞானசம்பந்தர் ஆதீனமே அவ்வித்தையின் குருபீடமாக விளங்கி வந்தது. பிற்காலத்தில் சிதம்பரம், திருவாரூர் முதலிய ஊர்த் தேவாரப் பாடசாலைகளில் திருமுறை கற்றனர். இக்காலத்தில் திருமடங்கள் பாடசாலைகள் நடத்துகின்றன. ஆயிரக்கணக்கான இசைக் கல்லூரிகள் தோன்றினும், தேவாரம் கற்பதற்கு அங்கு இயலாது. அஃது ஒரு சம்பிரதாய வித்தை. அவ்வித்தை குருபத்தியினுலும், சைவாசார சீலத்தினுலும் வரக்கூடியது. ✽



மதுரைக் கோயில் நித்திய வழிபாடு

புலவர் நீ. சி. சுந்தரராமன்

'சீவன் முத்திபுரம்' எனச் சிறப்புடைய மதுரைச் சொக்கநாதர் கோயிலில் நிகழும் நித்திய வழிபாட்டு முறைகள், காரண ஆகமத்தின் வழி இயங்குவனவாகும். நித்திய வழிபாடு எட்டுக் காலங்களில் நிகழ்வது உத்த மோத்தமமாகும். அவ்வாறே மதுரையில் **திருவனந்தல், விளாபூசை, காலசந்தி, திரிகாலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம், பள்ளியறை** என எட்டுக் காலங்களில் நித்திய வழிபாடுகள் நிகழ்கின்றன.

திருவனந்தல்

காலை 5 மணி அளவில் நிகழும் முதற் பூசை திருவனந்தலாகும். சித்தி விநாயகருக்கு வழிபாடு செய்து தொடங்கப்பெறும். பள்ளி யறையில் உள்ள சோமசுந்தரப் பெருமானின் திருவடிகளைச்சுவாமி கோயிலுக்கு எழுந்தருளச் செய்வர். பின்னர் மீனாட்சி அம்மைக்கு வழிபாடு நிகழும். இவ்வழி பாட்டின் போது மீனாட்சி அம்மை மகா சோடசி ரூபமாக விளங்குவதாக மரபு. இறைவனைத் துயில் உணர்த்தி வழிபாடு செய்யும் திருப்பள்ளி எழுச்சி யாகும் இக்காலம். ஞானப்பால் இப்பூசையின் முடிவில் அன்பர்களுக்கு வழங்கப்பெறும்.

விளாபூசை

இக்காலத்தில் விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள், சுவாமி முதலிய மூர்த்திகளுக்கு நீராட்டல் செய்விக்கப் பெறும். ஸ்நபனம், புண்யாகவசனம், அக்கினி காரியம் முதலிய வைதீகச் சடங்குகளுடன் இவ்வழிபாடு தொடங்கப்பெறும். இவ்வழிபாட்டின்போது

மீனாட்சி அம்மை பாலை வடிவில் காட்சி தருகிறாள். இவ்வழிபாடு காலை 6 மணி முதல் 7 மணிக்குள் நிகழ்வதாகும்.

காலசந்தி

இது காலைப்பூசை எனப்படும். இவ் வழிபாட்டில் நித்தியாக்கினி காரியமும், நித்திய பலியும் நிகழ்கின்றன. ஆற்றிலிருந்து திருமஞ்சனம் கொண்டுவரப் பெறும். பரிவார மூர்த்திகளுக்கு அபிஷேகம் நிகழ்த்தப்பெறும். இவ் வழிபாட்டின் போது அம்மை புவனை என்னும் சக்தி அம்சமாகத் திகழ்கின்றாள்.

திரிகாலசந்தி


உச்சிக்கால வழிபாட்டிற்கு முன்னர் இது நிகழ்த்தப் பெறுவதாகும். இக்காலத்தில் சியாமளை என்னும் தேவி அம்சமாக மீனாட்சி விளங்குகிறாள்.

உச்சிக்காலம்

இது நடுப்பகலில் நிகழ்வதாகும். பகல் போதில் நிகழும் வழிபாடுகளில் சிறப்புடையதாகும். ஸ்நபனம், ஆவரண பூசை முதலியவற்றுடன் நிகழ்வது. இவ்வழிபாட்டில் கோபூசை நிகழ்கின்றது. மீனாட்சி அம்மை பசுவடிவாகச் சொக்கநாதப் பெருமானை வழிபாடு செய்தல் கோபூசையாகும். எல்லா உயிர்களுக்கும் இருப்பிடம் பசு. அவ் வடிவைக் கொண்டு அம்மை இறைவனை வழிபடுவதால் எல்லா உயிர்களுக்கும் இறைவனை வழிபட்ட பலன் இக் காலத்தில் கிடைக்கின்றது. பிள்ளையின் நோய்க்குத் தாய் மருந்துண்பது போல் மக்களாகிய உயிர் இனங்களின் உயர்வுக்கு அம்மைதானே பசு வடிவில் இறைவனை வழிபடுகிறாள். இக்கால வழிபாட்டின்போது மாதங்கி வடிவில் மீனாட்சி விளங்குகின்றாள்.

சாயரட்சை

இது சாயங்கால பூசை. பிரதோச கால பூசை எனவும் வழங்கப்பெறும். இரவின் தொடக்கமான மாலைப் பொழுதில் இப்பூசை நிகழும். இவ் வழிபாட்டின் போதும் ஆவாகனம், அபிஷேகம் முதலியன நிகழும். இப் பூசையின் போது சுகசியாமளையாக மீனாட்சி காட்சி தருகின்றாள். சாயரட்சை வழிபாட்டில் சோடசோபசாரத்துடன் தீபாராதனை நிகழும்.



அர்த்தசாமம் :

இது நடு இரவுப் பூசை ஆகும். இப்பூசை மதுரைக் கோயிலில் மிகச் சிறப்புடையது. இவ்வழிபாட்டில் மீனாட்சி அம்மை பஞ்சதசாட்சரி கோலத்தில் வெண்ணிறத்துகில் உடுத்துச் சாந்த வடிவினளாகக் காட்சி தருகின்றாள். இக்கால வழிபாட்டிலும் அபிடேகம் முதலியன நிகழும்.


பள்ளியறை

இது அர்த்தசாம வழிபாட்டை அடுத்து நிகழ்வது. சோடசி என்னும் நிலையில் மீனாட்சி இக்காலத்தில் அருள் வழங்குகின்றாள். சோமசுந்தரப் பெருமானுக்குப் பள்ளியறை வழிபாடு நிகழ்த்திய பின்னர், அவருடைய

திருவடிகளைப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து வேத, திருமுறை கோசங் களுடன்மேளவாத்தியம் முழங்கஅம்மை யின் திருக்கோயிலுக்குக் கொண்டு வருவர். இக்காலத்தில் கோயிலின் வரவு செலவுக் கணக்குகள் பெருமான் முன்னர்ப் படிக்கும் வழக்கம் நடைபெறு கின்றது. மீனுட்சி சந்நிதியின் முன்பு பல்லக்கு வந்தவுடன் அம்மையே வந்து பாதபூசை செய்து அழைத்துச்செல்லும் பாவனையில் வழிபாடு செய்யப்பெறும். பின்னர்ப் பள்ளியறையில் சுவாமியை எழுந்தருளச்செய்து பள்ளியறைப் பூசை நிகழும். இப்பூசையில் குழம்புப்பால், அப்பம் முதலியன நிவேதிக்கப்பெறும். இசைக்கலைஞர், இறைவனைப்பாடுவர். அப்பாடலை நாதசுவரத்தில் அக்கலைஞர் வாசிப்பார். அன்பர்களுக்கு அருட் பிரசாதம் வழங்க இப்பூசை முடிவு பெறும். இக்காலத்தில் எல்லாச் சிவாலய மூர்த்திகளும் சொக்கநாதர் உருவில் ஒடுங்குவதாக மரபு. எனவே இவ்வழிபாட்டின்போது தரிசிப்பதால் எல்லாச் சிவாலயங்களையும் வழிபட்ட பலன் கிட்டும் என்பது துணிவு.

இவ்வாறு மதுரைக் கோயிலில் காலை 4-30 மணி முதல் இரவு 10-30 மணி வரை நாள்தோறும் நித்திய வழி பாடுகள் நிகழ்கின்றன. இவ்வழி பாடுகளை நிகழ்த்த மன்னர்களும், செல்வர்களும் பல்வேறு காலங்களில் திட்டங்கள் செய்துள்ளனர். மதுரைக் கோயிலில் நித்திய வழிபாடுகளும், நைமித்திய வழிபாடுகளும் பிற கோயில் களுக்கு முன்னுதாரணமாகச் சிறந்த முறையில் திட்டம் செய்யப்பட்டிருக் கின்றன.

ஒவ்வொரு கால வழிபாட்டிற்கும் உரிய பலன்கள் இவை எனத் திருவிளை யாடற் புராணம் பல நலன்களைக் கூறுகின்றது. அப்பலன்களைப் பெறும் வகையில் நாமும் மீனுட்சி அம்மையின் நித்திய வழிபாடுகளில் தரிசித்து நன்மைகள் பெறுவோமாக!



வரலாற்று ஏடுகளிலே மதுரைக் கோயில்

எஸ். முத்துக்கோனர், பி.ஏ., எல்.டி.

உலகின் மிகத்தொன்மையான நகரங்களில் மதுரையும் ஒன்றாகும். சங்க இலக்கியங்களிலும், பிற நூல்களிலும் மதுரை பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்பெறினும், மதுரையின் தோற்றம்பற்றிய செய்தியை எங்கும் காண்கிலோம். கபாடபுரக் கடல்கோளுக்குப்பின், பாண்டியன் முடத்திருமாறன் வடக்கே வந்து மணலூரில் தங்கியிருந்து, பின் மதுரையைத் தலைநகராக்கினன். இது இறையனாரகப்பொருள் களவியல்உரை (ஏறக்குறைய கி. பி. 8-ஆம் நூ) கூறும் செய்தி. திருவிளையாடல் (16-ஆம் நூ) மதுரையின் தோற்றம்பற்றிச் சற்று விரிவாக எடுத்துரைக்கும். மணலூரில் குலசேகரபாண்டியன் ஆட்சி செய்து கொண்டிருந்தபோது, அவ்வூர் வணிகன் தனஞ்சயன் என்பான், கடம்பவனத்தில் ஒரு விமானமும், ஓர் இலிங்கமும் இருந்ததைக்கண்டு, அரசனிடம் போய்ச் சொன்னான். அரசனும் அவ்விடத்தில் ஒரு கோயிலையும் நகரத்தையும் அமைத்தான், நகரத்தின் நான்கு திக்குகளிலும் நான்கு காவல் தெய்வங்களையும் நிறுத்தினான். அவை : தெற்கே கன்னியர்; மேற்கே கரியமால்; வடக்கே காளி; கிழக்கே கரிய சாத்தன் (ஆலவாய்த் தர்ம மூர்த்தி)

இறையனாரகப்பொருள் உரை கூறும் திருமாறன் எனும்பெயர் அக்காலத்திற்குப் பொருத்தமாக இருக்கப் பரஞ்சோதி திருவிளையாடல் கூறும் குலசேகரன் என்னும்பெயர் பொருந்துமாறில்லை; இப்பெயர் இடைக்காலப் பெயராகும்.

இன்றைக்கும் மதுரைப் பெரிய கோயிலின் தல விருட்சம் கடம்பு; பொற்றாமரைப் படிக்கட்டின் வடபுறத் தூண்களில் நிற்கும் குலசேகரன், தனஞ்சயன் வடிவங்கள், நகரத்தை ஆதியில் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர்கள் என்பதை நமக்கு நினைவு படுத்துகின்றன.

எனவே,'கடம்பவனத்தில் பாண்டியனொருவன் மதுரைக் கோயிலையும் நகரத்தையும் உண்டாக்கினான்' என்று திருவிளையாடல் கூறும் செய்தி உண்மை வரலாற்றுச் செய்தியாகும். தோற்ற முதலே மதுரை ஒரு கோயில் நகரம் என்பது அறியத் தக்கது.

மதுரையின் தொன்முது கடவுளும், மழுவேந்தியும், நுதல்விழி நாட்டத்து இறையோனும்


சங்க இலக்கியமாகிய பத்துப் பாட்டுகளிலொன்ருன மதுரைக் காஞ்சியில் வரும் "தொன்முது கடவுள்" என்னும் சொற்ருெடர் மதுரைக் கோயில்சிவபிரானையே குறிக்கிற தென்பர். அன்றியும், அந்திவிழாவின் போது மங்கலப்பறை (முரசு) முழங்க மழுவாகிய வாளையுடைய பெரியோன் ஏனையோரின் முதல்வனுக (மழுவா ணெடியோன் றலைவனுக. வரி 455) எழுந் தருளிய செய்தி குறிக்கப்பெறுகிறது. இங்கு 'மழுவாள் நெடியோன்' என்றது சிவபிரானை. இவர் மதுரைக் கோயில் இறைவரேயாவர்.

சிலப்பதிகாரத்தில் ஊர் காண் காதையிலும், 'நுதல்விழி நாட்டத்து (—நெற்றியினிடத்து விழித்த கண் ணினையுடைய) இறைவனுக்குக் கோயில் இருந்த செய்தி குறிக்கப்பெறுகிறது.

களப்பிரர் ஆட்சியில் கொடுமை

கி. மு. 3-ஆம் நூற்ருண்டு முதலே வேற்று மதங்களான சமணமும் பௌத் தமும் தமிழகத்தில் வந்து புகுந்தன. சமணத்துறவியர் மைசூர் சிரவணபெள் கோளாவிலிருந்து கொங்குநாட்டின் வழியாக இங்கு வந்தனர்; சமண சமயத்தைப் பரப்பினர்; மதபோதனை செய்வதற்குப் பள்ளிகளை அமைத்தனர். உண்ணு நோன்பிருந்து தவஞ்செய்வ தற்கு மலை இடுக்குகளில் கற்படுக்கை களையும் அமைத்துக்கொண்டனர். அப் படுக்கைகளை மதுரையைச் சுற்றியுள்ள குன்றுகளில் இன்றும் காணலாம். ஆனை மலை, அழகர்மலை, பரங்குன்றமாகிய எட்டுக்குற்றங்கள் சமணத்தின் அரண்க ளாயின.

பின்னர்க் களப்பிரர் என்போர் படையெடுத்து வந்து மதுரையைப் பிடித்துத் தங்கள் ஆட்சியையும்



ஏற்படுத்திக்கொண்டனர். இவர்களை வடுகக் கருநாடர் என்பர். இவ்வரசனைக் 'கலியரசன்' (கொடிய அரசன்) என் கிறது வேள்விக்குடிச் செப்பேடு.

"துன்னு சேனையிற் றுளங்கிய
வொருகரு நாட
மன்ன னன்னநாள் வந்தருட்
டென்னனை யோட்டிக்
கன்னி பண்டலங் கொண்டமண்
கையர்கை விழுந்து
முன்ன நீடிய வைதிக
முறையையு மொழிந்தான்"

(திருவாலவாயுடையார்
திருவிளையாடல் — 51 : 2)

மூர்த்தியாரை அவர் வழக்கமாக மதுரை இறைவருக்குச் செய்துவந்த சந்தனக்காப்புச் செய்யவெட்டாது தடுத்து விட்டான். 'மதுரை வவ்விய கருநாட வேந்த, னருகர்ச் சார்ந்துநின் றகுட்பணி யடைப்ப' என்கிறது கல்லாடமும்.

இவ்வாட்சிக்காலத்தில்தான் வச்சிர நந்தி என்ற சமணத்துறவி மதுரையில் கி. பி. 470ல் ஒரு திரமிளசங்கத்தை நிறுவினுன். சமண சமயத்தைப் பரப்புவதே இதன் நோக்கம். இது சமண சமயம் செழித்தோங்கி வளர்ந்த காலமாகும்.

"பூழியர் தமிழ்நாட் டுள்ள
பொருவில்சீர்ப் பதிக ளெல்லாம்
பாழியும் அருகர் மேவும்
பள்ளிகள் பலவு மாகிச்
சூழிருட் குழுக்கள் போலத்
தொடைமயிற் பீலி யோடு
மூழுநீர் கையிற் பற்றி
அமணரே யாகி மொய்ப்ப.
(பெரிய புராணம்.)

பாண்டிநாடெங்கிலும் சமணம் பரவியது.

பாண்டியர் மீட்சியும் வைதிகமத மறுமலர்ச்சியும்

ஏறத்தாழ 250 ஆண்டுக் களப்பிரர் ஆட்சிக்குப் பிறகு கடுங்கோன் (கி. பி. 575-600) என்பவன் களப்பிரர் ஆட்சியையொழித்துப் பாண்டிய ராட்சியை இங்கு மீண்டும் நிலைநாட்டினுன். இவன் பெயரன் செழியன் சேந்தன். (625-640). இவன் வைதிக தானங்கள் பல செய்ததாக அவனது வைகைப் படுகைக் கல்வெட்டிலிருந்து தெரிகிறது.

"பாண்டிய குலமணி பிரதீபனுய்
ப்ராதுர்பா வஞ்செய்து
விக்கிரமங்களா லரசடக்கி மறங்
கெடுத்தறம் பெருக்கி அக்ரஹாரம் பல
செய்த டரிமிதமாகிய ஹிரண்யகர்ப
கோ
ஸஹஸ்ர துலாபாரத்து மகாதானங்
களாற் கலிகடிந்தான்"

என்பது அக்கல்வெட்டு வாசகம். பின்வந்த வரகுணன் I முதலிய பாண்டியரும் இவைபோன்ற தானங்கள் வழங்கியதாக வேள்விக்குடி, சின்னமனூர்ச் சிறிய செப்பேடுகளும் கூறுகின்றன.

சேந்தன்மகன் கூன்பாண்டியன் என்ற மாறவர்மன் அரிகேசரி (கி. பி. 640-670). இவன் ஆட்சிக் காலம் முதல் சைவசமயம் தலையாய நிலையை யடையத்தொடங்கியது. இக் காலத்தைச் சைவத்தின் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். இது போதுதான் திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்து, சமணனுயிருந்த பாண்டியனைச் சைவ மதத்தில் சேர்த்தார்; சமணரோடு அனல்வாதம் புனல்வாதங்கள் நிகழ்த்தி வெற்றிகண்டார்; தோற்ற, எண்பெருங் குன்றத்து எண்ணுயிரஞ் சமணரும் கழுவேறினர்; சமண சமயமும் முன்னைய நிலையை இழந்தது. சைவமும் என்றுமில்லா ஏற்றம் பெற்றுத் திகழ்ந்தது.

திருஞானசம்பந்தர் திருவாலவாய் அமர்ந்துறை அண்ணல்மீது ஒன்பது திருப்பதிகங்கள் பாடியருளினுர். அவற்றுள் மதுரைக்கோயில் இறைவரைத் 'திருவாலவாய்ச் சொக்கன், கபாலமேந்தும் சம்பு, பாதிமாதுடனுகிய பரமன்' என்றெல்லாம் குறிக்கின்றார்;

திருக்கோயிலைக் ''கபாலிசூழ் கடிமதில் கூடலாலவாய்'' என்றும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து அக்காலத்துத் திருக் கோயில் கபாலி மதில்களுக்குள்ளடங்கிய பகுதியே என்று கருதலாம். அன்றியும், ஒவ்வொரு பதினோராம் பாடலிலும் சமணரைக் கடுமையாகத் தாக்கிப் பாடுகிறார். சமணர் பழக்க வழக்கங்களையும் ஆங்காங்கே குறிப் பிடுகிறார்.

இதே காலத்தில் ஆழ்வாராதிகளும் தோன்றி வைணவத்தை வளர்த்து வந்தனர். நாயன்மார்களும் ஆழ் வாராதிகளும் நாடெங்குமுள்ள கோயில் களுக்கெல்லாம் சென்று வழிபட்டுத் திருப்பதிகங்கள் பாடியருளினர். அத் தலங்களும் 'பாடல் பெற்ற ஸ்தலங்கள்' எனப்பிரசித்திபெற்றன. இங்ஙனமாகப் பக்தி இயக்கம் நாடெங்கும் பரவியது; வைதிக சமயங்களான சைவமும் வைணவமும் தழைத்தோங்கின.

இக்காலத்தில்தான், இப்போது சுப்பிரமணிய சுவாமி சன்னிதியிலுள்ள சிவன் கோயில் (சோமாஸ்கந்தர் கோயில்) திருத்தியமைக்கப் பெற்றது; அறங்களும் மாற்றி அமைக்கப்பெற்றன; ஸ்ரீதடாகமும் பழுதுபார்க்கப் பெற்றது. இதைச் செய்தவன் பாண்டியன் மாறஞ் சடையனின் மகாசாமந்தன் சாத்தன் கணபதி. இவன் மனைவி நக்கன் கொற்றி என்பாள், துர்க்கை கோயிலையும் ஜேஸ்டை கோயிலையும் கட்டினாள். இச்சன்னிதியிலுள்ள கணபதியைச்சாமந்தன்பீமன் என்பவன் கலியுகம் 3874ல் (கி. பி. 772-3) பிரதிஷ்டை செய்தான். ஆனைமலை நரசிங்கப்பெருமாள் குடவரைக் கோயிலும், மாறஞ்சடையன் ஆட்சியில் கலி 3871ல் கட்டி முடிக்கப் பெற்றது. காஞ்சிவாய்ப் பேரூரில் இப்பாண்டியன் ''திருமாலுக்கமர்ந்துறையக் குன்ற மன்னதோர் கோயிலை''யும் அமைத் தான். இவ்வாறாகத் திருக்கோயில்கள் தோன்றலாயின.

மூன்றாம் குலோத்துங்கனும் மதுரைக் கோயிலும்

இரண்டாம் பாண்டியப் பேரரசின் கடைசி மன்னன் வீரபாண்டியனுக்குப் பின் பாண்டியநாடு சோழராட்சிக்குட் பட்டது. அப்போது ஓர் உள்நாட்டுப் போரும் நடந்தது. முடிவில், சோழருதவி பெற்று ஜடாவர்மன் குல சேகரன் மன்னன் ஆயினன். ஆனால் அவன் சோழருக்கு விரோதியானான். எனவே இவனைத் தண்டிக்க மூன்றாங் குலோத்துங்கன் (1179-1218) மதுரை மீது படையெடுத்து வந்து, வழுதியின் குடமண்டபத்தை இடித்துத் தரை மட்டமாக்கிக், கழுதை ஏரிட்டு உழச் செய்தான். பாண்டியன் பெயரைப் பாண்டிவன் என்றும், மதுரையின் பெயரை முடித்தலை கொண்ட சோழ புரம் என்றும், பாண்டி மண்டலத்தைச் சோழ மண்டலம் என்றும், பாண்டி யனது தொழுமண்டபத்தைச் 'சோழ பாண்டியத் தம்பிரான்' என்றும் பெயர் மாற்றி, மதுரையைப் பாணனுக்கு வழங்கியருளினான். இவ்வாறாக எல்லாம் செய்த இச்சோழன் விஜயாபிஷேகமும் வீராபிஷேகமும் செய்து முடித்தான்.

> ''அறந்தரு திருவாலவாயில் அமர்ந்த
> வர்க்குத் தன்பேரால்
> சிறந்தபெருந் திருவீதியும் திருநாளும்
> கண்டருளிப்
> பொருப்பு நெடுஞ் சிலையால்முப்
> புரமெரித்த சொக்கருக்குத்
> திருப்பவனி கண்டருளித் திருவீதியில்
> சேவித்துத்
> தென்மதுரை திருவாலவாய்
> பொன்மலையெனப் பொன்வேய்ந்து''

மதுரை இறைவருக்குச் சிறப்புகள் செய்தான். இச் செய்தி அவனது புதுக்கோட்டை மெய்க்கீர்த்திகளில் கண்டது.

இரண்டாவது பாண்டியப் பேரரசுக் காலத்தில் மதுரைக் கோயில் திருப்பணிகள் (கி. பி. 1190-1311)

ஜடாவர்மன் குலசேகரன் (பட்டம் கி. பி. 1190) காலமுதல் பாண்டியநாடு சோழர் பிடியிலிருந்து விடுபெற்றுச் சுதந்திர நாடாயிற்று. இவ்வமிசத்து அரசர், மதுரைக் கோயிலுக்குத் திருப் பணி செய்வதில் கவனஞ் செலுத்தலாயினர் மாவீரனான மாறவர்மன் சுந்தர பாண்டியன் I (கி. பி. 1216-38) சோழ நாட்டை வென்றடிப்படுத்தி, அந் நாட்டைச் சோழனுக்கே மீள வழங்கினான். எனவே, இவனுக்குச் 'சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன்' என்னும் பட்டப் பெயர் வழங்கியது.

இவனது சோழ நாட்டுப் படையெடுப்பு கி. பி. 1218-ல் நடந்தது என்பர் வரலாற்றாசிரியர். மதுரைத் திருப்பணி விவரமும், சுவாமி கோயில் ஒன்பதுநிலைப் பெரிய கோபுரத்தைச் சுந்தரபாண்டியன் கட்டியது, சகம் 1140 (கி. பி. 1218)ல் எனக் கூறுகிறது. எனவே கீழைப் பெரிய கோபுரத்தைக் கட்டியது சோணாட்டு வெற்றியின் சின்னமாகவே என்று தெரிகிறது. இதுவுந் தவிரச், சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத் திருமதிலையும், அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரத் திருமதிலையும் சன்னிதி மண்டபத்தையும் கட்டுவித்தவன் இவனே.

ஆடிவீதி மேற்கு ஒன்பது நிலைக் கோபுரத்தைச் சகம் 1245 (கி பி. 1323)ல் கட்டியவன் பராக்கிரம பாண்டியன் என்று "திருவாலவாயுடையார் கோயில் திருப்பணி விவரம்" கூறுகிறது. அப்பாண்டியனின் கல்வெட்டொன்றும் மேலைக் கோபுர வட பக்கத்தின் அடியில் வரையப்பட்டுள்ளது.

கி. பி. 1323ல் முகமதியப் படை, மதுரை நோக்கி வந்தபோது பயந்து காளையார்கோயில் அரணபோய் ஒளிந்து கொண்டான் என "மதுரை ஸ்தானீகர் வரலாறு" கூறும் பாண்டியன் இவனே யாவான்.

முகமதியர் படையெடுப்பும் கோர விளைவுகளும்

1311-ஆம் ஆண்டு, பாண்டி நாட்டு வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இந்த ஆண்டில்தான் டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் தளபதி மலிக் காபர், பாண்டி நாட்டின்மேல் படையெடுத்து வந்தான். இவன் நோக்கம் கொள்ளையடிப்பதே; நாடுபிடிப்பதன்று. விக்கிரம பாண்டியன் இவனை அடித்துத் துரத்தியிராதிருந்தால் நாட்டிற்கு மலிக்காபர் இன்னும் அதிகத் தீங்கு செய்திருப்பான். என்றாலும் திரும்பிப் போகும்போது மலிக்காபர் ஏராளமான கொள்ளைப் பொருள்களைச் சுருட்டிக் கொண்டுபோனான். பாண்டி நாடு சீர் குலைந்தது.

ஆனால், கி. பி. 1323-ல் நடைபெற்ற படையெடுப்பு நாடுபிடிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டது. அதனால் மதுரையில் உலகிலேயே நீண்ட நெடுங்காலமாக ஆட்சி புரிந்து வந்த

பாண்டியர் ஆட்சி முடிவெய்தியது. பாண்டிநாடு தமிழன் ஆட்சியிலிருந்து மாற்றான் ஆட்சிக்கு மாறியது. 1323-ல் நடந்த படையெடுப்புப் பற்றி, **மதுரை ஸ்தானீகர் வரலாறு** கூறுவதாவது:

"சகாப்தம் 1245 (கி. பி. 1323)க்கு மேல் உருத்திரோத்காரிஞ்ல ஆனி மீ 22வ டில்லியிலிருந்து பாச்சா வாசல் மந்திரி ஆதிசுல்தானும் மலுக் நேமியாரும் அறுபதினாயிரம் குதிரை யுடனே புறப்பட்டுச் சீமையிலுண்டான சிவஸ்தலம், விஷ்ணுஸ்தலம், கோயில் குளமெல்லாம் இடித்து ஸ்ரீ பண்டார முதல் கொள்ளையிட்டுக்கொண்டு பிம்பங்களைக்கூட மோசப்படுத்து வித்துத் திரிசிரபுரம் வந்து சேர்ந்தார். அவ்விடத்திலுள்ள ஸ்தானீகருமெடு பட்டார்கள். ஸ்தலங்களுமெடுபட்டுப் போயின. இந்தச் சமாச்சாரம் வாளால் விழித்துறங்கும் பராக்கிரம பாண்டிய ராஜா கேட்டுப் பயந்து, காளையார் கோயில் அரண்போய்ச் சேர்ந்தார். அப்போது ஸ்தானீகர்கள் ... ... சுவாமி யுடையவர்கள் திருவாலவாயுடைய தம்பிரானுருக்குக் கெர்ப்பகிரகத் துள்ளே சுவாமிக்குக் கிளிக்கூண்டு பண்ணுவித்து மண்மேடுகள் போட்டுக் கெர்ப்பக்கிரக வாசலுங் கல்வரிதீர்ந்து, அர்த்தமண்டபத்தில் வேறேயொரு லிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணுவித்து மூலப்பேர் நாச்சியாரையும் அஷ்ட பந்தனம் செய்து. விமானத்தின் மேற் போக்கிலே நாச்சியாரை எழுந்தருளப் பண்ணுவித்து, உற்சவ மூர்த்தி இளைய நயினாரையும் பின்னுமுள்ள பரிவார விக்கிரஹங்களையும் முசுகுந்தீஸ்வர முடையார் போக்கிலே பூபதனம் பண் ணுவித்துப்போட்டுச் சொர்ன்ன நாயக ரையுஞ் சிறிது சொர்ன விக்கிரகங்களையு மெடுத்துக்கொண்டு நாஞ்சி நாட்டில் கிலுகிலுப்பைக் காடுபோய்ச் சேர்ந் தார்கள்.

அதற்குமேல் திருச்சிராப்பள்ளியில் ....வந்திருந்த பாளையம் மதுரைக் கோட்டையை வந்து கட்டிக்கொண்டு பாண்டியன் கோட்டையையும்பிடித்துக் கோவில் திருமதில் கோபுரம் முதலான திருப்பணிகளனேகமிடித்துப் போட்டார்கள்......அப்பால் எடுபட்டுப் போன திருப்பணிகள் போகக் கபாலி யுடையார் திருமதிலும், கெர்ப்பக்கிரக முதல் ஆறுகால் பீடம் வரைக்கும் பாண்டியர் செய்த திருப்பணியில் இவ் வளவும் நிலைத்தது.

அப்பால்...........வருஷம் 48-க்குத் துலுக்காணமாயிருந்தது. அப்படி யிருக்கையில் கலியுகம் 4472-க்குமேல் சகாப்தம் 1293 (கி. பி. 1371) க்கு மேல் ....கம்பணவுடையார் துலுக்கரை யெடுத்துவிட்டுச் சீமையையும் கட்டிக் கொண்டார்." (மதுரை ஸ்தானீகர் வரலாறு)

கம்பண உடையார் சுவாமி தரிசனம் பண்ணி, அநேக திருவிளை யாடற் கிராமமும் விட்டுக்கொடுத்து அநேக திருவாபரணங் கொடுத்துத் திருவாராதனைக் கட்டளையும் நடப்பித் தார். (மதுரைத்தல வரலாறு)

மதுரை நாயக்க மன்னர் காலம்: மதுரைக் கோயில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்தல்

கம்பண உடையார் கால முதல் மதுரைச்சீமை விஜயநகரப் பேரரசின் ஆட்சியின்கீழ் வந்தது. 1529-ல் விஜய நகரப் பேரரசரின் காரியத்துக்குக் கர்த்

தர்களாக மதுரை நாயக்க மன்னர்கள் ஆட்சி தொடங்கிற்று. இவர்கள் ஆட்சியில்தான் மதுரைக் கோயில் என்றுமில்லாச் சீரும் சிறப்பும் பெற்று இன்றைய நிலையை அடைந்தது. மதுரை நாயக்க மன்னர் காலத்துக் கட்டிடக்கலை விஜயநகரப் பாணியைப் பின் பற்றியது. விஜயநகரச் சிறப்பியல்புகள் உன்னதக் கோபுரங்கள், மண்டபங்கள், மூடிய பிரகாரங்கள், ஆயிரக்கால் மண்டபம், கல்யாண மண்டபம் முதலியன. சுவாமி கோயில் ஒன்பது நிலைப் பெரிய கீழைக்கோபுரம், இரண்டாம் பிரகாரத் திருமதில், அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரத் திருமதில், சன்னிதி மண்டபம் மூன்று நிலைக் கோபுரம், ஆடி வீதி மேற்கு ஒன்பது நிலைக்கோபுரம் முதலியன தவிர மற்றை அனைத்துப் பகுதிகளும் நாயக்க மன்னர் காலத் திருப்பணிகளேயாகும்.

நாயக்க மன்னர் காலத்துக் கல் வெட்டுகள்

மதுரை நாயக்க மன்னர்களின் கல் வெட்டுகள் கீழைக்கோபுர நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் வரையப் பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று குறிப்பிடத்தக்கது. அது விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தது. லக்கசேவைத் திருவிழாவிற்காக விடப் பட்டிருந்த சிசாமந்தம், சிக்காலை, புங்கங்குளம், செங்குளம் ஆகிய கிராமங்களிலிருந்து அரண்மனையார் வரி வசூலித்துத் துன்புறுத்தியதால் ("சில்லரை பண்ணியதால்") இதை எதிர்த்துச் சீபாதந்தாங்கிகளிலொருவனான ஆண்டிமுதலி மகன் சொக்க முதலி என்பவன், கோபுரத்தின் மேலிருந்து தலைகுப்புற விழுந்து உயிர் விட்டான். அதனுல் பழைய உரிமைகள் மீண்டும் வழங்கப்பெற்றன.

கான்சாயபு கம்மந்தான் கோயிலுக்குச் சிறப்புச் செய்தல்

நாயக்க மன்னர் ஆட்சிக்குப் பின் தமிழ்நாடு கருநாடக நவாப் ஆட்சிக்குட்பட்டது. நவாப் முகமதலிக்குக் கும்பனியார் ஏராளமான பணம் கடன் கொடுத்து, அவனை ஆட்டிப்படைத்து வந்தனர். அப்போது கான்சாயபு கம்மந்தானை மதுரைக்குக் கவர்னராக (கும்தாளுக) நியமித்தனர். இவன் மதுரையை யடுத்துக்கிழக்கேயுள்ளபனையூரில் ஒரு ஹிந்து குடும்பத்தில் பிறந்து மதம் மாறினவன்; கும்பனி சிப்பாய் இராணுவத்தில் தலைமைத் தளபதியாக இருந்தவன். மதுரைக்குக் கும்தாளுக வந்ததும் மதுரை மீனுட்சியம்மன் கோயிலுக்குச் சென்று வந்தனை வழிபாடுகள் செய்து சிறப்பித்தான். இச் செய்தியை அவனைப் பற்றிய நாட்டுப் பாடல் (கான் சாயபு சண்டை) கூறுவதாவது:

"நானூறு பொன் கையில் கொடுத்து—அதை
நாழியில் மீனுக்ஷிக்குச் சிறப்பு செயச் சொல்லி
பானுமதி சூடு மீனம்பாள்—பாதம்
பணிந்து சொக்கேசரையும் வலமாக வந்து
கர்த்தாக்கள் வந்திருக்கு மேடை—அந்தக்
கருங்கல்லுச் சவுக்கையிலே ஒயிலாகச் சாய்ந்து"

அவனது மனைவி மாசாவும் மீனுக்ஷியம்மன் கோயிலுக்குச் சென்று வழிபட்டதாக அந்நாட்டுப் பாடல் மேலும் கூறும்.

மதுரை மீனுட்சியம்மையின் இரட்டை மணிமாலே

அ. கி. செல்வக்கணபதி

இரட்டை மணிமாலே என்பது முத்தும் பவளமும் ஆகிய இருவேறு மணிகள் மிடைந்த மாலேபோல, வெண்பாவும் கட்டளேக்கலித்துறையும் அந்தாதியாகஅமையவும் முதலும் ஈறும் மண்டலிக்கவும் இருபது செய்யுள்களால் பாடப்பெறும் பிரபந்தமாகும்.

நூலமைப்பு :

மணிகளிற் சிறந்தவை முத்தும் பவளமும்; வெண்மையும் செம்மையும் கொண்ட இவ்விருமணிகளேயும் கோத்து அணியின், மக்கள் செல்வப்பேற்றுடன் மக்கட் பேற்றையும் பெற்று மகிழ்வர். 1 பசுமை நிறமுடைய மரகதவல்லியாம் மீனுட்சிக்கு வெண்மையும் செம்மையுமான இவ்விரு மணிகளேயும் மாலேயாக்கி அணிந்து, கலேமகளேயும் அலேமகளேயும் ஒருங்கிணேத்து அழகுள் அழகைக் காண்கின்ருர் புலவர். சாத்வீக குணமுடைய முத்தும்,இராசதகுணமுடைய பவளமும் தேர்ந்த அழகே புலவரின் தனி அழகாகும். மணம் பரப்பும் மலர்மாலே சூட்டி மகிழாமல் ஒளிகாட்டும் மணிமாலே சூட்டி மகிழ்வானேன்? மலேமகள் விழைவது மலரா? மணியா? மலர் வாடும் இயல்பிற்று. எனவே வாடா மணியைத் தேர்ந்து தெளிந்தார். பாமணியும், வாடா இயல்பிற்று. பாக்களிற் சிறந்தவை, வெண்பாவும், கட்டளேக் கலித்துறையும் ஆகும். சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதற்கு ஏற்ற பாமணிகள் இவையே. எனவே நம் நற்றமிழ்ப்புலவராம் அருட் செல்வர், இலக்கணவழியில் நூலமைக்க விரும்பினுர். இலக்கண விளக்கப் பாட்டியலும், வெண்பாப் பாட்டியலும் இவர்க்குத் துணே செய்தன.

> "இருபது வெண்பாக் கலித்துறை இயையின்
> வருவது இரட்டை மணிமாலே யாகும்"
> (இலக்.-விள-பாட்-59)
>
> "ஆய்ந்த இரட்டை மணிஇருபான்—
> ஏய்ந்தசீர்
> வெண்பாக் கலித்துறை யாகும்"
> (வெண்பாப் பாட்டியல்-17)

என்பர் இரட்டைமணிமாலேக்கு இலக்கணம். எனவே இது இலக்கணம் செறிந்த இறையியல் நூல் ஆகும்.

மதுரைச் செய்திகள் :

விண்முட்டிய வெள்ளியம்பலமாகிய ஆனந்தமாக் கடலில், மலேமகளின் கருவிழியாம் கயலினங்கள் நின்று உலாவி விளேயாடுகின்றன. எனவே 'அவள் தாஞக (சக்தியாக) நிற்றலால் உலகு தழைக்கிறது; தமிழ் தழைக்கிறது; தமிழ் மதுரை தழைக்

கிறது என்கிருர்' [2] மதுரைத் தலத்தில் அருண்மிகு சொக்கநாதர் இயற்றிய திருவிளையாடற் செய்திகள் அகத்துறைச் செய்திகளோடு கலந்து அமைந்து பொருட்சுவை தருகின்றன [3,4]

விறகு விற்ற திருவிளையாடற் செய்தி, (மதங்கன் அடியார்க்கு) பாண பத்திரருக்கு அடியாராகிய சிவபெருமானுக்குரிய உடம்பை மீனுட்சி இரு கூருக்கினுள், என்ருர். இதில் சொக்கநாதர் பாணபத்திரரின்பொருட்டு விறகு விற்ற செய்தி நினைவூட்டப் பெறுகிறது. மலயத்துவச பாண்டியனின் மகளாக இருந்து ஆட்சி செய்த மீனுட்சி, தனக்குரிய பாண்டி நாட்டைத் தன் காதற் கேள்வனுன சுந்தர பாண்டியனுக்கு ஈந்தாள் என்ற செய்தி சுந்தர பாண்டியராகி அரசு செலுத்திய திருவிளையாடலை நினைந்து கூறியது. தருமிக்குப் பொற்கிழி அளித்த திருவிளையாடற் செய்தியும் கான் மாறியாடிய திருவிளையாடற் செய்தியும்,

... ... "பனவனுக்காப்
பாமாறி யார்க்குனைப்போற் பாரத்
தனமிருந்தாற்
ருமாறி யாடுவரோ தான்"

என்ற பாவில் கூறப்படுகின்றன.

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த திருவிளையாடற் பொருளாக.

"அம்மே சொற்பொருட்கு எவையுண்டு,
குற்றமலைவயுண்டு, நீவிரிருவிர்க்குமே"
—மணிமாலை 18

என்ற பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.

மீனுட்சியின் வடிவம் :

அன்னை மீனுட்சி [5] கொண்டைச் செருக்கும், குறுநகையும், நீண்டு வேல் போன்று மிளிரும்கயற்கண்பிறழ்ச்சியும், முள்முருக்கம்பூப்போன்ற வாயும் கொண்டு காட்சி தந்து புலவரின் கருத்தில் புகுந்தாள் என்பது புலவர் ஓவியம்.

உமையொருபாகர் தோற்றம் :

அர்த்தநாரீசுவரத் திருவுருவத்தைப் பற்றிப் பலவிடங்களிற் குறிப்பிடுகின்ருர். [6] பாணபத்திரருக்கு அடியாராகிய சிவபெருமானுக்குரிய உடம்பை இருகூருக்கினுள்.

[7] ஆகம் குழையப் புல்லி மணங் கொண்ட சிவபெருமானின் வாமங் கொண்டவள்''

[8] பங்கிற்கொண்டிருந்த பரமனின் தெய்வத்தன்மை பொருந்திய தேனை எல்லாம் உண்டு மகிழும் கடம்பவனப் பசுந்தேன் மீனுட்சி (பங்கிற்கொண்டிருந்த ஒரு தெய்வமுண்டு என்றும் பொருள் கொள்ள இடமுண்டு)

மீனுட்சியம்மையின் திருப்பெயர்கள் :

1 அபிடேகவல்லி 2. அம்மை 3. அன்னை 4. ஏழை 5. கடம்பவனத்தாய் 6. கடம்பவனத்தேன் 7. கடம்பவனப் பூவை 8. கடம்பவனப்பொன் 9. கடம்பவனவல்லி 10. கர்ப்பூரவல்லி 11. கள்வி 12. கொடியாள் 13. தெள்ளமுது 14. தேன் 15. பசுங்கொம்பு 16. பச்சை மாணிக்கம் 17. பதுமத்திருவல்லி 18. பொலங்கொம்பு 19. பாவை 20. பூவை 21. மடந்தை 22. மதுரைத்திருநாட்டணி 23. மணி 24. மருந்து 25. வெற்பூரவல்லி 26. விளக்கு

சோமசுந்தரக்கடவுள் திருப்பெயர்கள் :

1. அடியார் 2. ஆனந்தர் 3. கடல் 4. கண்ணுதலார் 5. கார்பூத்தகண்டர்

6. கால்மாறியாடி 7. சொக்கர் 8. சொற்பொருள் 9. கந்தரர் 10. சுந்தரர் 11. மதுரேசர் 12. மணவாளர் 13. புராந்தகர் 14. பொன்மலே 15. பாமதியார் 16. மன்ருடி 17. மகிழ்நர் 18. தே 19. நெடுந்தகை 20. பித்தர் 21. மத்தர்

கோவிலமைப்பு:

[9] முன்னே தொங்கும் வளேந்த கையை ஒத்துப் பின்னே விளங்கும் வாலேயுடையனவாகிய எட்டுக் களிறுகளால் சுமக்கப்பெறும் இந்திர விமானப் பொற்கோவில் என்று மதுரைக்கோவிலமைப்பைப் படம் பிடித்துக் காட்டுகின்ருர்.

அம்மை பிறந்தவீடும் புகுந்தவீடும்:

மீனுட்சி பிறந்த இடம் இமயச் சுனேயில் உள்ள தாமரைமலர். அவள் புகுந்த இடம் அடியார்களின் உள்ளத் தாமரைமலர் மகளிர் பிறந்த இடத்திற்குப் பயன்தாரார். அவர்கள் புகுந்த இடத்திற்கே பயன்பலதருவர், என்ற [11] கலித்தொகைச் செய்தியோடு ஒப்பிட்டு இன்புறலாம்.

அம்பிகை ஆடி அமர்தற்குரிய இடங்கள்:

சொக்கரின் வஞ்சமனத்தைக்கரைக்கின்ற கனகள்வியான அங்கயற்கண்ணி அம்மை ஆடி, ஓடி, அமர்ந்து இன்புறற்குரிய இடங்கள், [11] முழங்கும் வைகையாறு, பொற்ருமரைப்பொய்கை, தண்டமிழ் பிறந்த மலேயான பொதியம், கற்பகச்சோலே நிறைந்த திருவாலவாயான் திருக்கோவில் அடியார்களின் நெஞ்சம் என்பன.

அம்பிகையின் அடியாரிடம் எமனும்வர அஞ்சுவான்

[32] அங்கயற்கண்ணியின் திருக்கோவில் என்நெஞ்சமாக இருக்க அந்தகனுகிய எமனே! அவளே மீறி என்னிடம் வருகிருயே, ஏன்? உன் செயல் தக்கது அன்று உன் உட்கோள் தான் யாது? என்று புலவர் எமனேக் கண்டு விடுக்கும் விஞவால் அம்பாளின் அடியார்களிடம் எமனும் வர அஞ்சுவான். அவர்களுக்கு எமபயமில்லே என்பது தேற்றம்.

வழிபாடும் பயனும்:

சங்க காலத்திலேயே வழிபாடு உண்டு உருவ வழிபாடே உண்டு. தெய்வப்புலவர் திருவள்ளுவரும் உருவ வழிபாட்டை [13]அடி'தாள்' என்று கூறிப் போந்தார். தொல்காப்பியரும் இறைவனுக்குப் [14] படிமம் எடுத்தலேப் புலப்படுத்துகிருர். நான்கு நிலத்துக்கும் நான்கு தெய்வங்களே வகுத்தனர். சங்கத்தமிழர்கள் வழிபாட்டிற்குச் சிறந்த இடமாகக் கோயிலே அமைத்தனர். நம் புலவரும் அம்பிகை காட்சி தந்த உருவத்தை நெஞ்சிலிருத்தி வழிபடுகிருர். 'கடம்பவனத்தாயே! என் நெஞ்சம் உன்னுடைய சிற்றில் அகமாஞல் இம்மனே யிருள்மூடிக்கிடக்கிறது; எனவே இதன்கண் நீ விளக்கு (ஞானம்) இட்டு இருக்கவேண்டும் என்றும், தாயே, உன்னேப் போற்றிப் புகழ நாவுண்டு, நல்ல மனமுண்டு, நற்றமிழுண்டு, நயந்த சிலபாவும் பாவினங்களும் உண்டு, பைந்தாட்பூ உண்டு. ஆஞல் தொடுத்துப் புனேவதற்கு நாரான அன்பு இல்லேயே என்று இரங்கிப் பாடுகிருர்.


மனே இருள் மூடிக்கிடக்கிறது. பகற்பொழுது அகன்று இரவு தொடங்கின், மகளிர்இல்லந்தோறும் விளக்கேற்றுவர். நெல்லும் மலரும் தூவி மடவரல் மகளிர்

மாலை வழிபாடியற்றுவர். இயற்கைப் பேரொளியான ஞாயிறு மறையினும் செயற்கைச் சிற்றொளி வீடெல்லாம் நிறைந்து ஒளியூட்டும். விளக்கொளி புறஇருளை நீக்கும். வழிபாடு அக இருளை நீக்கும். வழிவழி வந்த வழிபாட்டில் ஆழ்ந்தார் நம்புலவர். [15] [16] அப்பர் வழிபட்ட முறையைப் பின்பற்றிய புலவராகக் காட்சிதருகிறார். அன்பெனும் பிடியுள் அம்மையை அகப்படுத்துகிறார். என்னே! புலவரின் அன்புப்பெருக்கு. அன்பின் வழியது உயிர்நிலை மீனாட்சியே புலவர்க்கு உயிர் நிலை. எனவே விளக்கு இட்டு இரு எனவேண்டுகிறார்.

தொகுத்து முடித்தல்:

மதுரை மீனாட்சி காட்சிதந்து பாவலரின் கருத்திலே புகுந்தமையால், கலைமகள் அவர் நாவிலே நடமிட்டாள். பாவிலே புடமிட்டு ஒளிவிடும் மாலையே மதுரை மீனாட்சியம்மையின் இரட்டை மணிமாலை. இம்மணிமாலை முழுதும் அன்பு மணங்கமழும்; அருள் ஒளிவீசும். அன்பே மனத்தகத்தைத் திருத்தும் மருந்து. அருளே உயிர்நலத்தை ஓம்பும் அமிழ்தம். பாவலரின் மணிமாலையில் பரஞ்சோதியாரின் திருவிளையாடல் பல செறிந்து நிறைந்து ஒளிவிட்டு மிளிர் கின்றன. இப்பாமாலையை ஆய்ந்து கண்டவர், இம்மை இன்பம் இதுவென உணர்ந்து, மறுமை இன்பம் எதுவெனத் தெளிந்து, வீட்டின்பம் அதுவேதான் என அறிந்து அம்மையின் அருட் கடலிலே மூழ்கி இன்புறுவர். சிவநெறிக் கருத்துகள் இப்பாவிடை மிடைந்து தித்திக்கின்றன. அறநெறியுடைய அகச் சுவை நலங்கள் துள்ளுகின்றன. அள்ளிக் கொழிக்கும் அருள்நலச் செய்திகளோ ஏராளம். இம்மணிமாலையை ஆய்வுழி ஆய்வுழி அன்பின் அகலத்தை, அருளின் ஆழத்தைப் பொருளின் உயர்ச்சியை, உலகியலின் எல்லையைக் காண்கின்றோம். நினைக்க நினைக்க நீண்டு செல்கின்றன. மணிகளோ இரண்டு, இருப்பனவோ இருபது பாக்கள். ஆனால் அகப்புறச் செய்திகளோ ஆயிரமுண்டு.

இத்தகு அருள்நூலை இயற்றிய பெரியார் யார்? அவர் இறைவியைப் போல் அநாதியாய் உள்ளார். பெயர் இல்லை; ஊரில்லை; என்று நீ அன்று நான், உன்னடிமை அல்லவோ? யாதேனும் அறியாவெறுந் துரும்பனேன்' 'தான்றற் புகழ்தல் தகுதியன்று' என்று எண்ணித் தம்பெயர் சுட்டாது விட்டனரோ? அறியேம்.



புலவர் ஏறே! நீவிர் மீனாட்சி அருள் பெற்ற குமரகுருபரர்' என்று சொல்லு

தலும் சாலும். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கூற்றுலேயே நீவிர் குமரகுருபரரிடமிருந்து வேறுபடுகின்றீர். இருப்பினும் நுமது மணிமாலையைக், குமரகுருபரர் பிரபந்தங்களோடு இணைத்துப் பதிப்பித்திருத்தல் சாலப் பொருந்தும். நும் பாநலத்தை அறிதொறும் எம் அறியாமையையே காண்கின்றேம். நீவிர் கண்ட அம்பிகையின் திருவிளையாடல்தான் எத்துணை! அம்மையின் ஆடலோடு ஊடலும் காட்டி[17] ஆட்டுவிக்கும் அழகே தனி அழகு. இறைவனைப் பித்தனுக்கு[18] அறியாமை என்று எடுத்தோதும் சொல் விற்பனமும், இறைவியைக்[19] கொடியார்க்குள்ள குணம்' என்று குறிப்பிட்டு ஏத்தியும் பழித்தும் கூறும் சொல்நயமும் பொருள்நயமும் எவ்வளவு? நும்மணிமாலையாம் அருட்கடலில் மூழ்கினேம்; சில முத்துகளும், சில பவளங்களுமே கிடைத்தன. ஒளியூட்ட முனைந்தேம். சொற்கள் ஓடி ஒளிகின்றன. அருட்செல்வராகிய நும் புலமைக்கும் பணிந்த சொற்கள் புன்மையேம் எமக்குப் பணிவனவோ! புலவரரசே, நீவிர் எமனையே விரட்டியவரல்லிரோ! நீவிர் தொடுத்த பலர்புகழ் நன்மணிமாலையில் சொல் புதிது. பொருள் புதிது. எனவே அம்மை மீனாட்சி[20] நாணாமல் ஏற்றிருப்பாள். நற்றமிழ் நாவலரே சொற்றமிழில் அம்மையைச் சொக்கவைத்த புலவரேறே! நின்னளந்தறிதல் எமக்கு அரிது.

நீவிர் வாழ்க! வாழ்க நும் பாநலம்!

மணிமாலை அணியும் அருளணிச் செல்வர்காள்! வம்மின்!

எழுமின்! தொழுமின்!! பாடிப் பரவுமின்!!!

---

1. பரஞ்சோதி திருவிளையாடல் — மாணிக்கம் விற்ற 58-81
2. " தழையத் தழைந்த தமிழ்மதுரைக் "—மணிமாலை 6
3. மணிமாலை 2
4. மணிமாலை 4
5. " கொண்டைச் செருக்குங் குறுநகையு நெட்டயிற்கட்
   கெண்டைப் பிறக்கமும் வாய்க் கிஞ்சுகமுங் — கொண்டம்மை
   கற்பூர வல்லி கருத்திற் புக " — மணிமாலை 15
6. " மதம்பரவு முக்கண் மழகளிற்றைப் பெற்றுக்
   கதம்பவனத் தேயிருந்த கள்வி — மதங்கன்
   அடியார்க் குடம்பிருகூ றுக்கினள் " — மணிமாலை 3
7. " ஆகங் குழையப் புல்லி மணங்கொண்டவ
   ரொரு வாமங் கொண்டாய் ' — மணிமாலை 4
8. " பங்கிற் கொண்டிருந்தோர்
   தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேன் ' — மணிமாலை 13
9. " வன் நடக்கைக்குநேர்
   பொருவால வாயெட்டுப் போர்க்களி(று)
   ஏந்துபொற் கோயில் " — மணிமாலை 12.
10. " பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
    மலையுளே பிறப்பினும், மலைக்குஅவைதாம் என்செய்யும் ?
    சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
    நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?

" ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங்கு அனையளே பாலைக்கலி—12-24,

11. " இரைக்கின்ற நதிவைகை .... என்நெஞ்சமுமே மணிமாலை"—10

12. " நெஞ்சே.................. கருத்து மணிமாலை"—11

13. " கற்றத லானுய .... நற்றாள் தொழா அரெனின்"
மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார் —திருக்குறள் 2-3

14. " மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய "— தொல்-அகத்-30

15. நறுமா மலர்கொய்து நீரில்மூழ்கி
நாடோறும் நின்கழலே ஏத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன் – (அப்பர் தேவாரம் திருவா-53


16. " திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில் "
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ (அப்பர் தேவாராம்—தனித்திருத்—6)

17. " நெடுந்தகையை ஆட்டுவிப்பாள் "—மணிமாலை-7

18. " மதுரேசரவர் இது மத்தப்பித்து மன்று ஏழைமை "— மணி மாலை—8.

19. " மதங்கன் அடியார்க்கு உடம்பு இருகூறுக்கினள் "—மணி மாலை–3

20. " சுவையெனக் கொண்டு சூடுதி யான்மற்றென் சொற்றமிழ்க்கோர் "
நவையுண் டெனவற நாணுதி போலும்—மணி மாலை-18.



பாண்டி நாடு வந்த பரசமய கோளரி

க. மணி

சற்றேறத்தாழ ஆயிரத்து இரு நூறு ஆண்டுகட்கு முன்னர், இறையின் இன்னருள் இலங்கும் எழில்மாடக் கூடலில், அரன் சமயம் ஒடுங்கி, அமண சமயம் ஓங்கலாயிற்று. 'தலைவன் எவ்வழித் தாமும் அவ்வழி' என்று எண்ணிய மாந்தர், வேந்தன் வேற்று மதம் போந்ததும், புயலாய்ப் பூரித்து நின்ற அவ்வயலார் சமயத்திலே சிக்க லாயினர். மாறவர்மன் சுந்தரபாண்டிய மன்னவனின் மாதேவி மங்கையர்க் கரசியும், அமைச்சர் குலச்சிறையாருமே மதிநலம் மாறாது மதிசூடும் மாணிக்கத் தின் வழிபாடுடையராய் வாழ்ந்தனர்.

அது போழ்தில், சீர்காழியில் தோன்றிய செந்தமிழ்ச் சம்பந்தர், அவநெறிகளை அழித்துச் சிவநெறியைச் சீராக்க வந்த பேராளராய்த் தோற்றவே, அவரைப் பசுந்தமிழ்ப் பாவையாம் பாண்டிமாதேவி, அருந் தமிழ் அமைச்சரின் உதவியோடு பாண்டி நாடென்னும் பழம்பெரும் நாட்டுக்கு அழைத்தனள். பரசமய கோளரியாம் பைந்தமிழ் வல்ல ஞான சம்பந்தர், அழைப்பையேற்று மணவாளக் கோலத்தில் மகேசர் வீற் றிருக்கும் மதுரைப் பெருநகர்க்கு அருள்வருகை அளித்தனர். ஆற்றலடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப் போற்றிப் புகலிநிலாவும் அந்தப் பூசுரர் ஞானசம்பந்தர், நோயுற்றிருந்த மன்னவனுக்கு இன் அருளீந்து, பதிகம் பாடித், திருநீறு சூட்டிச் சுகமாக்கினர். மன்னவன் மதம் மாறினன்; அனலாலும் புனலாலும் வாதிட்ட சமணரும் மதம் அடங்கினர். பின்னரே வேயுறு தோளி பங்கன் விளங்குறு மதுரையில் வேதநெறி தழைத்தோங்கியது; மிகு சைவத்துறை விளங்கியது; பூத பரம்பரை பொலிந்தது. ஆதலின் மாதவர், சீதவளவயற்புகலித் திருஞானசம்பந்தரின் பாதமலர், தலைக்கொண்டு திருத்தொண்டு பரவினர்.

ஆதீனத் தோற்றம் :

இவ்வாறு வாதில் வல்ல வண்டமிழ் ஞானசம்பந்தர், மதுரை வாழ்ந்திட வந்தபோது, எழுந்தருளிய மடத்தில் இருந்த வாகீச முனிவருக்குத் தீட்சை முதலாம் உபதேசங்கள் செய்து சீடராக்கி, அரசனால் அளிக்கப்பட்ட பூமி முதலாம் பொருள்களைக்கொண்டு சிவநெறியைச் சிறந்தோங்கச் செய்யச், செல்லும் வகையெல்லாம் அறவினைகள் ஆற்ற அருளாணையிட்டுச் சோழநாடு ஏகினர்.

ஆதீன முதல்வராய், அருளாட்சியில் அமர்த்தப்பட்ட அந்த வாகீச முனிவர் என்னும் சிவானந்த யோகீந்திரச் சிவஞான சம்பந்த தேசிகர், தம் குருதேவ சம்பந்த சுவாமிகளுடைய திருவுருவைப் பிரதிட்டை செய்து, சம்பந்த சுவாமிகளால் தமக்கு ஆன் மார்த்தமாய் அளிக்கப்பட்ட அதிகார உடையவர் என்ற சிவலிங்கத்தையும், மீனாட்சியம்மை விக்கிரகத்தையும் வைத்து, நித்திய நைமித்திக பூசனை களைப் புரிந்தும், திருஞான சம்பந்தர் அருட்பெருஞ்சோதியில் கலந்த வைகாசி மாதம் மூல நட்சத்திரத்தில் குருபூசையை நடத்தியும் பிரதம சீடராய் வீற்றிருந்தார்.

அன்றுமுதல் இன்று வரை :

தமக்கெனத் தனிக் குடும்பம் அற்றுத், தரணியே தமக்கொரு குடும்பம் ஆகி, ஞாலமெல்லாம் ஆலவாயிலான் புகழேமிக, அருள்மறையும் அறநெறியும் பரப்பிப், பரனும் பரையுமே தமக்குப் பரம்பரையாய்க் கொண்டு, சைவ சமய நிலைநிறுத்தம் செய்யும் அந்த ஆதீன குருபரம்பரையினர்வழி, இதுவரை, தொண்ணூறுபேர் அருட்பீடம் அமர்ந்து. தற்போது இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்றுமவரின் அருள் ஆட்சி நடைபெறுகிறது.

மடாலயத் தலுவலகத்துப் பழைய கைப்பிரதிப் புத்தகத்தில் திருஞான சம்பந்தரால் சீடராய் ஆட்கொள்ளப் பட்டு. அருளாட்சியில் அமர்த்தப்பட்ட முதல் குருமகாசந்நிதானமுதல், இன்றைய சந்நிதானத்திற்கு முன்பு வரை, அஃதாவது, இருநூற்றுத் தொண்ணூறு குருமகா சந்நிதானங் களின் திருப்பெயர்கள் எழுதப்பட்டு உள்ளன.

இன்றைய இன்னருளாட்சி :

திருஞானசம்பந்த சுவாமிகள் வழி வழிவந்த மதுரை ஆதீனத்தின் 291வது பட்டமாய்த் திருவருள் அரசணை அமர்ந்து, அருட்செங்கோலராய்த் திருநோக்கம் புரிகின்றவர்கள், திருவருள் தவயோக திருவார்திரு. சோமசுந்தர திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

"பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச்
சாக்கா டென்னும்
ஆறுமுன் கருவுட் பட்ட தவ்விதி
யநுப வத்தால்
ஏறிடு முன்பு செய்த கருமமிங்
கிவற்றிற் கேது
தேறுநீ யினிச்செய் கன்ம மேலுடற்
சேரு மென்றே"



என்ற சிவஞானசித்தி பாடல், 'தன்வினை களுக்கொப்பத் தலைவனால் ஒரு தீர்ப்பிடப்பட்டே மனிதன் பிறக்கிறான்' என்பதை எடுத்தியம்புகிறது.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" என்றும்,
"செய்வினையும் செய்வானும் அதன்பயனும்
சேர்ப்பானும்" என்றும்,
"ஊழ்வினை உறுத்து வந் தூட்டும்" என்றும்
"மேலைத் தவத்தளவே யாகுமாம் —
தான் பெற்ற செல்வம்" என்றும்
"பதவி பூர்வ புண்யானும்" என்றும்

சொல்வதற்கொப்ப ஒருவர் தம் பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு முதலாம் வாழ்நிலைகள் அனைத்தும் தத்தம் முன்வினையொத்து முதல்வனால் முடிவு தரப்பட்டே பிறக்கின்றனர்.

இப்பேருண்மையைச் சோதிட சாத்திரங்களாம் நாடி ஏடுகள் நவிலும் திறத்தால் அறியலாம். இதற்குத் தற்போதைய மதுரை ஆதீன மடாலய சுவாமிகளின் திருவாழ்வே பெருஞ் சான்றாகும். ஆம்! அவர்கள், 1953-ல் மதுரை ஆதீன இளவரசு நிலை எய்தி, 1957—ஜனவரி 10-ஆம் நாள் 291-ஆம் குருமகா சந்நிதானமாய் ஆன அத் துறவுக் கோலத்தைப் பற்றிய செய்தி அவர்கள் தம் முன் வாழ்வு நிலைத் (பூர்வாசிரமம்) தம்பி தமக்குப் பார்த்த 'அநாகத வேத' மென்னும் சோதிட ஏட்டில் 1949லேயே வந்தது!

இன்றைய பரசமய கோளரியாய ஆதீன கர்த்தர்

திருநாமம் ஐந்தெழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பிறந்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே'

என்பதற்கொப்பக் கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை மங்காமல் பூசி, ஐந்தெழுத்தோதி, அருட்பா பாடி, ஆலயம் வலம் வரும் சாலவும் சிறந்த அச்செயல்களைக் கடைப்பிடித்தும், சைவ நூற்பாடம் போதித்தும், உரை நிகழ்ச்சிகள் நடத்தியும், வாரம் முழுதும் அன்னியர்களுக்கு வழிநன்றே காட்டி இவ்வையகம் இன்பமுற வாழும் சுவாமிகள், இறை சொன் மறை மறுத்துச், சிவக்கேண்மையில் அவக்கோட்டை விளைத்து, அயல் மதத்தாரை வாதில் வென்று சைவச்சீர்மை நிலைநாட்டிய திருஞானசம்பந்தர் வழி வந்த தாமும், இறையிலிக் கொள்கையாளர்களின் கூற்றுகளுக்கு ஏற்ற போதில் ஏற்ற வண்ணம், இணையற்ற பாங்கில் எதிர் மறுப்புகள் விடுத்தும், இறையின் தன்மை எடுத்தோதித் திருத்தியும், பரசமயத்தார் உணரும்படி பல ஆய்வு நூல்கள் எழுதியும் இந்து மதக் கொள்கைகளையே ஏசுநாதரும் பைபிளும் உரைக்கின்றதாக நிலைநாட்டி அயல்மதம் போந்த ஆயிரமாயிரம் நண்பர்களை மீட்டும் சைவத்திற்கே கொணர்வதோடு பல அயல்நாட்டாரையும் சிவநெறிச் செம்மையைச் சிறந்தவாறு எடுத்தோதும் திறத்தால் சைவஞ் சாரச் செய்கின்றனர்.

மடாலயத்து ஆச்சாரியர் நியமனமும் ஆராதனை முறையும்:

சைவவேளாளர், கார்காத்த வேளாளர், தொண்டை மண்டல முதன்மையார் முதலாம் சைவகுலத்திலுள்ள திருஞான சம்பந்த சுவாமிகளாதீனத்துச் சீடர்களில், பக்குவமுடையார்களுக்கு, விசேட, நிர்வாண, சமய

தீட்சைகள் தந்து ஆகம முறைப்படி ஆச்சாரிய அபிடேகமும் செய்து, ஆதீன கர்த்தராய் நியமிப்பர். அவர் சின்னப் பண்டாரசந்நிதி என்று அழைக்கப் படுவார். பெரியபண்டாரசந்நிதி பரிபூர்ணமடைந்தவுடன், சின்னப் பண்டாரசந்நிதி பெரியபண்டாரசந்நிதி நிலையை அடைந்து, அனைத்து நிர்வாகங் களையும் வகிப்பது, திருஞானசம்பந்தர் காலமுதல் வழக்கமாய் நடந்து வருகின்றது.

பக்குவப்பட்ட சீடர்களுக்குச் சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை முதலாம் மூன்று தீட்சைகள் செய்தாலும், ஒருவருக்குத் தவிர மற்றவர்களுக்கு ஆச்சாரியாபிடேகம் மட்டும் செய்து வைப்பதில்லை. சைவ ரல்லாத சீடர்களுக்குப் பரிச தீட்சை செய்வர். இம்மடாலயத்தில் தீட்சை களும், ஆராதனை முறைகளும் காமிகாகமப்படிக்கும், சோம சம்பு பத்ததி படிக்கும் நடைபெற்று வருகின்றன.

மதுரை மீனாட்சி

(ஜயஸ்ரீ)

இராகம் : சக்கரவாகம்   தாளம் : ஆதி

பல்லவி

மீனாட்சி—மதுர—மீனாட்சி
மின்னும் வைரமுடி (மீனாட்சி)

அனுபல்லவி

வானாட்சி தனை விடுத்து
மதுரைப் பதி புகுந்த (மீனாட்சி)

சரணம்

நீயே எனக்கு வேண்டும்
நெஞ்சில் நிலைக்க வேண்டும்
தாயே எனை அணைத்துத்
தாங்கும் மனோன்மணியே (மீனாட்சி)

ஆடும் அம்பல நாதன்
ஆடும் வல்லமை நீயே
நாடும் பரமா னந்த
ஞானச் சுடரும் நீயே (மீனாட்சி)


கௌத்துபம்

பி. ஆர். பி. ரங்கன், எம். ஏ.

பூவுலகில் தோன்றிய நாடுகள் ஒவ்வொன்றும் தனக்கென்று தனிச் சிறப்புடைய கலைகளைக் கொண்டிருப்பதை நாம் காணலாம். அதுபோலவே நம் பாரத நாடும். அதிலும் தமிழ்நாடு. தமிழ்நாடு பண்பாட்டையும் கலாச் சாரங்களையும் அடிப்படையாகக் கொண்ட சிறந்த கலைகளை உடைத்தாகித் திகழ்ந்துவருவதை நாம் இன்றும் காண்கிறோம். உலகத்திலுள்ள எல்லாக் கலைகளும் பொதுவாகத் தமக்கென்றுஒருஇலட்சியமும், இலட்சணமும் கொண்டுள்ளன. அந்த இலட்சியமும், இலட்சணமும் அந்தந்த நாட்டின் கலாச் சாரத்தினையும் பண்பாட்டினையும் பொறுத்தனவாயிருக்கும். அங்ஙன மாயின் சிறப்பாகத் தமிழ்நாட்டின் கலைகளின் இலட்சியம்தான் என்ன?

ஆண்டவனை அடைவதற்குக் கருவி

பொதுவாகக் கலைகள் யாவும் கலைகளுக்காகவே ஏற்பட்டன என்று ஒரு கொள்கை உண்டு. இந்தக் கொள்கை ஓரளவில் மேல்நாட்டின் கலைகளுக்குப் பொருத்தமாயிருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டின் கலைகளைப்பொறுத்த மட்டில் அவை வெறும் கலைகளுக்காக மட்டுமல்லாமல் அவற்றினும் மேலான ஒரு இலட்சியத்தைக் கொண்டவை யெனின் மிகையாகாது. அஃதாவது, தமிழ்நாட்டுக் கலைகள் யாவும் ஆண்டவனைக் காணுவதற்கோ, அடைவதற்கோ உதவக்கூடிய கருவி என்னும் தத்துவம் நாம் தொன்றுதொட்டு நம் வழிபாட்டில் கண்டறிந்து வரும்



உண்மை. எனவே நம் நாட்டுக் கலைகள் யாவும், காணாத ஒன்றைக் கண்டறியவும், கேளாத ஒன்றைக் கேட்கவும், உணர முடியாததொன்றை உணரவும் செய்ய உதவுகின்றன என்றால் அவை தெய்வீகக் கலைகள் எனத் தக்கவை. இக்கலைகள்யாவும் தமக்குள் எதனையோ பொதிந்து, காணமுடியாத ஒன்றினை,

வெளிப்படையாகக் காட்டும் பிரதிபிம்ப மேயாகும்.

நம் கலை, இலக்கியம், இசை, நாடகம் எதுவாயினும் வேதங்களிலும், சாத்திரங்களிலும், புராணங்களிலும் கூறப்படும் கடவுளையும், கடவுள் தன்மைகளையும் எளிதாக நாம் உணரப் படம்பிடித்துக் காட்டும் கருவிகள் ஆவதை நாம் இன்றும் காணலாம். எனவே, நம் கலைகள் யாவும், ஆண்டவனுக்கே முதலில் அர்ப்பணம் செய்யப் பட்டுப் பிறகு அவற்றை நாம் அடையும் பொழுது அதே ஆண்டவனை இக்கலை



களின் வழியாகவே நாம் காணவோ, அடையவோ கூடும், என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இவை கோயிலொழுகுக்கு இன்றியமையாதனவாய் வழி வழி வருகின்றன. ஆகச் சிற்பம், சித்திரம், இசை, பரதம் ஆகிய நான்கு கலைகளும் திருக்கோயில்களில் ஆண்டவனுக்கேற்ற இராஜோப்ப சாரத்தினுள் அடங்கி வருவதை நாம் இன்றும் காணலாம். கோயிலொழுகு விதிப்படி இறுதியில் கற்பூர ஆரத்திற்கு முன் அர்ச்சகர் "அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயக' சாமவேத, அவதாரிய கீதம்," என்று கூறியவுடன் சாம வேதத்துடன் தொடங்கிக் கலைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவதரிக்கப்பட்டு, இறுதியில் நிருத்தம், என்று அர்ச்சகர் கூறத் தேவதாசி தமிழ்நாட்டிற்கே சிறப்பான பரதநாட்டியம் ஆடுவாள். ஆண்டவனை நாயகனாகக் கருதி நாயக நாயகி பக்திமுறை தழுவி அவள் ஆட, அங்குக் கூடியிருக்கும் அடியார்கள் யாவரும் ஆண்டவனை அவ்வண்ணமே ஆனந்தக் கண்ணீர்விட்டு வழிபடுவார்கள். எனவே, இந்த நாட்டியக்கலை பொதுவாகப் பரதம் எனப்படும் பரத நாட்டியம், தமிழ்நாட்டிற்கே உரிய (தென்னாட்டுக் கோயில்களில் வளர்க்கப் பட்டுவரும் கலைகளுள்) சிறந்ததொரு நுட்பக் கலையாகும். இப்பரதம் வெறும் கலைக்குமட்டும் அல்லாது ஆண்டவனை நாயக நாயகி பக்தி ஒழுகுமுறைப்படி வழிபடுவதற்குரிய ஒரு சாதனை என்றே நாம் உணரவேண்டும்.

கௌத்துபம்

இந்த நாட்டிய கீதத்தின் ஒரு வகைதான் கௌத்துபம். இதனைக் கவுத்தம் என்றும் வழங்குவர். இது சொற்கட்டுகளுடன் தொடங்கிப் பின்னர்ச் சொற்கட்டும் சாகித்தியமும் விரவி வரும் ஒருவகையான பக்திப் பாடல் என்றும், எந்த ஒரு குறிப்பட்ட இராகத்தில்பாடாமற் போனாலும், தார

ஷட்ஜ சுரம் மிகுதியாக உள்ள விறுவிறுப்பான இசையில் பாடப்படுவது என்றும், சொற்கட்டுகள் வரினும் இது வாத்திய பிரபந்தமாகாது என்றும், இறுதியாக இது ஆடுவதற்கு அன்றிப் பாடுவதற்காகவும் ஏற்பட்ட ஒருநுட்பக் கலை என்றும் சுருக்கமாகச் சொல்லி விளங்க வைக்கிறது கலைக்களஞ்சியம். இங்கு நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்தக் கௌத்துபம் பரத நாட்டியத்தின் ஒரு பகுதியாயிருந்து ஆண்டவனை வழிபடுவதற்கேற்ற ஒரு நுட்பக் கலையாயிருந்தும், அதனைப் பரதத்தினின்றும் பிரித்து ஆண்டவனை வழிபடுவதற்குரிய தனி நுட்பக் கலையாகப் பரதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததுபோல் இதற்கும் கொடுத்திருப்பதை நாம் ஆழ்ந்து உணரும் பொழுது, நம் நாட்டில் நுட்பக் கலைகளை மனமாரப் போற்றுமலிருக்க முடியாது என்பது திண்ணம். எனவே, இஃது ஆடுவதற்கு அன்று என்பதும் தெளிவாகிறது. மேலும் இந்தக் கவுத்தம் என்ற சொல்லை வடமொழி இலக்கியத்தைத் தழுவிய பகுதியாகவும், விகுதியாகவும் பிரித்தோமானல் கவ்—உத்தம் எனவரும். கவ் என்பதற்குச் சப்தமென்றும், உத்தம் என்ற சொல்லிற்குச் சொல்லப்படுவது என்றும் பொருள் கொளல் வேண்டும். ஆகையினுல் கவ்—உத்தம்—கவுத்தம் என்பதற்குச் சப்தத்தைச் சொல்வது என்ற பொருள் தெளிவாகிறது. இங்கு நாம் இதற்கு மாறுபட்ட பொருளையும் கவனிக்க வேண்டும். கவுத்துவம் என்பதற்கு வேஷம் என்று அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது Guise and disguise என்றும் காணப்படுவதால் இதற்கு வேஷம் அல்லது கபடவேஷம் என்று பொருள் கொளல் வேண்டும், எனவே கவுத்துவம் என்பதற்கு இங்ஙனம் பொருள் கொள்வோமெனில் வேஷம் போட்டுக்கொண்டு ஆடுவது எனக் கொளல்வேண்டும். வேஷம் போட்டுக்கொள்வது ஆடுதற்கேயன்றிப்



பாடுவதற்கன்று என்று கொள்வோமெனில் வேஷம்போடுவதால் இக்கலை ஆடுதற்குரியது எனக் கொள்வது முறையாகும். ஆயின் கலைக்களஞ்சியத்தில் இக்கலை பாடுவதற்கேயன்றி ஆடுவதற்கன்று என்று தெளிவாகக் கூறியிருப்பதை ஆராயுங்கால், ஒருக்கால் இக்கலை வேஷத்துடன் பாடுவதற்குரியது என்று பொருள் கொள்ள வாய்ப்பு உள்ளது என்பதை நாம் அறியலாம். இப்படி, இந்த நுட்பக்கலை ஆடுவதற்கா? பாடுவதற்கா? உரியது என்று அதன் இலக்கணங்களை ஆராய்வோமெனின் அதன் முடிவை இப்பொழுது காண்பதரிது. இப்படி இதன் இலக்கணம் ஒருபுறமிருக்க, இனி இதன் இலட்சியத்தைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

கலையின் இலட்சியம் :

இந்த நுட்பக்கலை கோயில்களில் வளர்ந்து வந்ததாக முன்பு கண்டோம். எனவே, இஃது ஆண்டவனைப் பற்றியோ அவனது குணாதிசயங்களைப் பற்றியோதான் இருக்கும். இது சப்தத்துடன் சாகித்தியமும் அனைத்தும் ஆண்டவனைப் பற்றியே இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, சாகித்தியத்தின் பொருள் அதனால் ஏற்படும் பக்திஉணர்ச்சியில் நாம் வசப்படுகிறோம். அது தான் இக்கலையின் இலட்சியம்.

இந்த நுட்பக்கலை சாகித்தியத்தின் உதவியின்றே சப்தத்தினாலாயே அந்தப் பக்தி உணர்ச்சியை உண்டாக்கி, நம்மை அதன் இலட்சியமாகிய பக்தியில் மூழ்கு விக்கிறது என்றால் இந்தக் கலையின்



பெருமைதான் எவ்வளவு பெரியது! இங்ஙனம் சப்தம் பாடப்படுகிறது என்றாலும், இதற்கு யாதொரு இராகமும் கிடையாது எனின் இது வாயினால் சொல்லப்படுவதில் பாடுவது எனக்கொளல் வேண்டுமேயன்றி இராகத்துடன் பாடுவதாய்க் கொள்ளக் கூடாது. எனவே, பரதம் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருப்பதுபோல அதன் ஒரு பகுதியாகிய இந்தச் சப்தமும் அஃதாவது நட்டு வாங்கச் சொற்கட்டும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுத் தனிச் சிறப்புப் பெற்று உள்ளது, என்பதனை நாம் நன்கு அறியவேண்டும்.

சிவாலயக் கலை :

இந்தக் கௌத்துபங்கள் சிவாலயங்களில்தான் பாடப்படுகின்றன. வைஷ்ணவக் கோயிலொழுகு ஆகமவிதிகளில் கௌத்துபம் இடம்பெறவில்லை. அதனால் இவை அத்தலங்களில் பாடப் படுவதில்லை. இக் கௌத்துபங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவன்பேரில் அவ்வாண்டவனின் குணாதிசயங்களை வர்ணித்தும், துதி செய்தும் இயற்றப்பட்டிருப்பவை.

அதுபோது அத்திருக்கோயில் களிலேயே எழுந்திருளியிருக்கும் ஆண்டவனுக்கேற்பச் சந்நிதியில் கௌத்துபங்கள் பாடப்படுகின்றன. அப்படி விநாயகர் கௌத்துபம், சுப்பிரமணியர் கௌத்துபம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கௌத்துபம் எனப் பல கௌத்துபங்கள் அந்தந்த ஆண்டவனின் சந்நிதியில் பாடப்படும். இறைவனும் இறைவியும் திருவிழாக் காலங்களில் திருவீதி உலா வரும் பொழுது, ஒவ்வொரு திக்கிற்கும், அதிபதியாக உள்ள தேவதைகளுக்கு முன், வேதபுராண இதிகாசங்களின் கருத்துகளை மையமாகக்கொண்டு நாட்டுவாங்கச் சொற்கட்டுடன்பாடுவது மற்றொருவகை இந்த இரண்டாம் வகைக் கௌத்துபம்தான் நவசந்திக் கௌத்துபம் எனப்படும். இந்த நவசந்திக் கௌத்துபங்களில் முதலில்

பிரமசந்திக் கௌத்துபம் பாடப்படும். அதன்பின் இந்திரசந்தி, அக்கினிசந்தி, இயமசந்தி, நிருதிசந்தி, வருணசந்தி, வாயுசந்தி, குபேரசந்தி, இறுதியாக ஈசானசந்தி முதலிய எட்டுத் திக்கிற்கும் உள்ள அதிபதிகளுக்குரிய கௌத்துபங்கள் முறையாகப் பாடப்படுகின்றன. இவைகளின் சிறப்பு என்னவென்றால் ஒவ்வொரு திக்கிற்கும் தனித்தனி இராகம், தாளம், வாத்தியம், நிருத்தம் இவைகளோடு கூடிய உபசாரங்களாகக் கௌத்துபங்கள் பாடப்படும். பிரம்மாவிற்கேற்ற கௌத்துபத்தின் நட்டுவாங்கம் யாவும் பிரம்மாவின் உருவத்தைக் கற்பிக்கின்றன. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவிற்கு ஏற்ற வாத்தியம் சச்சத்புடம். யாழ், குழல், மிருதங்கம், சங்கு, படகம் முதலிய கருவிகள் எல்லாம் சேர்ந்தது சச்சத்புட வாத்தியமாகும். இந்த வாத்தியம் மத்யாமாவதியில் 'சரிமாபநிஸா'



என ஒலிக்கும். இங்குக் கமலநிருத்தம் இடம் பெறுகிறது. இந்த நிருத்தம் மேகராகப் பண்ணிலே — பிரம்ம தாளத்திலே அமைந்திருக்கும். இப்படியாக முதலில் பிரம்மசந்தி பாடப்பட்டுப் பின் மற்றைத் திக்குகளுக்குரிய கௌத்துபங்களை முறையாகப் பாடுவது வழக்கம்.

வானம்பாடிக் கௌத்துபம்:

முன்னர்க் குறிப்பிட்டவை தவிர மற்றொரு கௌத்துபமுமுண்டு. அஃதாவது பரதகலைகளில் சிறந்த ஒரு வித்துவான் இயற்கையாகத் தாம் கண்டதை அப்படியே கௌத்துபமாகப் பாடி, அந்த நட்டுவாங்கச்சொற்கட்டின் மூலமாகவே அவர் கண்டதை நம்மையும் உணரச்செய்கிறார். அதுதான் வானம் பாடிக் கௌத்துபம்.

பரத வித்துவான் ஒருவர் காலை வேளையில் மருங்குள்ள காட்டின் வழியே செல்லும்போது வானத்தை நோக்குகிறார். அங்கு ஒரு வானம்பாடிப் பறவை மகிழ்ச்சியோடு பாடிப் பறந்து கொண்டிருக்கின்றது. வேடனொருவன் பறக்கும் வானம்பாடியை எய்வதற்கு வீரநடை போட்டு நடந்து வருகிறான். அதன்மேல் குறிவைத்து வில்லை வளைத்து அம்பையும் எய்கிறான். அம்பு, பறவையின் தலையில் பட்டுவிடுகிறது. அடிபட்ட பறவையும் நிலைகலங்கித் தவித்து, மயங்கிக் 'கிறு கிறு' என்று சுற்றிக்கொண்டே உயிர்த்துடிப்புக் குறைந்துவரத் தரையில் மயங்கிவிழுகிறது. வேடன் தனக்கு வேட்டை கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் கம்பீர நடைபோட்டு அதனை எடுக்க வருகிறான். அதற்குள் மயங்கிய நிலையிலிருந்த பறவையும் சிறிது தெளிந்து தன்னைச் சுதாரித்துக்கொண்டு சிறகினை உதறிக் கொண்டு விருட்டென்று பறந்து விடுகிறது. இதனைக் கண்ணுற்ற

பர்தவித்துவானுக்குக் கற்பனை சிறகடித்துப்பறக்கிறது. நட்டுவாங்கச் சொற்களைக்கொண்டே இந்நிகழ்ச்சியைக் கௌத்துபமாக உருவாக்கிச் சித்தரித்துள்ளார் அவர்.

பறவை வலசாரி இடசாரியாக உத்ஸாகமாகப் பறப்பதை,

"ஜெம்ஜெம் தாரி" என்ற ஒலியிலும்,

ஒரு சமயம் மகிழ்ச்சியில், குடுகுடு என்று வேகமாகப் பறப்பதை,

"ஜெனகுடு ஜெனகுடு" என்ற ஓசையிலும்,

ஜே கோஷத்துடன் சஞ்சரிப்பதை "ஜெம்தாரிக்கும் ஜே" என்றும் கூறுகிறார்.

வானவீதியில் "ஜெயம் நமதே" என்று மிக்க அமைதியாகவும் மகிழ்வுடனும் சஞ்சரிக்கின்றதாம். அதனை "ஜே. ஜே. ஜெம்தாரிக்கும் ஜே" என்ற ஒலியிலும்.

ஜகத்தில் தனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்ற செருக்குடன் வான முகட்டில் பறந்து கொண்டிருப்பதை "ஜெகனம்கிட தக தொர்ரம் ஜே" என்றும் ஓசைநயம் காட்டியுள்ளார். அடுத்து.

வேடன் நிலம் அதிர வீரநடை போட்டு வருவதைத் "துக்கு துக்கு ஜேகிட்ட" என்ற ஒலியிலும், பறவை வானத்தில் பறப்பதைக் கண்டதும் ஹூம்காரப் பெருமிதத்துடன் ஜெயம் கிடைக்கப் போகிறதென்று செயல்படத் துவங்குவதைத், "தொம் தாரிக்கும் ஜேக்கிட்ட" என்ற ஒலியிலும் குறிப்பிடுகிறார். வில்லில் நாண் ஏற்றுவதற்கு அதனை வளைக்கும் போது ஏற்படும் சப்தத்தினை "டிகுடிகு டிட்டேகு டிகுடிகுடிட்டேகு" என்றும், வில்லிலிருந்து விடுபட்ட அம்பு காற்றைக் கிழித்துக் கடுவேகமுடன் செல்வதைத்,"தர்ரேகு கிர்ரேகு சிர்ரேகு தர்ரேகு" என்றும் கூறிப் பாடுகிறார். அடுத்து, அம்பு வானம்பாடியின் தலையில் அடிபடுகிறது. நாமும் தலையில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அடுபடும் போது 'கிண்' என்று பட்டுவிட்டதாகக் கூறுவது வழக்கமல்லவா? அதனையே இங்குப் பறவையின் தலையில் அம்பின் அடிபட்டதற்கு இணையாகக் கூறுகையில் 'ஜகஜக்' என்று நடுங்கிற்று என்கிறார். இந்த இரு நடப்பையும் 'கிண்ணக ஜகஜகதாம்' என்ற ஒலியில் வடித்துள்ளார்.



அடிபட்ட நடுக்கத்திற்குப் பின் தள்ளாடிக் களைப்படைவதைத் 'தக்குந்தாதி தக்குத்தக்குந்தாதி' என்றும், அதனினின்று மயங்கி ஒவ்வொரு முறையும் சிறகை வீசிக் கிறுகிறுத்து மயங்கும் நிலையைத், "தாகிரி கிண்ணம் தாகிரி கிண்ணம்" என்ற

ஒலியிலும், 'ஒருமுறை சிறகை வீச முடியாத நிலையில் கிறுகிறு என்று சுற்றி மயக்க முறுவதைக் 'கிரிகிரிகிண்ணம் கிரிகிரிகிண்ணம்' என்ற ஒலியிலும், கிறுகிறு என்று சுற்றுவதற்கும் இயலாத நிலையில் மயங்கித் தரையில் விழுவதைக், 'கிண்ணம் கிண்ணம்' என்ற ஒலியின் ஒடுக்கத்திலும் கூறியுள்ளார். பறவை கீழே விழுந்தமைகண்ட வேடன் வெற்றி கிட்டிவிட்டதென்ற மிடுக்குடன் 'தஜ்ஜெணு தஜ்ஜெணு' என்று நடை போட்டு வருகிறான். அப்போது அம்பில் அடிபட்ட மயக்கத்தில் இருந்து ஒருவாறு சமாளித்துக் கொண்ட



பறவை 'துத்துகுதா துகுகுதுதா' என்று சிறகைச் சிலிர்த்து உதறிக் கொண்டு, 'தோதிக் திகிதிக் துகுதுகுதா' என்று வானில் பறந்து சென்று விட்டது.

இதன் சிறப்பு என்னவென்றால் ஒரு கௌத்துபத்தில் வரும் சொற் கட்டுகள் மற்றொன்றில் வருவதில்லை. நமக்கு இதுவரையில் 21-கௌத்து பங்களே கிட்டியுள்ளன. இவை எல்லாம் யாரால் எப்பொழுது உண்டாக்கப்பட்டன என்று தெரியவில்லை. இந்தக் கௌத்துபங்கள் அனைத்தும் தமிழ் நாட்டிலுள்ள எல்லா இசை வல்லுநர்களுக்கும் பாடமில்லை. இந்தக் கௌத்துபவங்களை ஒருசிலர் தாம் பாடவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்திருக்கவேண்டும். எனவே அந்த வழிவழி வந்த ஓரிரு குடும்பத்தினர்களே இந்தக் கௌத்துபங்களைச் சொல்லி வந்ததால் அந்தக் குடும்பத்தினரிடம் தவிர வேறு எங்கும் இவற்றைக் காண முடியாது. எனவே தமிழ்நாட்டின் கலைகளுக்குச்சிறப்பாய் விளங்கும்இந்தக் கௌத்துபங்களைப் புதுக்கோட்டை திருகோகர்ணம் திரு. உலகநாதன் (திருச்சி வானொலி நிலைய வித்துவான்), அவருடைய தமக்கையார் திருமதி எஸ். அரங்கநாயகி அம்மா, மற்றும் திரு. பொன்னையா பிள்ளை மரபில் தோன்றிய திரு. சிவானந்தம் போன்ற சிலரே தற்போது கருவூலமாய்க் காத்து வருகிறார்கள். இவர்கள் தலைமுறைக்குப் பின் இந்தக் களஞ்சியம் அடியோடு மறைந்து விடுமோ? எனவே நம் தமிழ் நாட்டுக் கலையை எண்ணி இந்த நுட்பக் கலை மேலும் மேலும் ஓங்கி வளர அவர்கள் முயற்சி மேற்கொள்வார்கள் என நம்புகிறோம். அவர்கள் அப்படிச் செய்ய அவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தமிழ் இசைச் சங்கத்தார்களும், சங்கீத நாடக அகாடமிகளும் செய்ய முன்வர வேண்டுகிறோம்.

வாழ்க பரதம்—வாழ்க கௌத்துபம்.



இருளில் ஒளி

ந. க. அர்த்தநாரி, பி. ஏ.

நமது பாரதநாடு சமய பண்பாட்டுக்கும், கலாச்சாரங்களுக்கும் பிறப்பிடமாய்த் திகழ்கிறது. எம்மதமும் சம்மதம் என்னும் கொள்கையைப் பின்பற்றி நமது தென்னக மன்னர்கள் கோலோச்சி வந்துள்ளனர். எனவே வெவ்வேறு மதத்தைச் சேர்ந்த சமயக் குரவர்களும், பெரியார்களும் தத்தம் மதத்தைக் கண்ணெனப் போற்றி வளர்த்துவந்தனர். சமயப்பண்பாட்டில் முன்னணியில் நின்றது தமிழகம். தமிழகத்தில் சைவமும், வைணவமும், சமணமும் தொன்றுதொட்டே சிறப்புடன் திகழ்ந்து வந்தன. பின்னர்ச் சைவம் தழைத்தோங்கி முதன்மை பெற்ற காரணத்தால், தமிழகத்தில் தஞ்சைப் பெரியகோயிலும், திருவானைக்கா ஆலயமும் தில்லை நடராசர் ஆலயமும், நெல்லைதிருக்கோயிலும், குமரி அருகே நிலைபெற்ற சுசீந்திரமும் மதுரைஅங்கயற்கண்ணி ஆலவாய் அண்ணல் ஆலயமும் சைவத்தின் செழிப்புக்குச் சான்று கூறி நிற்கின்றன.

பழந்தமிழர்கள் சமயத்தைக் கலை உணர்வுடன் வளர்த்து வந்தனர். நான்மாடக் கூடலென்றும், ஆலவாய் நகரென்றும் போற்றப்படும் மதுரையம்பதியில் நடுநாயகமாய் அமைந்துள்ள அங்கயற்கண்ணி ஆலவாய் அண்ணல் ஆலயம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். தென்னகத்தில் நகர அமைப்பின் சிறப்புக்கு மதுரையே சான்றாகும்.

இவ்வாலயம் 12ஆம் நூற்றாண்டில் கட்டிட அமைப்பில் தொடங்கப்பெற்று 18ஆம் நூற்றாண்டில் முடிவுற்றது; பாண்டிய மன்னர்களின் அருள் உணர்விற்கும், கலை நுணுக்கத்திற்கும், கட்டிடக் கலையின் சிறப்பிற்கும் நிலைக்களனாய் நிற்கின்றது. இவ்வாலயம் கலையின் பிறப்பிடம். அதன் கோபுரங்கள் அருளின் இருப்பிடம். திகழும் ஒவ்வொரு தூணும் பாண்டிய மன்னர்களின் சரித்திரத்தைப் பறைசாற்றுகின்றன. மலையத்துவசன் பெற்ற மாமணியான அங்கயற்கண்ணியின் திருவருளும், ஆலவாய் அண்ணலின் திருக்கருணையும் மதுரையைக் கட்டிக் காத்து வருகின்றன.

இவ்வாலயம் 282 மீ. 264 மீ. பரப்பில் செவ்வக வடிவில் விரிந்து உள்ளது. மின் ஒளி இல்லாக் காலத்தில் அகல்விளக்கின் ஒளியில் ஆயிரம் ஆயிரம் பக்தர்களைக் கவர்ந்த ஆலயம், இன்று இரவைப் பகலாக்கும் மின் ஒளியில்

எண்ணிறந்த பயணிகளையும், பக்தர்களையும் ஈர்க்கின்றது.

இத்திருக்கோயில் மென்மேலும் சிறப்புப்பெற இன்றைய விஞ்ஞான முன்னேற்றம் பெருந்துணை செய்யும் என நம்பலாம். பக்தர்கள் பெருமளவில் வளையவரும் இடங்களாகிய அஷ்ட இலட்சுமி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், முதலி மண்டபம், பொற்றாமரைக் குளத்தின் நான்கு பிரகாரங்கள், அம்மன் சன்னதி, சுவாமி சன்னதி, கம்பத்தடி மண்டபம் ஆகிய இடங்களுக்கு இன்றைய புதிய விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி மின் ஒளி அமைத்தால், ஆலயத்தின் அழகும், எழிலும், மேலும் சிறப்புறும். பக்தர்களின் எண்ணிக்கை நிச்சயம் அதிகரிக்கும்.

இத்திருக்கோயிலின் வானளாவிய கோபுரங்கள் மனிதனின் மன நிலையை மேம்பாடு அடைய, அவர்தம் எண்ணங்கள் உயர தூண்டுகோலாக அமையும். ஒளி சிந்தும் சக்திவாய்ந்த மின் விளக்குகளால் இரவையும் பகலாக்கிக் காட்டும் வகை செய்தல் வேண்டும். நவீன முறை மின்னொளி அமைப்புத் திட்டம் இத்திருக்கோயிலின் அறங்காவலர் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப் படும்போது ஆலயத்தின் சிறப்பு மென்மேலும் உலகெலாம் உயரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.



❖❖❖

மங்களம் பெறுக

உளுந்தூர் பேட்டை சண்முகம்

பண் : **நீலாமணி** தாளம் : **ஆதி**

அழகிய கயல்விழி அவள்மொழி மதுரம்
மதுரையில் பயில்கிளி மனம்வந்து பழகும் !

(அழகிய கயல்விழி)

விலையிலா மரகதம் ஒளிவிடும் மேனி
கலைபல வளர்த்திடும் செந்தமிழ் வாணி !

(அழகிய கயல்விழி)

துவரிதழ் புன்னகை துயரங்கள் போக்கும்
அருள்மிகு அன்னைகை அன்பரைக் காக்கும் !
நடைமுறை எதற்கும் அவளே சாட்சி !
நம்பிக்கை தருவாள் சாந்தி மீனாட்சி !

(அழகிய கயல்விழி)

திருமகள் தாமரைத் தளிரெனும் பாதம்
கழுவிட அமுதக் கலசங்கள் கொணர்க !
மலைமகள் வாழிடம் குடமுழுக் காட்டி
மஞ்சள் குங்குமம் மங்களம் பெறுக !

(அழகிய கயல்விழி)

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

பொற்கிழி கவிதை-1

"மீனாட்சி"

"தமிழண்ணல்" டாக்டர் இராம. பெரியகருப்பன், எம்.ஏ., பி.எச்.டி;

சிலப்பதிகாரக் கானல்வரிபோன்ற அமைப்புடையது இது. வரிப்பாடல். கண்ணிகளாகிய யாப்பில் பல துறைகளாகப் பகுத்துப் பாடப்பெற்றது.

சித்திரைத் திருவிழாவில், கூட்டத்தினிடையே காணாமற்போன செல்வச் சிறுமி "மீனாட்சியை" அவளுடைய தாய் தேடி அவலமுற்று அழுகின்றாள்.

"பிச்சை எடுக்கப் பழக்கியும், குற்றேவல் செய்யப் பழக்கியும் பிள்ளை பிடிக்கிகள் கொடுமைப்படுத்துவர்' என்று கேள்விப்பட்ட தாய், ஏழை எளியவரிடையே தன் சிறுமியும் இருப்பாளோ என்று தேடுகின்றாள். அதனால் அவ் வேழைகளையும், கூலிகளையும் காணும்போதெல்லாம் தன்செல்வச் சிறுமியின் நினைவு வரப்பெற்று, அனைவரையும் நேசிக்கும் மனநிலையைப் பெறுகின்றாள். செல்வச் செருக்கும் ஆணவமும் கரைந்து, எளியோர்பால் இரக்கம்மிக்கு உருகுகின்ற நிலையில் காணாமற்போன சிறுமி திரும்பவும் கிடைக்கப்பெற்று, அகமகிழ்கின்றாள்.

சித்தாந்த அடிப்படையில் இறைவனைத் தேடிஅடையும் ஆன்மாவின் அனுபவமாகவும் ஒருபொருள் கொள்ளக்கிடக்கின்றது.

1

மாமதுரை மீனாட்சி

செல்வச்சிறுமி மீனாட்சி பேரழகு வாய்ந்தவள்
அவளது அழகை வியந்து ஊரார் ஒருவருக்கொருவர் பாராட்டிக் கூறுதல்:

பொன்னெழுதிப் பூவெழுதிப் புயலெழுதிப் பெண்மை
மின்னெழுதி வைத்தஎழில் மீனாட்சி காணீர்!
மீனாட்சி காணீர்; நீர் மேன்மைமிகும் மாமதுரை
தானாட்சி செய்யவந்த தவமகளைக் காணீர்!! 4

கயல்பிறழும் இருவிழிகள் கதிர்வீசும் முகத்தாள்
புயல்தழுவும் குழலுடையாள் பூவுலகில் வந்தாள்!!
பூவுலகில் வந்தருளும் பொற்கொடியாள் அன்றோ
கர்வுலவும் மாமதுரை களிப்படையும் காணீர்!! 8

மழலைமொழி அமுதுபொழி மங்கலத்தின் உருவம்
விழவயரும் எழிலழகை விரும்பிமனம் மகிழ்வார்!!
விரும்பிமனம் மகிழ்பவரின் விழைவைநிறை செய்ய
அரும்பிவளர் தமிழ்க்கொடிகண்டு அகமகிழ்தல் காணீர்!! 12

(வேறு)

பொலிவுறு திருமுகமே; பொட்டிடு நறுநுதலே!!
கலியுறு நகைமலரே; கனிதவழ் செவ்விதழே!!
ஒலியுறு நறுங்குழலே; உவகைசெய் சிலையழகே!!
கலைமிகு திருவடிவே; கருத்தினைக் கவர்பவையே!! 16

அன்புறு கயற்கண்ணே; அறிவுறு மதிமுகமே!!
இன்புறு புன்னகையே; எழிலுறு வனப்பதுவே!!
நன்புறு தமிழ்வடிவே; நடைபயில் சாயலதே!!
பொன்தரு நல்லுளமே; புவியினைக் கவர்பவையே!! 20

2

எங்கே இருக்கின்றாய்?

காணாமற்போன மகளைத்தேடும் தாயின் அவலக்குரல்:

கங்குலில் பகலில் நல்ல ககனத்தில் பாரில் எல்லாம்
அங்கயற் கண்ணி யுன்னை அலமந்து தேடு கின்றேன்
பொங்கர்சூழ் மதிமு கத்தாய்!! புகழுறும் வடிவே நீதான்
எங்குளாய் எனவு ரைத்தால் இனைந்தேங்கி அழுவே னோநான்? 24

கடலினுள் தவற விட்ட முத்தெனத் தேடு கின்றேன்
விடருறு மலையி னூடோ? வெளியிலாக் காட்டி னூடோ?
இடருறு குடிசைக் குள்ளோ? எங்கேநீ இருக்கின் றாயோ?
இடமதை உணர்த்து வாயேல் இருந்தேங்கி அழுவே னோநான்? 28

சிற்றுயிர்க் கிரங்கும் போதுன் சிந்தையைக் கூட்டு கின்றாய்!!
மற்றவர்க் குதவும் போதுன் மலர்ப்பதம் நீட்டு கின்றாய்!!
சுற்றத்தைப் பேணும் போதுன் சுடர்விழி காட்டு கின்றாய்!!
முற்றவும் காட்சி தந்தால் முடிவின்றி அழுவே னோநான்? 32

ஏழைகள் நடுவில் இருக்கின்றாயோ?

கல்லுடைத்துச் சாலைகளில் கண்ணீர் மழைபொழிந்தே
அல்லலுழப் பார்நடுவே அழகி இருப்பாளோ?
அல்லலுறும் என்செல்வ அழகி நினைவதனால்,
தொல்லையுறு சாதிஎனத் தூற்றிப் பழியேனால்!! 36

பேருந்து நிலையத்தில் பிச்சை எடுப்பவர்பால்
சீருந்தும் என்செல்வச் சிறுமி இருப்பாளோ?
சீருந்தும் என்செல்வச் சிறுமி நினைவதனால்,
ஏருந்தும் ஏழைகளை எள்ளி இகழேனால்!! 40

சுமைதாங்கி நாளனைத்தும் தொடரும் கூலிகள்போல்
அமைமென்தோள் பாவையவள் அலைந்து திரிவாளோ?
அமைமென்தோள் பாவையவள் ஆரா நினைவதனால்
குமைகின்ற ஏழைகள்பாற் கொடுமை நினையேனால்!! 44

பிச்சைஎடுத் தலேகின்ற பிஞ்சுக் குழந்தைகள்போல்
எச்சிலிலே தேடிஎன்றன் இளேயள் அலேவாளோ?
எச்சிலமு தூறும்என் இளேயள் நினேவதனுல்
பிச்சைஎடுத் தலேபவர்பால் பேதம் நினேயேனுல்!! 48

(வேறு)

செல்வச் செருக்கனேத்தும் சிதறி அழுகின்றேன்
பொல்லாத ஆணவமும் பொடிந்து கரைகின்றேன்
பொல்லாத ஆணவமும் பொடிந்து கரைந்ததனுல்
எல்லா உயிர்களிலும் என்னுயிரே காண்கின்றேன்!! 52

3

கயற்கண் நங்காய், வாராயோ!!

சிறுமி மீனுட்சி திரும்பிவர வேண்டுமென
எண்ணும் தாயின் அழுகை

கண்ணுள் கரிய மணியாகிக்
கருத்துள் உண்மை வடிவாகி
எண்ணுள் இருந்தாய்; எனேப்பிரிந்தே
எங்கே சென்ருய்? மீனுட்சி!!
எண்ணுள் இருந்தும் எனேப்பிரிந்தே
ஏங்கச் செய்தல், கயற்கண்ணுய்!!
உண்மை அன்பின் திறங்காணும்
உளமோ சொல்லாய் மீனுட்சி!! 56

காடும் மலேயும் சுற்றிடவும்
ககன வெளியைப் பற்றிடவும்
தேடும் படிக்குப் பிரிந்தெந்தத்
திசைக்குச் சென்ருய்? மீனுட்சி!!
தேடும் படிக்கே எனேப்பிரிந்து
சேறல் காணின், கயற்கண்ணுய்!!
வாடும் நிலேதந் தெனேயறியும்
வழக்கோ சொல்லாய், மீனுட்சி!! 60

(வேறு)

பூவின் பொலிவில் சிரிப்பாகிப்
பொன்னின் வடிவில் ஒளியாகிக்
காவின் பரப்பில் நிறமாகிக்
கலந்தாய் வாழி மீனுட்சி!
நாவில் நின்றே நடமாடி
நல்கும் மகளே! என்னுடைய
ஆவி நிலேக்க வேண்டுமெனில்
அன்னுய் ஓடி வாராயோ? 64

புல்லின் பசுமை ஒளிகாட்டிப்
பூவின் வண்ணப் பொலிவூட்டிக்
கல்லில் சிற்ப வடிவமைத்துக்
காட்சி தந்தாய் மீனாட்சி!
அல்லும் பகலும் என்னகத்தில்
ஆடிப் பாடி மகிழ்பவளே!
கல்லும் கனியக் கதறுகிறேன்
கயற்கண் நங்காய் வாராயோ? 68

நல்லாய் என்றன் உயிராகி
நாடிட என்னைப் பிரிந்தேகி
எல்லா உயிரும் ஒன்றென்னும்
எண்ணம் தந்தாய் மீனாட்சி!
பொல்லாச் செல்வச் செருக்காலும்
பொய்ம்மைத் திமிரின் பெருக்காலும்
கல்லாய் இருந்தேன் கனிந்துவிட்டேன்!
கயற்கண் தாயே வாராயோ? 72

கன்றின் குரல்கேட் டிரங்குகிறேன்
காக்கை கரையக் கரைகின்றேன்
குன்றக் குருவி குரல்கேட்டும்
குயிலின் இசைசேர் பாக்கேட்டும்
துன்றும் ஒலிகள் அனைத்திலுமே
தோகை குரலே கேட்கின்றேன்
வென்றாய் என்றன் செருக்கதனை
விரைந்தே ஓடி வாராயோ? 76

4

தேடிய சிறுமியைத் திரும்பப் பெற்றமை

தன் மகளைத் தேடிக் கண்டுகொண்ட தாய், தன் மாற்றத்தைக் கூறுதல்

உயிர்கள் அனைத்தும் ஒன்றென் றெண்ணும்
பயிற்சி தரவோ, பாவை பிரிந்தாள்?
பயிற்சி முடிந்து பயனும் கண்டபின்
உயிராய் ஒன்றிய ஒண்டொடி திரும்பினள்! 80

செல்வச் செருக்கும் சினமும் மறையும்
கல்வி தரவோ, கன்னி பிரிந்தாள்?
கல்வி முடிந்து கருத்தும் கனிந்தபின்
செல்வச் சிறுமி திரும்பினள் கண்டீர்! 84

சுயநலம் ஒன்றே தொடர்ந்திடும் மனத்தைப்
பயனுறச் செயவோ, பாவை பிரிந்தாள்?
பயனுறச் செய்து பண்பதும் பெற்றபின்
துயர்களைந் தர்ள்பவள் தோன்றினள் கண்டீர்! 88

5

பைந்தொடியைப் பாடுவமே!

செல்வி மீனாட்சி மீண்டதனால் மனமகிழ்ந்து, மீனாட்சி அம்மையை வழிபட்டு, அனைவரும் ஆடிப்பாடுவது :

சேமமுறச் செய்பவள் :

கண்ணிரண்டும் மழைபொழியக் கருத்துருகி நினைவொழியப்
பெண்ணணங்கு காட்சிதரும் பெருமையினைப் பாடுவமே!
மனமிருக்கும் இருளகல மமதைதரும் மலமகல
னெவிருக்கும் உமையவளின் நலம்புனைந்து பாடுவமே!

தொடுத்துவரும் பவங்களென்ற சுழற்சியினில் வீழாமல்
தடுத்துநமை ஆட்கொள்ளும் தையலினைப் பாடுவமே!
மாமதுரை வளர்ந்தோங்க மக்களெலாம் மனமகிழச்
சேமமுறச் செய்பவள்தன் சீர்புகழ்ந்து பாடுவமே!

மீனாட்சி திருமணத் திருக்கோலம் :

புகழ்மணக்கும் தமிழ்மகளைப் பொதிசுமந்த மணவாளன்
நகமணக்கும் தகையவளை நங்கையினைப் பாடுவமே!
சிலைவடிவை வென்றவளைச் சிவன்மணக்க நின்றவளைக்
கலைவடிவு கொண்டவளைக் கன்னியினைப் பாடுவமே!

தமையனவன் நீர்வார்க்கத் தலைமகன்தன் கைப்பிடிக்க
அமைவுறுமென் நகைகாட்டும் அணங்கவளைப் பாடுவமே!
அழகர்மலைத் தமையனையும் அழகுமலைத் தலைவனையும்
பழகுகலை வல்லியையும் பைந்தமிழிற் பாடுவமே!

தமிழ் மகளைப் பாடுவமே!

நகைமுகத்து நாயகியை நானிலத்தின் தாயவளைப்
பகைமுகத்து வெற்றிதரும் பாவையினைப் பாடுவமே!
எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணியிங்ஙன் இரங்குபவர்
செவ்வையுறக் காணுகின்ற சிவசக்தி பாடுவமே!

கன்றுபிரி காராவாய்க் கதறுபவர் கண்ணெதிரில்
நின்றருளும் மீனாட்சி நிழலிருந்து பாடுவமே!
ஆலவாய் அண்ணலுடன் அமர்ந்திருந்து வையமிதைச்
சாலவே பேணுகின்ற தமிழ்மகளைப் பாடுவமே!

மதுரை மீனாட்சி

புலவர் தங்க அன்புவல்லி

காப்பு

1. மங்கையர்க் கரசி மதுரைமீ னாட்சி
சங்கத் தமிழ்க்குத் தலைவனின் நாயகி
செங்கயல் நெடுங்கட் செவ்வியை வேண்டித்
தங்குமென் நெஞ்சகம் தாளிணைக் கீழே!

துணிவு

2. திருமுகங் கண்டு திறல்கண்டு செந்தமிழ்ப்
பொருமுகத் தெதிர்கொளப் புறப்படு கின்றேன்
நுண்ணறி வாள ரேந்திய நூற்படை
திண்ணிதா யிருப்பவென் சிற்றிள நெஞ்சும்
அங்கயற் கண்ணி அருள்வலி வதனாற்
சிங்கமாய்ச் சிலிர்த்துச் செய்யுளா யதுவே.

கோலம்

3. கோலக் குமரி குறுநகைச் சிரிப்பும்
காலைப் பசுமை கதிர்விடு மேனியும்
நீலப் பூவிழி நிகழ்த்துகாப் பியமும்
வாலை வடிவும் மனத்தழல் வளர்க்கும்.

4. செந்தழல் வடிவச் சிவனவன் மொய்ம்பில்
சிந்தனை மயங்கத் திருநுதல் வியர்த்துச்
சிந்துரஞ் சிந்தச் செந்தமிழ்க் கடவுட்
சுந்தரி தோற்றம் சுடரொளி துலங்கும்.

(வேறு)

5. வில்லேந்திய கரமுங்—கூர்
வேலேந்திய விழியும்
சொல்லேந்திய துணிவும்—நகைச்
சுடர்தூங்கிய இதழும்
பொல்லாங் கொடுகள்ளம்—தனி
புரியுங்குறு நகையும்
மல்லேந்திய புயஞ்சேர்—கைலை
மலையான் உளமீர்க்கும்

6. விழிமேவிய வியப்பும்—உன்
விரல்கீண்ட அந்நிலமும்
மொழிமேவிய தயக்கம்—மொடு
முகமேவிய வியர்ப்பும்
அழல்மேனிய கையான்—அவன்
அகமே வினவென்றல்
பழிமேவிய எளியேன்—மனப்
பாழ்மேவிய திலேயே.

(வேறு)

7. மூடி நிற்கும் விழிக ளோடு
அன்னை கோயில் முன்பிலே
வாடி நிற்கும் ஏழை நெஞ்ச
வாட்டம் போக்க என்மனம்
தேடி யுட்பு குந்த என்றன்
தேவி காட்டும் பேரெழில்
ஓர்நொ டிக்கு ளாகவோர்
குழந்தை யாக மாறுமே.

(வேறு)

8. அம்மனை யாகி அனைத்துல குந்தான்
அளித்துத் தனித்துறைவாள்—இப்
பொய்ம்மனை வாழ்விற் புன்னகை மேவும்
பொற்பை எமக்கீந்தாள்—தான்
கைம்மனை மீது கழங்கு பொறுக்கிக்
களித்துச் சிரித்தாடும்—ஓர்
அம்மனை யாகிக் கைம்மலர் மீதே
அம்மனை யாடுகிறள்.

(வேறு)

உடனமர் தோழியர் உலகநா யகிபுகழ்
அடல்படப் பாடி ஆடுகின் றார்கள்.

(அம்மானைப்பாட்டு)

8. (அ) செவ்வான வண்ணற்குத் தென்மதுரை மீனாட்சி
மைவான வண்ணம்போல் வனப்பினள்காண் அம்மானை
மைவான வண்ணம்போல் வனப்பினளே யாமாயின்
பொய்ம்மாறும் புலவர்புறம் பழியாரோ அம்மானை
புறப்பொருளாம் அவையெல்லாம் அகப்பொருள்காண்
அம்மானை.

(ஆ) என்அன்னை இம்மீனாள் என்மக்கள் எல்லார்க்கும்
அன்னையென வேமுறைதான் அமைந்தவள்காண் அம்மானை
என்னன்னை என்பாள்தான் என்மக்க ளெல்லார்க்கும்
பின்னைமுறை யாற்பாட்டி ஆகாளோ அம்மானை?
பின்னென்ன எந்நாளும் பெரும்பாட்டி அம்மானை

(இ) சொக்கருக்கு வாய்த்துளவெம் பிராட்டி துணையாலே
திக்கெல்லாம் பெரும்புகழைச் சேர்கின்ற ரம்மானை
திக்கெல்லாம் பெரும்புகழைச் சேர்கின்ற ராமாயின்
மக்களெலாங் கேட்டு மலையாரோ அம்மானை
மலையாரே ஆயிடினும் மலையார்கா ணம்மானை.

9. துன்பம் அளித்துத் துயரந் தருவாள்
துணையாய் மகிழ்வென்னும்
இன்பம் அளிப்பாள் இரண்டும் ஒன்றும்
இணைந்தே வருவதுபோல்
முன்பின் மாற்றி அம்மானை யாடும்
முறையிற் கழங்குகள்போய்
இன்பம் வந்தால் துன்பம் நானென்
றியம்பித் தொடர்வதுகாண்.

10. இரவும் பகலும் இறப்பும் பிறப்பும்
இணைந்தே உடனுடனாய்
விரவி வருதல் போலென் அன்னை
விரல்சேர் கழங்குகள்தாம்
விரையும் அதன்பின் விரைந்தே பின்னால்
விழிகள் தொடர்ந்திடவே
கரவின் மயங்கிச் சிறிய பிள்ளைக்
கனவைக் காட்டுகிறாள்.

11. கைவழி யோடிய கண்மல ரோடு
கழங்கு சுழன்றோடும்—உன்
மைவிழி காட்டும் மயக்கில் இறையவன்
மனமுங் களிமேவும்
பொய்வழி கண்டு மெய்யெனக் கொண்டு
புலம்பும் எளியேனும்—உன்
கைவழி யோடும் கழங்குகள் போலக்
கடைக்கண் பெறுவேனோ?

(வேறு)

12. சொக்கர்தமக் கினியநலத் துணைவி யானாள்
சொற்பேச்சுக் கிளிப்பிள்ளை வண்ண மாவாள்
பக்கமென வந்திருப்போர் நெஞ்ச மெல்லாம்
பக்குவமாய்த் தன்வசத்தில் ஈர்த்துக் கொண்டாள்
இக்கருணை எவர்செய்வார் ஐய ஐயோ
என்றெளியேன் உயிருருகி இரங்கச் செய்தாள்
மிக்கபெருந் தனக்காரி மீனாள் இந்த
மீன்விழியால் உலகவர்க்குத் தூண்டி விட்டாள்.

13. ஆகாய வாசலிலே அண்ட மெல்லாம்
ஆட்டுவிக்கும் எம்பெருமான் ஆட்ட ஆட்டத்
தோகைமயில் பொன்னூசல் ஆடு கின்றாள்
சுழலுகிற உலகங்கள் தலைகீழ் மாறிப்

போகையிலே நான்மாடக் கூடல் மீது
புன்னகைப்பால் நிலைபெறு புரிய வந்தாள்
மாகாளி பொன்னூசல் ஆடும் மாயை
மணித்தமிழ்க்குச் சிறைப்படுமோ? வாவா நெஞ்சே!

(ஊசல்)

13. (அ) பின்னி ருந்து தோழி தள்ள
முன்னி ருந்து தைத்துமே
தன்னி ரண்டு கால்கள் வீசிச்
சாய்ந்து சாய்ந்து ஆடுவாள்
அன்னை தேவி ஆடு கின்ற
ஆடல் கண்ட கண்களே
பின்னை வேறு காண்ப தற்குப்
பார்வை நாட வில்லையே.

(ஆ) இங்கு மங்குஞ் சென்று சென்று
தங்க வூசல் ஆடிடும்
பங்க யங்கள் தங்கு பொய்கைப்
பதியில் வந்த செந்திரு
அங்க யற்கண் தேவி பக்கல்
அன்புத் தோழி யாகவே
செங்கை கொண்டு உந்தி உந்தித்
தெய்வ வூசல் ஆட்டுவாள்.

(இ) கைகள் கொட்டிக் கைகள் விட்டுக்
கன்னிப் பாவை ஆடுவாள்
பொய்யு தைந்து ஞான மான
புனித முந்த ஆடுவாள்
வைய கம்புகழ் வளர்க்கும்
வண்மை மீன நாயகி
தெய்வ தங்கள் யாவினுக்கும்
தேவி யாக ஆடுவாள்.

(வேறு)

14. இருவிழி முறுகிய கறுவொடு புகையழல்
எழுப்பிட உயிர்ப்பொடு செந்தீ
உருமிடி யெனஎதிர் எழுமவள் புறமெலாங்
கனலவே உலவுவள் காணாய்
செருமுகம் எதிர்கொளத் திருமுகஞ் சிவந்து
திசையெலாம் பொடிபடச் சிரித்தே
கருமைகொள் காளியாய் எருமையின் மீதிலே
கயற்கணி வடிவுணர் கின்றேன்.

15. குருதியின் அருவி பெருகிடக் குடித்துக்
குடர்கரங் குவித்துநின் றுடிச்
செருமுகத் தரக்கர் பெருமித மழித்துச்
சினத்தொடு பிணக்குவை படுத்துக்

குரவுகொள் நெஞ்சிற் களப்பலி முடித்துக்
கட்கடைக் கனலெழ விழித்துச்
செறுநரை யழித்துச் செற்றவள் மேனி
தீயெனக் காந்துவள் தேவி.

16. அழிப்பது வொன்றே விழுப்பமென் றுணர்ந்தே
ஆற்றுவாள் ஆற்றலின் பின்னே
கழிப்பன வாழ்விற் கடைப்படுப் பனவாம்
கட்டுகள் தூசுகள் அறுப்பாள்
பழிப்பவர் திறத்துப் பழித்தகை முடித்துப்
பற்றறப் பற்றுக ளறுத்து
விழித்தழல் ஒன்றில் மேதினி முழுதும்
வெந்தெழச் செய்குவள் அன்னை.

17. நிலமிசை யூன்றித் தலைநிமிர் விசையால்
நெடிதுற நின்றிருந் துறங்கும்
அலைவறு பம்பரம் போல்வளென் அன்னை
அடற்பகை அடுதிறல் மறைத்தே
நிலைபெறு மவளாய் ஏழைமை மாந்தர்
நெஞ்சிடை எழில்வளர் கின்றாள்
மலைகலங் கிடினும் மனவுரம் குறையா
மாட்சிமை நல்கிடு கின்றாள்.

கேசாதிபாதச் சிறப்பு

(முடிமுதல் அடிவரை)

18. சிறுகுழந்தை இட்டவளை கோடு கள்போல்
செவியிறங்கிச் சுரிகுழலும் வெள்ளி மீனில்
மறுவெனப்பொட் டிட்டதுநேர் கரிய கண்ணும்
மங்கலஞ்சேர் திருநுதற்குங் குமமுஞ் சூழச்
சிறுவிளக்காய் மூக்குத்தி சிரிப்புக் காட்டித்
திகழ்மூக்கும் செந்தமிழ்த்தேன் பிலிற்று கின்ற
நறுமலர்போற் செவ்வாயும் நறவ மூறி
நம்பனவன் விருந்துண்ணும் இதழ மிழ்தும்.

19. வண்டுபுர ளும்மாலை யணிந்த தோளும்
வளைகுலுங்குந் திருக்கரமும் பசுங்கிள் ளையும்
கண்டசரம் மின்னுமெழிற் கழுத்துங் காழிக்
கவுணியர்க்குப் பால்சுரந்த கனகச் செப்பும்
உண்டுகாண் இல்லையடி என்று தோழி
உரைவழக்கில் முடிவில்லா மருங்கும் வாழைத்
துண்டமெனத் திரண்டவெழிற் குறங்கும் கிள்ளை
துளிமூக்குப் போற்சிவந்த அடியும் மேவி.

20. அன்னையென நிற்கின்றாள் புலவோர் ஏற்றும்
அரியபிள்ளைத் தமிழ்த்தொட்டில் மகவா கின்றாள்

முன்னையுல கெல்லாமும் படைத்த ளித்த
முனிவற்கு மோகமனே விளக்காய் நின்ருள்
பின்னைநாட் பகைமுடிக்கச் சினந்து சீறிப்
பிழையழிக்கக் காளியெனும் பேரெ டுத்தாள்
தன்னிரண்டு விழிகளிலே தண்ணென் றூறும்
தனிக்கருணை அமுதத்தாள்; கூடல் கொண்டாள்.

(வேறு)

21. தொந்தோம் தோமெனத் துடியிடை முழக்கிய முழக்கும்
தந்தோம் ஓமெனச் சங்கரன் மொழியருள் வழக்கும்
வந்தோம் ஓமென முழக்கிடு கடைமணி அழைக்கும்
எந்தாய் எந்தாயென் றென்மனம் தன்னினை விழக்கும்.

22. அழகிய விழியிடைப் பொழிகரு ணைச்சுழ லிழுக்கும்
பழகிய மொழியிடைப் பரவசம் நதியெனச் சுரக்கும்
மழையென மழையினில் முழுகிய தெனவுடல் சிலிர்க்கும்
அழலுறு சுடரென விழியிடை ஒருநிழல் உயிர்க்கும்.

23. கருவிடைப் புரள்கிற சிறுதலை யெனக்களி துடிக்கும்
உருவறி யாவொரு துயரிலே உள்மனம் திளைக்கும்
திருமுகச் செல்வியைச் சொல்லிலே சிறையிடத் தவிக்கும்
பொருமிய மகவெனப் புலம்பொடு கண்கணீர் துடைக்கும்.

(வேறு)

24. செவ்வாயிற் பசுங்குதலை அசும்பூறச் சிறுசிரிப்பில்
எவ்வாயும் மாந்தர்தம் இருதயத்தைக் கொள்ளையிடும்
சைவா கமவிதிக்குத் தமிழ்ஞான சம்பந்தன்
கைவாய் வெதும்பியழக் கனகமுலை தந்தவளே.

25. கயல்துள்ளும் குளக்கரையிற் கைபிசைந்த கண்மலர்கள்
துயர்ததும்ப நீர்துளும்பும் சம்பந்தன் தூய்தமிழ்க்கு
மயல்ததும்பி மற்றொருகால் மங்கையருக் கரசியெனப்
பயில்தந்து தமிழ்மகவின் பாசத்தாற் கனிந்தவளே.

26. சீகாழிக் குளக்கரையில் திருமுலைப்பா லமுதுண்டு
பாகான செந்தமிழிற் பயிலாமற் பாடுதலால்
மாகாளி அதுகேட்க மங்கையருக் கரசியென
ஆகாயந் தோய்கூடல் அரசிருக்க வந்தவளே!

(ஏக்கம்)

27. கோலநெடு நான்மாடக் கூடலிலே கோபுரத்து
மேலிருக்கும் சிறுபுறவாய் மேனியெழில் காணேனோ?
நீலநெடு விழியாளின் தோள்புரண்டு நீளுகிற
மாலையிலே ஒருசிறிய மருக்கொழுந்தாய் மாறேனோ?

28. ஒக்கலைத் தூக்கி உவந்து வளர்த்தெடுக்கும்
மக்கள்தமை மாண்புடைய ராக்கிமித வைத்ததன்பின்
பொய்க்குப்பை என்றொதுக்கிப் புனிதவதி அம்மையைப்போல்
கைக்குப்பக் கத்திருந்துள் கண்ணொழிலைக் காணேனே?

29. எல்லாம் ஒதுக்கியிவை யாவையுந் தான்துறந்து
செல்லாப் பெருமிதமாம் செல்வமொன்றே சேர்த்துவைத்துப்
பொல்லாங்கு சூழும் உலகத்துப் பொய்ம்மையெலாம்
நில்லாத் தமிழ்நெஞ்சம் நீயளித்த செல்வமடி!

30. கைகுவித்து நிற்கின்றேன் கண்துளும்பி நிற்கின்றேன்
மெய்சிலிர்த்து நெஞ்சமெலாம் விதிர்விதிர்த்தல் காண்கின்றேன்.
பொய்தவிர்த்து வாழ்க்கைப் புரைதவிர்த்த நாயகியைக்
கைதொழற்குக் காலமெலாம் கரைந்துருகி நிற்கின்றேன்;

வாழ்த்து

31. அங்கயற் கண்ணே(டு) அருள்நெறி யான அறம்வளர்க்கும்
பங்கயச் செல்வி பதாம்புயம் நெஞ்சிற் பயில்தரவே
சங்கத் தமிழும் தமிழ்சேர் தலைமைப் புலவனுமாய்ப்
பொங்கு மதுரைப் புகழும் புலமையும் வாழியவே.

32. வாழ்க நிரந்தரம் வாழ்க கயல்விழி வாழிய வாழியவே
வாழ்வு கவின்பெறச் சூழ்துயர் நீக்குவள் வண்புகழ் வாழியவே
தாழ்வுகள் நீக்கிச் சமத்துவம் படைக்கும் தாயவள் வாழியவே
சங்கத் தமிழொடு பொங்கு மதுரை தன்புகழ் வாழியவே.

இன்புறவே காக்கும்

அம்புஜம் கிருஷ்ணா

ராகம்-ஆரபி *தாளம்-ஆதி*

பல்லவி

என் தாய் நீ யன்றோ மீனாட்சி
மன்னுயிர்தம் இன்னுயிரே.

அநுபல்லவி

கன்ம வினைபோக்கக் கருவினில் மீண்டும்
ஜன்மம் எடுத்தாலும் இன்புறவே காக்கும் (என் தாய்)

சரணம்

அம்புஜ கரம் அள்ளி என்னை எடுக்கும்
அன்புடன் அகம் அணைத்துத் துலக்கும்
இன்மை மறுமை வெம்பசி போக்கும்
செம்மை சேர் ஞானப்பால் ஊட்டியருளும். (என் தாய்)

மதுரைத் தெய்வப்பாமாலை

மகான் வண்ணச்சரபம் அருண்மிகு
தண்டபாணி சுவாமிகள் — திருவாமாத்தூர்

மதுரைத் தெய்வப் பாமாலை என்ற இந்நூல், ஆலவாய்ப் பெம்மான்மீது மூன்று பதிகங்களும், அங்கயற்கண்ணம்மைமீது இரண்டு பதிகங்களும்ஆக ஐந்து பதிகங்கள் கொண்டது. இந்நூலின்மூலம் அம்மையப்பனுகிய இருபெருந் தெய்வங் களும் செய்த அருளாடல்களும், அடியவர் நலம்பெற அருளிய அருட்டிறனும் தெள்ளிதின் விளக்கப்பட்டுள்ளன. எளிய பாடல்கள்மூலம் இனிய பொருட் செறிவும், கருத்தாழமும் கொண்டு பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைந் துள்ளது இந்நூல். இது கற்ருர்க்குக் கழிபேருவகை நல்கும் என்ருல் மிகையாகாது.

இதனைப் பாடியருளியவர் மகான் வண்ணச்சரபம் அருண்மிகு தண்டபாணி சுவாமிகள் என்ற அருளாளராவர். இவர் திருநெல்வேலியில் 1839ல் தோன்றினுர்; இளமைமுதல் முருகன்வழிபாடு செய்தார்; இதன்பயனுகச் செந்தமிழ்க் கவிகள் பல இயற்றும் திறன்வாய்க்கப்பெற்ருர். புலவர் புராணம், பழனித்திருவாயிரம், தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், அறுவகை இலக்கணம், தமிழலங்காரம்போன்ற எண்ணற்ற நூல்கள் பாடினர்; பல தல வழிபாட்டை மேற்கொண்டு ஆங்காங்குள்ள கடவுள்மீதும் துதிப்பாடல்கள் பல இயற்றினர். அம்முறையில் பாடப்பெற்றவைகளுள் இப்பகுதியும் ஒன்ருகும்.

வடலூர் இராமலிங்க அடிகளாருடன் பலகாலம் தொடர்பு கொண்டவர். சீவகருணை நெறியைப் பரப்பிய சீலர்; அருளாடல் பல இயற்றியவர்; சமுதாயமும், சமயமும் வாழ அருந்தொண்டாற்றியவர். இவர் தாம் இயற்றிய பாடல்களைப் பனையோலைச் சுவடியில் தாமே எழுதும் இயல்புடையவர். இவர் எழுதிய பாடல்க ளனைத்தும் திருவாமாத்தூரில் இன்றும் உள்ளன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இறுதியில் 1898ல் திருவாமாத்தூர்ச் சிவதலத்தில் ஞானசமாதி கொண்டனர். இவரது மரபினர் பாதுகாப்பில் 'இவர் எழுதிய ஏட்டுச் சுவடி களும், சமாதிக் கோயிலும் இன்றும் உள்ளன' என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பதிகங்களைத் தொகுத்து வழங்கியவர் சுவாமிகளின் பெயரர் குமாரர் புலவர் தி. மு. சங்கரலிங்கம் ஆவார். அன்னுர் திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத்தில் தமிழாசிரியராக விளங்குகிருர். அவருக்கு எங்கள் நன்றி.

— திருக்கோயிலார்.

மதுரைச் சோமசுந்தரக் கடவுள் பதிகம்

1. மதுரை வாழ்பர சிவனே

காப்பு—வெண்பா

சாக்கிரத்தில் சொற்பனத்தில் தந்ததிரு வெண்ணீற்றின்
பாக்கியம்வந் தெய்தஅருள் பாலிப்பாய் !—தேக்கியநீர்
வையைத் துறைமதுரை மாநகரில் வாழ்சிவனே !
மெய்யைப்பொய் யாக்கி விடேல்.

நூல்—எண்சீர்

தொழுதி றைஞ்சிமெய்ப் பேறுபெற் றுளராந்
    தொண்டர் தம்மொடு தொல்லுக கோத
எழுதி லான்விதி யென்னினும் நினைத்தால்
    ஈய வல்லைகொல் இல்லைகொல் அறியேன்
பழுதில் வெள்ளியம் பலத்தில்நின் றொர்தாட்
    பதுமம் தூக்கிய பண்ணவ னே ! வேல்
வழுதி நாட்டணி முகமெனக் குலவு
    மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

விதி-நான்முகன்; பதுமம்-தாமரை போலும்திருவடி; வழுதி-பாண்டியன்

2

நாண மின்றிஎன் கனவில்வந் தாடல்
    நவிற்று மெய்யருள் நானிலத் தினனே
வேண பேற்றினுள் ஒருசிறி தேனும்
    விளக்கி டாமையை விளம்புமா றுளதோ
ஆண வப்பெரும் பிணிதவிர்த் தாள்வான்
    ஆல நீழலில் அருமருந் தானாய் !
மாண றுமலர்க் கடம்பினம் புடைசூழ்
    மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

வேண-விரும்பிய; ஆலமருந்தானாய்-கல்லாலமரத்தின் கீழ்த்தென்முகக் கடவுளாக இருந்து நால்வருக்கருளியது; மாண்-மணம், கடம்பு-ஒருவகைமரம்.

3

அந்த நாளையிற் சாரண ரிகல்போய்
    அமல நீறுமிக் கவிர்தரச் செயும்நீ
இந்த லோகமுற்(று) ஆன்வதைத் துண்பார்
    இடத்தில் நல்கிய(து) என்கொலோ அறியேன்
வெந்த நீற்றுரு வாய்ப்புர மூன்றும்
    வீழு மாறொரு மென்னகை விளைத்தாய் !
மந்த மாருத வரைமுனி போற்றும்
    மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

சாரணர்-சமணர்: இகல்-பகை; ஆன்-பசு; நகை-புன்சிரிப்பு; மந்தமாருதம்-தென்றல்; முனி-அகத்தியர்.

4

இயங்கும் ஆடல்எட் டெட்டுமுன் செய்தாய்!
இன்ன மொன்றுநீ இயற்றிடின் அல்லாற்
றயங்கு நான்மறைச் சமயமோர் ஆறும்
சகத்தின் மேலினித் தழைக்குமென் றுணரேன்
புயங்கொள் மான்மழு வுடையபுங் கவனே!
புனித ஆகமப் பொருள்முடி வானாய்!
வயங்கு சிற்றிடைக் கயற்கணாள் பங்கா!
மதுரை மாநகர் வாழ்பர சிவனே!

எட்டெட்டு ஆடல் $8 \times 8 = 64$, திருவிளையாடல்; புனித-தூய.

5

பொன்ன வாவிடைப் புலர்தரும் என்னைப்
புதிய மென்முலைப் பூவையே யனைய
சின்ன மங்கையர் இதழ்க்கனி விழைந்துந்
தியங்க விட்டனை திருத்துநாள் என்றோ?
கன்னல் வார்சிலைக் கரியவேள் பொடியக்
கண்ட வீறுடைக் கனற்கண்நா யகனே!
மன்னர் சேகரன் எனச்சிலர் பரவ
மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

கன்னல்-கரும்பு; வேள்-மன்மதன்; கனல்-நெருப்பு.

6

கொய்து தன்னுடல் இழந்தபா லகனும்
குலவு செந்தமிழ்க் குளிர்தமிழ்ப் பாடல்
செய்து போம்வட லூரவன் றானும்
திரும்பி டாவிடில் திருவருட் கழகோ?
மய்து லங்கிய களத்துவா னவனே!
மற்றை யோர்மன மகிழ்ச்சியும் குறித்து
வய்து கல்லெறிந் தவனையும் புரந்தாய்!
மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

தலையைக் கொய்திறந்த ஒரன்பனும்-வடலூரடிகளும் திரும்பவுயிர் பெற்று வரவிழைகிறார்; ஆசிரியர். கல்லெறிந்தவன்-சாக்கியர்.

7

அங்கண் மானிகர் பரவைதன் கொண்கற்(கு)
அரும்பொன் எனமுத லாவன அளித்தாய்!
எங்கள் ஆவல்சற் றாயினும் நல்கா(து)
ஏங்க விட்டனை இதுவும்நன் முறையோ?
திங்கள் சூடிய சடைமுடிக் குன்றே!
செக்கர் நாணுறச் சிவந்தமே னியனே!
மங்க ளாகரம் முழுமையும் மலிதென்
மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

கொண்கன்-கணவர்-சுந்தரமூர்த்திஅடிகள்; செக்கர்-செவ்வானம்; நாணுற-வெட்கப்படுமாறு.

8

விதுநி லாவிய சடைமுடி யதன்மேல்
வில்லி ஞற்சின மிகக்கொடன் றடித்தோன்
கதுமெ னக்கணை பெறக்கொடுத் தாண்ட
கருணை எங்ஙனம் கரந்ததோ அறியேன்?
பதும கேள்வனுக் காழியொன் றளித்தாய்!
பனைக்கை மால்கரி படச்செகுத் துரித்தாய்!
மதுர முத்தமிழ்க் கடல்வளம் குன்று
மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

அடித்தோன்—அர்ச்சுனன்; கேள்வன்—திருமால்; ஆழி—சக்கரம்; கரி—யானை.

9

ஆனை மாமுகன் குகன்எனும் மகார் (மீது)
ஆணை நின்றிரு வருட்கடல் மூழ்கித்
தேனை நேர்தமிழ் கொடுபொலார் செகுக்குந்
திறலு ளான்வரச் சிறிதுளம் இரங்காய்!
தானை யாமெனத் தோலுடுத் தோனே!
சங்க ரா! சுரி சங்கவெண் குழையாய்!
மானை நேர்விழி யார்நகை யாடும்
மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

ஆணை—சத்தியம்; தானை—ஆடை; சுரிசங்கு—வளைவானசங்கு; விழியார்—விழிகளையுடையபெண்டிர்.

10

பாலும் மூவகைக் கனியொடு தேனும்
பாகும் நேர்சுவைப் பைந்தமிழ்ப் பாடும்
நாலு தொண்டருக் கருளிய பெருமை
நவிலும் என்துதி நயக்கொணு தனவோ?
சேலும் வேலொடு கணையுநேர் விழியார்
தியங்க அன்ெறாரு திருவுருக் கொண்டாய்!
மாலும் மன்னவன் மகனும்ஏத் தெடுக்கும்
மதுரை மாநகர் வாழ்பர சிவனே.

நாலுதொண்டர்—சமயகுரவர் நால்வர்; தாருகாவனத்தில்பிக்ஷாடன உருவம்கொண்டது.

11

வான நாடரும் மதிக்கமெய்ப் புகழ்சால்
மதுரை மாநகர் வாழ்பர சிவனைப்
பானல் பூத்தவிர் பணைத்திரு நெல்லைப்
பதியில் வந்தவன் பகர்எனக் கேட்ப
தான தோர்கன வினைக்குறித் தோதும்
அரிய பாட்டிவை அறையவல் லாரைக்
கூனல் வாண்மருப் பிபமிவர் வார்தம்
குலமும் நாணுறும் கொள்கைதோய் திருமே.

தெய்வமே துணை.

வந்தவன்—நூலாசிரியர் திருநெல்வேலியிற்றோன்றியவர்; அவரிடம் ஆலவாய்ப்பெருமான் கனவில் சென்று பாடுமாறு கேட்கப்பாடினேன், என்ற குறிப்பை உணர்த்துகிறார். ஆதலால் தம்பெயரை நெல்லைப்பதியில் வந்தவன் என்று கூறுகிறார். கூனல்—வளைவு; மருப்பு+இபம்=மருப்பிபம்—கொம்புகளை உடைய ஐராவதயானை.

2. ஆலவாய்த் திருக்கோயில் அமர் பெம்மானே

காப்பு—வெண்பா

அருமைத் தமிழ்ப்பாண்டி ஆலவாய்க் கோயில்
மருவும் சிவனே நின் வாஞ்சை—பெருகுமன்பால்
பல்லோர் வருந்துவது பார்த்திருக்கின் றுய்! முறையன் (று)
எல்லோர்க்கும் நன்மைசெய்வா யே.

வாஞ்சை—பற்று.

நூல்

எண்சீர்

1.

நெஞ்சகத்துள் ஒளியுருவா வந்து வந்து
நீயுரைத்த பலமொழியும் நினைக்கும் பெட்பால்
வஞ்சகத்தோர் பகைபெருகத் தளர்ந்து வாடி
மறுகுமெனக் கருள்சிறிது வழங்கொண் ணாதோ!
குஞ்சரத்தீர் உரிவையணிந் தாடு வானே!
குளிர்தமிழ்த் தொடையணியும், குலத்தோ ளானே!
அஞ்சனத்தும் கறுத்தமிடற் றணியுள் ளானே!
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

மறுகும்—வருந்தும்; அஞ்சனத்தும்கறுத்தமிடறு—மையைக்காட்டிலும் கருமையான கழுத்து.

2

செங்கமலத் திருமகளால் வருந்தும் பொல்லார்
திரளிடைப்பட் டுறும்துயரம் தீர வேண்டி
இங்கடியேன் முயலுறச்செய் தவன்யார் சொல்லாய்!
யாவையும்நீ எனுமறைநூல் இயற்கை பொய்யோ
கங்கணமும் கச்சையும்செம் மணிப்பூண் யாவும்
கனல்விடப்பாம் பின்மாயக் காட்சி யானே
அங்கயற்கண் ணம்மையொரு பாகத் தெந்தாய்!
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

கையணி, இடுப்பணி, கழுத்தணி எல்லாமும் பாம்பைக்கொண்டிருப் பவன்.

3

இந்நாள்நின் திருமுன்பிற் கழுத்தைக் கொய்திட் (டு)
இறந்தவனை அவ்வுருவத் (து) எழச்செய் தினர்
தந்நாவால் இகழ்வதுவிட் டிறைஞ்சக் காட்டித்
தமியேனை ஆள்வதற்கோர் தடையும் உண்டோ?
மைந்நாகம் பொருமுதலை விழுங்கும் சேயை
வரவழைத்தோர் புலவனுள்ளம் மகிழச் செய்தாய்
அந்நாளில் புரிந்தபல விளையாட்டானே!
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

புலவன்—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

4

காரணம்ஒன் றுள்ளதெனப் பகரக் கேட்டும்
கலங்காமெய்த் தவம்புரியும் கருத்தெய் தாமல்
வாரணக்கோ டனையகொங்கை மடவார் மோக
வலையிடைப்பட் டுலகில்மிக வருந்த லாமோ!
நாரணன்கண் மலர்புனையும் பதத்தம் மானே!
நமனிறக்கும் படிநீட்டும் நளினத் தாளா!
ஆரணமும் ஆகமமும் துதிக்க நின்றாய்!
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

நமன்-இயமன்; ஆரணம்-வேதம்; நாரணன்-திருமால்.

5

தொட்டநிலை தவறுதுன் அருளே வேண்டித்
துடிதுடிக்கும் பருவமுற்றும் சுகமெய் தாமற்
கட்டமிகத் தருகலிநோய் வளைய நொந்தேன்
கவின்றிகழ்மால் விடையில்வந்து கருணை செய்வாய்
வட்டமுலைக் கவுரிமனம் மகிழ வெள்ளி
மன்றில்நடம் புரிவானே மற்றொன் றில்லா (து)
அட்டவித மூர்த்தியுமாய் நிறைந்துற் றோனே!
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

கட்டம்-துயரம்; கவுரி-பார்வதி.

6

புண்ணியவெண் திருநீற்றை இகழ்ந்தார் பல்லோர்
புவியறியக் கழுவேறப் புரிந்த துண்டேல்
திண்ணியநெஞ் சினராவள் ளுரமிக் குண்டு
திரிவார்மேற் சினவாமை தீதே யன்றோ?
நண்ணியபே றடியவர்க்கு நல்கு வானே!
ஞாயிறுந்திங் களும்கனலும் நயன மானாய்!
அண்ணியமுந் தூரமுமாம் அருளுள் ளானே
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

பல்லோர்-சமணர்கள்; வள்ளுரம்-மாமிசம்; நயனம்-கண்; அண்ணியம் அருகில்.

7

நின்னடியார்த் திருக்கூட்டத் தொருவ னாகி
நினைத்தபடி விளையாடும் நெறியே நாடும்
என்னதுநெஞ் (சு) இந்தவண்ணம் மறுகக் கண்டால்
இழிவுனக்கே யல்லால்மற் றெவர்கொள் வாரோ?
தென்னவன்என் றுருவெடுத்தும் புவிமுற் றுண்டாய்
திரிபுரமும் பொடியாகச் சிரித்தாய் ஓர்கால்
அன்னமுயர்த் தோன்தலையிற் பலிகொண் டுண்டாய்
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

அன்னமுயர்த்தோன்-நான்முகன்.

8

மண்ணுளும் பொருட்டிகலோர் தம்மைக் கொல்வான்
வாளியிரந் தடித்தாற்கும் வரமன் றீந்தாய் !
விண்ணுடும் வெறுத்திறைஞ்சும் என்னை யாள
விரும்பாமை முறைதானே விளம்ப வேண்டும்
பண்ணுர்ந்த சொல்லியொரு பங்குள் ளானே !
பரவைமனைத் தூதாயும் பனுவ லேற்றுய் !
அண்ணுந்து பறந்தவெண்புள் அறியா தானே !
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

வாளி—அம்பு; அடித்தான்—அர்ச்சுனன்.

9

மலைமகள்பால் கரிமுகனும் குகனும் அன்றி
மறையவன்சேய் ஒருவனுக்கும் வழங்கல் மெய்யேற்
கொலையுலகில் இலதாகச் செயல்வேட் டுள்ளேன்
குடிக்கவும்தந் திடலாகும் கொடுக்கச் சொல்வாய்
தலைபலமா லிகையாகப் பூண்ட தோளா !
தனைப்பணிவார் விருப்பமுற்றும் தரச்சோம் பானே !
அலைபுனற்பெண் இனிதுறையும் சடிலத் தெந்தாய் !
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

மறையவன்சேய்—சம்பந்தர்; மாலிகை—மாலை; அலைபுனற்பெண்—கங்கை.

10

எழுத்துருஐந் துடையாய்நீ அவற்றுள் நான்கிற் (கு)
இடும்பணிபோன் றொருநால்வர் இசைந்தார் யாரும்
வழுததுநலத் தொருபுலவன் றனைஉண் டாக்கி
மற்றுளதோர் அக்கரத்தின் மணிப்பூ ணுக்காய் !
பழுத்ததமிழ்ப் பலகையொன்று புலவர்க ளீந்தாய் !
பனிவரைப்பெண் வலிதனையப் பரிவு கூர்ந்தன் (று)
அழுத்தும்விர லால்அரக்கன் அழச்செய் தாண்டாய் !
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானே.

நால்வர்—சமயகுரவர்; பனிவரைப்பெண்—பார்வதி; அரக்கன்—இராவணன்.

11

மறுவற்ற திருநீறும் உருத்தி ராக்க
மணியொடுகல் லாடையுங்கொள் வடிவத் தோராய்
அறுபத்து நான்குவிளை யாட்டும் செய்திட் (டு)
ஆலவாய்த் திருக்கோயில் அமர்பெம் மானை
வெறுமுத்தி யெனக்காகா (து) அருட்பே ராண்மை
விரவியதே வேண்டுமென விளம்பி நாடும்
சிறுபத்தன ஒருவன்அன் பாற் றுதித்த பாடல்
செப்புமவர் விருப்பமுற்றும் சிறக்கு மன்றே.

முற்றிற்று.

குருபாதமே கதி.

3. ஆலவாய்ப் பதி ஐயன்

காப்பு—வெண்பா

பெண்மைக் கிடம்கொடுத்துப் பேய்களுடன் ஆடல்செய்யும்
வண்மைத் திருவால வாயனே !—உண்மை
அறியார்போல் நீயிருக்க லாமோ ? அருளின்
குறியான வாழ்வைக் கொடு.

நூல்—எழுசீர்விருத்தம்.

பஞ்சு நேரடிப் பாவை யாளொடு பார மால்விடை மீதுவந் (து)
அஞ்சுறு நலம் எய்து மாறினி(து) ஆட நீயருள் கூர்வையோ
நஞ்சு லாவிய கண்ட னேதிரு நார ணன்தொழும் நாதனே
அஞ்சு மாமுகத் தாதி யே ! திரு ஆல வாய்ப்பதி ஐயனே.

பாவை-பார்வதி; நஞ்சு-விஷம்; கண்டம்-கழுத்து; அஞ்சு-ஐந்து.

2

மீனை நேர்விழி யாளொ டோர்மழ வெள்ளை யேற்றுருக் காட்டுமோர்
தானை யங்கொடி நீட நாடுநர் தம்முன் நீவரில் ஈனமோ ?
மானை ஒண்மழு வைப்புனைந்து வயங்கு திண்புய வானவா !
ஆனை யீர்உரிப் போர்வை யாய்திரு ஆல வாய்ப்பதி ஐயனே.

ஒண்மழு-ஒளிமிக்கமழு என்றஆயுதம்; ஈனமோ-குறைபாடோ.

3

ஒப்ப ருந்திரு நீறி டார்பெறும் ஓகை கண்டுளம் ஒல்குவேன்
வெப்ப மாறிடு மாறெர் ஆடல்வி ளைக்கும் நாளும்உ திக்குமோ ?
கப்ப ணம்கயி றேந்தி முன்வரு கால னைப்பொரு கால்உ ளாய் !
அப்ப ருச்சடை யண்ண லே ! திரு ஆல வாய்ப்பதி ஐயனே.

ஓகை-மகிழ்ச்சி; காலன்-இயமன்; அப்பு-நீர்.

4

பாக சாதனன் ஆதி யோர்புகழ் பற்றும் இச்சையில் பண்பினேன்
ஏக பாவனை எய்தி யும்பல இன்னல் சூழ இடைந்துளேன்
மாக வான்மதிச் சென்னி யாய்அழல் வண்ண மேனிகொள் வள்ளலே !
ஆக மப்பொரு ளாயி னாய் ! திரு ஆல வாய்ப்பதி ஐயனே.

இன்னல்-துன்பம்; அழல்-நெருப்பு.

5

வெந்த நீற்றையி கழ்ந்து ளார்குல வேரறுத்து விளங்கும்நீ
இந்த நாளையில் வள்ளு ரந்தினும் ஈனர் மேற்சின வாததேன் ?
கந்த நாண்மலர்க் கொன்றை யாய்இரு காதி னில்வளைப் பூணுளாய் !
அந்த மாதியில் சோதி யே ! திரு ஆல வாய்ப்பதி ஐயனே

இகழ்ந்துளார்-சமணர்; கந்தநாள்மலர்-மணத்துடன்கூடி அன்றுமலர்ந்தமலர்.

6

புற்பு தத்துணைக் கொங்கை மங்கையர் போக மேவிழை கின்றநான்
நற்பு கழ்க்கட லூடு மூழ்கிநின் நாள்ம லர்ப்பதம் சேர்வனோ ?
கற்பு ளார்க்கொரு தெய்வ மாகிய கன்னி பாகம்க லந்துளாய் !
அற்பு தத்திருக் கூத்த னேதிரு ஆல வாய்ப்பதி ஐயனே.

புற்புதம்–நீர்க்குமிழி; கன்னி–பார்வதி.

7

பங்க யாதனன் ஆதி யோர்புரி பாவம் யாவையும் நீக்கும்நின்
செங்க மற்றொழும் நாயி னேன்துயர் தீரும் நாள்எது செப்பிடாய்?
வெங்கண் வேழம்உ ரித்த வா !புனல் மேய வார்சடை வேதியா !
அங்கண் மூன்றுடைத் தெய்வ மே! திரு ஆல வாய்ப்பதி ஐயனே.

பங்கயாதனன்–நான்முகன், வேழம்–யானை.

8

பாண்டு மன்தரு மைந்தன் வில்லடி பட்ட தால்வரும் இன்பமும்
ஈண்டு நான்பகர் பாட லால்வர வில்லை யாமெனில் என்செய்வேன் ?
வேண்டு மாறுவ ரங்கள் நல்கிடும் மெய்ய ருட்பரஞ் சோதியே !
ஆண்டு கொண்டஎன் அப்ப னேதிரு ஆல வாய்ப்பதி ஐயனே.

மைந்தன்–அர்ச்சுனன்.

9

மூக்கண் வேழ முகத்த னும்கதிர் மொய்த்த வேலனும் ஆனநின்
மக்க ளோடுறும் வாழ்வெ னக்கும்வ குக்க வல்லைகொல் சொல்லிடாய் ?
கைக்க பாலவி நோத னேமல கட்செ விப்பணி பூண்டுளாய் !
அக்க ரங்களைந் துள்ள வாதிரு ஆல வாய்ப்பதி ஐயனே.

கைக்கபாலம்–கையிள்ள பிரமகபாலம்; கட்செவி–பாம்பு; அக்கரங்கள் ஐந்து–பஞ்சாட்சரம்.

10

சீல மீறிய நால்வர் பாடிய செந்த மிழ்க்கவி யாமவை
மேல வாவொரு சற்று மின்றிய வீண னேனை வெறுத்திடேல்
பால லோசன மூர்த்தி யேமிகப் பால்வெண் ணீறணி டண்ணவா !
ஆல நீழலிற் றேசி காதிரு ஆல வாய்ப்பதி ஐயனே.

பாலலோசனம்–நெற்றிக்கண்.

11

பிட்ட வாவொடு மண்சு மந்தருள் பித்த னைப்பிழை பேசொணு
அட்ட மூர்த்தியு மாகி வாழ்திரு ஆல வாய்ப்பதி ஐயனை
நெட்ட வாவின ருடு மேம்படு நெல்லை யூரன் நிகழ்த்திடப்
பட்ட பாடல்கள் பத்து மோதுநர் பாவ மில்லவ ராவரே.

முற்றிற்று

தெய்வமே துணை.

நெல்லையூரன்–நூலாசிரியர் சுவாமிகள்.

அங்கயற்கண்ணம்மை பதிகம்

1. அங்கயற்கண்ணம்மையே

காப்பு—வெண்பா

அங்கயற்கண் ணம்மே ! அணிப்பாண்டி நாடனைத்தும்
மங்கலம்பெற் றுய்வுறச்செய் மாதவமே !— எங்கள்குல
தெய்வமே ! தென்மதுரைச் செல்வமே ! நின்னருளைச்
சைவமே லோங்குவண்ணம் தா.

மங்கலம் பெற்று-வளமனைத்தும் பெற்று.

நூல் — கலிவிருத்தம்

திடமிகு நின்னருட் சீர்என் றன்மிசைப்
படலறி கின்றிலேன் பரிந்தென் றுள்வையோ !
தடமலைச் சிலைகொடு தகுவர்ச் செற்றதோர்
கடவுளார் மதுரையங் கயற்கண் ணம்மையே.

தடமலைச்சிலை-பெரியமகாமேருமலை; தகுவர்-பகைவர்; செற்ற-அழித்த.

2

குவிந்தமென் முலைத்தடம் கொள்ளு மின்னமு (து)
அவிந்தசிற் றறிவினேற் களிக்க வல்லையோ ?
நவின்றநூல் முழுமையும் நன்கு போற்றிய
கவின்திகழ் மதுரையங் கயற்கண் ணம்மையே.

3

ஈசனை அனையவர்(க்கு) எய்தும் நின்னருள்
பாசநெஞ் சுறுபொலேன் பரவற் பாலதோ?
வாசவன் முதலினோர் வணங்கி வாய்ந்தமுற்
காசகல் மதுரையங் கயற்கண் ணம்மையே.

வாசவன்-இந்திரன்; காசகல்-குற்றமற்ற.

4

சொற்பனத் துன்னருள் துலக்கும் மாண்பெலாம்
நற்பக லினும்திகழ் நாளொன் றில்லையோ ?
புற்புதக் கொங்கைமென் பூவை போன்றுளாய்
கற்புயர் மதுரையங் கயற்கண் ணம்மையே.

புற்புதம்-நீர்க்குமிழி.

5

நிலைத்தநெஞ் சினர்பகர் நீதி யோர்இலார்
புலைத்தகைக் கொடியகோல் பொறுக்கத் தக்கதோ ?
மலைத்தலைக் குறுமுனி வகுத்த தாம்பெருங்
கலைத்தமிழ் மதுரையங் கயற்கண் ணம்மையே.

மலைத்தலைக்குறுமுனி-பொதியைமலையிலுள்ள அகத்தியர்.

6

என்னனூர்க் கருட்செயல் ஈந்து ளாய்எனில்
இன்னமும் புறநெறி ஏற்றந் தோற்றுமோ?
வன்னமென் சிறையதேன் வளைக்கும் வார்சிலைக்
கன்னலாய் மதுரையங் கயற்கண் ணம்மையே.

என்னனூர்-என்னைப்போலும் பிறர்; கன்னலாய்-கரும்பு வில்லை ஏந்தியவளே.

7

பொன்னின்மால் பெருக்கிய புலையர் போன்றுளேன்
என்னில்நீ உணர்த்தும்வாழ்(வு) எய்தல் எற்றையோ?
பின்னிய கருங்குழற் பேடை யன்னம்நேர்
கன்னியே! மதுரையங் கயற்கண் ணம்மையே.

புலையர்-கீழோர்; எற்றையோ-எந்நாளோ.

8

தேவரோர் ஐவரும் தினமும் போற்றும்நின்
சேவடி வணங்குமெய்த் திறமை நல்குவாய்
பூவல யத்தொ(டு)எப் புவனத் தோரையும்
காவல்செய் மதுரையங் கயற்கண் ணம்மையே.

9

வேலுருக் கொடுகுகன் வென்றி காட்டிடல்
போலுமெய்ப் புகழ்எனைப் பொருந்தச் செய்வையோ?
மாலும்நா ணுறவளர் மலய மால்வரைக்
காலுலா மதுரையங் கயற்கண் ணம்மையே.

10

தழனிகர் மூவிரு சமயத் தோர்களும்
பழகருட் சங்கரன் பதந்தந் தாள்வையோ?
நிழல்படு முத்தமிழ் நிறுக்கு மூவகைக்
கழகமார் மதுரையங் கயற்கண் ணம்மையே.

11

மந்தமில் உக்கிர வழுதி யாமெனக்
கந்தனைப் பயந்தருள் கயற்கண் ணம்மையைச்
செந்தமிழ் மதுரையிற் றிருநெல் வேலியூர்
வந்தவன் துதித்திடல் வழுத்தி யும்மினே

தெய்வமே துணை.

முற்றிற்று

2. பிராஞட்சி பாங்குபெறு மீஞட்சியே

காப்பு—வெண்பா.

என்னகத்தில் நாளும் இலங்குமெழில் மீஞட்சி
தன்னடிமை யாமொருவன் தன்வாயால்—இன்னதுதி
பாடென்ருள் பாடுகின்றேன் ; பைந்தமிழ்ச்சீர்த் தென்பாண்டி
நாடென் றதிற்பிறந்த நான்.

மீஞட்சியம்மை திருவருள் பெற்ற ஒருமெய்யன்பர், அம்மைமீது இவ்விதயாப்பில் இன்ன முறையில் பாடுக என்ருர்; அதன்படி பாடுகிறேன் என்பது.

நூல்

பன்னிரு சீராசிரிய விருத்தம்.

திருமருவு மலரனைய வதனமும் கெண்டையஞ்
சேலெனப் பிறழ்கண்களும்
செம்பவள வாயும்மணி நாசியும் பரிதியிற்
றிகழ்குழைச் செவியுமெங்கோன்
அருள்மலி கரங்கொடு தரித்தமங் கலமுடன்
அவிர்ந்தபல் பணிக்கழுத்தும்
அமையெனத் தொயிலெழுத் தொடுநிலவு தோள்களும்
அலர்ந்தசெங் காந்தண்மலர்நேர்
இருகையும் எழுமணிக் கோர்வைதிகழ் மேகலையும்
இமையவர்க் கரியபொருளாம்
இணையடியும் என்மனத் துள்ளபடி கண்ணெதிரில்
இலங்குமொரு நாளில்லையோ ?
பருமுலைப் பாரஞ் சுமந்துதளர் சிற்றிடைப்
பசியமர கதவல்லியே !
பாண்டியர்கள் கோஞட்சி வேண்டியபி ராஞட்சி
பாங்குபெறு மீஞட்சியே.

இப்பாடல் மீஞட்சியம்மையைப் பற்றிக் கேசாதிபாதம் என்ற முறையில் பாடப்பட்டது.

2

என்னுரிமை நின்னிடத் துள்ளவிதம் நீயறிவை
யானுனருள் அறிகின்றிலேன்
எட்டுணையும் நின்தயை இலாரெனத் துயருந் (று)
இரந்தலைந்(து) ஏங்குகின்றேன்
நின்னுடைய கணவர்சில நேரமென் அகவெளியின்
நிலவிவெண் ணீறளித்த
நிசமும்நீ அங்ஙனம் இயற்றியப லாடல்களும்
நின்மக்கள் இருவர்தாமும்
பின்னுலகில் நிகழ்வனமொ ழிந்தபல ஞாயமும்
பிழைபடில்எவ் வாறுய்குவேன்
பிரமபுரம் தனில்வரு மதலைக்க ளித்தமெய்ப்
பேறெனக் கும்கொடுத்(து)ஆள் !

பன்னுமறை யாகமம் அனைத்தும் பராவவளர்
பசியமர கதவல்லியே!
பாண்டியர்கள் கோனாட்சி வேண்டியபி ராணாட்சி
பாங்குபெறும் மீனாட்சியே.

3

சித்தியொடு முத்திபெற வேமிக விரும்பிமுயல்
சீரியர்கள் மட்குகின்றார்
தெய்வநிச் சயமொன்றும் உணராத வாதங்கள்
செய்பவர் உளங்களித்தார்
சத்தியஞ் சவுசமுத லாவன பொருந்திய
தகைக்காரர் நனிமெலிந்தார்
தபனஞெளி யும்குறைய அநியாயம் விளைவித்த
சண்டாளர் மிண்டிநின்றார்
இத்திறம் அறிந்துநீ மற்றுள்ள தெய்வங்கள்
எனஇருப் பதுஞாயமோ?
எண்டிசைப் பாலரையும் வென்றுமீ னக்கொடி
எடுத்தவலி யின்றில்லையோ ?
பத்திவயி ராக்கிய முளார்மனந் தொறும்உலவு
பசியமர கதவல்லியே !
பாண்டியர்கள் கோனாட்சி வேண்டியபி ராணாட்சி
பாங்குபெறு மீனாட்சியே.

4

கொங்கணற் கண்டபகி ரண்டமும் உலாவிவரு
குளிகைமுத லியகொடுத்தாய் !
குளிர்பொழிற் சீகாழி அந்தணச் சேய்க்கருட்
கொங்கையின் பாலளித்தாய் !
துங்கமுனி வரனொருவன் மகிழவொரு மன்னவன்
சொற்பனத் திற்புகுந்தாய் !
துய்க்கத் தகாதன அருந்துமொரு பத்தனது
தெர்ண்டுநனி கொண்டுவந்தாய் !
எங்களுக் கும்கருணை புரிவதொத் தாடல்சிறி(து)
யான்அறி தரச்செய்திட்டும்
இப்படித் துயர்மிக வளர்த்துநின் றய்கருணை
எள்ளினள வேனும்அருள்வாய் !
பங்கயப் பாவையர்கள் இருவரும் வணங்கவளர்
பசியமர கதவல்லியே !
பாண்டியர்கள் கோனாட்சி வேண்டியபி ராணாட்சி
பாங்குபெறு மீனாட்சியே.

5

அந்தரத் தமரரும் வியந்துகொண் டாடிமகிழ்
ஆசைகள் மிகப்படைத்தேன்

அம்மநின்! கைத்தலத் தமருகன் வந்தினி (து)
அறைந்தமொழி பலவினவினேன்
சந்தனக் குன்றருகின் நிலவுதிரு மலையினது
சரிவினில் உருண்டுழுய்ந்தேன்
சற்றுமுல கோர்அறிந் துரைசெயும் பேரருட்
டன்மைமருன் விலஜயகோ !
சிந்தனை செயாஒருவ னும்பவள வாய்தரு
செழுந்தம் பலம்புசித்துச்
செயமிகப் பெறுமாறு செய்தநின் திருவருட்
சீரின்று குன்றியதுவோ?
பைந்தமிழ்த் தென்மதுரை புரிதவம் எனக்குலவு
பசியமர கதவல்லியே !
பாண்டியர்கள் கோனுட்சி வேண்டியபி ராஞட்சி
பாங்குபெறு மீனுட்சியே.

6

மனமறிந் துள்ளசத் தியமிக மறைந்துவளர்
வம்பென்று தொலையஅருள்வாய் !
மாநிலத் துத்தொண்டர் அனைவரும் கூடிமிக
மகிழும்நலம் என்றுபுரிவாய்
கனகமிர சிதமலது பொருளிலை எனச்சொல்பவர்
கண்கூசி என்றுமிளிர்வேன்
காலியும் கன்றுமிக வதைபட லொழிந்தெக்
களித்தென்று லாவும்மொழியாய் !
அனவரத முங்கவலை வாரியி னிடைப்பட் (டு)
அழுந்திடச் செய்தல்முறையோ ?
அன்றுமா பாதகன் ஒருத்தனும் உயச்செய்த
அருள்நலம் பிழைபட்டதோ?
பனகமொன் ருல்வளைய நிலவுதிரு வாலவாய்ப்
பசியமர கதவல்லியே!
பாண்டியர்கள் கோனுட்சி வேண்டியபி ராஞட்சி
பாங்குபெறு மீனுட்சியே.

7

அற்பர்தலை வாயிலின் கடைதோறும் ஏகிநின் (று)
அகநொந் திரந்திடாமல்
அதுபெரிது இதுபெரிய தென்றுபோ ராடல்செயும்
அசடரொடு பழகிடாமற்
கற்பனைப் பாவலர் தங்களை மதித்தருட்
கவிஞரை யிகழ்ந்திடாமற்
கனவினிற் கண்டபடி நனவிலுன் றன்னையென்
கண்களெதிர் காண்பதென்றோ?
சிற்பர சிவோகதிச் சயமுணர்ந் தவர்களது
சிந்தையிற் றேக்குதேனே !

திருஞான சம்பந்தர் வந்(து) அமணர் வாதறச்
செஞ்சொல்மழை பெய்தநாளிற்
பற்பநிலை பெற்றநக ரந்தனில் வசிக்குமொரு
பசியமர கதவல்லியே !
பாண்டியர்கள் கோனாட்சி வேண்டியபி ராஞட்சி
பாங்குபெறு மீனாட்சியே.

8

பிரமன்மல ராதனந் தனிலிருந் துலகம்
பிறங்கப்ப டைத்தல்முதலாப்
